வயது விபரமறிய

மேவி வாழ்சடல இரத்தமாங்கஷமு
மேதையாகுந்தசை மச்சையு
மீருஞ்சுக்கில மீதாகுமேழதுவு
மிகவுமே யுருவதாகிடுந்
தாவியே சரீரமாகுஞ் சட்டைரசஞ்
சார்ந்து ஊழ்வினையுமாகிடும்
தாதுவாதமவை பித்தசேத்துமமுஞ்
சடலரூபமவையாகிடும்
ஆவியாகு முடலான கூறுவள
மாகும் வண்மை யருளாதலால்
மூவிதத்தினிலும் பித்தமாவது
முப்பத்து மூன்று வளராண்டிலு
மோகதாது வளர்க்கின்ற காலமவை
முப்பத்தேழுஞ் சேத்மகாலமே 137

சேத்ம காலங்கழிந்தே குழந்தையவை
செடலநூறு வரையாண்டினில்
சித்தம் புத்தியாங்காரமானது
தேகசுத்தசுகம் மாறிடும்
விந்துநாத வினையேகியேயுடலு
மெய்மறந்துமே நிராசையாய்
விஸ்வரூப ஜெகதீசர் பாதமலர்
மீதிலும் பணியநேரிடும்
மெத்த நூறு வயதிளமையாகி
இருப்போர்களும் புவியில் காயமாய்
யெந்த நாளுமொரு நாளுமாகியினி
யீசராய் பதவியெய்திடும்
வைத்த உள்கரு பூதாதி ஐந்துவள
ரானநேரி புலனைந்ததும்

கர்ம இந்திரியமைந்தும் ஞான
இந்திரியமைந்து மைந்துமானதே. 138

அந்தக்கரணம்

அந்தக் கரணமெனு நான்குமென்ப
தறிவொன்று நாடியும் அஞ்சதாம்
ஐயஞ்சு வாய்வு விசையங்களஞ்சு
மய மாகுங்கோசமது வஞ்சதாம்
இந்தவார நியாதாரமாறுந்திரி
மண்டலமல மூன்றதாம்
மேறுயேடணைய மூன்றுமே இனிய
தோன்று மூன்றுகுண மூன்றதாம்
விந்துவால் வினைரெண்டதாகும்
விதி ராகமெட்டு விதமாயுணர்ந்
தந்தவத்தையு மோரஞ்சு கூர்கருவி
யாத்மதத்வமுந் தொண்ணூாத்தாறு
இந்த தந்தையதிவிந்தின் கூறுவிட
இந்திரியக் கருவியால்சடம்
இனிய தாதுவில் பூதாதி ஐந்து
மியல்பாய்தமிழ் கவியுரைப்பதே 139

பூதவிபரம்

பூதாதி ஐந்தினில் பிருதிவியப்பதுவுந்
தேய்வு வாய்வுமாகாசமும்
பிறித்தே யுணருவித மோரைந்து பொறி
யைந்துங் கூறுதனையே புகல்
மீதாகுந்தோத்திரமுந் தொக்குசட்சுவை
சிங்குவையாக் கிராணமீ தஞ்சதாம்
இனியதோத்திரமது செவியாகிவிட
தொக்குமாவதுட லாகிடல்

சூதாகுஞ்ச க்ஷதுவுங்கண் விழியதாகி விடல்
சிங்குவைவயெனிலும் நாவதாம்
சொல்வ தார்க்கினியாக் கிராணநாசிபுல
னைந்துமே யருள்வதாகிடில்
ஈதாகமங்களினில் சத்தமும் பரிச
ரூபமாகும் ரசகெந்தமும்
இவையாகு மஞ்சுவிதமே யுரைக்கவிதி
யாகமத்தினுடல் கூறதே 140

விதியாகமங்களின் சத்தமாவது
விளங்கலாகு மவையேதெனில்
இனியாவதும் செவியின் கூறதாகுஞ்செய
பரிசமும் சுகமும் துக்கமும்
மதியாகமத்தி னுடலாகுமே விழியின்
ரூபமாவது கண்பார்வையாம்
மலர்விழியதாகு மதின்வாருமோரசமு
மாமறுசுவையும் அறிவதாம்
நதியும் நாவினிட கூறுதானறிதல்
நற்கந்தங்கள் ளெனுந்துர்க் கந்தம்
நவிலதாகு மருள் கெந்த மூன்றினிட
நன்மை யேதெனு மறிந்திடல்
துதியுந் தொக்கினிட கூறதாஞ்சுக
மாகுமைம் பொறியின் சுருதிகேள்
சூட்சமாமெனிலுங்கா்ம இந்திரியந்
துகையு மைந்துவிதஞ் சொல்வதே 141

கா்ம இந்திரிய மைந்துமேவியருள்
கருதுவாக்கதுவும் பாதமும்
காணும் பாணியது பாயுருவுமுபத்
தங்களைந்து விதமாமெனில்
மா்மமாம் விசிதவாக்கு வாயெனிலும்
பாதமாவதுவும் காலதாம்

பாணியாவது கையாகுமென்பதுவும்
பாயுருவெனும் பானமாம்
வர்மமாகுமு பஸ்த்தங்களு மினிய
வகை விதங்களிவைலிங்கமாம்
வாசமாயுணர கன்மவிந்திரிய
வாரு ஐந்தினிட கூறதாம்
நிர்மமானது ஞான இந்திரிய
நேர்மையைந்துவித கூறதும்
நின்றறிவசன கமங்களவை
யேவிளங்குமுயிர் தானமே 142

தானமாகும் விசற்கானந்தங்களோடு
சார்வுஞான இந்திரியமும்
சாத்திநோம் விபரமொவ் வொன்றாகவுமே
தத்துவத்தி நெறிகட்டளை
யூனதாகுமெனில் வாக்கதும் வசன
முறுதியா மெனிலும் பாதமுங்
கோடியே நடையும்பாணிகையது
காலோ வழங்கிடுதலாகுமாய்
பானமேயறிதல் பாயுருவதுவு
மாமலந்தனை பிறித்திடல்
வஸ்த்துவாவது உபஸ்த்தசுக்கி லமும்
வாரியேபொழிந் துரிதமாய்
தேனதாகுமல மூத்திரங்கள் தனை
தெளிவதாக விடுவிக்குமாம்
தேருஞான இந்திரியமைந்தினிலை
செய்கையென்ப தறிந்தோதுவாம் 143

செய்கை யாவதெனிலந்தக் கரணமது
செப்பிடினுமொரு நாலதாம்

தேகக்கூறுமனம் புத்தியாவது
ஆங்காரஞ் சித்தமிவையே குணம்
பொய்யுணர் வதிலையே மனதினிட
போக்கு மென்றறிதல் புத்திதான்
புகலும் யாவையும் விசாரித்தேயிடுதல்
பொங்கியே விடுமாங்காரமும்
மெய்துங் கோபமது வேயெழும்பி
விடுதலே சித்தமதுவாகிடல்
இனியதாகிய முடிப்பதும் பெருமை
யிசையுங் கரணமிவை நாலதாம்
கொய்திடுங்குறி குணங்கள் யாவையுங்
குறித்து ஆத்துமத்தின் தத்துவம்
கூறினேனிவை தன்னூர் வசியருள
குறையுமேது குரு நூலிதே 144

குருவினாலு மறிவானதொன்று
குறிகுணமுமேது விசாரணை
கூறறிந்து உணர்வா யனேகமவை
குசலங்கள் யாவையுமகத்தியே
அறிவினாலனேக பார்வையாகி
யருளண்ட பிண்டமதிரூபமாய
அகண்டமண்டல மதாகியே சொரூப
ஆத்மதத்துவ மதாகியும்
பிரிவதாகி இருவினையுமாகிப்
பிரபஞ்சமாகியதி பெண்ணாணதால்
பேதமாகி சதுர்வேதமாகி
பரபிரம்மமாகியதி ரூபமாய்
நிருபியாகி சிவசொரூபமாகி
நிராதாரமாகி நிற்குணமதாய்
நிற்மலமு மாகிகதிர்மதியுமாகி
நிரஞ்சனமுமாகி யொளிவானதே 145

ஒளிவுமாம தீதஞான சோதிசிவ
சொரூபமாகி உயிர் ஜீவனாய்
உருவதாகி செழுஞ்சுட ரதாகிகதி
ரொளியுமாகி யுருவாகியுந்
தெளிவதாகி சிவதத்துவங்களெனில்
தேவதத்துவமும் முப்பத்தாறு)
சேனைதத்துவமே யானருந்துந்தச
நாடிபத்துமிவை கூறுகேள்
வளியதாகுமிடை பின்கலையுஞ்சுழி
முனையதாகுமே காந்தாரியும்
அத்திசிங்குவை அலம்புருடனு
மருங்குகுதனுமே சங்குனி
விளியுமேவு வயிரவ நிறைந்ததத்துவு
மே விளங்கிடு முன்னமே
விரிவில்லாமலு மொழிந்தவாறுதெச
வாய்வின் நேர்மையறிந் துணருவாம் 146

வாய்வினிலதீத பிராண வாய்வதும்
அபானன் வியானனும் உதானனும்
மருவிடும் சமானவாய் வுநாகனும்
மயங்க கூர்மனுமே திரிகரண
ஐயனே பரதேவ தத்துவன்
தனஞ்செயனுந் தசபத்துதான்
ஆகமக்கருவி யொவ் வொன்றாகவுமே
யாத்துமக் கருவி யாவையும்
பேய்களேதறியும் பிராண வாயுபிரண
வத்தின் மூலமதின் பீடமாம்
பெருமூலாதாரத் தேயுதித்தெழுந்து
முடிபாதகேச மளாவியும்
ஓய்விலாத அசவாய் பெருகி
ஓங்கார மெனுமோரக்ஷரம்

உச்சரித்து முதலக்ஷரத்தையுமே
ஒன்னிகண்ட மதிலூதுவாம் 147

ஊதுந்தாரையலை கண்டவாசலுரு
வாயெழுத்து உயிரோங்கிடல்
மூலமாரிகலை மேலெழுந்துட
நீராருவங்குல முயர்ந்துமே
ஏதிராருகலை கெட்டிட்டேறுமதி
ருத்தியோடிடு மெட்டங்குலம்
மீறிவாங்கிடும் நாலங் குலங்களவை
பாழில் பாய்ந்து கழிந்தேவிடும்
தாதுநாலுமிவை மூன்று தன்குணந்
தந்தையாகுபிராண வாய்வுதான்
சைதன்னிய மென்பதுவும் நீலவர்ணமது
சந்திரநிலவு தெய்வமாம்
வாதிராது பலபல பொசிப்பதுவும்
அசீரணித்திடுவ தாதலால்
வாசிதானுமொரு நாழிகைக்குவரு
மேசுவாச முன்னூத்தருபதே 148

வேறு

வாசிமூலதாரமாய் ஓங்காரமாயுதித்தது
மாறுகால் குதித்தெழும்பி வன்னியாய் வமைத்ததும்
ஊசிதாரை வாசலிலுயர்ந்து உச்சி பாய்ந்ததும்
ஓங்கி கீழமைந்து நாசியுள் வழியே பூந்ததும்
வீசிகாலிறங்கிபாத கேசாதி யளாவியும்
விளங்குவாய்வு ஈரஞ்சுபஞ்ச பூதமாவதஞ்சதும்
நாசிவாசலு முயர்ந்து நாடியோடுஞ்சு வாசமும்
நாளொன்றுக்கிரண்டு சாமமிராப்பகலிருப்பதே 149

இரண்டுமேரவிமதி கலையீராறுமே பகல்
இராவினில் மதிகலை யீரெட்டும் பாய்ந்திடுந்தினம்

இரண்டுகாலு மாறியோ டிருந்திடும் நாளொன்றினில்
இரண்டுபத் தோராயிரத் தறுநூறு சுவாசமும்
இரண்டுமேழுமேபதி நாலாயுரத்தி நானூறு
மெழுந்து மூலாதாரவாச லேயொடுங்குமாவியும்
இரண்டுமஞ் சேழாயிரத் தன்னூரு சுவாசமும்
வீணாபாழிலுமழிந் தொடுங்குபஞ்ச இந்திரியமே
150

இந்திரியமேயொடுங்க யாவுமேயொடுங்கிவிடும்
இவ்வுயிர்சுவாசம்போய் இருப்பதாலிறந்திடும்
முந்திமூலபிராணவாசி முனைச்சுழியிலொடுங்கினால்
வூதவூதநாதவிந்து உகாந்தகோடிவாழலாம்
தந்திரமாஞ்சுவாசமிது தாரையூதவல்லிராய்
சலிப்பதேதுமோன இன்ப தற்சொரூபசித்தியாம்
மெந்தநாளிறப்பது இருப்பதிவ்வுயிரதாம்
யெப்போதும் பாலனாக இருந்து வாழ்கலாகுமே 151

பாலனாகுமெய்யின் வாய்வதின்கூறேதெனில்
பரப்பிரம்மசுவாதிஷ்டான பீடமே யுதிப்பதால்
சாலவுங்கீழ்நோக்கியே பின்தள்ளிடுதலுமலந்
தானதும்நிறம்பசுமை சங்கையேயறிந்திடி
லாலசனஞ்சுருங்கியன்ன சாரசிரணமவை
சொரிந்திடுகோர அக்கினி யதீதமாமதற்குமே
தேவதையும்வாத ராஜனென்றே கூறினோம்
வியானவாய்வின் கூறுகேள் விளங்கலாகுமென்பதே.
152

விளங்கலால்வியானவாய்வு முந்தியிலுதித்தபின்
எழுந்தெழுபத்திராயிரம் நாடியிலுரைந்துமே
பளம்பலாலுமேசரீர சருவ அங்கத்தன்னிலும்
பரவிநீட்டலுமுடக்கல் பரிசமாகுமன்றியே

யன்புமன்னசாரமே யங்கங்கே நிர்மித்தாக்கையை
யாத்துமாவை ரட்சித்தே யதீதமாவதன்றியே
வளம்பெரும்வியான வாய்வுவர்ணம் துய்யவெண்ணிறம்
மலர்க்கு தேவதைஎமனு மாமதுவென்றோதுமே. 153

ஓதலாகு மெனிலுதான வாயுவின்கூறுகேள்
உதாரணத்துடனெழுந்து யுக்கிறமாயுதித்திட
லாதலாலன்னமேசாரம் யாவுமேதகித்திடல்
அறுசுவையுமேசமூல மன்னியே நிருத்திடல்
காதலாலுமேயெழும் பிடுதலாலுமேயவை
கலக்கியேகசக்கிவித் திடுதலால் வளர்த்திடல்
வேதமாம் உதானவாய்வு மின்னல்வர்ணமாமெனில்
மிகுந்த அக்கினியதற்கு தெய்வமென்றியம்புவாம்154

இயம்பலாகுமே சமான வாய்வின் கூறேதெனில்
இருத்துநாபியுமடி பாதாதிகேசாதிகளு
மியம்பலாகுமேசரி சமனது கொண்டேகிடல்
மீரும் வாய்வுமேயதீத மிஞ்சொடா தடக்கிடல்
சுயம்பதாகுமே சரி சமன்செய்து சுகாதீதம்
சுழுத்திடுஞ் சுகத்தினில் சொரூபமாய் மருவிடும்
தயம்பலாலுமேயறு சுவையுந் தண்ணீரன்னமும்
சரிசமன் செய்தே சாரஞ்சார்சந்துமே விடுமதே 155

ஆகும் வர்னமாமெனில் அதீதபுஷ்பராகமாம்
அதற்குதெய்வமே யாதித்தனாகுமே யறிந்திடல்
பாகநாகனான வாய்வு பான்மை யாவதேதெனில்
பாடிடுமே பலகலைகள் பார்வைகண் விழித்திடல்
வாகுகண் விழித்திழுத்தல் மயிரது கூச்சாடுதல்
வர்ணம் பொன்னிறமதற்கு தெய்வமா மனந்தனும்
கோதிலங்களு மசைதல் கூற்மனாகுமே குணம்
கூத்தனாகுமே மனத்தில் நின்று தாநிலைக்குமே 156

நிலைக்குமேல் விழிசிமிட்டு நேர்மைகள் விழித்திடல்
நெடியதோர் கொட்டாவி கொண்டுழைத்தலால்
வாய்மூடிடல்
பிலக்குமேசரீரமும் பிலமுண்டாகியே வரும்
பேதமாய் விழிமுழித்துக் கீதமுடியேவிடல்
கலக்குங் கண்ணுறக்கமாதல் காட்சியுமறிதலால்
காண்பதற்கு மேவிழி நீராகுதாரையோடிடல்
சிலைக்குவர்ண வெண்மையாதல் தெய்வமாகுமாலின்கூர்
திருகிருதனாகும் செய்கை வாயுவின் கூருமே. 157

திருகிருத்தனாவதன் செயலுணர்வதேதெனில்
சீரும்வாய்வதே குணத்தை செப்பவுந்தெளிந்திடில்
யெறிவு நாவசைதலா லிவையாக்கினி தீர்த்தமும்
யீதேதெனி லமுர்தசஞ் சீவியும் வாசியாமெனில்
துரிதமாயடிக்கடி துறந்திடல் கடும்பசி
துன்பமேயக்கிறமமாம் சுகத்தினில் பரத்தையை
யிருத்திடிலெனும் விரக போகமோகவாசையாய்ப்
பிடிப்பினி லிரும்பலும் தும்பலுமாயாவதே 158

வேறு

வாதுசுயத்தினிலும் சுயமானது வர்ணமவை செழுமை
வளர்தெய்வமவை சிவனாரும் திரோதகை
மாய்கையின் கூறதெனில் மேலுடலுந் தேவதத்துவ நிலை
குணவிதி யெனுமேயருள வெகுளிதமாமிக
சோமத்துள்வே விக்கல் துறகுணநற்குண
தக்க உதாரணமாய் மாதுயிர்
கோபசண்டாள மிகுத்திட லாவியுலாவிடுதல்
துறந்துடலுங் குரலோசை யுரைத்திடலாவி
குறைந்திடுமே 159

தாழிசை

உரைத்திடலுங் குய்யஸ்தான
மிலிங்க முதித்திடல் தெய்வமுயிர்
துற்பனமாம் வடிவாகுந்
தேவிந்திர னுருவது படிகநிறம்
துரைத்தனமாமிவர் தோற்றமதாகி
தூய்மையே தெனிலும்
சுகத்ததிதந் தனஞ் செயனை
விளங்கி துடித்திட லனாதியிரு
துருத்தியிலு மருதாரை தடித்து
உடம்பு பெருத்திடலும்
உடலாவிதிலு மிருகன்ன மிரைச்சல்
முடிக்கிடலும் பளுவாய்
இரைத்திடியு முடம்பாலுந்
துடித்திடலேது கடூரமதாம்
இவைகுரலோசை யிடும்வினை
கோஷ்டமிரண்டு பிறண்டமுமே. 160

முடுகு சந்தப்பா
(விசையம் ஐந்துக்கு விபரம்)

திரண்டுருண்டு திரண்டே சுழித்திசட
மேகிடத்தி உறிஞ்சிடும்
விதியாலெடுத்து கெதிகாலமாமுடி
விறைந்து வாய்வு பிரிந்தேவிடும்
மிரண்டுபோன உயிர் மரணமெய்தியபின்
னிடீயிடித்தியல் புவாகிடு
மிருபிளப்பு மயிரொரு பிளப்புசிர
மிதுவெடித் துயிர் போய் மூன்றுநாள்

அருண்டுருண்டு உயிரண்டம் புக்கியு
மாகாசமேக நிறவர்ணமாம்
மதிதநீலமதின் சாயலதா மந்திரி
யாதல் தெய்வமிது ஆதியாம்
மிரண்டரண்ட தெசவாய்வின் கூறுகுணம்
வேறொன் றில்லை வினைகாயமாம்
விஜயமஞ்சது வொவ்வொன் றதாகவுணர்
மேவியானுலகில் வசனமே. 161

மேவதற்கு அமாவசையத்தோடு
பருவசயமாகு மலவசையமாம்
மீதுலாவி சலவசைய சுக்கிலம்
தாகுமே வசயமஞ்சதாம்
தாவுதற்கு அமாவாசைய மாவதெனில்
சாருமன்னமொடு சலமதும்
தாநிருப்பிடம் தாகுமென்றறிய
சடலமாமி தினிவைகுண
மாவிதற்கு பருவசயமென்பதும்
அன்னசாரசல சீரணம்
ரத்தமிக வேராய்ந்திடும் பிறிவ
தாமலவசைய மாமெனில்
லேவுதற்கு இடமதாகுமே மலமு
மிதனை போக்கிவிடு மாதலால்
இனிபொசித்த தெனிலாவது மலம
தாகியே விடுதலாகுமே 162

விடுதலாலுஞ் சலவசய முண்டதுநீர்
விண்ணுலாவி சலம்பாய்வன
மிதுபின் சுக்கிலமு விசையமா மெனிலும்
வேருறைப்பது மிருப்பிடந்

தொடுதலா லிவைதன்கூற் விளங்கிடுதல்
சுக்கிலப் பையென சுத்தமாம்
துள்ளிநிற்குமிவை வசையமா மெனிலும்
சோதிவச்சிர வொளிவீசிடல்
இடுதலால் வசையமஞ்சு கூறுமென
வேவிளங்குத் தொகுப்பாயுணர்
விதியாலெடுத்த வுடலன்ன கோசமய
மேவிளங்கு விதிவாரெனில்
அடுதலாலு மன்னமயமும் பிராணமய
மாகுங் கோசமய மனோமய
மானந்த மயத்தோடைந்து மொவ்வொன்று
தான் யானுரைப்பதனு போகமே 163

அஞ்சுமேவி யுணரான மெய்யதுவாய்
விழியுநாசியொடு செவியதும்
பொறியும் பிரிதிவியின் கூறதே தெனிலு
மஞ்சிலொன் றதனை யருளுவாம்
அஞ்சிலொன் றுஅன்னமய மதாகிவள
ரதுமயகத்தில் கே சமயபதும்
அப்புவந்தணைய ஆவிகூடியுற
வாடியுண்டது மவையதாம்
அஞ்சு பிராணமய மானதாலுமவை
கோசமாமய மணைந்திடில்
அதிபுத்தியருவ் காரமாபறி
போலும் வாருறைத் திடுதலால்
அஞ்சிலொன்றது விக்கியான மாமயமு
மதனில் தேய்வு வந்தணையுமாய்
அன்புமேயுணர்வு நெறியுமேலதிக
மாகுமென்ப தறியார்களே 164

தெய்வதீதமெனுமா மனோமயமில்
தேய்வுவந்தணைய வெகுகுணம்
தேகசுத்தமிகவே விளங்கிடுதலும்
புகழ்ந்து உறவாடுதல்
கோலமான மனோமயமதாகுமென
கோசமென்ற மயமாமதில்
கூடிவாய்வதுவும் வந்தணையவுமே
குடிகொண்டேவிடும் விகாரமாம்
ஞாலஞானமய கோசமென்றது
பேராகுஞ்சத்தமு மணைந்திடில்
நாகரீககசுகக்ஷேம சுத்தமவை
நளினமென்பது முண்டாகிடல்
வாலையாதல் வடிவானந்தமயமும்
வாருகோசமய மென்றுபேர்
அதுவேயெடுத்தவுடன் கோசமஞ்சி
லவையான காயமிதாகுமே 165

ஆதாரம்

கோசமஞ்சிலுட லாயெடுத்தவிதி
கூறுதானறிய வேதெனில்
குணமதாயிவை யாதாரமாகுறுணங்
குருவினாலறிய வேண்டிடும்
சூசியாயுமூலாதாரமா மெனிலும்
சுவாதிஷ்டானமணி பூரகம்
சூட்ச அனாகதம் வித்தியாக்கினை
யாதாரமாறு மிவையானருள்
கோசமஞ்சில் மூலாதாரமென்றறிய
குதமுங்குய்யநடு மத்திபம்
கூடியே விடும்மபானமாமதின்மெல்
குடிலமென்னும் வீணாதண்டெனில்

ஓசையாயிருத்தல் கீழிருக்குநடு
ஓரங்குல பிரமாணமுள்
உத்ததிரிகோணமது வாகுநாலிதழின்
கமலமென்று ரைத்திடுவதே 166

வாசிகட்ட யோகம்

கமலஞ்சுத்தியிதழ் நாலதாகுமெனில்
நாவிதழிலு நாலட்சரங்
கருதுமுக்கோண தியானமந்த்ரவிதி
காணலாகும் ஹ்ரீங்காரமும்
வமலமாகி வளர்வல்லபையுமவர்
வலது பக்கமெனுமவரெனில்
மந்தரமாமலை ஸ்ரீரீங்காரமாகுமெனு
மலாக்குதெய்வமது கணேசனாம்
வமலமூலமதில் வங்கென்றூணி
மதியமுர்தவாசி மறவாமலும்
மாரியூதி குரல்கண்டமாமதனில்
வாழ்த்தலாகும் மூலங்கீழடி
மடியிலூதிடுந்த மரிலுண்டிடும்
அமுர்தமாமதி வாசமாம்
ஓங்காரமாதி தனிகம்பமாமடியி
லூதும்வாசி கொண்டூணிடே 167

கம்பத்தினடியிற் மதிகட்டி வாசியுமே
கண்டத்திலுணருங் காலியால்
கதிருமாமதியுமிருவர் பாதமலர்
கமலமேவி தெரிசித்ததால்
உம்பர் வெளி தன்னாகிலேறலுமே
யொழிவதாகி வழியறியலாம்

உன்னுளேக பரமே பளிச்சென
யுலாலி யேறிடிலு மூலத்தீ
நம்பிதற்கு மேலிரண்டு வங்குல
நளின மெண்பதின் மேலென
நால்சதுர மிதழாறு மாகியிரு மூன்று
அட்சரமு மாமென
நும்பமைத்திடுஞ் சுவாதிஷ் டானவரை
சோதி மின்னொளி வதாகிடல்
தொழுதலாகும தற்குள்ளே பிரிதிவியதுந்
தொந்தமாகுங் குடியிருப்பதே 168

குடியிருப்பு சதுர்வேத மாகும்பரப்
ப்ரம்ம மென்றது பேரக்ஷரம்
க்ஷறலாகுமே நகாரமான தெழுத்
தாகுமென்றறிய குணமதாம்
நாடியிருப்பது நகாரமா மெனிலு
நாடிடும் பிரமனவ ராவதும்
நன்றதர்க்கு பீஜமாமதர்க் கெனிலும்
நல்லெழுத்ததுவும் பிரிதிவியாம்
துடியெழுத்தது உகார மந்திரம்
தொடுத்து உன்னி உயிர்வாயுவை
சொக்கிடாமல் கண்ட தாரை கும்பித்திட
தோன்றிடு மறியுண் டாகுதல்
தெடிலெனு மெழுத்து சிகாரமாம்
செப்புமுப் பிரிநூல் சிரசுநூல்
தெளியலாகும் சரஸ்வதியின் பாதமலர்
சேர்வைசெய்து தெரிசித்துமே 169

சேர்வை செய்து அடிபணியசாதகமும்
தீவினை யொழிதல் மாய்கைபோம்

திரவியக் கடலில் அமுதமுண்டனர்கள்
செத்திறப் பதிலை செடமுயிர்
பகருமணியதின் பூரகமெனிலும்
பாருஞ் சுத்தியிதழ் பத்ததாம்
சார்வதாகிலு மக்ஷாரமீரஞ் செனிலுஞ்
சாருமப் புவதற்கிடமாய்
சடத்துள் தெய்வமெனில்மாலுதித்து
குணமாகும் லட்சுமிதன் பாகனாய்
தேருமக்ஷர மகாரமா மெனிலுஞ்
தெளியுமா லவர்தன் கூறதாம்
சிறப்பான வவ்வதுவுமப்பு பீசமெனுஞ்
செப்புதற்கு வேத சாரமே 170

வேதசாரமதுவே சர்வமெனில்
மெய்நிறைந்த கவுஸ்தூவமாம்
மேவிவாழிமணி பஞ்சபூதம் நிக
ராகுலட்சுமி தன்நேச னாம்
வாதமாமெனிலு வாசி கொண்டுடன்
மங்கென்றூதி நிருத்தோதிடல்
விரயவீரஞ்சுமடி மூலந் தாங்கிவர
வழைத்து காரமதை யூதினால்
ஓதுலக ஜெகமண்டலங்களுமே
யுலக மாதீதமும் வசியமாம்
உலக வாழ்க்கையும் வினாடி தன்னிலுயி
ரொன்பதாகும் வெளியூனுடன்
ஊதலாகு மிவை மேலிரங்குல
முணர்ந்து பார்வையிட்டனாகதம்
மொளிவதாகு மதின் வீடதாகிவள
ருண்மையாதல் திரிகோணமே 171

திரிகோண மாவது வீராருசுத்தியிதழ்
தேருமக்ஷர மீராறுதான்
தேய்வதற்கு இருப்பிடமுமே தெனிலுஞ்
சிகாரமாகு மெழுத்தட்சரந்
தெரியும் பீசமது வவ்வதாகிசிவ
மாகும் சீவனது வாகிடுஞ்
சிகாரமாமதனில் ருத்திரன் ருத்திரியுஞ்
சேர்ந்திருந்து பிரியார்கள் தான்
செறிவு கண்டு வழுதுண்டு வாசியுணர்
சிங்கென்றூத கண்ட தாரையில்
சிதறொட்டாது தசைவாய்வு மூலமதில்
சிக்கினாலுஞ் சிறு பிள்ளையாய்
யறிவை யுண்டு அனுக்கிரகம் பெற்றவர்க
ளஞ்சுமே வயது பாலையாம்
ஆறுசாஸ்திரமும் நாலு வேதமறை
யாய்ந்த முத்தர்களறிவரே 172

வேறு (தாழிசை)

அறிவோர் பனிரெண்டங்குல மதின்மேல் விசுத்தியதாம்
அறுகோண வீடிரெட்டித ழாகும் மெழுத்தீரார்
அரிதாகும் வகாரத்தரு கோணத்தினில்பீடம்
அமர்ந்திருந்தார் மயேஸ்பரனும் மயேஸ்பரியும்
கொலுவாகி
அரிதாகிய அறுதானெனில் அதர்வண வேதத்தோடுமே
அதீதமெனு வாய்வுமிதங் குளதாய் குடியிருப்பாய்
குறியான பீசமெனும் யவ்வாகிடுமறிதல்
கும்பித்தூதி வங்கென்றுடன் தம்பித்திருந்தனனே.
173

தனமே விடலமுதாகிய சயிலந் தனையுணற
சாதித்திடும் வாசிதனை சளையாமலுமூதி

வனலேகிடாமல் மதிசூழ்ந்திடல் வாசிவரவலைழத்து
வளமாய் கண்டத்தூதிடவும் வயதுமொருநாளாம்
புனலாவது மதின்மேலு மீரெ' டங்குல கண்டம்
புகழ்மாருதம் புருவத்(· மளவற்றதுமாகி
லுனைமேவிடுமிதழ் தானிர- டனிலோங்கியே நிற்கும்
முனையான தீரெண்டக்ஷர மிலகுமருள் தருமே. 174

அருளாகு மிரண்டக்ஷர மவைதான்நடுபீட
மறிவிப்பது மெனும்வீடது யாகாசமதாகில்
உருவாகுதலிருப்பாகிடு முணர்வேயவைபீச
முயர்மாமணி பிரபையது யவ்வானதுளிலகுந்
தருவேசதா சிவனாமதுஞ் சத்தி கொலுவிருப்பாள்
சார்ந்தோதிட யங்கென்றூணி சருகாமலும்வாசி
பிரளாமலுங் கண்டந்தனில் பிராணாயமேயூதி
பிரியாமலு தெசவாய்வதை பேதித்திடலாமே 175

பேதித்தியல் மூலந்தனில் பிரிந்தேகிடும் வாயுவை
பிரியாமலுங் கும்பித்திடப் பிராணாயமும்வசியம்
ஊதித்திடல் பரமானது முன்னெய்திடுஞ்சித்தி
இதையேயூது மப்பியாசமே யுருதிப்படுமாகில்
பாதித்திடல் பேதித்திடும் பரமானந்தமாகும்
பகருமுடல் கருவிகளின் பட்சமவைசேரில்
ஆதித்திடல் புலனைந்துமே யறிவோடுறவாகி
யறிப்படுமயமாகிட லானந்தமுமாமே 176

வேறு

விருத்தம்

ஆனந்தமயமதனிலவ்வும்
நிலைத்திடு மெனிலுமெல்லாந் தோற்றும்

பானமயத்தாட்டிலுள்ள
படினடத்திக்காண்பதுவுங்கேழ்ப்பதாகில்
ஊனுடலும் வாசியினாலூதிடவுங்
கற்பாந்திரமுடலுஞ்சித்தி
வானதீதகுருவெழுந்து வசனித்தரு
ளனுக்கிறகம் வருகுந்தானே 177

வசனித்தருளாதாரமாறும்
விளங்கிடிலும்வை வளமாய்கூற
நிசனித்திடலாத்துமதத்துவங்கள்
முப்பத்தாறெனிலும் நிகழ்த்தயானும்
திசனித்திட சிவதத்துவமிதனை
சிறப்பாயுரைக்கத் தெரியாதால்
மசனித்திட மண்டலங்களிவை
மூன்றுமூன்றவைதனக்கு மகிமைபாரே 178

முடுகு சந்தப்பா

பாருமாக்கினி மண்டலத்தினோடு
பளிங்கதாகுஞ்சந்த்ர மண்டலம்
பரிதியாகுமெனில் சூரியமண்டலம்
பகரவோவிதனையொவ் வொன்றாய்
கூறுமூலமதிலக்கினியவையுங்
குடியிருப்பதெனில் துடர்ச்சியாம்
கோலமாகும் சுவாதிஷ்டானத்தின்கீழ்
கும்பகத்தினடுமைய்யமில்
மூறுமக்கினியின் மணடலத்தினிலு
முயற்சியாமெனில் முச்சுடரது
மூலதாரமவையேயிருத்திமுனை
சுவாதிஷ்டானமவை சூழ்ந்திடில்

மருகிருக்கு மணிபூரகத்தினோ
டனாகதத்தி நடுவணையமாய்
அவையிருக்கு மிடஞ்சூரியமண்டல
மறிந்து கண்டுணர்வதாகுமே 179

மேல்விளங்கு மணி பூரகமெனு
மனாகதத்தில் பறந்தேறிடல்
மேறினாலுமவை சூரியமண்டலம
தாகிநிற்குஞ் சுயமறிவதாம்
கால்விளங்குஞ் சுயமாயிருப்பதுவுங்
கண்டங் காணவருள் வாச்சிடுங்
கருவிழும் மலமறுக்கவும் புவிதன்
காலியென்பதுவும் வாசிதான்
வேலைசூழு மதின்மேல் விசுத்தியெனு
மாக்கினைக்கீழ் சந்திரமண்டல
மிகவுஞ்சோதி சுடராகுஞ் சாந்தவெளி
மேவுவாசியைக் கண்டூதிடல்
தூலசூட்சம பிலமாதல் ஞானபிர
காசமாகி பதம் வெருவராய்
தூராதூர் குழிமும்மலம் பிரிந்திடவுந்
துன்பமே கிடுவார்களே 180

துன்பமேது சந்திர மண்டலங்களின்கீழ்
சூரிய மண்டலப் பிரகாசமாந்
தொண்டு செய்து கனல்வாசி கொண்டுமூல
துவாதசாந்த வெளி சொக்கினால்
அன்பனாதலா தாரங் காணவரு
மண்டபிண்ட மறிந்தேறலாம்
அருணன் சோதியுனதுருவில் தோன்றிவிடும்
கோரசுவாலை வடவாக்கினை

இன்பதுன்ப மிரண்டற்று சுவாசமது
மிருந்திடத்தி லொரு கடிகைதான்
இசைவதாகுங்குரல் கண்டதாரவழி
இன்பமுத்து வாசி பூட்டிபின்
சின்மயத்தினிட சித்திமுத்தி செயல்
தெரிசனங் களவையாகிடல்
சீவனாகி சிவதேகனாகிபர
தேசியானவர்கள் சித்தரே 181

தேசியென்ற விசுவாசியால்சடலஞ்
தேகசித்தியினால் தேறலாம்
திரிமண்டலங்களறி வாகரத்துடனுஞ்
செப்பினோமினிதன் செய்திகே
ளரசுலாவிமலமூன்றின் கூறுமரு
ளாணவங்க ளெனில் மாய்கையு
மதீதகாமிய மூமாகு மூன்றதுவு
மானவாருரைப் பதேதெனில்
ஈசனுக்கு யெதிராகு மாணவமு
மின்னகூறு குணமியம்பிடில்
இவை களிம்பெய்துஞ் செம்புபோலுஞ்சிறு
நெல்லுமியது போலதுவாம்
வாசிமேலதுமேறொ ட்டாக்காத்து
வருந்தெதிதனிலு முடிப்பித்திடும்
வாய்வுதானு மனமொன்றே தன்னதெனு
மாறிமாறிக் காத்திருப்பதே 182

வேறு

மாறிவிடுமாய் கையதின் வாரதுவினாலும்
வாய்வுதசை மேவிவரு மாணவமதாகி
மீறிவருமேதெரி யாமலெழுந்தங்கு
மீளவருத லாவதீத வேலியது போலாம்

தூருமடிந் தாவிபிரிந் தோடிவிடுமாகில்
ஏதுகுண தாவிதமு மேதுக்கு நினைப்பாம்
வேறுவிதகாமிய மிலங்கு பலபலவாய்
மேடியென கண்டதார்க் கெல்லா மகிழ்தலாமே 183

மகிழ்ந்திடுதலும் விரகமாய்கை யெனில் முத்தும்
வைத்திடுதலும் நித்தம் நிறுத்திடுதலாகும்
திகழ்ந்திடுதலுமலம தாகுமிவை மூன்றுஞ்
சிவத்தின் செயலாலுந் திரிமூன்றுவிததோஷம்
நிகழ்த்திடுவதாலு மெனில் வாதபித்தசேத்மம்
நாடிடும் வாதமது வாய்வு நிலையேகி
மகிழ்ந்திடுங் கலங்கிடுதல் மத்திபமதாகி
வக்கினியினோடுறவு கூடிவளம்பெருமே 184

பிரிந்திடு மனமிதனை யறிந்தியல்புவாதம்
பித்தமும் அக்கினியி னோடுபிரிவாகி
நிரந்தரமதாக் கிடுதல் மாய்கைவளமேவி
நினைந்துடன் வருந்திவரு மேதிரமதாகி
தரிந்திடுஞ் சிலேத்துமமதுஞ் சலமிகுதியாகி
சந்து துவாரங்கள தோரு மடையதுவிடாமல்
இருந்திடுதலு மிவைதன் மூன்றுவிததோஷ
மின்னதை விளம்பிடலு மேடணையு மூன்றோது 185

முடுகு சந்தப்பா

விளம்பிடுதலெனில் புத்திறெகைஷவித
லோகயெகைஷ அர்த்தயெகைஷயும்
இவைதன்மூன்று குணவதிசயங்களை
விதிப்பதும் வசியின் வாக்கியம்
அளம்பிடிலும் புத்திரெகைஷ யாவதைகூ
ரத்தன் மேலாசை படுதலால்

அறிவுகொண்டிடுதலுரவு செய்திடுதல்
யாவையுந் தன்ன தென்றிடல்
உளம்பிடுத லிவை லோகரெக்ஷயிதின்
வாருகூரு குணாமெனில்
உல்லாசமாது பரத்தையர் மேலாசையுர
வாயெடுத்து யெஞ்சேர்த்திடல்
விளம்பிடுதலெனு புத்திரக்ஷையெனில்
வாஞ்சையாவது கூரேதனில்
மாய்கை காமியமதே யுரித்தியுகை
மாறிடாமல் குணஞ்சேர்வதே 186

மாறிடாது குணமூன்றதேதெனிலு
மறுகூறதனை வழுத்த சாத்தியம்
மைத்தராசதம் மைத்தவாருமரு
கூர்விளங் கிடவுந்தாமசம்
பேர்விளங்கிடு மொவ்வொன்றதாகவுணர்
பேசுஞ்சாத்திய குணபேதமும்
பிரிவுதன் வெகுளியாதுரைத்துயிர்
பேசாதிருத்தலும் விலாசமாய்
நேர்விதித்தபடி யாருக்குதவி
நீகொடுத்தபடி யெய்திடல்
நேசருக்குதவியேது பாதகருக்
கேயுதவியருள் பாக்கியம்
தார்விதங்களெனி வாதெடுப்பது
மேருவேயாணுாகெம் மாத்திரம்
மோதுபேசுவரோடோது நாவசையா
வாததேகமவை சாத்தியமே 187

சாத்தியங்கள் தற்காத்தல் தன்னுயிர்போல்
தாநினைத்தலுஞ்சத் ராதியை
தான்பணிந்திடுதல் பகைவிலக்கிடுதல்
தசைகலையும் ஆய்ந்தறியுதல்

வீத்திலகிலுண்டுடுத்தி வாழ்தல்பெறல்
மேன்மையுண்மை நலம்தெரிதலால்
மேலிவை குணமதாகுராசதமு
மேவிடுதல் புகழ்பூண்டிடடல்
ஆத்துளாண்மையொடு வீணாம்பாடவையு
மேயனுபவித்தலு மன்னியே
யெவ்வுயிர்க்குமறிவே யுணர்த்திடுதல்
அனைவருக்குமே கருதிடல்
வீத்திருப்பது அனேகக்ஷேமசுக
வேறுபேத பித்தராசதம்
வெறுத்தல் கூறுகுணதாமசத்தினிட
விபரம்யானருள்வ தென்பதே 188

தாமசத்தின்குணமே விளங்கிடிலுந்
தந்தைசெய்தொழிலின் வாய்மையால்
சத்ராதிதன்னினவினாலு வஞ்சனைகள்
தான்மிகுந்தகுலை செய்திடல்
வாமமேலதீதவசையங் கொண்டிடுதல்
மாதுதிரேகபழி செய்திடல்
மாறிபேசிடுதல் வழிமறித்திடுதல்
வாதுபேசிடுதல் வளமிலா
வேமதத்துவமைவேறு கூறிடுதல்
விடுபட்டே வழிமறித்திடல்
விந்தைபேசிடுதல் மேலுணற்குவெகு
சிந்தைகொண்டுணர்தல் தந்தைதாய்
தாமசத்தினிடதுற்குணத்தில் பல
சூதினால் மனதுனோகிடல்
சுத்தபச்சை ஒயிலாயுடுத்திடுதல்
தெம்பு மாவததீத வாதமே 189

தெம்பு செய்திடுதல் நம்பினோர்க்குஇடர்
செய்தநன்றி மறந்திடுதலால்

சிலதுவிந்தை மிக சிந்தனையிடுதல்
சினேகிதர்க் கொடுமையாதெனில்
நிம்பிடுதலுமே முன்னுறைத்த மொழி
நேர்பிசகி நிலை மாறிடல்
நினைத்தபோது முகத்திடரு பேசி பகை
யிடரதாகியுடல் வாழ்கலால்
வம்புபொய் களவுகாமி தங்களினில்
மாய்கை கொண்டு மயலாகுதல்
வசனவாருமொழி தாமசத்தின்குண
வாய்மை கண்டுணர்வதாகிடல்
லெம்புலாவியருளாத் மதத்வமெனி
லேதுலோபகுண லட்சணம்
மிக்கமகிழ்கடவு சாந்தம் வாய்மைதய
வின்பதன் நினவு அன்புமே **190**

அன்புமேவியருள் புகழ்தரும் பெருமை
யதுமகிழ்ச்சி வருமாதலால்
அருமறையினடி தொழுதிரஞ்சிவரு
மறிஞ்ஞோரை வாழ்த்தி மனம் பூண்டிடல்
நம்பிடுதல்தனம் நல்லோர்க்குயீதல்
நலமறிதல் பொருளாய்ந்திடல்
நாவதர்க்கு மிக ஆபூதிகளென்னல்
நாதனைப் பணிந்தோதிடல்
உம்பர்கோனருளில்லோர் நினைப்பிடுதல்
உறவினர்கள் முரைசுற்றனர்
உத்தமர்க்கு வெகுமதிகளுமிடுதல்
உரைகள் காணவுபசரித்திடல்
கெம்பீரத்துட நிருந்திடலகுதி
கெதியிலாதொரு வர்க்கிடுதலால்
சித்திபெற்றிடுதல் புண்ணியங்களியல்
கிரிகையாபூதி களுணர்வதே **191**

தேக சிவனுருவாயுதித்துசட
மாகும் பூர்வமெனில் செய்வினை
சீர்விளங்கிடிலுநல்ல வினையுமெனில்
தீவினை யுமிவையிரு குணம்
வாகமத்தினுண றாகவுமென
வரும்வினையின் குணவாருகேள்
வருந்திடிலுமவையே விளம்பிடுதல்
மலர்கள் செய்வதும் புண்ணியபலன்
ஆகும் நல்வினையினாலுமேயறிந்
தர்மதான சவுக்கியமதாம்
சாருந்தீவினையதாகும் பாவமெனில்
சாத்திடில் நரகசொர்க்கமாம்
ஆகமத்திலிவை செய்த புண்ணியம
தாகும் நல்வினையுமெய்தலால்
அசுத்தமாகியதோர் தீவினைகள் செய
லடரும் பாவிகளுக்காமதே 192

பாவத்துரோகவினை தீவினை பயனால்
பலபலவிதப் பொல்லாமையும்
பார்த்திருவிழியில் குலவு செய்திடல்
பரத்தையர்கள் பொருள் பறித்திடல்
ஆவதுமதீத காரியங்கள்தனை
யாகொட்டாமலுமே செய்திடல்
அடுத்திருந்தவரை கெடுத்து மேவிடுத
லானதாலுமிவை தீவினை
தூவிடுதல் வெகு பொய்களுங்களவு
சூதுமோச மொழி கூறிடல்
துற்குணமிதனை சூட்டினோமறித
லுற்பவித்த செயலாமெனில்
தேவதேவ சிவதெரிசனம் பெருகுதல்
தியாகமேவியுப சரித்திடல்

சித்தசுத்தசு க்ஷேமா மெனிலுந்
தெளிவதாகு நல்வினையதே 193

வினைப் பயநிருதன்னிவை விளங்கிடினு
மிகவுமிவ்விதக் கூர்மேன்மையாய்
இராகமெட்டுமருள் ஒவ்வொன்றாகவிதி
வெவ்வேறாகவும் விரும்பிடவ்
அனைத்துயிர்க்கு முடல்காமக்கு ரோதலோப
மோகத்தோடு மதமாச்சரிய
மமைத்திடுதலும் இடும்பு வாழ்க்கையென
லாகயெட்டு வித கூறதும்
முனைத்திடுதலெனில் ராகமெட்டுவித
மொழிவிதாகில் குணவதிசயம்
ஓதிடும் அறிவில்லாமலுமுணர
உற்பனங்களே யானருள்
உங்கள் பேரிலுங்கா மிதத்தின்குணங்
காண்பதெல்லா மிகலாசையாம்
கடூரமாமெனிலுங்கு ரோதமாவதுவுங்
கடினமாகும் பிணக்காவதே 194

அதிதலோப குணமான வாருமவை
யெனில் பிடிப்பாடாகுதல்
ஆதலாலு மிவை மோகமாவது
மறிதலாலிவை தன்கூற்பிரிவதாம்
விதிதன்னாகு மதமானதுங்கெருவ
மிகவிகல்ப மாச்சரியமாம்
விசனமாதலிடும் பாவதுங்குணமும்
வெகுவிதத் தினிலுதாசினம்
சேதிகளாமெனிலும் வாழ்க்கை யாவதுகூர்
சாதுரியமவை கடினமாம்

சதகோடிவித்தை கருத்தாயிருந்திடிலுந்
தவருண்டே தளரும் வேட்கையால்
ததியிலு முதவாசாகாரத்தில் மழை
தான் பொழிந்த பலனெய்திடல்
தத்துவத்தினும் ராகமெட்டுவித
சைகையாறரிவர் தானுமே 195

சைகையாறறிவ ராலுமேயறிதல்
தன்னுக்குளவத்தை யஞ்சதும்
ஜாகரசொர்ப் பனஞ்சுழுத்திதுரியந்
துரியாதீத மெனுமஞ்செனில்
நிகையை யாற்றியவர் அஞ்சுகூறுகுண
நேர்மை ஆக்கிரமெனில் சாக்கிரமாம்
நெத்திநேரில் நிறைந்திடுதலா லுமிவை
நெறியதாக நிகழ்த்திடலுமாய்
கைகையால் கருவி சொற்பனத்தினில்
கண்ட ஸ்தானமதடுத்தனால்
கருவியாலுயிருங் காயமாகிசடங்
கண்டறிந்தவர்கள் யோகிகள்
செய்கையானருள சுழுத்தியானது
வாரிருதயக்க மலமேவிட
விருப்பதுவுங் கருவியுடனுதித்துரிய
மேருநாபியது கமலமே 196

துரியமென்றியல்பு நாபியின்கமல
தோற்றமாங் கருவி நேசமாய்
துரியாதீதங்கள் மூலாதாரமாகியுங்
கருவியாதியுடன் வாசமாய்
உருவதாகியுடல் கருவியாகியுரு
தொண்ணூத்தாரு விதரூபமாய்
யுகமயமாய்சடல காயதேகமிய
லுயிரதர்க்குதவி கார்த்திடல்

விரிவிலாத முப்பத்தாரு தத்துவமும்
வேதமாகும் வித்தியாதத்துவமும்
விவேகசிவரத்தினமு மென்றிவைனூ
லெட்டுசாணுடலுந் தொண்ணூாத்தார்
இவையதாகுமுயிர் சடலமாதிதமு
நேர்நிரைந்து லூடாடில்
நேயமாகி இவை பாசமாகிநித
வாசமாய் கனத்த உடலதே. 197

தகமையாய் கருவிசடல உற்பதமும்
தன்னுடம் புதிரமாங்கிஷம்
யுகமையாயவை மலர்ந்து ஓங்கிடுதல்
லுருமுகத்திலுங் கருவியால்
உருத்தரித்திடஞ் சத்துமாகி
யுபமாகி அவ்வுருவ மாகிடல்
அகமாயதித அவ்வதாகி
அதிலேயுதித் திடுதல்நாடிதான்
நாடியாவதுமே ஜெனித்திடுதல்
ஆத்து மதத்துவமுந் தோன்றிடல்
இகழ்விலாதுட லெலும்பு மேவித்தை
யெனுந்துடை நரம்பிது வெனில்
ஈரெட்டாகிவிடுமே பழுவதுங்
கொடுங்கை கொண்டுட நியம்புவாம் 198

வேறு

சந்த விருத்தம்

இயம்பிடு முட்டிக்கா லெட்டாதாகிட
லிவைவளைய மதாகியு முட்டிடல்
வியம்பிடிலு மத்தங்கனேக ரூபமாய்
இடையொடு பின்கலையுமவை சேர்ந்திடல்

சுயம்பதாகிடல் சுழிமுனை யென்றொரு
துளையுமுண்டெ நிலேவழியாகிடல்
மனமெனுமவ் வழியவை வாசலாம்
வாசல்கண்ட வள் வண்மயோதுவாம் 199

கண்டதோர் கால்வாயது காந்தலாம்
கனலவையனல் போலு மெரிந்திடல்
மண்டியிட்டு மடிமுடியும் பாய்ந்திடல்
வாதமாய் சூழியாகவும் வாச்சிடல்
சுண்டிடல் சூளையாவது மேதெனி
தூராதுற்குழிதுற் பாவையதாகிடல்
பண்பியில் நிணமா யுதித்தேயுடல்
பதியதுவுநீரலாய் செனித்தோங்குமே 200

செரும்பலும் பொரும்பலுங்கிருமியாம்
செனித்தலாலுமதுவகை தோலெனில்
நீரும் வாயனலாலும் செரித்திடல்
நேர்நிரைந்தனலாலும் விரித்திடல்
பருதலாலுமோ முன்னூத்தருபது
பலமெனுங்குடலான கூராகிடல்
முருதுறைத்திடுமே பலனாவது
முப்பத்துரெண்டு முழக்குடலாகுமே. 201

முழமெ நிலுருவாக வமைத்திட
லொன்பதுவுடன் வாசல் பிரிந்திடல்
வழியதாயு திரமெனில் சுக்கில
மலசல மிவைமூன்று வகையெனில்
அழிவதே துவச்சிற தோல் போர்த்துமே
வழியது பலவே மொழி சந்துமாய்
நழுவெனில் மூணரைகோடி ரோமமாய்
நாலெட்டெனிலுருப் படியாவதே 202

உருப்படி இருபது விரலெறி
லொருனான்குமே யுதிரமுமாகிடல்
இருப்பெனிலெட்டு சாணீள தேகமா
யிருரெண்ட நிலிவைசாண் பெருமனாய்
வருந்திடிலெனில் வாய்விழி நாசியாம்
வாழ்த்திடுமுடல் பிரிதிவியின் கூறதாம்
இருந்திடிலு மிரண்டது காலுமாய்
இரண்டு கைபதி னாருகயரதே 203

கயரதாகும் வீணாதண்டு மாகிடல்
கருதுமாரு தெருவுமே மூகடல்
இவையெனில் யெட்டுதூணது வேயெனில்
அலைசந்து முப்பத்திரெண்டாகையால்
இவையெ நில்பேரெலும்பு யெழுபதாம்
இயன்ற முச்சாணெலும் பதுமாகிடல்
அலையு முச்சாணவையெலும் பேசதை
யாருமெண் பலமீரலெனுமதே 204

நண்பதாகும் நாழியுதிரமாம்
நாலுபத்து வாசலுடையதாய்
உண்டெனிலு முதிரமும்மாங்கிஷ
முயர்ந்த மேதையவையதில் சுக்கிலம்
தன் பெருந்தசை மச்சையுமாமெனில்
சத்ததாது முப்பத்துரெண்டு பலம்
பண்பதாகும் பழுவெலும் பேதெனில்
பதினாறுடன் படைத்தவாரென்பதே 205

படைத்திரு முதுகுதண்டீராறுமாய்
பாருங் கோர்வை பகவன் செயலெனில்
உடைத்தாளசைவே தெனிலஞ்சுதாம்
உயர் நரம்பெலும் பொன்றியேழாகிடல்

அடைத்தசை வதுங்கூடிச் சதையின்மே
லானவாறதுவே தெனிலுமொழி
பிடைத்ததும் பிடரியினால் நாடிதான்
பின்னல் கோர்வைப் பிறவியை பேசுவாம் 206

பிடரிதன்னில் பிரிந்திடுமே நரம்
பெழுபத் திராயிரமெனு மாதலால்
அடரிடுமசை வானதுடலினி
லாருயிரவை நாற்பத்தியாறதாம்
துடரிடுந் தொழுகையுமிரண்டாயிரந்
துடர்ந்துமேவி வளருமையாயிரம்
படரிடும் பதினாரு கோணமதாய்
பரிசித்திடல் சேத்துமத்தின் கூறதே 207

கூருஞ்சேத்துமக் குண்டலியுமனல்
கும்பி தன்னிலிரைஞ்சியே வாய்வதும்
மீறினாபி கமலஞ் சுருங்கிடல்
மேவுமொன்பது வாசல் கதவெனில்
விருமேகதவானது பூட்டினால்
மேலெழுந்தன லாலதெழுந்திடல்
ஏறிடுமீசன் வாசல் திறந்திட
விடையினோடு பின்கலையில் நாதனே 208

பின்கலையெனில் பேரின்ப வீடதாம்
பேதித்தக் கினியாவ தெழும்பிடல்
அன்புயென்னுமவை நெய் சொறிந்திட
லமுதெனுந்திரி யாவது யேத்திடல்
இன்பமேயனலரவ தெழுந்திடல்
இகபர விளக்கேத்திய கண்டமில்
துன்பமேது தொடுத்துடன் வாசியை
தாண்டிட்டே வரவழைத்துள்ளமதே 209

உள்ளமாவதெனிலைம் புலனையே
சூட்டிடுமிவை நாசமதாகிடல்
கொள்ளுமே கோசமா மக்ஷரத்தையுங்
கொண்டிட வளவாகவறிந்திடல்
அள்ளே நிலன் பந்தோரட்சரமெனி
லாதாரம் நிராதாரஞ் சோதித்திடல்
உள்ளமே மண்டலத்தின் வலமதாய்
உதிரமண்டல மொக்கபால் சூட்டிடே 210

வாசிநடக்க

பால் சொரிந்து பசியுமகத்திடல்
பகருங் காமவெகுளி மறந்திடல்
வாலையாமெனில் வாசிப் புரவிமேல்
மவுனம் வைத்துடன் மாரி கும்பித்திடல்
காலையுச்சி கருத்திடல் மாலையுங்
காரிகுதிரைக்கும் விசையாய்விடல்
சாலையாமிரு மூன்று தெருவதும்
சாரியே வருமேதெனில் அசுவமே 211

அசுவமெனிலாவதுமேபரி
யதீதமே தெருவான திரண்டினில்
இசுலதாகுமேழா யிரத்தியிரு
நூறெய்தும் வாய்வு இரவு பகலதாய்
உசுவதாகுமோயாமல் சவாரிதான்
ஓங்கிடுமே ஓங்கார மூலத்தி நில்
முசுவதும் நாடி மூலாக்கினையண்டியே
யுருதி கொண்டுயுறம் பெறலாவதே 212

வேறு

உரைத்திடு மூலாக்கினை யுயர்ந்ததுவு மேலாய்
யுலாவியுட லெழுபத்திராயிரம் நரம்பாய்

நரைத்திடுவதாலு நரம்போடிவை நாடி
நடக்குமவை யுற்பதமும் நாடியிதாக்கெல்லாம்
பரந்தவுரம் படுமெனிலும் பகர்வதொரு நாடி
பண்மதிலாதித்த னுருபோலுந் நிறமாகி
யுரைத்திடுதலும் பிறிவதாகும் தெசநாடி
யுருவாகி பரியேறி பிறந்துடலுமுயிரொன்றே 213

உடலுயிருதித்து பிறந்தவாரெனிலு
முயர்ந்து மேகாலொடுகையும்
உதித்துடம் பெனிலுமவை
நடுத்தாமரையுள் நுழைந்துயிரதாகி
இடறிலாதுடலு மெய்த னிலோடி
பின் நரம்பாலெலும் பிணைந்து
பெருமூல நாடியடங்கி டுமெனிலும்
பிரமபத்தியுடனவை சேர்ந்து
படர்ந்திடு மடங்கி பத்து நாடியுமே
பாரித்ததில் சிவமுதித்து பரிகிடல்
உந்தி தனிலுருவாகி பகர்ந்து
கீழ் மேலெனும் பதித்து
உடனது புறிந்து உகமயாய்
சிரசிலுதித்த யீஸ்பரனருளாலும்
ஊழ்வினைப் பயனால் செயவினையடர்ந்து
யுடன்வினை மூன்றதுஞ் செனித்தே 214

செனித்தவாரே தெனிலு முதிரமண்டலம் போல்
தெளிந்திமைப் பாலுளம் பொழியும்
சேருவினை சத்தபரிசமும் ரசமும்
திகழ்கெந்த மிவையொடு எனிலும்
தினமமுதருந்த இடைவிடாதோருஞ்
சித்தமுத்தியுங் கொடுத்து

செயல் பலவெனிலும் நல்கி செய்வினையை
சேரொட்டா தருளதில் சொக்கி
குறிதத் துவங்கள் தொண்ணூறாத்தாறுங்
குறிகுணமிதை யுஞ்சிக் கருத்து
குடில மன்னாடி யெழுபத் தீராயிரங்
குறித்ததில் தோன்றிடுனாடி
ஜெனித் திடுபுறம்பெழில் பெரும்னாடியி
லுதித்திடும் விஷ்ணுநாடி
ஈஸ்வரனெனும் பேருத்திரனாடி
இடைக்கலை பின் கலையதுவே 215

இடைகலைகதிரும் பின்கலைமதியும்
யிருகலை யெழுந்துடனோடி
இடரிலாது முதுகினில்யெலும் பதவு
மீவிட்டுப் பழுவதுமாகி
உடம்பதில் முப்பத்தாறுமே
துவாரமு முடலிவை
குழியென விளங்கும் உதிரமும் உழக்கு
வாதம் நானாழி உயர்ந்திடும்
பித்தம் முன்னாழி உடம்பிவை
சேத்து முதிந்திடு நாழி
மூணரைகோடி ரோமத்துவாரம்
மூலமேயுதிக்கு மிருபத்தெண்கோடி
.............டுங் கெந்தமலையு
நண்பலமாமயிரது நூத்தெட்டுகோடி 216

மயிரெனும் ரோமமெனிலுமே யுரைத்தேன்
வகுத்தமேதையிரு நூறாம்
வச்சிரமிவை தோல்வகை விளங்கிடிலும்
வளர் முன்னூத்தாறது பலமாங்
குயிரதாம் நிணமுமிருமூன்று பலமாங்
குடல் முன்னூத்தேழது பலமாம்

குறித்திடு வழுக்கையீரிரெண்டு பலமாம்
கூறிடுஞ்சீ வரியவைதான் நற்கெந்தநாசி
முக்களஞ்செனிலும்
நலம் திகழ்கன்னம் நாற்களஞ்சு
....
நூத்திருபது மெபலண்மாம்
உடம்பினிலிரச்சி நூத்தருபது மஞ்சு
முயர்பலம் மூளை முப்பலமே 217

பலபல மொழியின் பைந்தமிழாய்ந்து
பாடினேன் ஊர்வசி வாக்கியம்
பன்னுந்தாமரையு மெட்டு மைங்களஞ்சு
பகர்ந்திட சலப்பையு முழந்தான்
கலனுருங்கருவி இவைதொண்ணூாத்தாருங்
கணக்கறிந் தொவ்வொன்றாய் கருத
காயமாஞ்சட முடல் குறிப்பதுங் கண்டு
யானருளினேன் கருத்தாய்
மலமதுவகற்றிய முதமே புகட்டி
வாசியை வறவழைந்துளமில்
வளமறிந்துணரு வள்ளுவனாதர்
வசனமோ ராயிரத்தன்னூர்
நிலவது போலு மமைத்திடலெனது
திகழ்த்திடலா யிரத்தன்னூர்
நெறியதாய் விளங்குத் தத்துவப்படலம்
நீடுழி வாழ்ந்திருந்தனனே 218

வாழ்ந்திருந் தொருனூரஞ்சு பாடலுமே
வழுத்தயான் பதஞ்சலிக்கமலம்
மலர்பொழிந்த முதவாசி கொண்டுதி
வங்குசிங்கென் றொருலட்சம்
....
சடங்கு செய்விதம் பிசகாமல்

தனையறிந்த முதுயுடல் பிறந்திடத்தே
    தன்னவிட்டு பிறிந்திடாதிருக்கலாம்
பாழ்நரகடுக்காதுன துள்ளங்காயம்
    பத்தியே பழம்பொருளதனை
பணியது வசமாய் புனல்மழை சொரிய
    பணாமுடி மீதிலும் வழிய
வேழ்வி செங்கதிரோன் விண்மதி துலங்க
    விதித்ததோர் விதி பிரியாமவ்
விடமிட்டு பிசகாதிருப் பெருந்துரையில்
    விளங்கலால் தீர்த்தமுதருந்தே 219.

ஊர்வசி திருவாய் மலர்ந்தருளிய பஞ்சரத்தினம் முற்றிற்று

உ

மகா மகத்துவம் பொருந்திய நாற்பதெண் சித்தர்களில் ஊர்வசி வயித்திய சிட்கா

முதற்பாகம்

புதன்	சுக்கிரன்	சந்
குரு	சூரியன்	செவ்
கேது	சனி	ராகு

ஊர்வசி வாக்கு

அண்டரண்டம்புரந்து நின்ற ஆதிகாப்பு
ஆதாரமாறான ஜோதிகாப்பு
மண்டலத்தை யுண்டளித்த மாயோன்காப்பு
மண்பிசையுங் குயவன் மலர்த்தாளே காப்பு
பண்டுபுகச்சீர்தர்ம தெய்வங் காப்பு
பாரதியினிரு பாதபதுமங் காப்பு

எண்டிசையாந்திக்குடைய தேவர் காப்பு
இந்திரனார்பாதமல ரென்றுங் காப்பா 1

காப்பாகுங்கணபதியுஞ் சித்திமுத்தி
கந்தனொடு தெய்வானைக் குறமின்னாத்தாள்
தாப்பானசிவகாமி சிறுபெண்வாலை
தயிரியஞ்சேர் லட்சுமியோ டிளையமாது
மூப்பானவயிரவரும் வீரபத்திரம்
மும்மூர்த்தியானவர்க்கும் முறையேபோற்றி
ஆர்ப்பான இந்திராணிகேள் வன்முன்னே
• அபிநயிக்கும் ஊர்வசியா னறையக்கேளே 2

வசியென்றேவானவர்கள் நித்தம்சூழும்
ஆயிரங்கண்ணிந்திரனார் சபையிலேதான்
இசைகொடியில்மிக்கவாள யிருந்தயானும்
யேழைமதிதன்னாலே சபையிலோர்நாள்
சதியின்றிவனமேகும் புரூரவன்றன்னை
சருவினதாலென்பிழையை சகித்தார்முந்த
பசியின்றி சுரர்கோனைத் திரும்பயானும்
பரதயிசை தன்னாலே பணிந்துவாழ்ந்தேன் 3

தேன்சொரியும் அத்திபுரிக்காவிலன்று
திங்கணிகர்புனலாடந் தேர்ந்தகாலை
வான்புகழுஞ்சந்திர குலத்திலகனான
வணங்கநிகர்சந்தணனை வனத்திற்கண்டு
நான்புணர்ந்தகுற்றமதால் யோனிக்கண்ணன்
நளிவகலச்சிரசதனை நருக்கச்செய்தான்
கான்சுரந்தவாரதுபோற் றுயரங்கண்டு
கருணைவளர்ச்சித்தரெனைக் கார்த்திட்டாரே 4

கார்த்திட்டகாலாங்கி கலசநாதர்
கமலமுனியூகமுனி கருணாநந்தர்

பார்த்திட்டபோகமுனி சட்டைநாதர்
பதஞ்சலியார் கோரக்கர் பவனந்தீசர்
சீர்த்திட்டபுலிப்பாணி யழுகண்சித்தர்
ஜெகம்புகழும்பாம்பாட்டி யிடைக்காட்டீசர்
பேர்த்திட்டவசிஷ்டரொடு கவுசிகரும்
பிரமமுனியாகயின்னம் பெரியோர்தானே 5

தானானவேதகுரு வியாசரோடு
தன்வந்திரிசட்டைமுனி புண்ணாக்கீசர்
கோனானநந்தீசர் அகப்பைச்சித்தர்
கொங்கணவர்குருபாத நாதர்மச்சர்
தேனானபரத்துவாசர் கூனக்கண்ணர்
தெளிவருளும்கடுவெளியாம் சித்தர்முத்தர்
பானானரோமரிஷி புசுண்டரோடு
பராசரமா ரிஷியிவரைப் பணிந்தேனையா 6

ஐயமற்ற தேரையர் புலத்தியீசர்
அந்தமுள சுந்தரராநந்த சித்தர்
செய்யமறைத்திருமூலர் கருவூர்நாதர்
சிவவாக்கியரோடு தொழுகண்சித்தர்
துய்யமன நவநாதர் வசுக்களானோர்
தூர்வாசரான சந்தரிஷிகள்மாரை
பையெனவே யான்பணிந்த யிதங்கண்டு
பகரரியவெகுநூலை பாலித்தாரே. 7

தாரிலுயர்மனுக்களிட பிறப்பிறப்பை
தான்பேசிவிண்டயனுந் தற்கமிட்டு
பேரிலுயர் தாம்தாமே பெரியோரென்று
பூமிமிசைபலபிணியைப் பரவவிட்டு
சீரிலுயர்நான்குசத நான்குநூற்றி
நாற்பத்தியெட்டெனவே விகற்பமாகி

சீரகலவிட்டகுறை வறுமைநீங்க
சித்தரெனக்குபதேசம் செய்தவாரே. 8

வாராகப்பதினெண்மரான வானோர்
அனுக்கிரகம் செய்தபடி வணங்கிக்கேட்டு
சீராகசிலதுமுறை யுபயோகித்து
சிந்தாமல்நடைவழியாய்ச் சிறக்கச்செய்து
தேராமல்பலபேரும் செய்துக்கொள்ள
தொந்தரையொன்றில்லாமல் திரைகணீக்கி
நேராகஉலகமுழு தென்பேரோங்க
நிகழ்த்தினேன்ஊர்வசி சிட்காவாமே. 9

ஆமேதான் மாத்திரைகள் சிந்தூரங்கள்
அடைவானபற்பமுதல் கற்கமெண்ணை
தாமேதான்லேகியங்கள் கிருதங்கட்டு
தனித்தனியேவகைபிரித்துத் தண்மையாக
பூமேதான்சிறுமணவூர் தன்னில்மேவும்
புலவன்முனுசாமியின் கூர்புத்திகொண்டு
பாமேதான்யிருகாண்ட மாகச்செய்து
பதிப்பித்தோமிதுமுதலாங் காண்டமாமே. 10

ஊர்வசி வயித்திய சிட்காவின்

பாயிரம் முற்றிற்று

சிவமயம்

ஊர்வசி வைத்திய சிட்கா

முதல் பாகம்

மானிடமாகிய நமது சரீரத்திடமாயுள்ள அவயவங்களில் கிரகங்கள் நிற்கிறயிடமாவன

தலையாகிய கபாலம் அங்காரகென்னும் செவ்வாய்க்குரியயிடம், முகம் சுக்கிரனுக்குரியயிடம், கழுத்து புதனுக்குரியயிடம், மார்பு சந்திரனுக்குரியயிடம், வயிறு சூரியனுக்குரியயிடம், வயிற்றுக்குக்கீழ் உள்ள இடை குருவுக்குரிய இடம், துடை சனிக்குரிய யிடம், கால்கள் ராகுவுக்குரியயிடம், கேதுவுக்கும் சொல்லத் தகுமாம் என்பார்கள்.

கிரகங்கள் தங்கிய அவையங்களுக்குரிய வியாதி அறியவும்

தலைக்குரிய அங்காரகனால் தலைநோய் சிரபாரம மண்டைக்குத்து இவைகளுண்டாகுமாம், முகத்துக்குரிய சுக்ரனால் கண் வியாதிகள் பறபலவும் உண்டாகுமாம், கழுத்துக்குரிய புதனால் கழலைக்கட்டி, நெஞ்சொிப்பு, கபம் முதலானவையுண்டாம். மார்புக்குரிய சந்திரனால் மார்பு நோய், சீதளம் இத்தகைய வியாதியுண்டாம், வயிற்றுக்குரிய சூரியனால் வயிற்றுநோய் நீராம்பல் முதலிய வியாதியுண்டாம், அரைக்குரிய குருவினால் மூலவியாதிகள் பலவுண்டாம், துடைக்குரிய சனியினால் கால்முடக்கு, பீலி

கரும்படைகள் முதலானவையுண்டாம், காலுக்குரிய இராகுவினால் விஷங்கள், முயல்வலி, குறைநோய் சம்பந்த வியாதிகளுண்டாம்.

முக்கிய குறிப்பு

மேற்கூறிய கிரகங்கள் தங்கள் தங்களுக்குரிய இராசிகளிலேனும் நட்பு-ஆட்சி-யுச்சம் - திரிகோண கேந்திர மேறியும் சுபக் கிரகசம்மந்த பார்வை பெற்றேனும் எவ்வித குறைபாடுகளுமில்லாமல் ஜெனன காலத்தில் சமரசப் பட்டிருக்குமாயின் அப்படி ஜெனிப்பவனுக்கே அந்தந்த கிரகத்தின் திசாபுத்தி அந்தரபலன்கள் முற்றிலும் குறைவின்றி கொடுப்பதன்றி அந்தியமட்டும் திரவிய ஆபரண வஸ்திர போஜன வாகன அதிகார சௌக்கியங்களோடு ஈகை இரக்கம் தயை தானமுள்ளவனாயும் இகபர சௌக்கிய மெய்து வானெனன்பார்கள்.

அப்படி அல்லாமல் லக்கினாதிபதியானவன் 6-8-12 இந்தகான மேறியும் அல்லது பகைநீச்சம் பெற்றும் பாபக்கிரக சம்பந்தப்பட்டு மிருக்குங் காலத்தில் ஜெனிப்பானேல் மேற்கூறிய வியாதிகளும் தாரித்திர துன்பங்களும் விஷம் முதலான பைசாச துர்சம்பந்தமான துன்ப முண்டாமென்றறிக.

கிரக நிலைகளைக்கொண்டு வியாதியறியவும்

யாவர்க்கேனும் ஜென்ம வீட்டில் ஜென்மாதி பனுடன் சூரியன் கூடியிருக்கில் எப்பொழுதும் பித்த ரோகம் வாதிக்கு மென்றறிக.

ஜெனன வீட்டிலும் 7 ஆமிடத்திலும் ஜென்மாதியும் இராகு கேதுக்களுடன் கூடியிருக்கில் குட்டநோய் வந்தெய்துமென்றறிக.

ஜென்ம வீட்டிலேனும் எட்டாமிடத்திலேனும் சந்திரனானவன் பாபக்கிரகங்களுடன் கூடியிருக்கில் க்ஷயரோகம் வந்தெய்து மென்றறிக.

ஜென்மவீட்டில் குகனும் புதனும் கூடியிருக்கிலும் இரண்டாமிடத்திலிருக்கினும் சுரரோகம் பீடிக்கு மென்றறிக.

ஜென்மாதிபன் நீச்சம் பெற்றிருப்பானேல் பிரமிய ரோகம் வெந்தெய்து மென்றறிக.

ஜென்மத்தில் செவ்வாயிருக்க ஜென்மத்தைப் பாபர் பார்த்தாலும் ஜென்மாதிபன் எட்டில் பாபருடன் கூடியிருக்கினும் மூலவியாதி வந்தெய்து மென்றறிக.

ஜென்மாதிபன் 5-ல் 7-ல் 10-ல் இருக்க ஜென்மத்தில் செவ்வாயிருக்கினும் நல்லோர் பார்வை யில்லாதிருக்கில் அதிசாரரோகம் வந்தெய்து மென்றறிக.

ஜென்மாதிபன் குருவாகவும் மூன்றாமிடத்தில் இராகுவும் அல்லது மூன்றாமதிபனைக் கூடியிருந்தாலும் அண்டவாத ரோகம் வந்தெய்து மென்றறிக.

ஜென்மாதிபதி எட்டாமிடத்திலும் எட்டாமிடத் ததிபன் ஜென்மத்திலும் சனி சந்திரன் பாபக்கிரகங்களுடன் கூடில் உருவில்லா ரோகம் அதாவது நியமிக்கப் படாத பற்பல நோயணுகு மென்றறிக.

ஜென்மாதிபன் குளிகனுடன் கூடியிருக்க சந்திரன் சனி ஆறில் பனிரெண்டிலிருக்க ஆறாமிடத்தனும் எட்டாமிடத்தனும் நீச்சம் பெற்றிடில் பல பிணியால் மரணம் வந்தெய்து மென்றறிக.

ஜென்மாதிபனுடனாகிலும் மூன்றாமதிபனுடனாயினும் புதன் செவ்வாய் கூடியிருக்கில் நீரிழிவு ரோகமும் நீர் துவாரரோகமும் உண்டாகுமென்றறிக. மேற்படி கிரகங்களுடன் சனி கூடியிருக்கில் நீர் தாரையில் கல்லடைப்பு ரோகமுண்டாகு மென்றறிக.

ஜென்மாதிபன், செவ்வாய் அல்லது புதனாயிருந்து இவர்கள் மிதுனம் கன்னியிலிருக்க புதன்பார்க்க ஆசனத்தில் பலவியாதிகள் அணுகு மென்றறிக.

ஜென்மாதிபனுடன் பாபக்கிரகங்கள் சேர்ந்தாலும் செவ்வாய் சகிதமானாலும் பார்த்தாலும் கல்லடியால் மரணம் நேரிடுமென்றறிக.

ஜென்மாதிபனுடன் குளிகன் இராகு கூடி லக்கினத்தில் நின்றாலும் குளிகன் திரிகோணமேறினும் எட்டாமிடத்தில் நிற்கினும் குளிகள் நாலாமதிபனுடன் கூடினும் அண்டம் பெருத்துவரு மென்றறிக.

ஜென்மாதிபனுடன் சூரியன் செவ்வாய் புதன் கூடினும் ஆறாமிடத்தில் எட்டாடத்தில் இருந்தால் செங்குஷ்டம் சம்பவிக்குமென்றறிக.

ஜென்மத்தில் இராகுவும் மூன்றா மிடத்தில் சனியும் யிருக்க அண்டம் பெருத்துவருமென்றறிக.

ஜென்மாதிபனும் ஆறாமிடத் ததிபனும் குஜனுடன் கூடி ஜென்மத்தி லிருக்கில் அதிசாரபேதி யுண்டாமென்றறிக.

ஜென்மத்தில் சூரியன் செவ்வாய் கூடியிருக்கில் குறை வியாதி பெருமூச்சு இவை யுண்டாகுமென்றறிக.

ஜென்மாதிபனுடன் குஜன் கூடியிருக்கையில் பாபக் கிரகங்கள் பார்க்கில் தலையில் கல்லடிகாயம் படுமென்றறிக.

ஜென்மத்தில் சனி-இராகு கூடியிருக்கில் பேய் பிடிப்பதுடன் மந்திரீக துன்பம் வருமென்றறிக.

ஜென்மத்தில் செவ்வாயிருக்கையில் தீயக் கிரகங்கள் பார்க்கில் அடிவயிற்றில் வலிகாணுமென்றறிக.

ஜென்மாதிபன் ஆறாமிடத்ததிபன் இராகு இம்மூவரும் ஒரு வீட்டில் கூடியிருக்கில் அரவங்கடித்து மரணமாமென்றறிக.

ஜென்மாதிபனுடன் இராகு அல்லது கேது கூடி யிருந்தால் காவலிலிருக்கும்போது மரணம் சம்பவிக்கு மென்றறிக.

ஜென்மாதிபதி பாவியாயிருந்து சனி சம்மந்தப் பட்டிருப்பானேல் விஷபட்சணஞ்செய்து மரணமாவா னென்றறிக.

ஜென்மகேந்திரத்தில் சுக்கிரனும் சந்திரனும் இருக்க பாபக் கிரகங்கள் ஐந்தில் எட்டில் இருக்க முயல்வலி ரோகம் வந்தெய்து மென்றறிக.

ஜென்ம லக்கினத்தில் பரிவேடம் மூன்றில் எட்டில் குஜனும் திருகோணத்தில் குருவில்லாதிருக்கில் குமரகண்ட வலி வந்தெய்து மென்றறிக.

ஜென்மத்தில் செவ்வாயிருக்க இரண்டில் எட்டில் ஜென்மாதிபன்யிருக்க கேந்திரத்தில் நல்லோரில்லா திருக்கில் தேகமுழுமையும் வியாதி யுண்டாமென்றறிக.

ஜென்மாதிபன் குசன்-புதன்-இராகு அல்லது கேது இவர்கள் ஏகவீட்டில் கூடியிருக்கில் குஷ்டரோக முண்டாமென்றறிக.

ஜென்மாதிபனுடன் சூரியன் அங்காரகன் கூடியிருக்கில் இரத்த குஷ்டம் வந்தெய்துமென்றறிக.

கிரகசஞ்சாரத்தால் உண்டாகும் மற்ற
ரோகங்களை இரண்டாம் பாகத்தில்
காண்க

நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளையும் சூட்சத்திலுணரும்படியான மணிக்கடை நூல்

நோயாளிக்கு வியாதி ஆரம்பமான காலத்தில் அவனுடைய வலதுகையின் விரல்களின் கீழ் அகங்கையில் அதாவது மணிக்கட்டாகிய திரண்டு வட்டவடிவாயுள்ள முட்டி யெலும்புக்கு மேல் நான்கு விரக்கடை நீளம் தள்ளி அதற்கு மேல் கையகளத்தை ஒரு கயற்றினால் சுற்றளவாயளந்து அந்த நீளத்தை அவன் கை விரல்களினால் அளக்கச் செய்து வியாதியின் தொகுப்பறியவும்.

அப்படி அளக்கச் செய்த கயறு அவன் கை விரலாற்றானே பத்து விரற்கடையிருந்தால் உடல் வெதுப்பும் வாய்வினால் நெஞ்சு கால்கையில் குத்தலுண்டாயிருக்கும். உளையும் வயிற்றில் வாயு திரட்சியும் குன்மமும் உண்டாகுமென்று அறிக. புருஷர்களுக்கும் ஸ்ரீகளுக்கும் இவ்வாறே அறியலாம் என்பது அனுபோகம்.

ஒன்பதே முக்கால் விரற்கடை நீளமிருந்தால் அரையாப்பு பிளவை வரட்சி இருமல் உண்டாகுமென்றறிக.

ஒன்பதரை விரற்கடை நீளமிருந்தால் உடல் வெதும்பி வீக்கமுண்டாம். சூடுண்டாம், விழி காந்தும், உட்சுரம் மேகமுண்டாம். அன்னத்தைத் தள்ளுமென்றறிக.

ஒன்பதே கால் விரற்கடை நீளமிருந்தால் விழிகாந்தும். நீர் கடுத்தும், சிறுத்தும் இறங்கும். நித்திரைவராது. பீனிசமுண்டாம்.

ஒன்பது விரற் கடை நீளமிருந்தால் செவிமந்தமாயும் கண் புகைச்சலாயிருக்கும், இருதுடையும் அயரும் நடக்கவொட்டாது.

எட்டே முக்காலுக்கு உடல் காயும், சிலவிஷத்தால் குட்டம் போலுண்டாகும். மூல வாயுவினால் வயிறு பொருமும், கண்காசமும் பீனிசமும் உண்டாம்.

எட்டரைக்கு தேகம் வெதும்பும், வெட்டை, கிரந்தி, குஷ்டம், சொரி, குடல் வாதம், தாது நஷ்ட முண்டாமென்று அறிக.

எட்டே காலுக்கு உடல் பெருந்து வலித்துளையும் தலைவரட்சி வலி பீனிசம் வியர்வையும், சில விஷத்தினால் இளைப்பு இருமலுண்டாகும்.

எட்டுக்கு மேககாங்கை வயற்றில் மந்தம் பொருமல் வாயு திரட்சியுண்டாகும். அன்னத்தை வெறுக்கும். சுகமிராது. வெற்றுடம்பு படும்.

ஏழே முக்காலுக்கு மூலம் எழும்பி கைகால் காந்தும். தலையிடிக்கும் மதத்திருக்கும் இரண்டு வருடத்தில் கண்ட மாலையாம். நாட் செல்லசெல்ல நாசியிலிருந்து இரத்த முண்டாம்.

ஏழரைக்கு யெலும்புருக்கி மேகம் வயிற்றுப் பொறுமல் கண்ணெரிவு ஆறுநாளில் உடம்பிற் காந்தல் கைகால் சந்துளைவு விப்பிருதியுண்டாம்.

ஏழே காலுக்கு இடுப்பில் வாய்வு குத்துவலி பிடிப்பு சிரசில் பித்தம் கண்வலி பாண்டுசோகை கைகால் அதிகநித்திரையுண்டாம்.

ஏழுக்கு பித்தம் சிரசிலேறும். வாயினால் ரத்தம் விழும் க்ஷயங்காணும், கைகால் காந்தல் சிலந்தியுண்டாம், உஷ்ணம் அதிகரிக்கும், மலம் தீயும்.

ஆறே முக்காலுக்கு அண்டவாய்வு கண்வலி மயக்கம், மூன்று வருடத்தில் நீரடைப்பு க்லலடைப்பு கைகால் காந்தல் வலி உளைவு முகத்தில் வியர்வையுண்டாம்.

ஆறரைக்கு உடலில் வெதுப்பும் குத்தலுண்டாம், தாகம் அன்னத்துவேஷம், சூடு வாதமுண்டாம்.

ஆறேகாலுக்கு மூலக்கிராணி புளித்த ஏப்பம் சத்தி துடை வாழையுண்டாம். அறைசோறு போற் கழியும்.

ஆறுக்கு இளைப்புங்கபமுமுண்டாம், இருபது நாளில் மரணமுண்டாம்.

ஐந்தே முக்காலுக்கும் அதுமுதல் நான்கு விரற்கடை வரையில் தேகத்தில் பலவித பிணிகளுண்டாகி ஜீவன் பிரியும்.

தெரிந்து செய்யும் சில கர்மத்தால் உண்டாகும் முக்கிய வியாதிகளின் குறிப்பு

யாதொரு காரியமின்றி துளிர் கொழுந்து தாவர வர்க்கங்கள் கிள்ளி எறிதல், வெட்டல், தரித்தலாலும், நீரிலுள்ள ஜெந்துக்களை ரவியில் போடுவதாலும், நகர்வன ஊர்வனவாகிய ஜெந்துக்களை இடமகலச் செய்வதாலும், பறப்பனவாகிய பட்சி ஜெந்துக்களை கண்ணி, உண்டுவில் இவற்றால் கவர்ந்து இம்சிப்பதாலும், தனது ஆயுளுக்கு மூத்த மங்கையரைப் புணர்தலாலும் அளவின்றி விந்துவை இகழ்தலாலும், இரகசியத் தானத்திலிருக்கும் அதாவது விலக்கு ஸ்திரீகளை இணங்குவதாலும், பொழுதை விளக்கும் சூரியன் முதலாய் நவக்கிரக தேவதைகளின் ஞாபகமன்றி இருப்பதாலும், லாகிரி வஸ்துக்களை மிதமின்றி அருந்துதலாலும், அகால போஜனத்தாலும், பிஞ்சியிற் பழுத்தலொத்த பெரும் போகத்தாலும் சிவயோகி முதலான அருந்தவத்தினர் உள்ளம் வருந்த உதாசினம் பேசுவதாலும், ஜாமத்தில் தனிவழி செல்வதாலும் ஆன்மசந்தேக அசத்தியாலும், சுரம் - குளிர்-மயக்கம்-காந்தல்- மூலங்-கிரந்தி-குட்டம்-சூலை-புத்து-வெள்ளை-அரையாப்பு கண்ட மாலை - குன்மம் - முடக்கு - நீராம்பல் - ஜெக்கட்டி காசம் - சுவாசம் - அதிசாரம் - பாண்டு - சோகை - ஈளை - காமாலை - காசி ரோகம் - மகோதரம் - கருமை செம்மை - வெண்மை குட்டமாகிய வியாதிகளுண்டாகி இகத்தில் இன்னும் இன்னும் இயற்றுங் கர்ம சம்பந்தத்தால் கிளைரோகங் களுண்டாகிக் கீழ்படுவதுமன்றி பரத்துக்கும் ஆளாகாமல் பாழ் நரகடைவர் என்று பதினெண் சித்தருட் கூறிய கன்மகாண்டம் முதலிய பெருநூல்களில் விபரமாய் அறியலாம் என்றுணர்க.

நவக்கிரக சம்பந்தமான வியாதிகளும் பதார்த்தங்களும் தெரிந்து கொள்ளும்படியான விவரம்

ஞாயிறு என்னும் சூரியன் சம்பந்தமான வியாதிகளும் அவயவங்களும்

சமரசமான சூடு, வரட்சி, பித்தம், ஆன்மசூடு, தலை, தலைமூளை, வலது புயம், மார்பு, இருதயம், நுரையீரல், பற்கள், விலாஎலும்பு புலன்கள், வலது கண், பித்தத்தையும், உதிரத்தையும் பற்றிய வியாதிகளுமாம்.

சூரிய சம்பந்தமான பதார்த்தங்கள்

பச்சை - கெம்பு - தங்கம் - இராஜவர்த்திக்கல் - கெந்தகம் - பளிங்கு - கண்ணாடி - சக்கரை - கரும்பு - தென்னைமரம் - கமுக மரம் - பேரீச்சமரம் - உயர்வையுடைத்தாயுள்ள -அடவி விருட்சங்கள் - உலர்ந்த பிறகு உபயோகப்படும் காய்களையுடைய மரங்கள், கொடி மாதுளம் பழம் - கொடிமுந்திரி பழம் - நவதானியம் - சீமை அத்திப்பழம் - கோதுமை - வெந்தயம் - குதிரை - ஆடு - முதலை - நாகம் - வரிப்புறா - நிலக்கடம்பு - காட்டுத்துளசி - நொச்சில் - சாலம்பிசினி - ஜாதிக்காய் - காட்டாத்தி - சாரப்பருப்பு - ஆமணக்கு - லவங்கப்பட்டை - பேரரத்தை - ரேவல் சீனி-கிச்சிலிக் கிழங்கு - தாளிசப்பத்திரி - குங்குமப்பூ - சதாப்பிலை - சூரத்து நிலாவிரை-சடாமாஞ்சில்-நருவிலிக்காய்-சதகுப்பை-தொட்டாற்சுருங்கி-கற்றாழை-சாம்பிராணி- மருக்கொழுந்தின் விரை-மஞ்சள் - அகில் கட்டை - ஏலக்காய் - குசும்பாவிரை - நிலவேம்பு - வெள்ளை குங்கிலியம் - வால்மிளகு - கொட்டைக் கரந்தை - கோவை - வெட்பாலையரிசி - நாரத்தம்பழம் இவை முதலியவை சூரியனுக்கு சம்பந்தப்பட்ட பதார்த்தங்களாம்.

திங்களெனும் சந்திரன் சம்பந்தமான வியாதிகளும் அவயவங்களும்

குளிர்ச்சி - ஈரம் - சிலேத்துமம் - தோல் - மயிர் நகம்-இடதுபுயம் - பிடரி - இடதுகண்கள் - கால் சத்தையும், கொழுமையும் - குளிர்ச்சியும் பற்றிய வியாதிகளாம்.

சந்திரன் சம்பந்தமான பதார்த்தங்கள்

முத்து - பளிங்கு - வெள்ளி - கண்ணாடி - வெள்ளைக் கல்லுகள் - சுரை - பூசினி - பீர்க்கு- வெள்ளரி முதலியபூமியில் படர்கின்ற கொடிகள் - தித்திப்பு மாதுளை - அதிகக் கிளைகளுள்ள சிறுமரங்கள், கிளை கொடிகளில் காய்க்குங் காய்கள் - மாடு ஒட்டை முதலிய மனிதர் உலாவும் மிருகங்கள், வாத்து நாரை, கொக்கு முதலிய ஜெலத்தில் வாசம் செய்பவைகள், இஸ்பகூல்விரை, வெங்காயம் - கோழிக்கீரை - முலாம்பழம் குலேபனப்ஷா - ஆப்பிள் பழம் - நெருஞ்சி - கசகசா - முட்டைக்காளான் - முள்ளு வெள்ளரிக்காய், தாமரை, காசினிவிரை - இவை சந்திரனுக்கு சம்பந்தப்பட்டவை என்று அறிக.

அங்காரகன் என்றும் செவ்வாய் சம்பந்தமான வியாதிகளும் அவயவங்களும்

அதிகசூடு - வரட்சி - சூட்டைப் பற்றிய பித்தம் - மாமிசம் பித்தப்பை - பீனிசம்-நீர்தாரை-வலது நாசி சத்தப்புலன் - சுரம்-காமாலை-கருப்பச்சின்னம்-பீஜம். பெரும்பாடு மூலம் இவைகளாம்.

செவ்வாய் சம்பந்தமான பதார்த்தங்கள்

செம்பு காந்தம் - ஜாதிக்காய் - வெள்ளுள்ளி - வெங்காயம் - கடுகு-மிளகு போன்ற காரமான வஸ்துக்கள், நெடியுள்ள பூண்டுகள் - சேராங்கொட்டை மரம் - முள் செடிகள்-கள்ளியைப் போன்ற பாலுள்ள மரங்கள் - கசப்பு வாதுமைக் கொட்டை- காப்பிக்கொட்டை- புலி-ஓநாய்-பன்றி- பாம்பு முதலிய துஷ்ட செந்துக்கள், சிவந்த பட்சிகள் - குருவிகள் - முள்ளி - வாய்விளங்கம்-போஜீதான்மிசரி - நிருவிஷம்-சீமை சிவதை வேர், காக்கரட்டான் விதை - எட்டிக்கொட்டை - காட்டுப்புதீனா-காயம் - ஆற்று துமட்டிக்காய், கடுகு ரோகணி- சிற்றரத்தை-ஏலம்-திப்பிலி-தேட்கொடுக்கு, அலரி-நேர்வாளம்- தேவதாரி-பெருஞ்சீரகம் குங்குமப் பூ-சுக்கு-லவுங்கப் பத்திரி- கோரைக் கிழங்கு - பெருலவங்கப்பட்டை - கருஞ்சீரகம் - சித்திர மூலம்- அக்கிராகாரம் - காட்டு வெங்காயம்-முள்ளங்கி - திப்பிலி மூலம்-மஞ்சிட்டி, புதினா, லவுங்கம், கோஷ்டம் ஓமம் - வசம்பு - மருவு-மருக்கொழுந்து இவைகள் செவ்வாய்க்குரிய பதார்த்தங்கள் என்று இசைப்பார்கள்.

புதன் சம்பந்தமான வியாதிகளும் அவயவங்களும்

அதிக வரட்சி, குளிர்ச்சி கலந்த வரட்சி, இரத்தம் கலந்த வண்டல், நரம்பு, நாவு, கண்கள், காதுகள், இன்பமான சொற்கள் குளிர்ச்சியையும் வரட்சியையும் பற்றிய வியாதியுமாம்.

புதன் சம்பந்தமான பதார்த்த வகைகள்

பாதரசம், அரிதாரம், சுண்ணாம்பு, அகில், சந்தனம், முதலிய வாசனை திரவியங்கள் மரங்கள், மொச்சை, பெரும்

பயிறு, உளுந்து, சீரகம், கொத்தமல்லி, நாய், குள்ளநரி, ஜலத்தில் சஞ்சரிக்கும் சிறுவாலையுடைய ஜெந்துக்கள், கிளி, பேசக் கற்றுக்கொள்ளும் பறவைகள், இரண்டு நிறங்களையும் சிரசில் சித்திரங்களுமுடைய பட்சிகள், வெள்ளைச் சாமந்திப் பூ, கணைப்புல், வெள்ளைக் காக்கரணை இலைகள் புதனுக்கு சம்பந்தமானவைகள் என்று அறிக.

வியாழன் என்னும் குரு சம்பந்தமான வியாதிகளும் அவயவங்களும்

சமரசமான சூடு, குளிர்ச்சி, பரிசுத்த இரத்தம், விந்து மூளை, இரத்ததாரை, எலும்பின் மூளை, ஈரல், தீனிப்பை, குடல், அன்ன அவா, தொடை, இடது செவி, பரிச புலன்களுமாம்.

குருவின் சம்பந்தமான பதார்த்தங்களாவன

வெள்ளீயம், நாகம், வச்சிரம், நிமிஷகாந்தம், தாளகம் நல்வாசனையும் அழகுள்ள பூவுகள், பூந்தருக்கள், தித்திப்பு மாதுளம் பழம், கடலை, எள், புறா, கவுதாரி, மயில், கோழி, தானியங்களைப் புசிக்கும் பறவைகள், வெள்ளை சாமந்தி, பேரீச்சம் பழம், குமட்டிப்பழம், தாம்பூலம், ஆப்பிள்பழம், காரட்டுக்கிழங்கு, சாரப்பருப்பு, வெந்தியம், கோதுமை, நறுவலிப்பழம், சக்கரை, எருக்கினாயின் சுனை, செம்முள்ளங்கி, கருவேலம் பிசினி, கொடிமுந்திரிப்பழம், சாலாம் பிசினி, சரக்கொன்றை, புளி, பேரரத்தை, திராட்சைப்பழம், மணத்தக்காளி, இலந்தம்பழம், வெள்ளி, கரும்பு, சாமந்தி, செம்பருத்தி, கற்கண்டு, பூமி சக்கரைக்கிழங்கு, தாழம்பூ, தாழம்வேர், பட்டாணி, காராமணி, பவழம், தேங்காய், சிறுநாகப்பூ, ஊசி மல்லிகை,

ரோஜாப்பூ, ஆளிவிரை இவைகள் குரு சம்பந்த பதார்த்த மென்றறிக.

சுக்கிரன் என்னும் வெள்ளி சம்பந்தமான வியாதிகளும் அவயவங்களும்

சமரச குளிர்ச்சியும், ஈரமும், இரச தாதுக்கள், நிணம், சுக்கிலம், கருப்பாசயம், ஆண்குறி, நாசித்துளை, நீர்த்தாரைகள். சொற்பக் கொழுமையும் குளிர்ச்சியும் பற்றிய வியாதிகளாம்.

வெள்ளி சம்பந்தமான பதார்த்தங்களாவன

முத்து, மாந்தளிர், பச்சை, புஷ்பராகம், செம்பு அஞ்சனக்கல், தைலமுள்ள வித்துக்கள், மதுரமும் பல நிறமும் முட்களுமுள்ள மரங்கள், பஞ்சுகள் உற்பவிக்கின்ற மரங்கள், வாசம் வீசும் மரங்கள், சீமை அத்திப்பழம், கொடி முந்திரிப்பழம், மஞ்சள் வெள்ளைநிறமும் குளம்பும்உள்ள மிருகங்கள், காட்டுப் புறா நீரில் வாழும் பட்சிகள், ஆமணக்கு, வெள்ளைத் தாமரை, வெள்ளை ரோஜா இவை வெள்ளிக்குடைய பதார்த்தங்களாகும்.

காரி என்னும் சனி சம்பந்தமான வியாதிகளும் அவயங்களும்

அதிக குளிர்ச்சி, வரட்சி, வண்டல், வலதுசெவி சத்த புலன்கள், தோல், மயிர், நகம், கொம்பு, மண்ணீரல், மலம், சலம், கால் விரலிலுண்டாகும் இசிவு, உள்ளிருப்புகளி லுண்டாகும் வியாதிகள் சனி யென்னும் கிரக சம்மந்த மென்றறிக.

சனி சம்பந்தமான பதார்த்தங்கள்

காரீயம், எலி, பெருச்சாளி, கருமை பொருந்திய கிடா முதலான ஆடு, பூனாகம் பூரான் பூனை போன்ற வீடுகளில் சஞ்சரிப்பவைகள், கரிவண்டுகள், கட்டுக்கடங்கா பாம்புக்ள், பைசாசமான துற்கிரகங்கள், தலையில்லா குருவிகள், கருங்காலி, நிலவிலா, கருவேல், சுக்கான் கீரை, குரோசானி ஓமம், குதிரைவாலி, நெல்லிக்காய், கடுக்காய், எட்டிக்காய் மூங்கிலுப்பு முளைக்கீரை, காளான், கொட்டைப்பாக்கு, குமட்டிக்காய், நீலக்கல், கருநொச்சி இவை போன்ற இன்னும் பல துற்குண வஸ்துக்களும் சனி சம்மந்தப் பட்டவை யென்றறிக.

கிரக சம்மந்த பதார்த்தங்கள் முற்றிற்று.

சகல வியாதிகட்கும் மாத்திரை அல்லது குளிகை வகை சிட்கா

சிந்தாமணிக் குளிகை

கெந்தி	சுக்கு
அரிதாரம்	மிளகு
நாவி	திப்பிலி
தான்றிக்காய்	நாகம்
நெல்லி	லிங்கம்
கடுக்காய்	அக்கிராகாரம்

இவை வகைக்கு விராகனிடையாகக் நிறுத்துகொண்டு இதற்கு சமனிடை வாளஞ்சேர்த்து தேனில் ஒருநாள் ஆட்டி கரும்புச் சாற்றில் ஒரு நாள் ஆட்டிச் சிறுபயர் பிரமாணம் மாத்திரை செய்து நிழலுலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

அதற்கனுபானம்: கையாந்தகரை சாற்றில் ஒரு மாத்திரை யிழைத்துக் கொடுக்க பல மந்தம் நீங்கும். நன்றாய் விரோசனமாகும். வாய்வு, சூலை, பிடிப்பு, குத்தல், உளைச்சல் இவை நீங்கும். பசுமோரில் ஒரு மாத்திரையிட கிராணிக் கழிச்சல் இவை நீங்கும். எலுமிச்சம்பழச் சாற்றிலிட சகல விஷமுந் தீரும். வெல்லத்தில் ஒரு மாத்திரை கொடுக்க தலைபாரம், சிரரோகம் சிலது மாறும், சருக்கரையில் ஒரு மாத்திரையிட பித்தம், மயக்கம், வாயூரல், அதிக தாகம் இவை தீரும் தக்காளிச் சாற்றிலிலிழைத்துக் கொடுக்க மந்தம் செரியாமை இவை நீங்கி பசி தீபன முண்டாகும். தேனில்

ஒரு மாத்திரை இழைத்துக் கொடுக்க வாதபித்த சிலேத்துமத்தால் வந்த மூவித சுரங்களும் தீரும். சூதகச்சிக்கல் முதலான வயிற்றுவலிகளுக்கு முருங்கைச் சாற்றிலிடவும். நீர்க்கட்டுக்கு பசுங்கோமியத்திலிடவும். உஷ்ணம் காங்கை இவைகட்கு குளிர்ந்த ஜலத்தில் ஒரு மாத்திரையிடவும்.

இந்த அவிழ்தத்தைச் செய்பவர்கள் கவனிக்கவேண்டிய குறிப்பு

மேற்கூறிய சிந்தாமணிக் குளிகையில் கெந்தி, அரிதாரம், நாபி, நாகம், லிங்கம் இவைகளை முறைப்படி சுத்தி செய்து கூட்ட வேண்டியதுமன்றி இனிவரும் மருந்துகள் யாவற்றிலும் கலந்துவரும் பஞ்சபூத சரக்குகள் பாஷாண வகைகள் உபரசவகைகள் ஆகிய ஒவ்வொரு சரக்கையும் கிரமப்படி சுத்திசெய்து அவுஷதங்களை முடித்தாலொழிய வியாதிகளைக் கண்டிக்காது. அன்றியும் சும்மாவிடாமல் வேறு கிளை ரோமங்களுமுண்டு பண்ணி நலியச் செய்யுமேயன்றி நன்மை தராது. இதுவுமன்றி காந்தம், சவுக்காரம், கெந்தி, இந்துப்பு, பாஷாணம் இவைகளில் ஏதேனும் சேராத மருந்துகள் கர்மத்தாலெய்த நோய்களைத் தீர்க்கவுமாட்டாது யென்பது சிகிச்சாசார விதியென்றறிக. மருந்துகள் சுத்தி செய்யும் பாகங்களை கடைசியில் எழுதி யிருக்கிறோமாகையால் சற்று யேறுமாறா யிருப்பினும் சித்த ஆயுர்வேத ஆராய்ச்சியுள்ள அரியோர்களும் பெரியோர்களும் அங்கீகரித்து அவற்றைத் திருத்திக்கொள்ளும்படி வேண்டிக்கேட்டுக்கொள்கிறோம்.

திரிகடுகு குளிகை

அரிதாரம்	சுக்கு
நிர்விஷம்	திப்பிலி

நாபி	மிளகு
ரசம்	அக்கிராகாரம்
வாளம்	கடுக்காய்
கெந்தி	இந்துப்பு
தான்றிக்காய்	குதிரைக்குளம்பு
கடுகுறுணி	

இவை வகைக்கு விராகனிடையாக வாங்கி கிரமப்படி சுத்தி செய்து கையான்சாற்றில் இரண்டு சாமமரைத்து பில்லைதட்டி நிழலிலுலர்த்தி மறுநாளும் இப்படியே மேற்படி சாற்றினால் அரைக்கவும். இதுபோல் ஏழுநாள் அரைத்து குன்றிமணிப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

அனுபானம்: எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு மாத்திரை யிழைத்துக் கொடுக்க சகலமான விஷங்களும் தீரும். நாட்பட்ட நஞ்சுகளுக்கு சிறுநீரும் கரும்புச்சாறும் சமன்கூட்டி ஒரு மாத்திரையிழைத்துக் கொடுக்கவும். நெல்லிக்காய்ச் சாற்றில் ஒரு மாத்திரையிழைத்துக் கொடுக்க முகஜன்னி முகயெரிச்சல் முகக்கடுப்பு சுகஜன்னியிவைகள் தீரும். எருமைத் தயிரில் கொடுத்தால் அதிசாரம் கிராணி கழிச்சல் இவை தீரும். வேப்பம் ஈர்க்கு கியாழத்தில் கொடுத்தால் சகல சுரங்களுந் தீரும்.

ஜன்னிவாதக் குளிகை

இந்துப்பு	கெந்தி
வெண்காரம்	சுக்கு
திப்பிலி	மிளகு

இவை வகைக்கு ஒரு களஞ்சி எடை, இதற்குச் சரியிடை வாளம் சேர்த்து அதற்கு சரியிடைக் கடுகு ரோகிணி

சேர்த்து கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நாலு ஜாமமரைத்து உளுந்து பிரமாணம் மாத்திரை செய்து நிழலுலர்த்தி சீசாவில் வைத்துக் கொள்ளவும். இஞ்சிச் சாற்றில் ஒரு மாத்திரை யிழைத்துக் கொடுக்க எவ்வித சுரங்களும் அண்டாது. தோஷ ஜன்னி முதற்கொண்டு சகல வாய்வும் நீங்கும்.

யோனிப் புற்று, லிங்கப்புற்று இவைகட்கு வீரமுனி மாத்திரை

நேரிசை வெண்பா

சித்திரஞ்சேர் மூலமதோர் சீராய்க்கழஞ்சியொன்று
கத்திரஞ்சேர் பூரமதுவுங்கழஞ்சு – சத்தியங்கேள்
ஓமமொருகழஞ்சு யோதும்நெய் வெல்லமொடு
ஜாமம்ரெண்டு தானரைப்பாய் சார்ந்து.

அறைத்துமிளகளவு அன்பாகவுண்டைசெய்து
தரையிலொரு பத்துதினம் தானருந்து – நிரைகுழலே
ஏதுக்கலையுகிறாய் ரணக்கிரந்திரணங்களொடு
மாதர்கள் யோனிப்புற்றும் மாறும்.

மாறுமேசூலையெல்லாம் வரக்கள்ளிபூக்கிரந்தி
நீருமேலிங்கப்புற்று பவுத்திரநீர் – சீருங்
கன்னப்பிளவைபக்கம் காணும்படும்பிளவை
என்னசொல்வேன் மார்ச்சிலந்தி யோடும்.

ஓடுமே விப்புரு யோடுகின்ற குன்மமெட்டும்
நாடுதனில் மேகரணம் நாடாது – மாடுகளே
காடுதனில் மூலிகையைக் காணாமலேனலைவீர்
வீடுதனில் யிம்முறையைசெய் மின்.

சித்திரமூலம்	கால் விராகனிடை
ரசக்கற்பூரம்	கால் விராகனிடை
குறாசானி ஓமம்	கால் விராகனிடை

இம்மூன்றும் சம எடையாக எடுத்துப் பனை வெல்லத்தால் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும்.

சர்வரோகத்திற்கு தேரையர் குளிகை

உத்தாமணிக்கொழுந்து, சங்கங்குப்பிக்கொழுந்து, பிரமராகாசிக்கொழுந்து, வேளைக் கொழுந்து, வாதமடக்கி பூண்டின் கொழுந்து, வெள்ளைக்காட்டரணைக் கொழுந்து, ஆடுதிண்ணாப் பாளைக் கொழுந்து, வெள்ளருக்கு கொழுந்து, தும்பைக் கொழுந்து, எருக்கன் கொழுந்து இவை வகைக்கு ஒரு பலம் வாங்கி கல்லுரலிலிட்டு இடித்துச் சாறு பிழிந்துக் கொண்டு சடா மாஞ்சில், சுக்கு, சீரகம், கார்போகியரிசி, திப்பிலி, மிளகு, சதகுப்பை, காயம், வாளம், கடுக்காய், சித்தரத்தை, சித்திரமூலம், கஸ்தூரிமஞ்சள், சன்னறாஷ்டகம்; சன்னலவுங்கப்பட்டை, கருஞ்சீரகம், வெண்கடுகு, அமுக்குரா வகைக்கு கால்பலம் இடித்து வஸ்திரகாயஞ் செய்து முன் தயாரித்து வைத்துள்ள சாறுவிட்டு ஏழுசாமம் அரைத்து மெழுகுப் பதமாக மை போல் அரைத்து வைத்துக் கொண்டு.

தாளகம்	வெண்காரம்
மனோசிலை	நாபி
சூதம்	லிங்கம்
கெந்தி	கெவுரி

இவையெட்டு தினுசுகளும் வகைக்கு கால் பலம் கொண்டு வந்து கல்வத்திலிட்டு தும்பைச்சாறுவிட்டு ஏழு ஜாமமும் கரிசலாங்கண்ணிச் சாறுவிட்டு ஏழுசாமமும் அரைக்கவும். அப்படி அரைக்கும்போது முன் அரைத்து வைத்திருக்கும் சூரண வகையை கொஞ்ச கொஞ்சமாய்ப் போட்டு அரைத்துக் கொண்டே இருக்கவும். பூர்த்தியாகப பதினான்கு சாமம் அரைத்தான பிறகு சுண்டக்காய் பரிமாணக்குளிகை செய்து நிழலுலர்த்தி சீசாவில் வைத்துக் கொள்ளவும்.

இதற்கனுபானம்: இஞ்சிச்சார் ஒரு பலத்தில் ஒரு மாத்திரையிழைத்து சற்று தணலிலிட்டு காய்ச்சிக் கொடுக்கவும். இப்படி அந்தி சந்தி இருநேரமுங் கொடுக்கவும். எண்பத்து நான்கு வகை வாய்வும் கைகால் குத்தல், குடைச்சல் , மேகத்தைச் சார்ந்த சகல வாய்வுகளும், பிடிப்பும் போகும். வாய்வுக் காகாத பண்டங்கள் நீக்கி மற்றவை சாப்பிடவும்.

காசத்திற்கு அனுபானம்: சங்கங்குப்பிச்சார் கால் பலத்தில் ஒரு மாத்திரையை யிழைத்து ஏழுநாள் இருபோதும் கொடுக்கவும். சேத்துமம் தொண்ணூற்றாறும் தீரும்.

சுரத்திற்கு அனுபானம்: மெரி பாவைச்சாறும் காய்ச்சிய தேனும் சமம் சேர்த்து மாத்திரையை யிழைத்து சற்று அனலில் காட்டிக் கொடுக்கவும். இப்படி இருநேரமுங் கொடுக்க சுரம் அறுபத்து நான்கும் தீரும்.

சீதசுரத்திற்கு அனுபானம்: வளைச் சாற்றில் ஒரு மாத்திரை யிழைத்து ஏழு நாள் இரு போதும் கொடுக்க சீதசுரம் யாவும் தீரும்.

ஜன்னிக்கு அனுபானம்: மாவிலிங்கப்பட்டை ரசம், முருங்கைப்பட்டைரசம், முலைப்பால், தேன், வெத்திலைச்சார் சமன்கலந்து ஒரு மாத்திரை யிழைத்து இருநேரமும் ஐந்துநாள் கொடுக்க சன்னி சயித்தியம் யாவுந்தீரும்.

குன்மத்திற்கு அனுபானம்: வாழைச்சாற்றில் ஒரு மாத்திரை யிழைத்து இரு நேரமும் ஏழுநாள் கொடுக்க எட்டுவித குன்மங்களும் தீரும். கண்டிதமான பத்தியம் வைக்கவும்.

சீதம் கிராணி அதிசாரத்திற்கு அனுபானம்: கடுக்காய்ப்பூ சிறுநாகப்பூ சோம்பு வகைக்கு கழஞ்சிடை பசும் நெய்யில் வறுத்துப் பொடித்து வெள்ளை கற்கண்டுகழஞ்சு கூடச்சேர்த்து பொடித்து ஒரு மாத்திரை வைத்து மாதுளம் பிஞ்சுச்சார் அல்லது வாழைப்பூச்சாறு விட்டரைத்து இருநேரமும் ஐந்து நாள் கொடுக்க மேற்கூறிய வியாதி யாவும் தீரும்.

வயிற்றுக்கிருமிகள் விழ அனுபானம்: ஓமம், புரசம்விரை, வேப்பம்யீர்க்கு, பிரண்டை, இந்நான்கும் சமம் கொண்டிடித்து அரைப்படி ஜலம் விட்டு அரை ஆழாக்காகக் காய்ச்சி யிறக்கி ஒருமாத்திரை யிழைத்திட வயிற்றிலிருக்கும் பூச்சிகள் பந்துபந்தாய் வந்துவிழும். பத்தியமில்லையென்றறிக.

க்ஷயமாருதக் குளிகை

பச்சைகற்பூரம் சீரகம் மான்கொம்பு கோரோசனம் சந்தனம் சாம்பிராணி வகைக்கு ஒன்றேகால் விராகனிடையெடுத்து கல்வத் திலிட்டரைத்து சூரணம் செய்து வைத்துக்கொண்டு பேய்ப்புடல் பேய்ப்பீர்க்கு நெருஞ்சி நீர் முள்ளிவிரை இவை சமன் கொண்டிடித்து

யிளநீர் விட்டுக் காய்ச்சி கியாழமிருத்து கொஞ்சமாய் விட்டரைத்து மெழுகுபதத்தில் வழித்து நிழலிலாரவைத்து குன்றியின் அளவு குளிகை செய்து சீசாவில் வைத்துக் கொள்ளவும்.

இதற்கனுபானம்: முருக்கிலையின் சார் இரண்டு பலம், பசுமோர் இரண்டு பலம், மிளகு பொடி காற்பலம் போட்டுக் கலக்கி ஒரு குளிகை யிழைத்து கொடுக்கவும். இப்படி மூன்றுநாள் கொடுக்கக்ஷயம் குணமாகும்.

மேல் சுவாசத்திற்கனுபானம்: புது நெல்லிக்காயின் சதை மிளகு திப்பிலி கடுகு வகைக்கு சமன் கொண்டிடித்து பசுமோர் விட்டாட்டி புன்னைக்காய் அளவு ஒரு மாத்திரை வைத்துக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்க மேல்சுவாசம் நிவர்த்தியாகும்.

அறுமுகக் குளிகை

வெண்காரம் மனோசிலை நாபி, லிங்கம் சூதம் கெந்தி வகைக்கு ஒரு விராகனிடை சுக்கு திப்பிலி மிளகு வகைக்கு இரண்டு விராகனிடை இஞ்சிச் சாற்றில் ஒரு சாமமும் உத்தாமணிச் சாற்றில் ஒரு சாமமும் ஆட்டி மணியளவு குளிகை செய்து நிழலுலர்த்தி சீசாவில் வைத்துக் கொள்ளவும்.

இதற்கு அனுபானம்: முலைப்பால் தேன் இஞ்சி சுரசம் மிளகு கியாழம் இதுகளில் எதிலேனும் ஒரு மாத்திரை இழைத்துக் கொடுக்க சகல சுரங்களும் ஜன்னி சீதளங்களும் விட்டகலும் கடும் பத்தியமிருக்கவும்.

வச்சிர கபாடக் குளிகை

அபினி ஒரு விராகனிடை ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி மாம்பருப்பு வெந்தயம் கெச்சக்காய் பருப்பு சீரகம், கிராம்பு,

காயம், மாதுளந்தோல். அதிவிடையம் இவைகள் வகைக்கு இரண்டு விராகனிடை கெச்சக்காய் கியாழத்தில் ஒரு சாமம், வாழைப்பூ சாற்றில் ஒரு சாமம் அரைத்து இலந்தங்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்து காலை மாலையாக வடிகட்டிய தயிரில் ஒரு மாத்திரை கொடுக்கவும். இரண்டு நாள் அல்லது மூன்று நாளில் நீங்கிவிடும்.

பேதி மாத்திரை

இரசகற்பம் வெண்காரம், பூரம் வகைக்கு ஒரு விராகனிடை, வாளம் நான்கு விராகனிடை, கெந்தகம் ஒரு விராகனிடை இவைகளைக் கல்வத்திலிட்டு குளிர்ந்த நீர் விட்டரைத்து மிளகளவு மாத்திரை செய்து வைத்துக் கொண்டு சூரத்து நிலாவிரை கியாழம் செய்து ஒரு மாத்திரை இழைத்துக் கொடுக்க பேதியாகும், மாலையில் சுக்குமிளகு கியாழம் கொடுக்கவும்.

கும்பமுனி கோரோசனைக் குளிகை

கோரோசனை குங்குமப்பூ ரசகற்பூரம், ரசச் செந்தூரம் பச்சை கற்பூரம், ஏலம், அப்பிரேகம், கிராம்பு, கோஷ்டம், வகைக்கு ஒரு களஞ்சு வீதம் சேர்த்து கல்வத்திலிட்டு சந்தனத்தூள் கியாழம் விட்டு நான்கு சாமம் அரைத்து செண்பகப்பூ கியாழம்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து குங்குமப்பூ கியாழத்தில் இருஜாமம் அரைத்து உலர்த்தி குன்றிமணிப் பிரமாணம் மாத்திரை செய்து சீசாவில் வைத்துக் கொள்ளவும்.

இதற்கு அனுபானம்: இஞ்சி தேன் முலைப்பால் இதுகளில் ஒரு மாத்திரை கொடுக்கவும். வியாதியின் பலமறிந்து மூன்று ஐந்து ஏழு நாள் இப்படி கொடுக்க சேத்துமம் 96 ஜன்னி 13 மண்டையிடி சூலைதோஷ சுரங்கள்

குடி விட்டோடும். தனி முலைப்பாலில் கொடுத்தாலே போதுமானது.

கும்பமுனி சிலோதாரி மணி

வெண்காரம் சுக்கு திப்பிலி மிளகு, கடல் நுரை, தூதுவேளை வித்து, இந்துப்பு, காயம் யாவும் சமனிடை எடுத்துச் சுத்தி செய்த வாளம் சரியிடை கூட்டி கல்வத்திலிட்டு இளநீர் விட்டுக் கொண்டு இரண்டு சாமமாட்டி இலந்தம் விரை பிரமாணம் மாத்திரை செய்து நிழலுலர்த்தி செப்பு டப்பியில் வைக்கவும்.

இதற்கனுபானம்: இஞ்சி சுரசம் தேன் சமன் கூட்டி ஒரு மாத்திரை இழைத்துக் கொடுக்க வாய்வு, வாத வியாதிகளனைத்தும் நீங்குவதுடன் பித்தமெல்லாம் கீழ்நோக்கும். தேகம் ஆரோக்கியமாய் இருக்கும்.

(இந்த சிலோதாரி மணியை) பிள்ளைகளுக்கு கெபடுக்க வேணடுமானால் குற்றமற்ற மலைத்தேனில் ஒரு மாத்திரை இழைத்து நாவிற் தடவ மாந்தமெல்லாம் வீறுகெட்டோடும். உப்பிசங்கள் யாவும் நீங்கும். நீரடைப்பு சதையடைப்பு யாவும் தீர்க்கும். சிலோதாரி மணி சஞ்சீவி என்றும் கூறப்படும்.

மேகத்தால் சேர்ந்த பற்பல வியாதிக்கும் நவநாட் குளிகை

இரச கற்பூரம்	விராகனிடை	ஒண்ணே கால்
இரச செந்தூரம்.	விராகனிடை	ஒண்ணே கால்
ஓமம்	பலம்	கால்

முதலாவது ஓமத்தைக் கல்வத்திலிட்டு நெகிழ அரைத்து பில்லை தட்டி நிழலில் உலர்த்தி மற்றா நாள் பில்லையைக் கல்வத்திலிட்டு மேற்படி இரண்டு சரக்கும் சேர்த்து தேன்விட்டு மயனம் போல் அரைத்து புன்னைக் காய் பிரமாணம் பனவெல்லம் சேர்த்துப் பிசைந்து (14) மாத்திரை செய்து ஏழு நாளைக்கு இரு வேளையும் கொடுக்கவும். கடும் பத்தியம் வைக்கவும். கொறுக்கு மா செவ்வாப்பு அரையாப்பு, கட்டி இதுகள் தீரும். மறுபத்தியம் சுட்டபுளி, வறுத்த உப்பு சேர்க்கவும். ஆக பதினான்கு நாளும் சென்ற பிறகு ஓமம் தேய்த்து தலை முழுக வைக்கவும். இதற்கு முறிப்பு பாவை பொடுதலை துளசி, கம்மார் இதுகள் சமமாகப் போட்டிடித்து உழக்கு சாறு பிழிந்து தலைக்கு வார்த்தவுடன் கொடுக்கவும். கோழிக்காரங் கொடுக்கவும்.

மாத்திரை வகை சிட்கா முற்றிற்று.

கியாழ வகை சிட்கா

வாத சுரத்திற்குக் கியாழம்

மிளகு தூள்	விராகனிடை	4
சுக்கு தூள்	விராகனிடை	4
வாய்விளங்கத் தூள்	விராகனிடை	4
அதிமதுரத் தூள்	விராகனிடை	3
சீந்தில் கொடியின் தூள்	விராகனிடை	6

இவைகளைக் கியாழம் வடித்து காலை மாலையாகக் கொடுத்து வரவும். இவ்விதம் மூன்று நாள் கொடுத்து வர நீங்கும் .அல்லது,

நொச்சிச் சாறு அரைக்கால் படியில் சுக்கு, அரத்தை, சதகுப்பை, வகைக்கு விராகனிடை 4, மிளகு விராகனிடை 3 இவைகளைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சி இருவேளையும் கொடுக்கவும் இப்படி மூன்று நாள் ஆறுவேளை கொடுத்து வர நீங்கும்.

பித்த சுரத்திற்குக் கியாழம்

குலாப்பூ வித்து பலம் 1, சுக்கு, சோம்பு, துரிஞ்சிக் காய், நெல்லிக்காய் வகைக்கு பலம் அரை, வெந்தயம், 2 விராகனெடை, பரங்கிச்செக்கைபலம் கால், இவைகளை இடித்து கால்படி ஜலத்தில் இட்டு அரைக்காற் படியாக வற்றக் காய்ச்சி இருபோதும் பாகித்துக் கொடுக்கவும். இப்படி மூன்றுநாள் கொடுக்க சுகமாகும். அல்லது,

நெல்லி முள்ளி, வில்வப் பழச்சதை, சீரகம், சுக்கு, சித்தாமுட்டி, நெற்பொறி இவைகளை சமன் சேர்த்துக் கொண்டு இடித்து கியாழமிட்டு வடிகட்டி கொஞ்சம்

சர்க்கரையிட்டுக் கொடுக்கவும். இப்படி இரு வேளையாக மூன்றுநாள் கொடுக்க நன்மை தரும்.

சிலேத்துமம் அல்லது கூட்டிற்குக் கியாழம்

தாமரைப்பூ, மதுரம், சோம்பு, மணித்தக்காளி வற்றல் ஆல்பகராபழம், காசினி விரை, இவைகள் சமன் போட்டு இடித்து ஒன்றுக்கு அரைபாகம் கியாழம் வடித்து இருவேளையும் கொடுக்கவும். மூன்று நாளில் தீரும் என்பது திண்ணம்.

சிலேத்தும சுரத்திற்கு இரண்டாவது கியாழம்

ஓமம், சித்தரத்தை, வகைக்கு பலம் அரை, திப்பிலி பலம் அரை, ஆடாதோடை, கண்டங்கத்தரி, நில வேம்பு வகைக்கு ஒருபிடி, யாவும் சதைத்துப் போட்டு அரைப்படி ஜலம்விட்டு ஆழாக்கு கியாழம் வடித்து இருவேளையும் கொடுக்கவும். இப்படி ஆறு வேளை கொடுக்க குணமாகும்.

பழைய சுரத்திற்குக் கியாழம்

நெருஞ்சிக்காய், செம்மரத்தூள், கொத்தமல்லி, சீமை கிச்சிலிக் கிழங்கு, சுக்கு வகைக்கு பலம் (ஒன்று) வெள்ளை சக்கரை, பலம் கால் இவைகளை எட்டொன்றாய்க் காய்ச்சி காலை மாலை கொடுக்கவும். இப்படி ஆறுநாள் கொடுக்க உத்தமம்.

சகல சுரத்திற்கு பொது கியாழம்

சோம்பு கார்கோல் வித்து அதிமதுரம் வகைக்கு விராகனிடை ஐந்து, துரிஞ்சிபிசின் தனியா குலாப்பூ வகைக்கு விராகனிடை நான்கு, சீக்காய் விராகனிடை மூன்று, புதீனா ரூமஸ்தகி விராகனிடை இரண்டு, யாவும் கூட்டி பஞ்சு போல் இடித்து கியாழம் வடித்துக் கொண்டு மூன்று வேளை கொடுக்கவும்.

மேகநீர் சுரத்திற்கு மாம்பட்டை கியாழம்

மாம்பட்டை (ஒரு) வீசை கொண்டு வந்து ஒன்றிரண்டாக இடித்து பெரும்பானையில் போட்டு நான்கு படி தண்ணீர் விட்டு அல்லது பட்டை மிதக்கத் தண்ணீர்விட்டு மூன்று நாள் ஊற வைத்த பிறகு அடுப்பின் மேல் ஏற்றி ஒரே தினுசு விறகினால் மூன்று சாமம் எரித்து தண்ணீர் சுண்டச் சுண்டப் பட்டைய்யை எடுத்து விடவும். இப்படியே எடுத்து வருகையில் ஒருபடி கியாழம் இருக்கையில் இறக்கி வடித்துக் கொண்டு அந்தி சந்தி அரை ஆழாக்கு கியாழம் கொடுக்கவும். இப்படி ஐந்துநாள் கொடுக்க வேண்டியது. கடும் பத்தியம். மறு பத்தியத்தில் உப்பு புளி சேர்க்கவும். சூடு நீர்சுருக்கு வெள்ளை மேகம் இதுகள் தீரும்.

சுரக்கியாழம்

ருத்திரசடை பிட்டிட்டு பிழிந்தரசம் அரை ஆழாக்கில் மிளகு லவங்கம் இரண்டும் பொடித்து (ஒரு) பலம் தூள் போட்டு குலுக்கி இருவேளையாகக் கொடுக்கவும். இப்படி ஆறுநாளில் தீரும்.

மலத்தில் ரத்தங் கண்டால் கியாழம்

வெள்ளைவெங்காயம் சீரகம் செம்பருத்தி இலை வில்வ இலை, துத்தி இலை இவை சமனிடை தூக்கி நாலில் ஒன்றாகக் காய்ச்சி இறக்கி இருவேளையும் கொடுக்க சீத ரத்தம், மூல ரத்தம், வாய்வு ரணம் இவைகள் தீரும்.

சூடு அல்லது நீர்சுருக்கிற்கு கியாழம்

கொத்தமல்லி, வெந்தயம், சமனிடை போட்டு நாலில் ஒன்றாய் கியாழமிட்டு இறக்கும்போது சுண்டைக்காய் பிரமாணம் சுண்ணாம்பு போட்டு இறக்கி துட்டிடை நெய்விட்டு சாப்பிடவும், தீரும்.

பல்வலிக்குக் கியாழம்

சுக்கு, மருக்காரை, மருதம்பட்டை, வேலம் பட்டை எருக்கன் பட்டை, ஆவாரம் பட்டை, பிரமி செடியின் பட்டை இலை சமனிடையாக எடுத்துக்கொண்டு நறுக்கிக் கியாழமிட்டு நாலுக்கு ஒன்றாய் காய்ச்சி இயக்கி கொப்பளிக்கவும் தீரும்.

பல்வலிக்கு வேறுவித கியாழம்

சுக்கு, கடுக்காய், லவுங்கப்பட்டை, இந்துப்பு, படிகாரம் வகைக்கு கால் பலம் எடுத்து இடித்து இராத்திரி அடுப்பில் கியாழம் போட்டு வைத்து காலையில் வாய் கொப்பளிக்கவும். இப்படியாக இரு வேளையும் மூன்று நாள் கொப்பளிக்க பல்வலி தீரும்.

உஷ்ண வாய்வுக்கும் ,வாய்வு கட்டிகளுக்கும் கியாழம்

உத்தாமணி இலையும் பூவுமாகக் கொத்தோடு பறித்து வந்து கழுவிப் போட்டு உப்பு போடாமல் அவித்து கடைந்து சுக்கு கியாழத்தில் கரைத்துக் கொடுக்கவும் இச்சாபத்தியம்.

சகல சுரத்திற்கு கியாழம்

பேய்ப்புடலை, ஆடாதோடை, செம்முள்ளி வேர், கருவேம்பு, சுக்கு, அதிமதுரம் வகைக்குப் பலம் அரை எட்டொன்றாய் கியாழம் வடித்து ஐந்து விராகனிடை தேன் விட்டு கொடுக்கவும். இப்படி மூன்று வேளை கொடுக்க தீரும்.

கியாழ வகை சிட்கா முற்றிற்று.

எண்ணெய் வகை சிட்கா

கரப்பான் புண் இவைகளுக்கு எண்ணெய் சீலை

எள்ளெண்ணெய் பலம் ஆறு, புங்கன் எண்ணெய் பலம் மூன்று, புங்கம் பால் பலம் ஒன்று யாவும் ஒன்றுபடக் கலந்து கொண்டு துரிசு துத்தம் வெள்ளைகுங்கிலியம் மிருதார்சிங்கி சுருள்பட்டை வசம்பு சூதம் வகைக்குப் பலம் கால் தூள்செய்து மேற்கலந்து வைத்த எண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துச் சீலையில் தடவி, மண்டைக் கரப்பான் மண்டைக்கடுவன் கால்கடுவன் இந்த ரணங்கள் மீது போட ஆறிவிடும். போட்டிருக்கும் சீலையில் திரும்பத்திரும்ப தடவி நான்கு, ஐந்து நாள் போட்டுவர வுலர்ந்துவிடும்.

ஆறாத ரணம் விப்புருதி புரையோடிய ரணம் அரையாப்பு ரணம் இவைகட்கு எண்ணெய்

பேராமணக்கு முத்தெண்ணெய் இருபது பலம் எடுத்து புங்கன் வேர் அத்திவேர் இலுப்பைவேர் குமிளம் பட்டை மாவிலம்பட்டை அரசன்பட்டை நிலக்கடம்பு பட்டை புன்னைப்பட்டை வெங்காயம் வகைக்குப் பலம் ஒன்று வீதம் எடுத்து இவைகளை இடித்து மேற்படி எண்ணெயில் கொஞ்சம் விடடு அரைத்து எண்ணெயிற் றானே கலக்கி காய்ச்சி இறக்கும்போது பூரம் விராகனிடை இரண்டரை மிருதார் சிங்கி விராகனிடை இரண்டு வெள்ளை குங்கிலியம் விராகனிடை இரண்டரை பொடித்துப் போட்டு கலக்கி இறக்கி வைத்துக்கொண்டு எவ்வித ரணத்தின் மீதும் தடவிவர ஆறிவிடும்.

இளம்பிள்ளை வாதத்திற்கு எண்ணெய்

முடக்கத்தான் இலை கெச்சக்காயிலை மிளகரணை யிலை வகைக்கு ஒருபிடி கொண்டுவந்திடித்து ஆமணக் கெண்ணை அரைப்பலத்தில் கலந்து அடுப்பிலேற்றி காய்ச்சி வடித்து காலையில்மேற்படி யெண்ணை காய்ச்சும் போது ஒரு பலம் உப்பைப் பொடித்து ஒரு கலயத்தில் பாதி கொட்டி கால்பலம் பூரத்தை ஒரே கட்டியாக வைத்து மேலும் மேலும் உப்பைக் கொட்டி மூடி மேற்கலயத்தை மூடித்தீயில் வைத்தெரிக்கவும். இப்படி ஒரு நாழிகை எரித்தெடுத்த பூரததில் ஒரு விராகனிடை பூரத்தை எண்ணை விட்டரைத்து கலந்து வைத்துக்கொண்டு கொடுத்து வரவும். வாய்வும், கரப்பான் பதார்த்தங்களும் நீக்கவும் இச்சாபத்தியம்.

கெணசூட்டிக்கு குளிர்ச்சி எண்ணெய்

சித்தாமணக்கெண்ணை ஒருபடி வல்லாரைச்சாறு அரைப்படி வெந்தயம் இரண்டுபலம் எடுத்துக்கொண்டு ஆவின்பால் விட்டு வெந்தயத்தை அரைத்து சாறு எண்ணை யாவும் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து வேளைக்குக் கரண்டி வீதம் கொஞ்சம் சர்க்கரை விட்டுக்கொடுக்க தேகம் தணிந்து குரிச்சியாகுமு.

முளைமூலம் மேக உஷ்ணத்திற்கு எண்ணெய்

சங்கங்குப்பிச்சாறு நொச்சிச்சாறு கொட்டைக்கரந் தைச்சாறு முருக்கிலைச்சாறு செருப்படைச்சாறுவெள்ளை வெங்காயச்சாறு அத்திப்பட்டைச்சாறு பூவரசம்பட்டைச் சாறு பூவரசம் பழுப்புச்சாறு வகைக்கு படிகால், சித்தா மணக்கெண்ணை ஒரு அரைவீசை இவை யாவும் ஒன்றாய்

கலந்துகொண்டு எருக்கன் கிழங்கு அல்லது மூலக்கெருடன் கிழங்கு வகைக்கு ஐந்து பலம் ஷி எண்ணை கொஞ்சம் விட்டு வதக்கியிடித்து வஸ்திரகாயம் செய்து அரைத்துப் போட்டுக் காய்ச்சி இறுக்கும்போது சிவனார்வேம்பு கருஞ் சீரகம் ஜாதிபத்திரி வகைக்குப் பலம் ஒன்று சூரணஞ் செய்து போட்டிறக்கி வைத்துக்கொண்டு வேளைக்கு அரைபலம் வீதமாக ஐந்துநாள் அல்லது ஏழு நாள் கொடுக்கவும், எண்ணை நிறுத்தினபிறகு இரண்டு நாள் பொறுத்து விளக்கெண்ணெயில் ஸ்நானம் செய்து வைக்கவும். இப்படி மூன்று தரம் கொடுக்க வேண்டும். இச்சாபத்தியம் அல்லது பசும்பாலும் சீனியும் அன்னத்துடன் கொடுக்க முளைமூலம் இற்றுவீழும் அல்லது கரைந்துவிடும். மேலும் 21 கிரந்தி உஷ்ணம் காந்தல் வெள்ளை அரையாப்பு இவைகள் தீரும்.

எலிவிஷம் பதினெட்டுக்கும் அதனாலுண்டாகும் மந்தாரகாசம் சுவாசகாசத்திற்கும்.

சத்தியவாக்கு

போச்சுமுவ்வா ரெலிக்கும் பொருந்திய மருந்துகேளு
வாச்சிறுபுங்கெண்ணை காக்கணம் பிராய்வேர்மூன்று
ஆச்சிறுசமனாய்கூட்டி அரைத்தாவின் பாலிற்கொள்ள
மாச்சுதுசுவாசகாச மந்தார் காசமும்போமே
எலிகடி பதினெட்டுக்கும் சத்தி யெண்ணை
சொல் கருவேலன்பட்டை சாதுள்ளியுப்புழக்கு
நல்லெண்ணை நாழிவிட்டு நவாச்சாரம் பணந்தான் போட்டு
வெல்லவே யுழக்காய் காச்சி விடிந்துண்ண பேதி காணும்
வல்லெலி பதினெட்டுந்தான் வலியவிட்டோடிப் போமே.

வேறு முறை

ஓடிப்போம் அழுக்கிராவேர் எலுமிச்சங்காயின்வீதம்
பாடியே யரைத்துப்பாலில் குடியெலி பதினெட்டும் போம்
ஜாடியே துருசுமூன்று சகஸ்திர பேதிரெண்டு
நாடியே விராகன்வீதம் நல்லெருக்கன்பால் விட்டாட்டே.

ஆட்டியே வழித்துமாத்திரை யாக்கி வெற்றிலையின் சாற்றில்
கூட்டியே கொடுக்கச்சொல்லு விஷங்குலைந்தோடிப் போகும்
நாட்டினிலுரைக்கக்கேளு நாட்சென்ற யெலிகட் கெல்லாம்
வாட்டிய புங்கன்பட்டை மிளகுள்ளி வசம்புகூட்டே.

வசம்பதுகூட்டிதேசிக் காய்பழச் சாற்றாலாட்டி
நிசமுடன் கொதிக்கவைத்து குடிக்கவே தீருந்தீரும்
விசைவிளாவேர் பருத்தி வேரும்யெள் ளெண்ணைவிட்டு
விசையுடன் கொதியிட்டுண்ண சேரெலி விஷம்போம் நீரே.

சேரெலி விஷத்திற்கு

நீர்முள்ளி விரையரைத்து நல்லெண்ணை விட்டுக்கிண்டி
சேரவேதிரட்டியுண்ண சேரெலி விஷம்போம்சுக்கு
சாறுசிறு மிளகுதேசா வரங்களிப்பாக்குஞ் சேர்த்து
கூர்கருவேலம்பட்டை குமரியின் சறுகுகாலே.

காறபலந் தூக்கி நீரில் காய்ச்சி எள்ளெண்ணைவிட்டு
திற்கவே கொடுக்கச்சொல்லு திகழ்புள்ளி மானின்றோலை
ஆர்க்கவே கருகச்சுட்டு ஆப்பாலால் குழைத்துத்திண்ண
பார்க்க பத்தியமோயில்லை பதினெட்டுக் கடியும்போமே

ஊர்வசி கூந்தலெண்ணை

குற்றமில்லாத எள்ளெண்ணை அரைப்படி அளந்து
ஜாடியில்விட்டு சம்பங்கிப்பூவின் இதழ்கள் ஐந்துபலம்

நிறுத்துப் போட்டு வால்மிளகு கோரைக்கிழங்கு கஸ்தூரி மஞ்சள் பூலாங்கிழங்கு கோஷ்டம் அகில்கட்டை வகைக்கு ஒருபலம் இடித்து வஸ்திரகாயஞ் செய்துபோட்டு உளுந்துமாவினால் கவசம்செய்து பெரிய பானையில் அரைதிட்டம் தண்ணீர் விட்டு அந்த நீருக்குமேல் இரண்டுவிரற்கடை உயரத்தில் ஜாடி நிற்கும்படியாக தொலாயந்திரமாகக் கட்டி அறுபது நாழிகையெரித்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும். ஆண், பெண் யாவரும் கூந்தலுக்கிட்டு சீவிக்கொள்ள அதிக வாசம் வீசும்.

சகல வலிக்கும் கள்ளியெண்ணை

திருகுகள்ளிவேர், வசம்பு, மிளகு வகைக்கு ஒரு பலம் யெடுத்திடித்து தண்ணீர் விட்டுக் குழம்புபோல் கரைத்து அடுப்பிலேற்றிக் கொதிக்கவைத்து நன்றாய்க் கொதித்த வுடன் ஆழாக்கு நல்லெண்ணை விட்டு கசக்கி இறக்கி வைத்துக் கொண்டு வலிப்பு வாதம் இவைகட்கு மேலே பூசிவரில் இரண்டு மூன்று வேளையில் தீருமென்றறிக.

வலிக்குத்தலுக்கு உள்ளியெண்ணை

ஈருள்ளி பலம் இரண்டு வசம்பு பலம் ஒன்று நொச்சிவேர் தழுதாழைவேர் வகைக்கு அரைபலம் இவை யாவும் இடித்து வேப்பெண்ணெய் விளக்கெண்ணை நல்லெண்ணை வகைக்கு இரண்டரை பலம் எடுத்து முன் இடித்த தூள் முதலானதும் ஒன்றாய்க் கலந்து கடுகு பதமாய்க் காய்ச்சியெடுத்து தேகத்தில் துவள விடவும். சகல வலியும் குத்தல் குடைச்சல் நீங்கும்.

பால கரப்பான் எண்ணை

செங்கத்தாரி பட்டையிலை சின்னியிலை சிறுகுறிஞ் சான்வேர் மிளகு வகைக்கு சமன்கொண்டு ஐந்து பலம்

நிறுத்தெடுத்து கால்படி விளக்கெண்ணையில் போட்டு காய்ச்சி காலையில் கரண்டி வீதம் கொடுத்துவரவும். ஐந்து அல்லது ஏழுநாள் கொடுக்க சகல கரப்பான் ரணங்களும் ஆறிவிடும். மேற்படி மருந்துகளையிடித்து வஸ்திரகாயஞ் செய்து கலக்கிக் காய்ச்சவும்.

சகல கிராணிக்கும் உடும்பெண்ணை

உடும்பின் சதை இரண்டரை பலம் சுக்கு திப்பிலி மிளகு வசம்பு வகைக்கு பலம் கால், சித்திர மூலம் பலம் கால், இவைகளையிடித்து பத்து பலம் விளக்கெண்ணையில் போட்டு மேற்படி சதையும் போட்டு சீரகம் வெள்ளுள்ளி பசுமோர் விட்டரைத்துப் போட்டு காலையில் கரண்டிவீதம் யெண்ணையும் பசும்மோர் கொஞ்சம்விட்டு சாப்பிடவுந் தீரும்.

சுகபேதி எண்ணை

சித்தாமணக்கெண்ணை அரைப்படி, பசும்பால் ஒரு படி, இவை யிரண்டுங்கலந்து அடுப்பேற்றி அதிமதுரம் கடுகுருணி இந்துப்பு வாளம் வகைக்கு காற்பலம் வீதம் எடுத்து இடித்து மேற்படி எண்ணை விட்டரைத்துக் கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு சிறுவர்களுக்கு ஒரு காசயிடை கொடுக்கவும். பெரியவர் களுக்கு மூன்று காசிடை, கல்குடலாயிருப்பவர் களுக்கு ஆறு காசிடை கொடுக்கவும். அப்போதைக்கப் போது வெந்நீர் சாப்பிட்டுக்கொண்டிருந்தால் பேதியாகும். பேதியதிக மானால் கஞ்சிகாய்ச்சிக் கொஞ்சம் உப்பிட்டுக் கொடுக்கவும். அப்படியும் நிற்காவிட்டால் மோர் சாதம் சாப்பிடவும், அந்தியில் சீரகம் மிளகு சமயிடை போட்டு கியாழம் வைத்துக் கொடுக்கவும், இரவில் மிளகுநீர் சாதம் கொள்ளவும். இந்த

யெண்ணையைத் தானே ஒரேமுறையாக ஏழுநாள் அல்லது பதினைந்து நாள் கொள்ள வாதம் முதலான வாய்வுகள் யாவுந் தணிவதுடன் இளம்பிள்ளைவாதம் கணமாந்தம் பொருமல் வாதபித்த சிலேத்துமம் யாவும் நீங்கும். மிகவும் உத்தமமான யெண்ணை யென்றறிக.

மண்டை குடைச்சலுக்கு எண்ணை

மணத்தக்காளி பொன்னாங்கண்ணி கரிசலாங் கண்ணி கீழாநெல்லி வில்வம் இந்த ஐந்து தினுசும் இடித்து ஆழாக்கு சாறுபிழிந்து ஆழாக்கு நல்லெண்ணை கூடவிட்டு கடுகு பதமாய்க் காய்ச்சி யிறக்கி மூன்று நாட்களுக்கு ஒரு முறையாக ஐந்து தலை முழுக்கு முழுக வேண்டியது ஒவ்வொரு முழுக்கிற்கும் கடுக்கமுளநீர் அரையாழாக்கு குடிக்கவேண்டியது. பகலில் நித்திரை செய்யக்கூடாது. அன்னிய பதார்த்தம் ஆகாது. முழுக்கில் மண்டைக்குடைச்சல் தீரும்.

காணாமேகத்திற்கு பச்சை எண்ணை

சங்கம்இலை கொண்டுவந்து இடித்து அரையாழாக்கு சாறு பிழிந்து அதற்கு சமனாக நல்லெண்ணை கூட்டி மூணுநாள் காய்ச்சி கொடுக்கவும். கடும் பத்தியம்.

காதில் சீழ்வடிதலுக்கு எண்ணை

லிங்கம் துட்டிடை பூரம் துட்டிடை யெடுத்து பொடித்து ஒரு பலம் நல்லெண்ணை அடுப்பில்வைத்து காய்ந்தபிறகு மேற்படி தூளைப்போட்டு நாயுருவிச்சாறு கா்லணா எடைவிட்டு சற்றுநேரம் காய்ச்சி இறக்கிக் கொண்டு பஞ்சில் தொட்டு காதில் மூன்றுதுளி பிழிந்தால் சீழ்வருதல் தீரும்.

சர்வ மூலத்திற்கும் எண்ணை

நத்தைச்சூரி, குதிரைவாலிப்பில்லு, கண்டங்கத்திரி, ஆடுதின்னாப்பாளை, செப்புநாயுருவிவேர், சிறுகட்டுக் கொடி, உப்பிலாங்கொடி, வெள்ளெருக்கன்வேர் இலைகள் வகைக்கு ஒரு குத்துயெடுத்து பெரும் பானையில் போட்டு இரண்டே கால்படி ஜலம்விட்டு அடுப்பிலேற்றி யெரிக்கவும் மூன்று ஆழாக்கு கியாழம் யிருக்குற சமயத்தில் இறக்கி வடிகட்டி சித்தாமணக்கெண்ணை பத்துபலம் விட்டுக் கலக்கி அடுப்பிலேற்றி கியாழமெல்லாம் சுண்டுகிற வரையில் யெரித்து இறக்கிவைத்துக் கொண்டு பத்துநாள் சாப்பிடவும். இச்சாபத்தியம். சீழ்மூலம் இரத்த மூலம் மூளைமூலம் உள்மூலம் முதலிய எவ்வித மூலமும் தீரும். இந்த தைலத்தை மூலத்தின் பேரில் தடவினாலும் நலமாம். இரவில் தடவி படுத்துக் கொள்ளவும்.

எண்ணை வகை சிட்கா முற்றிற்று.

========

பொடிவகை சிட்கா

விரோஜனப் பொடி

சதுரக்கள்ளியின் கிழங்கு அல்லது மூலம் கொடிவேலியின் வேர் இவை இரண்டும் சமன் கொண்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து பசும்பால் விட்டரைத்து பில்லை தட்டிக் காயவைத்து மறுதினமும் அப்படியே

அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து மறுதினமும் இவ்வாறே செய்து நிழலிலுலர்த்தி எடுத்துப் பொடித்து வைத்துக் கொண்டு, வேண்டும்போது பாக்களவு பொடியை கொஞ்சம் வெந்நீரிலிட்டு சாப்பிட பத்துமுறை பேதியாகும் அதிக பேதியானால் மோர் அன்னம் சாப்பிடவும். மாலையில் சீரகம் மிளகு கியாழம் வைத்துக் குடிக்கவும்.

ஸ்திரீமேக வெள்ளைப் பொடி

சந்தனத்தூள் அகிற்கட்டை லவுங்கப்பட்டை கிராம்பு அதிமதுரம் கார்போகவரிசி வெட்பாலை தேத்தான்வித்து அருகம்வேர் சித்தாமுட்டிவேர் ஏலம் சோம்பு வகைக்கு சமனெடை அல்லது அரைப்பலம் வீதமாக வாங்கி வெய்யலில் உலர்த்தியிடித்து சூரணித்து சீலையில் வடிகட்டி வைத்துக் கொண்டு தினம் திரிகடிப்பிரமாணம் எடுத்து அவ்வளவு கற்கண்டு பொடிகூட்டி பசும் வெண்ணெயில் குழைத்து சாப்பிட்டு வரவும். இப்படி இருவேளையும் ஏழு அல்லது பதினைந்து நாள் கொள்ள நீர் எரிப்பு கடுப்பு வெள்ளை யாவும் தீரும் பத்தியம் அரைகாரம் அரைப்புளியாக இச்சாபத்தியம்.

மேகத்திற்கு நவநாவ் உருண்டை

வெள்ளை நொச்சிலி மிளகு பூண்டு அரைத்து கெச்சைக்காய் பிரமாணம் ஏழுநாள் கொடுக்கவும். வேளைக்கு மூன்று உருண்டை கொடுக்கவும். கடும் பத்தியம் மேகம் பிடிப்பு குடைச்சல் இவைகள் தீரும்.

தேத்தான் கொட்டை பொடி

தேத்தான்கொட்டை வேண்டியது கொண்டு வந்து நெய்யில் வறுத்து இடித்து சூரணித்து சீசாவில் வைத்துக் கொண்டு தினம் காலையில் திரிகடி பிரமாணம் தின்று

வந்தால் (3760) வியாதியும் வரவொட்டாமல் காப்பாற்றும், பசும் பாலில் கரைத்து காலை மாலை சாபபிட்டால் மேக நிவர்த்தியாகும்.

மேகத்திற்கு ஏடு தயிர்

முத்தின மாம்பட்டை கொண்டுவந்து பஞ்சு போல் இடித்து ஐந்தரை பலம் நிறுத்தெடுத்து முக்கால்படி ஆடைத்தயிரில் போட்டுக் கலக்கி வாய்கட்டி மூணுநாள் சூரியபுடம் வைத்தெடுத்து வேளைக்கு அரையாழாக்கு வீதம் ஐந்துநாள் காலை மாலை கொடுக்கவும். கடும் பத்தியம்.

குலை எரிவுக்கு பொடி அல்லது சூரணம்

பரங்கிச்சக்கை	இரண்டரை பலம்
முசுமுசுக்கைவேர்	இரண்டரை பலம்
சீரகம்	இரண்டரை பலம்

இம்மூன்றும் வெய்யலில் உலர்த்தியிடித்து வஸ்திர காயஞ் செய்து சீசாவில் வைத்துக்கொண்டு காலையில் திரிகடி சூரணம் எடுத்து தேன்விட்டுப் பிசைந்து சாப்பிடவும். இப்படி இருபது அல்லது நாற்பது நாள் சாப்பிடவும். பித்தயெரிவு தீரும். இச்சாபத்தியம்.

நாபிப் பொடி

பொரித்தெடுத்து சூரணித்த படிகாரம் அரைக்கால் பலம் குங்கிலியம் ஒரு பலம் எடுத்து ஒரு சட்டியில் ஐந்து இளநீர் உடைத்து ஊத்தி மேற்படி மருந்தை இளநீரின் நடுவில் வைத்து அடுப்பின்பேரில் வைத்து நீர்சுண்டுகிற வரையில் எரித்த பிற்பாடு மருந்தையெடுத்து பொடித்து

சீசாவில் வைத்துக்கொண்டு இரண்டு அரிசியெடை சூரணத்தைத் தேனில் குழைத்து சாப்பிடவும். நாபியில் ரணம் ஆறும்.

சர்வ மேக சண்டமாருதப் பொடி

சுக்கு	விராகனிடை	4	இந்துப்பு	விராகனிடை	4
திப்பிலி	"	4	பொட்டிலுப்பு	"	4
மிளகு	"	4	கரியுப்பு	"	4
பூண்டு	"	4	வாளம்	"	1
ஓமம்	"	4	பொன்முசுட்டை	"	8
திப்பிலிமூலம்	"	4	பேய்த்துமட்டி	"	8
அரிசிதிப்பிலி	"	4	தலைச்சுருளி	"	8
செவியம்	"	4	காட்டுமுருங்கை	"	8
ஆனைதிப்பிலி	"	4	மூக்கழஞ்சி	"	8
சீரகம்	"	4	சத்திசாரணை	"	8
கருஞ்சீரகம்	"	4	காட்டுமல்லி	"	8
சதகுப்பை	"	4	மலைமஞ்சி	"	8
சத்திசாரம்	"	4	மரமாஞ்சி	"	8
பூனீரு	"	4	கரிசலாங்கண்ணி	"	8
எவாச்சாரம்	"	4	நிலவேம்பு	"	8
நவாச்சாரம்	"	4	புங்கன்வேர்	"	8
வெண்சாரம்	"	4	நெருஞ்சிவேர்	"	8
கல்லுப்பு	"	4	கருணைக்கிழங்கு	"	8
சோத்துப்பு	"	4	எருக்கன்கிழங்கு	"	8
வளையலுப்பு	"	4	மூங்கில்கிழங்கு	"	8

மேற்கூறிய நாற்பது தினுசுகளும் சுத்தப்படுத்திய பிறகு நிறைப்படி நிறுத்தெடுத்துக் கொண்டு சிவதைவேர் விராகனிடை எழுபது நிறுத்தெடுத்து சத்திசாரம் முதல் கரியுப்பு வரையில் பதினொன்று தினுசுகளை வேறு

பாண்டத்தில் வைத்து மற்றவைகளை வெய்யலில் உலர்த்து இளம் வறுப்பாக வறுத்து இடித்து முன்னெடுத்து வைத்த பதினொரு வகை மருந்தையும் இடித்து வஸ்திரகாயஞ் செய்து பசும்பாலில் சுத்தி செய்து நிழலில் உலர்த்தி பொடித்து சீசாவில் வைத்துக்கொள்ளவும். ஒருவேளைக்கு திரிகடி பிரமாணம் பொடியெடுத்து தேன் நெய் அல்லது வெந்நீரிலாவது சாப்பிடவும். இப்படி கால் அல்லது அரை மண்டலம் இருவேளையும் சாபபிட்டுவரில் தீரும் வியாதிகளாவன.

வாய்வு, நரித்தலைவாய்வு, பாரிச வாய்வு முதலிய வாதம் எண்பதும் தீரும். நாவரட்சி, குன்மம், சந்நிநோய், சீழ்பிடிப்பு, கைகுத்தல், கால்குத்தல், குடைச்சல், பெருவயறு, ஆமைவயறு, தாகம், உஷ்ணம் பாண்டு, காமாலை, முகவாதம், வீக்கம், உளமாந்தை, இருமல், குளிர்சுரம், வாயில் ரத்தம் வருதல், கக்கல், பித்தமயக்கம், மூலநோய், அஜீரணம், வயரெறிச்சல், வயிற்றில் புழு, இவை யாவும் தீரும் இச்சாபத்தியம்.

ஜன்னிவாங்கிப் பொடி

சடாமாஞ்சி	குருவேர்
கோஷ்டம்	நன்னாரிவேர்
பூலாங்கிழங்கு	பச்சையிலை
தேவாரம்	சந்தனத்தூள்
செம்புராப்பட்டை	கொம்பரக்கு
கருஞ்சீரகம்	சித்தாமுட்டி
கார்போகியரிசி	பளிங்குசாம்பிராணி
செண்பகமொக்கு	நாணல்வேர்
சிறுநாவல் பூ	கிச்சிலிக்கிழங்கு

செவியம்	டிக்காமல்லி
சிறுதேக்கு	கோழிக்கிழங்கு

இவைகளை வகைக்கு ஒரு விராகனெடையாக நிறுத்தெடுத்து இடித்து சிறு பொடியாகத் தெள்ளி வைத்துக் கொண்டு தாங்கள் தலைமுழுகத் தகுந்த நல்லெண்ணையை அடுப்பிலேற்றி காய்ந்தவுடன் மேற்படி பொடியில் மூன்று சிட்டிகை பொடிபோட்டு உடனே மேல் மூடியிறக்கி வைத்துக் கொண்டு தலையில் தேய்த்து ஸ்நானம் செய்யவும், கண்ணில் படக்கூடாது. அன்றைய தினம் பகல் நித்திரைகூடாது. கத்திரி அவரை முருங்கை இவைகளின் பிஞ்சு பொன்னாங்கண்ணி அரைக்கீரை இவை சமைத்துக் கொள்ளவும். அல்லது புறா கோழி மாமிசம் சுறா இவைகளாகும். இப்படி ஆறு நாட்களுக்கு ஒரு முறையாக 3, 4. ஸ்நானஞ் செய்யுமளவில் ஒத்தை தலைநோய், விடா தலைபாரம் புறங்கழுத்து இசிவு மண்டையிடி முக ஜன்னி முதலானபதிமூன்று ஜன்னி தோஷங்களும் தீரும்.

நாதவிர்த்திப் பொடி

கருவேலன்பிஞ்சு நறுவிலிப் பிஞ்சு ஆனை நெருஞ்சிக் காய் காட்டுப்பிரண்டையிலை இவைகளை நிழலில் உலர்த்தி தனித்தனியாக இடித்து சூரணித்து வஸ்திர காயஞ் செய்து சரியிடை வெள்ளை சர்க்கரைகூட்டி சீசாவில் வைத்துக் கொள்ளவும். இரவில் போஜனம் செய்த பிறகு கால்பலம், பொடியை எடுத்து தண்ணீர் விடாமல் காய்ச்சிய பசும்பாலில் மேற்படி பொடியைப் போட்டு சாப்பிடவும். இப்படி பதினைந்து நாள் கொள்ள நீத்திருந்த இந்திரியம் கட்டும் லாகிரியும் போகமுங்கூடாது.

தாதுவிர்த்திக்கு முக்கண்ணிப் பொடி

இளசாயுள்ள தென்னம்பாளையைக் கொண்டு வந்து மேற்பட்டை நீக்கி உள்ளிருக்கும் அரிசிகளை மாத்திரம் எடுத்து வெய்யலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்த பொடி ஐந்துபலம், தண்ணிவிட்டான் கிழங்கு கருவேலன் பிஞ்சு சருவிலிப் பிஞ்சு நெருஞ்சிவித்து இவைகளை உலர்த்தி சமனாகக் கொண்டிடித்த தூள் ஐந்து பலம் சர்க்கரை ஐந்து பலம் யாவும் ஒன்றாய்க் கலந்து சீசாவில் வைத்துக்கொண்டு தண்ணீர் விடாமல் காய்ச்சிய பாலில் அருந்தவும். போகத்துக்கின்பந்தரும். சுக்கிலம் கட்டும். பத்து அல்லது இருபது நாள் கொள்ளவும்.

கரசராட்சதப் பொடி

ஆடாதோடை	சிறுகடுக்காய்
கோஷ்டம்	வழுதலைவேர்
திப்பிலி	முடக்கத்தான்
வசம்பு	சிறுநாகப்பூ
நெல்லிக்காய்	வல்லாரை
மிளகு	

இவையாவும் சமனிடை கொண்டு உலர்த்தியிடித்து சூரணித்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு விராகனிடையாக இருவேளையும் பசும்நெய்யில் குழைத்துத் தின்னவும். தீரும் வியாதிகள் அஸ்தி சூடு நாவரட்சி ஈளை புகையிருமல் தொண்டைக்கம்மல் சிணுக்கிறுமல் கோழை மூலச்சூடு இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

தந்தப்பொடி

கண்டங்கத்திரி பொடுதலை இரண்டும் நிழலில் உலர்த்தி பொன்வறுவலாய் வறுத்து வைத்துக்கொள்ளவும்.

உப்பு பொன்னாங்கொட்டை சம அளவு போட்டு வறுத்து மூன்றையும் கலந்து போட்டு இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொண்டு அந்தி சந்தி பல் துலக்கிவரில் பல்நோய் அசைதல் குத்தல் கடுத்தல் சீழ் ரத்தம் யாவும் நீங்கும்.

சுக்குப்பொடி

தேறிய மாவுச்சுக்கு கொண்டுவந்து உலர்த்தி இடித்து சூரணித்து அதிற்பாதியிடை சக்கரை சேர்த்து சீசாவில் வைத்துக் கொண்டு வேளைக்கு திருகடி பிரமாணமாக அந்தி சந்தி 10, 20, 30, 40 நாள் சாப்பிட்டு வர தேகத்திலுள்ள வாய்வுகள் யாவும் கண்டிக்கும். பசிதீபனமுண்டாகும்.

மேகப் பொடி

பூங்காயும் படிகாரமும் சமனிடைகொண்டு கல்வத்திலிட்டு மைபோல் அரைத்து சீசாவில் வைத்துக் கொண்டு திரிகடி பிரமாணம் இருவேளை வெண்ணெயில் மத்தித்து சாப்பிட வெள்ளை பெரும்பாடு தேகஅனல் சூடு இவை தீரும். இச்சா பத்தியம். படிகாரத்தை நெருப்பிலிட்டு பொங்கவைத்து சேர்த்துக் கொள்ளவும்.

ஏலம்	திப்பிலிமூலம்
சுக்கு	அதிமதுரம்
திப்பிலி	குறாசானிவோமம்
மிளகு	அமுக்கிறாவேர்
கிராம்பு	கசகசா
ஓமம்	லவங்கப்பத்திரி
வாலுளுவை	கொத்தமல்லி
ஜாதிக்காய்	பேரீச்சு
சீரகம்	முந்திரிகை

இவைகளை வகைக்கு கால்பலம் வாங்கி இளவறுப் பாக வறுத்து வைத்துக்கொண்டு மேல் பரணி சீவிய இஞ்சியை பில்லை பில்லையாக அறுத்து உலர்த்தி பத்து பலம், நிறுத்தெடுத்து நெய்யில் வறுத்து முன்மருந்துடன் போட்டு இடித்து சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து சீனிசக்கரை பத்து பலம் போட்டு கலந்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். வேளைக்கு திரிகடி பிரமாணம் தேனில் குழைத்து சாப்பிடவும். பத்து அல்லது இருபது நாள் சாப்பிடவும். வாயு பித்தம் அஜீரணம் யாவும் தீரும். வாய்வாசம் வீசும். சீதளங்காணாது. இதை சதா நெய்யில் குழைத்து அந்தியில் மாத்திரம் தின்று வந்தாலும் மேற்படி குணம்செய்யும்.

பொடி வகை சிட்கா முற்றிற்று.

கண்டாவிழ்த சிட்கா

சீதபேதிக்கு மருந்து: அத்திக்காயை வேகவைத்து அதின்சாறு அரை யாழாக்கு பிழிந்து துட்டிடை மிளகு பொடித்துப் போட்டு துட்டிடை பசும் வெண்ணை போட்டு கலக்கி கொடுக்கவும் தீரும் இப்படி இரண்டுவேளை செய்யவும்.

சீதபேதிக்கு வேறு மருந்து : லவங்கப்பட்டை ஒரு பலம், கசகசா ஒரு பலம், கொத்தமல்லி ஒரு பலம், பனங்கற்கண்டு ஒரு பலம், இவை நாலும் பொடித்து நெய்யை அடுப்பிலேற்றி லேகியம்போல் கிண்டி இரு வேளையுமாக ஐந்து நாட்கள் சாப்பிட நிவர்த்தியாகும். புளி மிளகாய் ஆகாது.

மூலகூட்டுக்கு மருந்து : துத்தியிலை வெங்காயம் சிறுபயறு மூணும் சமபாகஞ் சேர்த்து வேகவைத்து நெய்விட்டுக் கிளறி சாப்பிடவுந் தீரும். ஆறுவேளை தின்னவும்.

சீதபேதிக்கு வேறு உபயோகம் : வாத்துமுட்டையை வேகவைத்து காரமில்லாமல் புட்டிட்டு போதுமான மட்டும் எருமை வெண்ணையில் காய்ச்சி நெய்விட்டுப் பிசைத்து சாப்பிடவும் இருவேளை மூன்றுநாளில் தீரும்.

பல்லசைவுக்கு மருந்து ; படிகாரம் பலம் அரை கரியுப்பு பலம் அரை படிகாரத்தை நெருப்பிலிட்டு யெரித்து யெடுத்துக் கொண்டு இரண்டையும் ஒன்றாய்க் கூட்டி அரைத்து எப்பொழுதும் பல்துலக்கி வரவும்.

பல்லுகளில் ரத்தம் வருதலுக்கு பொடி : கரியுப்பும் சேராங்கொட்டையும் சமமாக யெடுத்து கலசத்திலிட்டு மேற்கலசம்மூடி சீலைமண் செய்து 5 அல்லது 10 வரட்டியில் புடம் போட்டெடுத்து பல்துலக்கி வரவும். இரத்தம் வருதல் உடனே தீரும்.

பல்வலிக்கு வேறு மருந்து : பெருங்காயம், சீரகம், திப்பிலி, மிளகு, ஓமம், இந்துப்பு பெருஞ்சீரகம், கரியுப்பு இதுகள் வகைக்கு பலம் கால்யெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொண்டு பல்துலக்கி வரவும். ஈறுகட்டுதல், சதை வளர்தல், சீழ் வருதல், நோய் குத்தல் யாவும் தீரும்.

பல்வலிக்கு வேறு மருந்து : சீக்காய் அரைத்து பின்னக் காயளவுயெடுத்து அதே திட்டம் துவரை யிலையை அரைத்து இரண்டும் ஒன்றாய்ப் பிசைந்துக் கொண்டு இந்த அளவுக்கு கற்பூரமும் கரியுப்பும் பொடித்து அரைத்த மருந்து யாவும் பிசைந்து பில்லை தட்டி அடுப்பில் வெறும் சட்டி வைத்து அதில் பில்லையை வைத்து யெரித்து நன்றாய்க் காய்ந்தவுடன் யெடுத்து பொடித்து வைத்துக் கொண்டு பல் துலக்கி வரவும். வலிதீரும்.

அரையாப்புக்கு மருந்து : மூக்குறட்டை வேரை அரைத்து பின்னக்கா யளவெடுத்து காலாழாக்கு நல்லெண்ணையில் கரைத்து குடிக்கவும். இப்படி மூன்று நாள் செய்யவும் மீன் கருவாடு, புளி, புகையிலை, லாகிரிவஸ்து இவைகள் ஆகாது.

வாய்வுகட்டிக்கும் உஷ்ணவாய்வுக்கும் மருந்து : உத்தாமணி சமூலம் பிடுங்கிவந்து கழுவிப்போட்டு உப்பு போடாமல் அவித்து சுடுகிற சாதத்தில் போட்டு பிசைந்து சாப்பிடவும். இப்படி மூன்றுநாள் ஆறுவேளை செய்யவும். இச்சாபத்தியம்.

அரையாப்பு கட்டிக்கு வேறு மருந்து : கெவுரி பாஷாணம் நான்கு குன்றிமணி யெடுத்து, ஊமத்தஞ்சார் விட்டரைத்து, இரவில் கட்டியின்பேரில் தடவி படுத்துக் கொள்ளவும். உடைந்த பிறகு வேப்பங்கொழுந்து கொஞ்சம். துளிமஞ்சள், துளிவசம்பு நறுக்கி, விளக்கெண்ணையில் புரட்டி பில்லை தட்டி வைத்துக் கட்டவும். இரண்டு அல்லது மூன்று வேளையில் தீரும்.

கல்லடைப்புக்கு மருந்து : எருக்கம் பூவின் மொக்கு ஏழு எடுத்துவந்து சுண்ணாம்பு போடாமல் வெற்றிலை பாக்குடன் வைத்துத் திண்ணவும். இப்படி இரண்டு அல்லது மூன்று வேளையில் கல்லுவிழும்.

புகையிருமலுக்கு மருந்து : தாளியிலை ஒரு பிடி கொண்டு வந்து சட்டியில் போட்டுக் கிண்டி, பசு வெண்ணை ஒரு பலம் போட்டுக்கிண்டி காலை மாலை மூன்று நாள் தின்னவும். புகையிருமல் தீரும்.

சுகபேதிக்கு மருந்து : கடுக்காய் ஒன்று நெல்லிக்காய் கொஞ்சம் அவிரி ஆவாரை மூணுவிரல் கொண்டது. இதுகளை நறுக்கி, அரைத்து, சர்க்கரை போட்டுப் பிசைந்து சாப்பிடவும். பேதியாகும்.

நீர்கடுத்துப் போகிறவர்களுக்கு நீரிழிவுக்கும் மருந்து: சாதிக்காய், கிராம்பு, சாதிலிங்கம், ஊசிகாந்தம் ஊமத்தம் விரை இவை சமனெடை கொண்டு வந்து வறுத்து அத்துடன் அபின் ஒரு விராகனெடை போட்டு ஊமத்தஞ்சாறு விட்டரைத்து, தூதுவிளங்காய் பரிமாணம் உண்டையிடவும். பித்தம் பிடித்தவர்களுக்கும் சவுக்கியமாகும். நீரிழிவு, மூலக்கடுப்பு, வாதபித்தம் இவைகள் விட்டோடிப்போம் இச்சாபத்தியம்.

ஆறாப்புண்ணுக்கு புகை : சாம்பிராணி வெள்ளைப் பூண்டு தோல், கருவேப்பிலை, நொச்சியிலை இதுகளை பொடி செய்து புண்ணுக்கு புகை பிடிக்க ஆறிப்போகும்.

புண்ணுக்கு கட்டு : வெள்ளாட்டுப் புழுக்கையை சிறுபிள்ளைகள் மூத்திரம் விட்டரைத்து பில்லை தட்டி ஆறாத புண்ணுகளின் போல் வைத்துக்கட்ட ஆறிப் போகும்.

மேகப்புண்ணுக்கு மருந்து : பெண்கள் மாதவிடாயாகும் பொழுது உதிரச்சீலை சம்பாதித்துக் கொண்டு வந்து நெருப்பிலிட்டுக் கருக்கி ரணத்தின்மேல் வைத்துக் கட்ட காயம் ஆறும் அல்லது வேறு மருந்து;

படிகாரங் கொண்டு வந்து நெருப்பிலிட்டுபொரித்து புண்ணின் மேல் தூவி வைக்க ஆறிவிடும். அல்லது வேறு மருந்து:

துத்தியிலையை அரைத்து புண்ணில் வைத்து கட்டினாலும் ஆறிவிடும். அல்லது வேறு மருந்து.

மஞ்சள் பொடி செய்து புண்ணின் மேல் தூவி வந்தாலும் ஆறிவிடும். அல்லது வேறு மருந்து. எட்டிப்பழம் இரண்டு கொண்டுவந்து நல்லெண்ணெய்யில் வறுத்து அல்லது நன்றாக வேகவைத்து கல்வத்திலிட்டு அரைத்து பஞ்சில் துவட்டி புண்ணின் மேல் போட ஆறவிடும்.

மாத விடாய் இல்லாதவர்களுக்கும் பிள்ளை இல்லாதவர்களுக்கும் பெண்கள் வயிற்று வலிக்கும்

மருந்து : மலைவேம்புச் சாறு, தனி மஞ்சள் சாறு அதாவது பச்சை மஞ்சள் சாறு நல்லெண்ணை இம்மூன்றும் சமன் எடை சேர்த்து காலை வேளையில் கால் ஆழாக்கு வீதம் மூன்று நாள் கொடுக்க பிள்ளை இல்லாதவர்களுக்கு பிள்ளையுண்டாம். மாதவிடாய் நாளில் வயிற்றுவலியும் தீரும்.

தேக அனலுக்கு மருந்து : அதிமதுரம் அரைப்பலம் கொண்டு வந்து வெந்நீர் விட்டு அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும் அந்தி சந்தி இரண்டு நாள் கொடுக்கத் தணியும்.

சூட்டு இருமலுக்கு மருந்து : அதிமதுரம் கடுக்காய் மிளகு இவை மூன்றும் சமனிடை சேர்த்து இளம் வறுப்பாய் வறுத்து பொடித்து சூரணித்து தேனில் திருகடி பிரமாணம் குழைத்துக் கொடுக்க நிவர்த்தியாகும். இப்படி மூன்று நாள் செய்யவும்.

அரையாப்புக்கு மருந்து : எலுமிச்சம் வேர், சத்திக் சாரணை வேர் இரண்டும் அரைத்து கெச்சக்காய் பிரமாணம் நல்லெண்ணெயில் குழப்பி சாப்பிடவுந் தீரும். இப்படி மூன்று நாள் கொள்ளவும்.

இருமலுக்கு மருந்து : கடுக்காய் தோல், கொடி முந்திரிப்பழம் வகைக்குப்பலம் இரண்டு ஒன்றாய் சேர்த்திடித்து மூன்று நாள் உட்கொள்ள தீரும்.

நீர் எரிவு அல்லது சுருக்குக்கு : படிகாரம் பொரித்து கொண்டு பூங்காவிக்கல் இரண்டும் சமன்எடை சேர்த்து வைத்துக் கொண்டு வேளைக்கு ஏழு குண்டுமணி அளவு எடுத்து கால் ஆழாக்கு பசும்பாலில் கலக்கி சாப்பிடவும். இப்படி ஆறுவேளை சாப்பிடவும்.

முலைப்பால் சுரக்க மருந்து : கோவை இலை வேண்டிய அளவு கொண்டுவந்து தண்ணீரில் அலம்பிப் பிழிந்து எடுத்து போதுமான நெய்யில் போட்டு வதக்கி அப்பொழுது வெள்ளைப்பூண்டு கொஞ்சம் நறுக்கிப் போட்டு காலையில் கால் வயிறு கீரை சாப்பிடும்படி கொடுக்கவும். பிறகு ஒரு மணி நேரம் பொறுத்து ஆகாரம் எது வேண்டுமோ கொடுக்கலாம். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். பால் கங்கை போல் சுரக்கும்.

வயிற்றில் இறந்த பிள்ளை, வெளிக்காண மருந்து: அதிமதுரம், தேவதாரம் வகைக்குப் பத்து பலம் வெந்நீர் விட்டரைதது உள்ளுக்குக் கொடுக்க பிள்ளை கீழே விழும்.

மேற்படி வேறுமுறை : வசம்பு பெருங்காயம் முலைப்பால் விட்டரைத்து அடிவயிற்றிலும் முழங்கால் களிலும் தடவ பிள்ளை கீழே விழும்.

காது, செவிட்டுக்கு, மருந்து : முருங்கை வேரும், கொன்னை வேரும் சமமாய் எடுத்து இடித்து சாறு பிழிந்து கண்ணில் ஒரு துளி விடவும். இப்படி இரு வேளையும் மூன்று நாள் கொடுக்கவும்.

கண் திறவாதகாய்ச்சலுக்கு : கெஞ்சா குடிக்கின்ற சிமிழியின் துவாரத்தில் இருக்கும் அழுக்கை எடுத்து வந்து கடலை பிரமாணம் உருட்டி ஒரு வெற்றிலையில் மடித்துக் கொடுக்கவும். இப்படி இரு வேளையும் மூன்று நாள் கொடுக்கவும்.

நல்ல பாம்பு விஷத்திற்கு: சீந்தில் வேரும் புளிச்சக்காடியும் சேர்த்தரைத்து பின்னக்காய் அளவு கொடுக்கவும். சாத்தியம், பிறகு தக்க அவுஷதங்கள் செய்துகொள்ளவும்.

எந்தவித பாம்பு விஷத்திற்கும் : எந்த விதமான பாம்பு கடித்தபோதிலும் உடனே புகையிலையை வாய் கொண்ட மட்டும் மென்று தின்னவும். வாய்கிட்டிவிட்டால் புகையிலையை அரைத்து ஆழாக்கு ஜலத்தில் கரைத்து பல்லை நீக்கி செலுத்திவிட்டால் பேதியில் விஷம் வந்து விடும் . வாந்தி ஆகும். மஞ்சள் கரைத்தது போல் விஷநீர்கள் வந்துவிடும். பிறகு தக்க அவுஷதங்கள் மெதுவாய் செய்து கொள்ளவும்.

வாந்தி பேதிக்கு : அரைக்கால் ரூபாயிடை அபினி அரைக்கால் ரூபாயிடை கற்பூரம் இரண்டும் உள்ளங்கையில் வைத்துக் கசக்கி உருண்டையாய் கொடுத்து விட்டால் சாந்தியாகும்.

முளை மூலத்திற்கு : கோவையிலையைக் கொண்டு வந்து அரைத்து பில்லைதட்டி இராத்திரியில் ஆசனத்தில் வைத்து மூன்று நாள் அல்லது ஐந்து நாள் கட்ட தீரும்.

மேகப் புண்ணுக்கு : பொடுதலையைக் கொண்டு வந்து மஞ்சள் சமம் வைத்து மைபோல் அரைத்து புண்ணின் மேல் வைத்துக் கட்டவும் மூன்று நான்கு, ஐந்து வேளையில் தீரும்.

ஊர்சுத்து அல்லது நகச்சுத்துக்கு மருந்து: காட்டுப் புறாவின் பச்சைமலம் கெச்சக்காயளவு மூன்று இலந்தம் இலை ஏழு மருதாணி இலை இந்த மூன்றையும் நெகிழ அரைத்து ரணத்தில் போடவும். சீக்கிரம் வலி நீங்கிப் போகும்.

நீரிழிவுக்கு மருந்து

தேத்தாங் கொட்டை	-	பத்து விராகனிடை
கடுக்காய்	-	பத்து விராகனிடை
ஆவாரம் விரை	-	ஐந்து விராகனிடை
விளாம் பிசினி	-	ஐந்து விராகனிடை

இவைகளை உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து மூன்று பாகமாக்கி தினம் ஒரு பங்கெடுத்து புதுமோரில் கலந்து காலையில் சாப்பிடவும். இச்சா பத்தியம்.

மயிர் உதிர : அரிதாரம் இரண்டு பங்கு, சுண்ணாம்பு ஒரு பங்கு இரண்டும் சேர்த்து தண்ணீர் விட்டரைத்து மயிர் வேண்டாத இடத்தில் தடவி சற்று நேரம் கழித்துக் கழுவிப் போடவும்.

உதிரக் கழிச்சலுக்கு : கலைமான் கொம்பு சீவின பஸ்பம் கால் பலம் எடுத்து பசும் பாலில் போட்டு நன்றாய்க் காய்ச்சி ஒரு எலுமிச்சம் பழச்சாறு விட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.

சாதாரண பேதிக்கு : புளியாரை வாழைப்பூ சமயிடை தூக்கி இடித்து பிட்டு அவியல் அவித்து தேன் குத்திப் பிசைந்து கொடுக்கத் தீரும். இப்படி இரண்டு மூன்று வேளை செய்ய குணமாகும்.

மலசலக் கட்டுக்கு

சுக்கு	ஒன்றேகால் பலம்
மிளகு	ஒன்றேகால் பலம்
உள்ளி	ஒன்றேகால் பலம்
இலைக்கள்ளி வேர்ப் பட்டை	ஐந்து பலம்

இவைகளைக் காய வைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொண்டு, குழந்தைகளின் பலமறிந்து, முலைப்பாலிலாவது, வெந்நீரிலாவது, அரை அல்லது ஒரு காசு இடை போட்டுக் குலுக்கி வார்க்கவும். உடனே மலஜலம் வெளியேறும். இச்சாபத்தியம்.

முக்கல் அல்லது வயிற்றுக் கடுப்புக்கு

ஜாதிக்காய்	இரண்டு விராகனிடை
அதிவிடையம்	இரண்டு விராகனிடை
சன்னராஷ்டம்	இரண்டு விராகனிடை
ஓமம்	ஒரு விராகனிடை
கிராம்பு	ஒரு விராகனிடை
பருத்தி இளம் பிஞ்சு	ஒரு விராகனிடை

இந்த ஆறு வகையும் நிறுத்து எடுத்து குளிர்ந்த ஜலம் விட்டரைத்து கட்டித் தயிரில் பிசைந்து கொடுக்கவும். இப்படி இரண்டு அல்லது மூன்றுவேளை கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

வெள்ளை இரத்தமேகம் அல்லது மஞ்சா வெள்ளைக்கு

மிளகு	ஒரு பலம்
பூண்டு	அரை பலம்
பனவெல்லம்	இரண்டு பலம்
குமுளம் வேர்ப்பட்டை	ஒன்றரை பலம்

இவைகளைக் காய வைத்து, இடித்து, வஸ்திர காயஞ் செய்து பனைவெல்லங் கலந்து, பிசைந்து, பெரிய இலந்தங்காய் பிரமாணம் அல்லது காலணா எடை சாப்பிடவும். இப்படி மூன்று நாள் உட்கொள்ளவும். கடும் பத்தியம், மறு பத்தியம்

மூன்று நாளும் சுட்டபுளி வறுத்த உப்பு. ஏழாவது நாள் ஓமம் தேய்த்து தலை முழுகவும்.

லிங்கப் புற்றுக்கு

வெள்ளை குங்கிலியம்	இரண்டு விராகனிடை
பளிங்கு சாம்பிராணி	ஒன்றரை விராகனிடை
சுத்திசெய்த கந்தகம்	ஒரு விராகனிடை
பூரம்	ஒரு விராகனிடை

இவைகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து படை நெருப்பிலிட்டு லிங்கரணத்திற்கு இரண்டு மூன்று நான்கு வேளை புகை காட்டவும்.

பால் வெள்ளைக்கு

தேத்தாங் கொட்டை	ஒரு பலம்
கடுக்காய்ப் பிஞ்சு	ஒரு பலம்
ஆவாரம் விதை	ஒரு பலம்

இவைகளை வறுத்து இடித்து, வஸ்திரகாயஞ் செய்து, மூன்று பங்காக்கி, ஒரு பங்கை, இரவில் அரை ஆழாக்கு எருமைத் தயிரில் போட்டு வைத்திருந்து காலையில் எடுத்து வடிகட்டி, மருந்தை அரைத்து சாப்பிடவும். இப்படி மூன்று நாளும் செய்யத்தீரும். இச்சாபத்தியம்.

தோஷ மாத்திரை

அதிமதுரம்	ஒரு பலம்
தேவதாரம்	ஒரு பலம்

கடுக்காய்	ஒருபலம்
வசம்பு	ஒருபலம்
கோரைக்கிழங்கு	ஒரு பலம்
அதிவிடையம்	ஒரு பலம்
குங்குமப்பூ	நான்கு விராகனிடை

இவைகளை இடித்து, வஸ்திர காயஞ்செய்து, பொடுதலைச் சாறுவிட்டு, ஒரு நாளைக்கு ஒரு ஜாமமாக, நாலுநாள் அரைத்து குன்றிமணிப் பிரமாணம் மாத்திரை செய்து, சீசாவில் வைத்துக் கொண்டு, தேனில் ஒரு மாத்திரை அளவு கொடுக்கவும். இச்சாபத்தியம். மருந்து இருவேளையும் கொடுக்க வேண்டியது.

பாலசுரக் குளிகை

லிங்கம்	ஐந்து விராகனிடை
பூரம்	ஒரு விராகனிடை
மிளகு	ஒரு விராகனிடை

இவைகளை மேற்கண்ட வீதம் எடுத்து முலைப்பால் விட்டு, மூன்று ஜாமம் அரைத்து, சிறுபயிறு பிரமாணம் மாத்திரை செய்து, நிழலுலர்த்தி சீசாவில் வைத்துக் கொள்ளவும். மாந்த சுரத்திற்கு ஆடாதோடை சாறிலிடவும். வாத சுரத்திற்கு நொச்சிக் கியாழத்தில் இடவும். சேத்தும சுரத்திற்கு குப்பைமேனிக் கியாழத்தி லிடவும். சீத சுரத்திற்குக் குப்பைமேனி சிறுநீரிலிடவும். மலஜலம் அடைத்தால் கடுக்காய் கியாழத்திலிடவும். இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும். இந்த மூன்று நாளும் உப்பு புளி தள்ளிவிடவும். தாயாரும் பத்தியமிருக்க வேண்டியது.

கோரோஜன உருண்டை

கோரோசனை	ஒரு பலம்
சாம்பிராணி	ஒரு பலம்
திப்பிலி	இரண்டு பலம்

இவை மூன்றும் கியாழம் விட்டு இரண்டு சாமம் அரைத்து சுண்டைக்காயளவு உண்டை செய்து காலையில் ஒரு உருண்டை வீதம் மூன்று, நான்கு, ஏழுநாள் சாப்பிடவும், அஜீரணம் சூலை சூதகவாய்வு சலவை சன்னி அக்கினி மந்தம் இவை தீரும், கர்ப்பந்தரிக்கும் இச்சாபத்தியம்.

கட்டிகள் கரைய

மஞ்சள் மெழுக்கு	ஒரு பலம்
வெள்ளை பாஷாணம்	கால் பலம்

அடுப்பின் மேல் கட்டியை வைத்து மெழுகை போட்டு உருகிவரும் சமயத்தில் பாஷாணத்தைப் பொடித்துப் போட்டு நன்றாய்க் கிளறி இறக்கவும். ஆறிய பிறகு பில்லைதட்டி கட்டியின் மேல் வைத்துக் கட்டவும். கட்டி கரையும். பிறகு பேதிக்கு சாப்பிடவும்.

பித்தத்தால் கண்ட உதடு நாக்கு வெடிப்புக்கு: மருமாங்கா இலையை அரைத்து பின்னக்காய் அளவு எடுத்து ஆழாக்கு பசும்பாலில் கலக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடவும். இப்படி மூன்று நாள் கொள்ளவும். பத்தியம் பாலும் சாதம் கொள்ளவும். ஏழாம் நாள் தலை முழுகவும்.

எலிக்கடி பதினெட்டுக்கும் மருந்து: கரும்பூனை மலம் கெச்சக்காயளவு புட்டி வெல்லம் அவ்விடை சேர்த்து

பிசைந்து கொடுக்கவும். இப்படி காலை மாலை இருவேளை யுமாக மூன்று நாள் கொடுக்கவும். கடும் பத்தியம் இருக்கவும். மறுபத்தியம் சுட்டபுளி வறுத்த உப்பு. ஏழாவது நாள் தலை முழுகவும்.

பூனைக்கடிக்கு மருந்து: பூனை கடித்தவர்க்கு குப்பைமேனி வேரின் பட்டை கொண்டு வந்து அரைத்து கெச்சக்காய் பிரமாணம் பசும் பாலில் கலக்கிக் கொடுக்கவும் பத்தியம் மேற்கூறியபடி செய்யவும்.

குமரி கற்பம் : சிகப்பு சோற்றுக் கற்றாழை கொண்டு வந்து மேல் தோல் சீவி நடுப்பங்கை எடுத்து ஏழு தரம் கழுவி பின்னக் காயளவு எடுத்து பனங்கற்கண்டு போட்டு பிசைந்து தலைமாட்டில் வைத்து விடியற்காலை நான்காவது ஜாமத்தில் சாப்பிடவும். இப்படி நாற்பது நாள் கொள்ளவும், உடல் குளிர்ச்சியடையும். இந்திரியம் விருத்தி ஆகும். மேகம் நீங்கும். கண்கள் செவ்வலரிப் பூப்போம் ஆகும். தேகத்தில் வாசம் வீசும்.

ஆறாத சூட்டிற்கு எண்ணெய்

நல்லெண்ணெய் கால்படி
பசும் நெய் கால் படி

இரண்டு ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொள்ளவும். சித்திரமூல வேரின் பட்டை அரைப்பலம் தண்ணீர் விட்டரைத்து மேற்படி எண்ணெயில் கலக்கி அடுப்பிலேற்றி மெழுகு பதமாய் காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு துட்டிடை பிரமாணம் காலையில் கொடுக்கவும். கால் அரை முக்கால் ஒரு மண்டலம் கணக்காக கொடுத்துவரில் சகல சூடும் சகல மேகங்களும் கண்ட மாலை புண் சிரங்கு கிரந்தி

தடிப்பு சகலவாய்வு, சூலை கைகால் குத்தல் குடைச்சல் தீரும். பத்தியமில்லை.

கற்றாழை நாற்றத்திற்கு

சிவகரந்தை	ஏழு விராகனிடை
நன்னாரி வேர்	ஆறு விராகனிடை
கோரைக்கிழங்கு	ஐந்து விராகனிடை
கஸ்தூரி மஞ்சள்	ஐந்து விராகனிடை

இவைகளை பன்னீர் விட்டரைத்து அக்குளின் மடிப்புகளில் தளமாய் பூசி வைத்து மறுநாள் வழித்து மனிதர்கள் நடக்கும் வழியில் போட்டு விடவும். இப்படி ஐம்பது நாள் செய்யத் தீரும்.

வாந்தி பேதிக்குச் சூரணம்: எட்டி மரத்தின் வடக்கு நோக்கிச் செல்லும் வேர் கொண்டு வந்து மேல் தோலைச் சீவி எலுமிச்சம் பழச் சாற்றால் அரைத்துக் காயவைத்து எடுத்துச் சூரணமாக்கி வைத்துக் கொள்ளவும். சிவன்வேம்பு தும்பைச் செடி சமூலங் கொண்டு வந்து கியாழமிட்டு மேற்படி சூரணத்தில் மூன்று சிட்டிகை போட்டுக் கொடுக்கவும். பேதி தீரும். பேதி அதிகமானால் மறுபடியும் கொடுக்கவும். இப்படி மூன்றுமுறை கொடுக்கவும். பத்தியம் வறுத்த அரிசிக் கஞ்சி கொடுக்கவும். பேதி, வாந்தி, வியர்வை, காதடைப்பு யாவும் தீரும்.

அரையாப்புக்கு : சாரணை வேர், கொடி எலுமிச்சம் வேர் இரண்டும் சம எடை எடுத்துக் குளிர்ந்த நீர் விட்டரைத்து தாணிக்காய் பிமாணம் சாப்பிடவும். இப்படி இருவேளையும் மூன்று நாள் தின்னத் தீரும்.

பெண் மதமடங்க : பொரித்தெடுத்த படிகார பற்பம் இரண்டு பங்கு கற்கண்டுப் பொடி ஒரு பங்கு

இவ்விரண்டும் கலந்து நாற்பது நாள் கொடுக்க பெண் மதமடங்கும். வேளைக்கு வெருகடி பிரமாணம் (மூன்று விரல்களில் எடுக்கும் அளவு) கொடுக்கவும்.

சுக பேதிக்கு : பசுவின் கோமியம் கொண்டு வந்து காய்ச்சி வைத்துக் கொண்டு எத்தனை தரம் பேதியாக வேண்டுமோ அத்தனை தரம் சாப்பிடவும். ஒரு தடவைக்கு கால் ஆழாக்கு.

கண்டமாலைக்கு : வெள்ளைக் காக்கரட்டான் வேர், அவுரி வேர், வேப்பந்தளிர். மஞ்சள், வசம்பு இவைகள் கூட்டி அரைத்து இளம் வென்னீரில் கலக்கிச் சாப்பிடவும். ஆறு அல்லது ஒன்பது வேளை சாப்பிட வேண்டும்.

மேகத்திற்கு அல்லது வெள்ளைக்கு: புங்கன் கொழுந்து கொண்டு வந்து நெகிழ அரைத்து நல்லெண்ணெய் விட்டுக் கலந்து கொடுக்கவும். மேகம், வெள்ளை இவைகளைத் தீர்க்கும். கடும் பத்தியமிருக்கவும். மறுபத்தியம் சுட்டபுளி வறுத்த உப்பு கூட்டவும்.

தீராத வெள்ளை : கவுடி பதினைந்து கொண்டு வந்து இடித்து வஸ்திர காயம் செய்து பீங்கானில் போட்டு அந்தப் பொடி முழுகும்படி எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒரு இரவு முழுவதும் பனியில் வைத்திருக்கவும். காலையில் வெள்ளை வாங்கிய மனிதனைக் குந்த வைத்து இரண்டு குடம் தண்ணீர் தலைக்கு ஊத்திவிட்டு தலை துவட்டியவுடன் மேற்படி எலுமிச்சம்பழ ரசத்தின் தெளிவை மாத்திரம் இறுத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

அரையாப்பு கட்டிக்கு : எருக்கன் செடியின் வடக்கே போகும் வேரும் களிமண்ணும் சம எடை சேர்த்து அரைத்து கட்டியின் மேல் பூசக் கரையும் இப்படி இரு வேளை பூசவும்.

வேறு முறை : பாவட்டம் வேரும் பூலாப்பூவும் அரைத்துப் பூசக் கரையும் இப்படி மூன்றுநாள் பூசவும்:

வேறு முறை : முருங்கை வேர்ப்பட்டையும் புழுங்கலரிசியும் உப்பும் சேர்த்து அரைத்துக்கட்ட கட்டி கரையும் இப்படி மூன்றுநாள் பூசவும்.

வேறுமுறை : காஞ்சிரங் கொட்டையின் பருப்பு மிளகு, மஞ்சள், சீரகம், இவை சம அளவாகச் சேர்த்து அரைத்து கட்டிமேல் பூசக் கரையும்.

வேறுமுறை : ஆடுதின்னாப் பாளை சமூலம் வசம்பு இரண்டும் நன்றாய் இடித்துக் கட்டிமேல் வைத்து அதன் மேல் கட்டி அளவிற்கு வட்டமாக ஓட்டுவில்லை வைத்துக் கட்ட கட்டி கரையும். மூன்று வேளை கட்டவும்.

இளம்பிள்ளை வாதத்திற்கு

சங்கம்குப்பிச்சாறு	கால்படி
விளக்கெண்ணெய்	கால்படி

இவை இரண்டும் கலந்து அடுப்பேற்றி எடுக்கும் போது சுத்தி செய்த வாளக்கொட்டை எட்டு எடுத்து விளக்கெண்ணெய் விட்டு மைபோல அரைத்து காய்கின்ற எண்ணெயில் கலக்கவும் கடுகு பதமாய் காய்ச்சி இறக்கி வைத்துக் கொண்டு காலையில் ஒரு உச்சிக் கரண்டி வீதம் ஏழுநாள் கொடுக்கவும். தாயும் பிள்ளையும் கடும் பத்திய

மிருக்கவும். பால் மறந்த பிள்ளையானால் தாய்க்குப் பத்தியமில்லை.

சாரமெழுகு: சாரம் ஒரு கட்டியாகக் கொண்டு வந்து வெள்ளைத் துணியை எலுமிச்சம் பழரசத்தில் நனைத்து சாரத்தின் மேலே சுற்றி விளக்கில்கொளுத்தவும். இப்படி ஐந்துமுறை கொளுத்த ஈரமற்றுப் போகும். பிறகுகொடிக் கள்ளிப் பால் விட்டு அரைதது கன்னி அளவு எடுத்து காலையில் சாப்பிடவும். ஆறுமுறை பேதியாகும். பித்தநீர்யாவும் வாந்தியாகும். பாண்டு வீக்கங்கள் முதல் பித்தம் நாற்பத் தெட்டும், வாதம் எண்பத்து ஏழும் தீரும், ஐந்து, ஏழு, பத்துநாள் வீதம் சாப்பிடவும், இச்சாபத்தியம்.

கர்ப்ப பெண்களுக்கு மலஜலம் கட்டினால்: ஒரு பலம் பழைய நெல்லி வற்றலை இடித்துக்கியாழம் வைத்து சமனளவு பசும்பால் விட்டுச் சாப்பிடவும் உடனே மலஜலம் வெளியேறும். அலுப்பு நீங்கித் தேகம் சவுக்கியமாம்.

பிரசவமான பின்பு அழுக்கு தங்கினால்: கற்பூரம், சாம்பிராணி, லிங்கம் சமனிடை எடுத்து அரைத்தால் மெழுகு போலாகும். குன்றிமணிப்பிரமாணம் மூன்றுநாள் காலையில் கொடுக்கவும். வயிற்றில் உதிரச் சிக்கல் முதலிய அழுக்குகள் விலகும், இச்சாபத்தியம்.

மேற்படி அழுக்கு அகல கியாழம்: முள்ளியிலை, மூங்கிலிலை, நாயுருவிஇலை, வாழைச் சருகு, கண்டங்கத்திரி தூதுவேளை இலைகளை சாம்பலாக்கி வைத்துக்கொண்டு இரும்புக் கரண்டியைக் காயவைத்து கருஞ்சீரகம், ஓமம், கரிமஞ்சள் இவற்றைப் போட்டு வெடிக்கவிட்டு மேற்படி சாம்பலைப் போட்டு கால்படி தண்ணீர்விட்டு அரைக்கால் படியாகச் சுண்ட வைத்து இறக்கி ஒன்று அல்லது இரண்டு வேளை கொடுக்கவும். அழுக்கு தள்ளும்.

செங்கரப்பானுக்கு

ஆதொண்டை	-	நெருஞ்சில்
முதியோர்கூந்தல்	-	கொத்தான்
முருக்கிலை	-	சின்னிஇலை
அரசம் இலை	-	ஈருள்ளி

இவைகளை வகைக்கு ஒவ்வொரு பிடி எடுத்து பஞ்சு போல் நன்றாக இடித்துக் கால்படி பசும்நெய்யில்போட்டு நன்றாய்ச் சிவக்கும்வரை பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு காலையில் ஒரு சிறு கரண்டிவீதம் ஐந்து அல்லது ஏழுநாள் கொடுக்கவும் தீரும். இச்சாபத்தியம்.

குழந்தைகளுக்குண்டாகிய பாண்டு காமாலை சேர்க்கை: எருமைத் தயிர் கால்படியைப்பிழிந்த பாலில் எருமைச் சாணிப்பால் மூன்று துளிவிட்டு ஏழு மிளகு பொடி பண்ணிப் போட்டுக் கலக்கி மூன்றுநாள் கொடுக்கவும். கடும் பத்தியம் ஏழாவதுநாள் குளிக்க வைக்கவும். எட்டாவது நாள் வறுத்த உப்பு கூட்டவும்.

மஞ்சள் காமாலைக்கு: அதிமதுரம் சங்கன் வேர் இரண்டும் சமனிடை கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து பசும் பாலில் கரைத்துக் கொடுக்க தீரும்.

வேறுமுறை : கீழாநெல்லியும் மணத்தக்காளியும் சமனிடை கொண்டு தயிரில் அரைத்துக் கொடுக்கவும்.

குழந்தைள் புஷ்டியாக

தண்ணீர் மிட்டான் கிழங்குச்சாறு	கால்படி
வெள்ளாட்டுப்பால்	கால்படி
தேங்காய்ப்பால்	கால்படி
பசும்நெய்	கால்படி

இவைகளைப் பழைய தண்ணீர்பாண்டத்தில் ஒன்றாய் விட்டுக் கலந்து கற்கண்டுப் பொடி ஐந்துபலம் போட்டு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்துப் பாகுபதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு காலையில் ஒரு கரண்டி வீதம் கொடுத்து வரவும். இச்சாபத்தியம்.

குழந்தைகளுக்கு பேதி கண்டால்: புளியாரை, வாழைப்பூ சமன்கொண்டிடித்து பிட்டவியல் அவித்து தேன் குத்திப் பிசைந்து கொடுக்கவும்.

குழந்தைகளுக்கு மலஜலங் கட்டினால்

இலைக்கள்ளி வேர் பட்டை	-	ஐந்துபலம்
சுக்கு	-	ஒண்ணேகால் பலம்
மிளகு	-	ஒண்ணேகால் பலம்
உள்ளி	-	ஒண்ணேகால் பலம்

இவைகளைக் காயவைத்து இடித்து வஸ்திர காயம் செய்து வைத்துக்கொண்டு குழந்தைகள் பலமறிந்து மூலைப்பாலிலாவது வெந்நீரிலாவது ஒரு காசுயிடை கலந்துகொடுக்கவும். இப்படி இரண்டு மூன்று வேளை கொடுத்தால் குணமாகும்.

குழந்தைகளுக்கு மூக்கல் வயிற்றுக் கடுப்பிற்கு: பருத்திப் பிஞ்சு, சாதிக்காய், கிராம்பு, அதிவிடையம், சன்னராஷ்டம், ஓமம், இலந்தை இவை சமஅளவு எடுத்து இடித்து தண்ணீர்விட்டு நெகிழ அரைத்துத் தயிரில் பிசைந்து கொடுக்கவும். இச்சாபத்தியம்.

லிங்க எண்ணெய்: மூன்றுநாள் முலைப்பாலில் ஊறிய அரைப்பலம் லிங்கத்தை கல்வத்திலிட்டு கொஞ்சம் விளக்கெண்ணெய் குத்தி இரண்டு சாமம் அரைத்து ஒன்றரை

சேர் விளக்கெண்ணெயில் கலக்கி ஒருநாள் சூரியபுடம் வைத்து எடுத்துக் கொள்ளவும். தினம் அரைப்பலம் வீதம் ஏழு அல்லது பத்து நாள் சாப்பிடவும். புளி, புகை, போகம் ஆகாது, மேகப்படை, கரிமேகம், வெள்ளை, நீர்சுருக்கு தீரும்.

வெள்ளை எண்ணெய்: வெள்ளைக்காக்கணம் வேர்ப் பட்டை எடுத்து இடித்துப் பொடித்து அரைத்து நல்லெண்ணெய் போட்டுக் காய்ச்சி வடித்து ஐந்து நாள் அல்லது ஏழு நாள் சாப்பிடவும்: இச்சாபத்தியம். காரமாகாது, மூன்றுவித வெள்ளை நோய்களும் தீரும்.

சூதக வாய்வுக்கு

கொள்ளுக்காவேளை வேர்	இரண்டு பலம்
சுக்கு	கால்பலம்
அதிமதுரம்	கால்பலம்

இவைகளை இடித்து அரைப்படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி ஆழாக்கு கியாழமாக இறக்கிக் கொடுக்கவும். இப்படி இரண்டு வேளை கொடுக்க சூதம் வெளிப்படும்.

சூதகக் கட்டு உடைய: இலுப்பைப் புண்ணாக்கு கொண்டு வத்து ஆர்க்கப் பொடி செய்து சிறு சீலையில் புன்னைக்காயளவு முடிந்து யோனிதுவாரத்தில் ஒருஜாமம் புகுத்திவைக்க உடனே சூதகக் கட்டு உடையும். அப்படி உடையாவிட்டால் முன் செய்த மாதிரியாக வேறு புண்ணாக்கு கொண்டுவந்து மேற்படி மாதிரியாக மூன்றுநாள் செய்ய ஐந்து மாதத்துக் கருவாயிருந்தாலும் வெளிப்படும்.

சகல மேகத்திற்கு எண்ணெய்

சித்தாமணக்கெண்ணெய்	ஒன்றரைப்படி
நல்சங்கன் சாறு	அரைப்படி
பீச்சங்கன் சாறு	அரைப்படி
கழுதை லத்திச்சாறு	அரைப்படி
சிறு செருப்படைச்சாறு	அரைப்படி
வெள்ளை வெங்காயச்சாறு	அரைப்படி
பொற்றலைக் கையான்சாறு	அரைப்படி
மஞ்சள் கரிகலாங்கண்ணிச் சாறு	அரைப்படி

இந்தச் சாறு வகை யாவும் சித்தாமணக்கெண்ணை யுடன் கலந்து சூரியபுடம் வைத்து எடுத்துக்கொள்ளவும்.

சிவனார்வேம்பு	ஒன்றேகால் பலம்
பரங்கிச் சக்கை	ஒன்றேகால் பலம்
மிளகு	கால் பலம்
ஜாதிக்காய்	கால் பலம்

இவைகளை இடித்து வச்சிரகாயம் செய்து வைத்துக் கொண்டு அதனுடன் எருக்கன்கிழங்கு இரண்டரைப்பலம் ஆகாசக்கருடன் கிழங்கு இரண்டரைப் பலம் எடுத்துச் சிறுக அரிந்து சித்தாமணக்கெண்ணைய் குத்தி பொன்வறுப்பாக வறுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு முன் தயாரித்து வைத்துள்ள தைலத்தில் ஊற்றி பாண்டத்தில் போட்டுக் கலந்து அடுப்பிலேற்றி மெழுகு பதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு காலையில் சிறு கரண்டி வீதம் ஏழுநாள் கொடுக்கவும். இரண்டுநாள் விட்டு மறுபடியும் ஏழுநாள் கொடுக்கவும். கடும்பத்தியம் இருக்கவேண்டும். பத்தியம் முடிந்தபின் நான்கு நாள் இச்சாபத்தியம். சுட்டபுளி வறுத்த உப்பு சேர்க்கவும். குஷ்டம் வெள்ளை கருப்பு மேகம், புண் கொருக்கு ரணம் இவைகள் தீரும்.

உப்புச் சுன்னம்: மிளகரணை வேரை அரைத்துக் குகை செய்து உலர்த்தி அந்த குகையில் உப்பைக்கொட்டி மேல் பில்லை மூடி சீலை மண் செய்து ஏழு ஒன்பது வரட்டியில் புடம் போட்டு எடுக்க சுன்னமாகும். தினம் மூன்று விரல் எடுக்கும் அளவு நீராகாரத்தில் அல்லது இஞ்சிச் சுரசத்தில், அல்லது சுக்குச் சூரணத்தில் சாப்பிட வாய்வு, அஜீரணம் இவை தீரும்.

சூதக வாய்வுக்கு தும்மட்டிக்காய்: ஆத்து தும் மட்டிக்காய் ஐம்பது கொண்டுவந்து நான்கு நான்காகப் பிளந்து ஐந்து வகை உப்பும் ஐந்து பலம் கொண்டு வந்து போட்டுக் குலுக்கி மூன்றுமாதம் சிவக்கப் போட்டெடுத்து உலர்த்தி வைத்துக்கொண்டு வேண்டிய போது கெச்சக்காய் பிரமாணம் எடுத்து அதே அளவு பனைவெல்லம் கூட்டி அரைத்து காலை மாலை சாப்பிடவும். இரண்டு முறை பேதியாகும். உப்பு புளி சேர்க்கலாம். இச்சாபத்தியம் சூதக வாய்வு எல்லாம் தீரும்.

கைகால் குடைச்சலுக்கு: பூமி சர்க்கரைக்கிழங்கு தண்ணீரில் அரைத்துப் பூசிவர தீரும். அல்லது மருதாணிப்பூவை நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சிப் பூசவும்.

பசி தீபனத்திற்கு: புதினா ரசம் ஒருபலம், எலுமிச்சம் பழரசம் மூன்று பலம் கூட்டிக் கொஞ்சம் சர்க்கரை சேர்த்துக் குடிக்கவும்.

மேக சாந்தி: சீந்திலுப்பு, மூங்கிலுப்பு, ஏலக்காய், கற்கண்டு, இவற்றை சமஅளவு கூட்டி அரைத்து சுண்டைக்காய் பிரமாணம் தின்று வரவும். இச்சாபத்தியம்.

சாராய வெறி நீங்க: கொத்தமல்லி விரையை காடி விட்டரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். படிகாரத் தூளிட்டு சரீஷ் சர்பத்தும் கொடுக்கலாம்.

குழந்தை வயிற்றுப் புழுக்கள் விழ: பூவரசம் விரையைக் கொண்டு வந்து சர்க்கரை நெய் பால் சேர்த்து அரைத்து கெச்சக்காய் வீதம் கொடுக்கவும்.

வாய் வேக்காட்டிற்கு: மருதாணி இலையை பஞ்சு போல் இடித்து இரண்டு கொத்து போட்டு அரைப்படி தண்ணீர் விட்டு நாலுக்கு ஒன்றாய் சுண்டக்காய்ச்சி வடித்து இருவேளையும் வாய் கொப்பளிக்கத் தீரும்.

கோழை இருமலுக்கும் கபங் கட்டினாலும்: ஐந்துபலம் தேனை, நன்றாய்க் காய்ச்சி சுடுகையில் தானே மிளகு தூள் ஒருதோலா படிகாரத்தூள் ஒருதோலா போட்டுக் குலுக்கி வேளைக்கு கால் தோலா வீதம் கொடுக்கவும்.

இரத்த வெள்ளைக்கு: கெச்சக்காய் இலை ரசம் அரைப்பலம், இரண்டுபலம் தயிரில் கலந்து காலையில்கொடுத்து சிறு லவங்கப்பட்டை கியாழம் வைத்து மாலையில் கொடுக்கவும். இப்படிமூன்று நாள் கொடுக்கவும். கடும் பத்தியம்.

மலம் கழிய: சரக்கொன்றை புளி, சர்க்கரை, உப்பு, மிளகாய் இவைகளை வைத்து துவையல் செய்து சாப்பிடவும் மலம் தாராளமாய் வெளியேறும்.

விக்கல் தீர: லவுங்கப்பட்டையும் ரூமஸ்தகி இரண்டும் சமனிடை எடுத்து கியாழம் வடித்துக் கொடுக்கத் தீரும்.

பல் கூச்சு நீங்க: பேதனாவிரையை அந்தி சந்தி பத்துநாள் அல்லது இருபது நாள் மெல்லவும் தீரும்.

வயிற்றுக் கடுப்புக்கு: ஆலம் விழுதை எருமைத் தயிரில் அரைத்து ஒரு பலம் எடுத்து எலுமிச்சம் பழரசம் ஒரு பலங் கூட்டிக் கொடுக்கத் தீரும்.

மேகச் சூடு தணிய: துத்தி இலையை கியாழம் வடித்து பாலும் சர்க்கரையும் கலந்து கொடுக்கவும். இப்படி இருவேளையும் ஐந்து நாள் அல்லது ஏழு நாள் கொடுக்கவும்.

மலச்சிக்கல் நீங்க: துத்தி இலையில் வெங்காயம் சிறுபயிறு சமமாய் இட்டு சமைத்து இருவேளையும் சாப்பிடவும். அல்லது இரவில் சதா தின்னலாம்.

நீர் சுருக்கு தீர: துத்திவேர் மூன்றுபலம், திராட்சை ஒன்றரை பலம் நல்ல தண்ணீரில கியாழம் வடித்து இரண்டு வேளை கொடுக்கவும் தீரும்.

சாரீரம் நன்றாகு: சுக்கு, கடுக்காய், திப்பிலி, வாலுழுவை, சமன் கொண்டு தேனில் அரைத்து தூதளங்காய்ப் பிரமாணம் கொடுத்து வரவும் நன்றாம்.

வாய்வு சீதளத்திற்கு: மலைத்தேன் எட்டுப்பலம் எடுத்துக் காய்ச்சி அதில் அரைக்கால் தோலா அபினி கூட்டிக் கரைத்து ஓமம்மூன்று பலம் ஜாதிக்காய் ஜாதிபத்திரி பவளம் வகைக்கு அரை பலம் தூளாக்கி அத்துடன் போட்டுப் பிசைந்து புளியங்கொட்டை பிரமாணம் கொடுத்து வரவும்.

சூட்டிற்கு கியாழம்: குலாப்பு தோலா அரை சோம்பு கடுக்காய் அதிமதுரம் சீந்தில் தண்டு வகைக்கு அரை தோலா, இடித்துக் கூட்டி கியாழம் இட்டு கொடுக்கவும், மூன்று வேளையில் மிக சவுக்கியமாம்.

அந்தி மாலைக்கு: அதிகாலையில் கிருஷ்ண துளசி இலை ரசம் (கருந்துளசிச் சாறு) இரண்டு துளியாக மூன்றுநாள் நேத்திரத் திலிடவும் தீரும்.

கண்களில் துர்மாமிச வளர்ச்சிக்கு: பத்து கஞ்சா விரையை ஊசியில் குத்தி தீபத்தில் கருக்கி எள்ளெண்ணெயில் குழைத்து மை தீட்டுவது போல் கண்களில் தீட்டி வரவும்.

காது மந்தத்திற்கு: பூண்டுத் திரிகளை பஞ்சுபோல் இடித்துச் சீலையில் முடிந்து விளக்கில் காட்டிப் பிழிய தைலம் இறங்கும். அத்தைலத்தை இரண்டு மூன்று வேளை காதிலிட மந்தம், சீழ் இவைகள் தீரும்.

சகல பேதியும் நிறுத்த: சூடன் ஒரு விராகனிடை மிளகு அரை விராகனிடை சுக்கு அரை விராகனிடை லவுங்கம் மாசா ஒரு விராகனிடை கூட்டி நல்ல நீரில் அரைத்து புன்னைக்கொட்டை அளவு உள்ளுக்குக் கொடுத்து மீதி நீரை இரண்டு முறை குடிக்கக் கொடுக்கவும் இப்படி ஐந்து வேளையில் தீரும்.

நீர் துவார அடைப்பு அல்லது எரிப்புக்கு: வால் மிளகு ஒன்றரை விராகனிடை நல்ல நீர்விட்டு அரைத்து தண்ணீரில் கலந்து ஒரு நாளைக்கு நான்கு தரம் கொடுக்கவும்.

அசீரண பேதிக்கு

காசுக் கட்டி	*இரண்டரை விராகனிடை*
லவுங்கப்பட்டை	*அரை விராகனிடை*
கற்கண்டு	*முக்காலே அரைக்கால் பலம்*

ஆறுபலம் தண்ணீரில் மேற்படி கற்கண்டைப் பொடித்துப் போட்டு பாகு செய்து மற்ற இருவகையும் பொடித்து அதிலிட்டு பாகு காய்ச்சி காலே அரைக்கால் முதல் முக்கால் பலம் வரையில் கொடுக்கலாம்.

நெஞ்சில் கபக்கட்டு அல்லது இருமலுக்கு

நரி வெங்காயம்	காலே வீசம் விராகனிடை
சுக்குத்தூள்	ஒரு விராகனிடை
சவர்க்காரம்	ஒரு விராகனிடை
தேற்றான்கொட்டை	அரையே அரைக்கால் விராகனிடை

இவைகளைக் கற்கண்டு பாகில் சேர்த்தரைத்து குன்றி எடை மாத்திரை செய்து ஐந்துமாத்திரை வரையில் கொடுக்கலாம்.

கீல் வாய்வுக்கு

கற்பூரம்	நான்கு விராகனிடை
சாராயம்	பதினைந்து துளி
நல்லெண்ணெய்	இரண்டரை பலம்

கற்பூரம் சாராயம் இரண்டையும் நல்லெண்ணெயில் அரைத்துத் தடவ நீங்கும்.

குளிர்ச்சி நெய் : பசும் நெய் எட்டுப்பலம் எள்ளெண்ணெய் எட்டுப் பலம் இதில் இரண்டு பலம் சித்திர மூலம் வேர்பட்டையை அரைத்துப் போட்டுக் கலக்கி பொன்நிறமாகக் காய்ச்சி வடித்து காலையில் அரைபலம் வீதம் கொடுக்கவும். உப்பு புளி நீங்கலாக மற்றவை

புசிக்கலாம். உட்சூடு கொதிப்பு வெப்பம் யாவும் தணிந்து தேகம் குளிர்ச்சியாம்.

கம்மல் கொண்ட சாரீரம் நன்றாக

தேன்	ஐந்து பலம்
கரிசாலை சாறு	நான்கு பலம்
எலுமிச்சம் பழச்சாறு	ஒருபலம்
இஞ்சிச் சாறு	இரண்டரை பலம்

இவை யாவும் ஒன்றாய்க் கலந்து சூரிய புடம் வைத்துச் சுண்டிய பிறகு நாள் ஒன்றுக்கு கால் பலம் வீதமாக உட்கொண்டு வரவும். காரம் சேர்க்கக்கூடாது

சகல படைகளுக்கும்

ரோஜனம்	ஒன்றரை பலம்
குழாகெந்தகம்	அரைபலம்
பொரித்த வெண்காரம்	முக்கால் பலம்
சீனாக் கற்கண்டு	காலே அரைக்கால்

இவை யாவும் கல்வத்திலிட்டு வெள்ளாட்டுப் பாலால் அரைத்து பில்லை தட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு வேண்டியபோது தண்ணீரில் இழைத்து படைகள் மீது தடவி வரவும்.

பித்தத்திற்கு : அத்திப் பட்டை ஒருபிடி தோப்பு நெல்லிக்காய் ஒருபிடி வாழைப்பழம் நான்கு இவைகளை உரலில் போட்டு இடித்துச் சாறு பிழிந்து அந்த சாற்றில் சீனாக் கற்கண்டு தூள் கொஞ்சம் போட்டு குலுக்கிக் கொடுக்கவும். பித்த மயக்கம் ஒக்காளம் உடனே தீரும்.

எலிகள் சாக : அரிதாரமும் பூனை மலமும் சிறுநீர் விட்டரைத்து ஒருஎலியைப் பிடித்து அதன்மேல் முழுமையும் பூசிவிட்டு விட இதை முகரும் எலிகள் எல்லாம்சாகும்.

சுரத்தால் கண்ட தாகத்திற்கு: பற்படகம், அதிமதுரம், அக்கிரகாரம் இம்மூன்றும் சம எடை கொண்டு இடித்து கியாழம் வைத்து பாதியாக காய்ச்சி இறக்கிக் கொடுக்கவும்.

பல் புழு சாக : காயம், இந்துப்பு, அன்னபேதி சம எடை கூட்டி தண்ணீரால் அரைத்து உருண்டை செய்து நோய் தரும் பல்லில் வைத்து அடக்க புழுக்கள் சாகும்.

மேக ரணக் களிம்பு: வீரம், பூரம், லிங்கம், இரசம், கெந்தி, மனோசீலை, அரிதாரம், மிருதார் சிங்கு சமஎடை கூட்டி கல்வத்தில் பொடித்து பசும் வெண்ணெயில் குழைத்து எவ்வித ரணங்களின் மேல் தடவினாலும் ஆறிவிடும்.

கண்டாவிழ்த சிட்கா முற்றிற்று

கடவுள் துணை

பற்ப வகை சிட்கா

பச்சை வெட்டு வீர பற்பம்

வீரம்	ஒரு பலம்
பொரிகாரம்	ஒரு பலம்
இரசம்	ஒரு பலம்

மூன்றையும் கல்வத்திலிட்டு மூன்று சாமம் அரைத்து வைத்துக் கொண்டு பனை வெல்லத்தில் பணவிடை கொடுக்கவும். புண், வெள்ளை, கிரந்தி, கட்டி, சூலை, சூதகவாய்வு, மலக்கட்டு யாவும் தீரும், மூன்றுநாள் கொடுக்கவும், புளி ஆகாது, சுட்ட உப்பு கூட்டவும்.

தாளக பற்பம் : தாளகம் ஒரு கட்டியாக எடுத்து கால்படி கல் சுண்ணாம்பு மத்தியில் வைத்து பனங்கள்ளினால் தாளிக்கவும். இப்படி பத்துமுறை தாளித்து எடுத்துக் கொண்டு சரக்கொன்றைச் சாம்பல் அரைப்படி எடுத்து அதன் மத்தியில் மேற்படி கட்டியை வைத்து கமலம்போல நான்கு ஜாமம் எரித்து எடுத்து சீசாவில் பத்திரப்படுத்தவும். திரிகடுகு சூரணம் அல்லது வெண்ணெய் போன்ற அனுபானங்களுடன் கொடுக்க இருமல், சீதளம், கபம் இவை தீரும். இச்சா பத்தியம்.

கல்நார் பற்பம்: ஒரு பலம் சீமைகல்நார் கொண்டு வந்து இடித்துத் தூளாக்கிக் காட்டமணக்குப் பால் விட்டரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டில் தைத்து ஓடு முடி சீலை மண் செய்து அரை கெஜ புடமாக இரண்டு புடம் வைக்க பற்பமாம். வெண்ணெயில் பணவிடை கொடுக்க

சூடு வெப்பம் தணியும். பல் விளக்கிவர தந்தம் இறுகிக் கெட்டிப்படும்.

வேறுமுறை: வேண்டிய மட்டும் கல்நார் கொண்டு வந்து கோழி அவரை இலையை அரைத்து தளமாய் அப்பி ஐம்பது வரட்டியில் புடம்போட பற்பமாம். வெள்ளை மேகம். சூடு யாவும் தணியும். தந்த நோய் யாவும் தீரும்.

வேறுமுறை: சீமை கல்நார் கொண்டுவந்து ஒரு கலயத்தில் வைத்து அது முழ்கும்படி முள்ளங்கிச் சாறு விட்டு மேலோடு மூடி சீலைமண் செய்து ஐம்பது வரட்டியில் புடமிட்டு எடுக்க கருத்திருக்கும். கத்தரிக்காய் இலையை அரைத்து மேலுக்கு அப்பி ஐம்பது வரட்டியில் புடம் வைக்க கொக்கிறகு போல வெளுத்து பற்பமாம். மேற்படி வியாதிகள் தீர்க்கும்.

சிங்கி பற்பம்: கலைமான் கொம்பு பத்து பலம் எடுத்து இழைப்புளியால் சன்னமாக இழைத்து வைத்துக் கொள்ளவும். ஒரு பானையில் அரைத் திடடம் அகத்திக்கீரையை போட்டு படியவைத்து அதன்மேல் இழைத்த கலைக்கொம்புச் சீவலைப் பரப்பி அதற்கு மேலும் அகத்திக் கீரையைப் போட்டு பானை நிரம்ப அடைத்து அடுப்பேற்றவும். அறுபது நாழிகை நன்றாக எரித்தபின் எடுத்து உலர்த்தி பின் நீர்முள்ளி இலையை அரைத்து சீவிய கலைக் கொம்புக்கு மேலும் கீழும் தளமாய் அப்பி முப்பது கை வரட்டியில் புடம்போட பற்பமாம். அதை எடுத்து கல்வத்தில் அரைத்து சீசாவில் வைத்துக்கொண்டு நெய்யில் பணவிடை கொடுக்க மார்பு நோய், இடுப்பு நோய், நாவரட்சி, வெள்ளை, மேகம், இருமல், நீங்கும். இச்சா பத்தியம்.

வெள்ளைப் பாஷாண பற்பம்: வெள்ளைப் பாஷாணம் ஒன்று அல்லது இரண்டுபலம் ஒரே கட்டியாக எடுத்துக் கொள்ளவும். ஒரு பாண்டத்தில் பிரமதண்டிச்சாறு முக்கால்படி பிழிந்து அடுப்பிலேற்றி மேற்படி பாஷாணத்தை நூல் கயிற்றினால் கட்டி பாத்திரத்தில் படாமல் தொலாந்திரமாகத் தொங்கவிட்டு வாய்ப் புறம் ஓடு மூடி சீலைமண் செய்து மூன்று சாமம் எரிக்கவும். பிறகு இறக்கி ஆறியபின் அவிழ்த்து எடுத்துசீசாவில் வைத்துக்கொண்டு கொடுத்துவர மாலைக் காய்ச்சல் முறைக்காய்ச்சல் முதலிய விஷ சுரங்கள் யாவும் தீரும்.

வெள்ளி பற்பம் : ஒரு பலம் ஊதுகட்டி வெள்ளியை மூசையில் இட்டு உருகும்போது ஷி இடை மகிழம்பூச் சாறு விடவும் மடிந்துபோகும். இறக்கி ஆறவைக்க பொடியாய் இருக்கும். அதைக் கல்வத்திலிட்டு மேற்படி சாறு விட்டு மூன்று சாமம் அரைத்து வில்லைதடடி காயவைதது முக்காவேளை சமூலம் அரைத்து வில்லைக்கு கவசம் செய்து உலர்த்தி குகையிலிட்டு சில்லு மூடி சீலைமண் செய்துலர்த்தி பத்து எருவில் புடம் போட்டு மூன்றாம் நாள் எடுக்க பற்பமாம், சீசாவில் வைத்துக்கொண்டு பசும் வெண்ணையில் பணவிடை கொடுக்கவும். புளி புகை ஆகாது. காசம் இரத்த காசம் மந்தாரகாசம் இளைப்பு இருமல் யாவும் தீரும்.

வெள்வங்க பற்பம் : வெள்வங்கம் வாலைரசம் கற்பூர சிலாசித்து இம்மூன்றும் வகைக்கு மூன்று கழஞ்சு நிறுத்தெடுத்து சுண்ணாம்பு நீர்விட்டு இரண்டு ஜாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி எடுத்து ஓட்டிலிட்டு சீலைமண் செய்து நாற்பது எருவில் புடம்போட்டுஎடுத்து மறுபடியும் மேற்படி நீரால் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஐம்பது எருவில் புடம்போட்டு ஆறியபின்

எடுக்கத் தும்பைப் பூப்போல் இருக்கும். சீசாவில் வைத்துக் கொள்ளவும்.

இதற்கு அனுபானம் : மாதளம் பூ இதழ் உலர்த்தியது இரண்டு பலம் அவ்விடை சீரகம்கூட்டி இடித்து சூரணம் செய்து திருகடி சூரணத்தில பசும் நெய்விட்டு குழைத்து பணவிடை பற்பம் சேர்த்து இருவேளையும் உண்ணவும். மூலம், எலும்புருக்கி, மேகமூலம், சளி மூலம் முதலிய நவ மூலம் தீரும், இச்சாபத்தியம்.

கெந்தி பற்பம் : சிறுசின்னி இலையை அரைத்து குகை செய்து உலர்த்தி அதில் கெந்தியைப் போட்டு வாய் மூடி மண் குகைக்குள் வைத்து மேற்குகை மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி முழப்புடத்திலிட பற்பமாகும். எடுத்துச் சீசாவில் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு நெய் அல்லது தேன் அனுபானத்துடன் பணவிடை உட்கொள்ள மேக ஊறல் தடிப்பு குட்ட விரணம், இவை தீரும். பத்தியம்; நோயின் திடமறிந்து வைக்கவும்.

சிலாசத்து பற்பம் : ஐந்து பலம் கற்பூரம் சிலாசத்து கொண்டு வந்து சிறுசெருப்படைச் சாற்றால் ஆட்டி வில்லை தட்டி காயவைத்து ஓட்டில்வைதது மேலோடுமூடி சீலைமண் செய்து ஐம்பது எருவில் புடம்போட்டு ஆறிய பின் எடுத்து மேற்படி சாற்றாலாட்டி லேசாக பில்லை தட்டி புடம் போடவும். மூன்று முறை புடம் போட்டெடுத்து வைத்துக்கொண்டு பித்த எரிவு பித்த வெட்டை, நீர்க்கடுப்பு இவைகளுக்கு பசும் வெண்ணெயில் கொடுக்கவும். இச்சாபத்தியம்.

வெண்கார பற்பம்: ஒரு கலயத்தில் மேற்படி சிலாசித்து பற்பம் கால் தர மிட்டு அதன்மேல் சுத்தி செய்த வெண்காரமிட்டு மேலும் சிலாசித்து இட்டு ஓடுமூடி சீலைமண் செய்து உலர்த்தி பத்து எருவில் புடம்போடவும்.

நீர்கட்டு, சுருக்கு, அனல் இவைகட்கு வெண்ணெயில் பணவிடை கொடுக்கவும். தீராவிட்டால் முள்ளங்கி இடித்த சாற்றில் இரண்டு பணவிடை கொடுக்க உடனே நீர்க்கட்டு உடையும். இச்சா பத்தியம்.

பற்பவகை சிட்கா முற்றிற்று.

உ

கடவுள் துணை

தைல வகை சிட்கா

மகா சந்தனாதித் தைலம் பொதிகை முனி

நல்லெண்ணெய்	-	ஒன்றேகால்படி
செவ்விள நீர்	-	கால்படி
பசும்பால்	-	கால்படி
நெல்லிக்காய்ச் சாறு	-	காலே அரைக்கால்படி
கீழா நெல்லிச்சாறு	-	காலே அரைக்கால்படி
நெரிஞ்சிச் சாறு	-	காலே அரைக்கால்படி
கற்றாழைச்சாறு	-	காலே அரைக்கால்படி
தாமரைச்சாறு	-	காலே அரைக்கால்படி
பொன்னாங்கண்ணிச்சாறு	-	காலே அரைக்கால்படி
கதலிக்கட்டைச்சாறு	-	காலே அரைக்கால்படி
முசுமுசுக்கைச் சாறு	-	காலே அரைக்கால்படி
சிறுகீரைச் சாறு	-	காலே அரைக்கால்படி
வல்லாரைச் சாறு	-	காலே அரைக்கால்படி
தாழைச் சாறு	-	காலே அரைக்கால்படி
பழம் பாசிச் சாறு	-	காலே அரைக்கால்படி
கரிசாலைச் சாறு	-	காலே அரைக்கால்படி
மயிர்மாணிக்கம் சாறு	-	காலே அரைக்கால்படி

இவைகள் அளவுப்படி எடுத்து யாவும் பெரியபாண்டத்தில் ஊற்றி கீழ் மேலாக நன்றாக துழாவி சூரியபுடம் வைத்து விட்டு உடனே

அகிற்கட்டை	கொம்பரக்கு
கோரைக்கிழங்கு	சித்தாமுட்டி
சந்தனத்தூள்	பேராமுட்டி
கூவிளம்	தேவதாரம்
கார்போகி	செம்புராப்பட்டை
பச்சிலை	செவியம்
நன்னாரி	சிறு தேக்கு
முதியார் கூந்தல்	வெட்டிவேர்
சீந்தில்	மல்லிகைக் கொடி
சிறியாநங்கைசமூலம்	வெற்றிலைக் கொடி
சின்னி சமூலம்	ஆலம் விழுது
ஓரிலைத்தாமரைக்கொடி	பனைவேர்
குருவேர்	மஞ்சிட்டி வேர்

இவைகள் யாவும் வகைக்கு நான்கு பலமாக எடுத்து பஞ்சு போல இடித்து நீர் பழகிய பாண்டத்திலிட்டு நான்குபடி தண்ணீர்விட்டு அரைப்படி கியாழமாக சுண்டக் காய்ச்சி மேற்படி சாறுவகை நிறைத்திருக்கும் பாண்டத்திலூற்றி அடுப்பேற்றி சிறுதீயாக எரித்துக் கொண்டிருக்கையில்.

மிளகு	கஸ்தூரி மஞ்சள்
வெள்ளை மிளகு	தாளிசப்பத்திரி
வால்மிளகு	லவுங்கம்
கோஷ்டம்	ஜாதிபத்திரி
கிச்சிலிக்கிழங்கு	அதிமதுரம்

சீரகம்	திப்பிலி
கருஞ்சீரகம்	சடாமாஞ்சி
கார்போகி வித்து	கற்பாசி
செண்பக மொக்கு	ஏலம்
சித்தா முட்டி	ஜாதிக்காய்
பெருங்கிழங்கு	பரங்கிச்சக்கை

இவைகள் யாவும் வகைக்கு மூன்று விராகனிடையாக நிறுத்தெடுத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து முதல் தரம் பன்னீர் விட்டரைத்து மேற்படி பாண்டத்தில் கலக்கி நன்றாய் துழாவி வாய்ப்புறம் ஓடுமூடி சீலைமண் செய்து மூன்று சாமம் எரிக்கவும். எரிப்பது கமலாக்கினியாக எரித்து மூன்று சாமம் சென்றபிறகு திறந்து நீர் வற்றாவிட்டால் திரும்ப எரித்து நீர் வற்றியபிறகு இறக்கி சல்லாச் சீலையில் வடிகட்டி பச்சைக் கற்பூரம், கோரோசனை, குங்குமப்பூ வகைக்கு முக்கால் விராகனிடை நிறுத்து எடுத்து கல்வத்தில் பொடித்துப் போட்டு கணபதி முன் வைத்து தூபதீபங் கொடுத்து வைத்துக்கொண்டு நற்பது நாள் சென்ற பிறகு எடுத்து தலைக்குத் தேய்த்துக் குளித்தால் பித்தம் நாற்பத்து இரண்டும் மேகம் இருபத்தொன்றும், வாய்வு, உஷ்ணம், புண்கிரந்தி, தலைபாரம், ஜன்னி விரணம் யாவும் தீரும். நேத்திர வியாதி தொண்ணூற்று ஆறும் நீங்கும். இச்சாபத்தியம், பகல் நித்திரை, புகை, போகம், அதிக நடை இவை கூடாது. நான்கு அல்லது ஐந்து தலைமுழுக்கு முழுக வேண்டும். குரு முன்னிற்பார்.

சிரஸ்நான தயிலம்: கூர் எள்ளெண்ணெய் படி அரை, அகத்திக்கீரை ரசம் படி அரை இவ்விரண்டும் கூட்டி ரவியில் வைத்து மறுநாள் கோஷ்டம் ஒருபலம் அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்து வரவும். குளிர்ச்சி தரும்.

சாலேசுர தைலம் : எள்ளெண்ணெய் ஒரு வீசை நிலவிளா இலையை அரைத்து விளாங்காய் பிரமாணம், வில்வப்பழம் சதை விளாங்காய் பிரமாணம். இவ்விரண்டும் பசும்பாலில் அரைத்துப் போடவும். ஒருபலம் சீரகத்தை முலைப்பாலில் அரைத்துப் போடவும். நன்றாய் வதக்கிக் காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்துவரில் சாலேசுரம் தீரும்.

பரிசுத்த நேத்திர தைலம் : பன்னிரண்டரை பலம் வில்வப்பட்டையை ஒருபடி தண்ணீரில் போட்டு எட்டொன்றாக வற்றக்காய்ச்சி இறக்கி அத்துடன் பதினைந்து பலம் நல்லெண்ணெய் ஊற்றி அரைத்த சந்தனம் ஒருபலம் போட்டு கலக்கி காய்ச்சி வடித்துத் தலைக்குத் தேய்த்து முழுகி வந்தால் பித்தம், உஷ்ணம், மேகம் இருமல் மூல ரத்தம் இவை நீங்கும். கண்கள் செவ்வலரிப் பூப்போல் தெளிவுண்டாகும்.

வேங்கைத் தைலம் : வேங்கைப் பட்டைத்தூள் பனிரண்டரை பலம் எடுத்து ஒருபடி தண்ணீரில் போட்டு ஆழாக்கு கியாழமாகக் காய்ச்சி இறக்கி பதினைந்து பலம் நல்லெண்ணெய் கூட்டி விலாமிச்சம் வேர் ஒருபலம் அரைத்து கலக்கிக் காய்ச்சி இறக்கி தலைமுழுகிவர மண்டையில் வீக்கம், பீனிசம், வாதம் இவை நீங்கும். தேகத்தில் ஒளியுண்டாகும்.

வெட்டிவேர் தைலம்: வெட்டிவேர் பத்துபலம் முன்போல கியாழம் வடித்து எள்ளெண்ணெய் பதினைந்து பலம் கூட்டிக் கலக்கி காய்ச்சி வடித்து தலை முழுகிவர பீனிசம், மண்டை சூலை, குட்டசொரி, நீர்க்கோவை, கண் புகைச்சல், கால்நோய் இவை தீரும்.

வேம்பு தைலம் : நூறு வருடத்திய வேப்பம் பட்டை இருபத்து மூன்று பலம், ஐந்துபடி தண்ணீரில்

போட்டு ஐந்து ஆழாக்கு கியாழமாகக்காய்ச்சி வடிகட்டிக்கொண்டு முப்பது பலம் நல்லெண்ணெயில் கூட்டி ஏலம் ஒருபலம் பொடித்துப் போட்டு காய்ச்சி வடித்து தலை முழுகிவர சூலை, மேக ஊரல், பேய்ச்சொரி, முதலானதும் நீங்கும். செங்கரப்பான், புரைப்புண் முதலியனவும் நீங்கும்.

சித்திர மூலத்தைலம் : சித்திரமூலம் வேர்ப்பட்டை பத்து பலம் கொண்டு வந்து இரண்டரைபடி தண்ணீரில் போட்டு காய்ச்சி எட்டொன்றாகக் குறுக்கி கியாழம் வடித்து நல்லெண்ணெய் பதினைந்து பலம் கூட்டி சீரகம் ஒரு பலம் பசும் வெண்ணெய் இரண்டுபலம் கூட்டிக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவர, ஆநந்த வாய்வு, ஸ்திரி மேகம் சிறு சொரி, குட்டரணம், அரையாப்பு கிரந்தி, புண், வீக்கம் தீரும்.

சீரகத் தைலம்: சீரகம் இருபத்தைந்து பலம், எட்டுபடி தண்ணீர் விட்டு எட்டுக்கு ஒரு பங்காக காய்ச்சி இறக்கி பத்துபலம் நல்லெண்ணெய் கூட்டி கார்போக அரிசி இரண்டு பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி தலைமுழுகிவர பித்தமயக்கம், பித்த வாய்வு, தலைச்சுற்றல், வாய் நீருரல், கைகால் எரிவு இவை நீங்கும்.

கீழாநெல்லி தைலம்: கீழாநெல்லிச் சமூலம் இருபத்தைந்து பலம் எட்டுபடி தண்ணீர்விட்டு எட்டுக்கு ஒன்றாக கியாழம் காய்ச்சி வடித்து பத்துபலம் நல்லெண்ணெய்கூட்டி சர்க்கரைஐந்து பலம் போட்டுக் காய்ச்சி வடித்து தலை முழுகிவர தலைவலி முதலியவையும் செவி நோய்கள், பித்தம், உஷ்ணம் பீனிசங்கள் தீரும்.

தைல வகை சிட்கா முற்றிற்று

இந்நூலில் சேர்த்த சரக்குவகை சுத்திகள்

வீரசுத்தி: ஒரு இளநீரில் ஒரு களஞ்சி கற்பூரம் பொடித்துப் போட்டு வீரத்தை தொலாந்திரமாக நீரின் படாமல் கட்டி வாய்மூடி சீலை செய்து ஒரு ஜாமம் எரித்து எடுத்துக் கொள்ளவும்.

பூரசுத்தி: வெற்றிலை மிளகு சமன்கொண்டிடித்து கியாழமிட்டு அக்கியாழத்தில் பூரத்தை கிளிக்கட்டி மூன்றுநாள் ஊற வைத்தெடுத்துக் கொள்ளவும்.

கெவுரி பாஷாணசுத்தி: ஆவின்பால் அல்லது சாணிப்பாலில் தொலாந்திரங்கட்டி ஒரு ஜாமம் எரித்தெடுத்துக் கொள்ளவும்.

மனோசிலை சுத்தி: மனோசிலையை கிழிகட்டி காடியில் போட்டு எரித்தெடுத்து ஆட்டு மூத்திரத்தில் தொலாந்திரங்கட்டி எரித்தெடுத்துக் கொள்ளவும்.

தாளக சுத்தி: சிறுவர்கள் மூத்திரம் கால்படியில் கல்சுன்னம் குப்பைமேனிரசம், எலுமிச்சம் பழரசம் இவைகள் கலந்து அடுப்பேற்றி தாளகத்தை கிழிக்கட்டிப் போட்டு எரித்தெடுத்துக் கொள்ளவும்.

கெந்தக சுத்தி: கெந்தகத்தை நெய்விட்டு உருக்கிபசும்பாலில் சாய்க்கவும். இப்படி பத்துதரம் உருக்கி சாய்த்து எடுத்துக்கொள்ளவும்.

இரசச்சுத்தி: இரசத்தை எருக்கன்பாலில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் எடுத்து செங்கல் பொடியிலிட்டு கலுவத்திலரைத்து சீலையில் பிழிந்தெடுத்துக் கொள்ளவும்.

படிகாரசுத்தி: படிகாரத்தை சிறுநீரில் மூன்றுநாள் ஊறவைதது எடுத்து பொரித்து பிறகு அவிழ்தங்களுக்கு சேர்க்கவும்.

இருவங்கசுத்தி: வெள்வங்கம் கருவங்கம் இவைகளை தேங்காய் எண்ணெயில் நவாச்சாரத்தை தூவி அதில் வங்கத்தைவிட்டு உருக்கி கோமியம் மோர் காடி இவைகளில் சாய்த்து ஆறிய பின் எடுத்துக்கொள்க. இப்படி பத்து முறை உருக்கி சாய்க்கவும்.

கல்நார்சுத்தி: கல்நாரை கழுதை மூத்திரத்தில் மூன்றே முக்கால் நாழிகை ஊறவைத்து எடுத்துக் கொள்ளவும். சுத்தியாம்.

மிருதார்சிங்சுத்தி: மிருதார்சிங்கியை வெள் ளாட்டுக் கோமியத்தில் ஒரு நாழிகை கொதிப்பித்து எடுத்துக் கொள்ளவும்.

சிலாசத்துசுத்தி: கற்பூர சிலாசத்தை பழரசத்தில் கொதிப்பித்து எருக்கன் பாலில் மூன்று நாழிகை ஊறவைத்து கழுவி எடுத்துக் கொள்ளவும்.

நேர்வாளசுத்தி: நேர்வாளக் கொட்டையை சாணிப்பாலில் கொதிக்க வைத்து கழுவிஎடுத்து மேலோட்டை நீக்கி பருப்புகளைப் பிளந்து முளைநீக்கி துளி விளக்கெண்ணையில் வருத்து எடுத்துக் கொள்ளவும்.

சேங்கொட்டை சுத்தி: சேராங்கொட்டையை சாணிப்பாலில் மூன்று நாள் ஊறவைத்துக் கழுவி உலர்த்தி மூக்குவெட்டி நெய்யில் வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

சூரணவகைகள் சுத்தி: எவ்வித சூரணங்களையும் பசும்பாலில் ஏடு கட்டவியலாக அவித்து நிழலிலுலர்த்தி பிறகு உபயோகப் படுத்தவும்.

எண்ணை அல்லது தைலவகைகள் சுத்தி: எவ்வித தைலம் எண்ணைகளையும் தானிய புடத்தில் இருபது நாள் வைத்து எடுத்து உபயோகப்படுத்தவும் அல்லது பூமி புடமாக பத்து நாள் புதைத்து வைத்து எடுத்துக் கொள்ளவும்.

சரக்கு வகை சுத்தி முதற்பாகம் முற்றிற்று

உ

கடவுள் துணை

மகாமகத்துவம் பொருந்தியுள்ள

நாற்பத்தியெண்மர்களீண்டிய

ஊர்வசி வைத்திய கிட்கா

இரண்டாம் பாகம்

மீனம்	மேஷம்	ரிஷபம்	மிதுனம்
கும்பம்			கடகம்
மகரம்	இராசிச் சக்கரம்		சிம்மம்
தனுசு	விருச்சிகம்	துலாம்	கன்னி

விநாயகர் துதி

விருத்தம்

சீர்வளருலகமீதுச் சிறப்புடனாளுமோங்கும்
பேர்வளரூர் வசியின் புகழ்தரும் வைத்தியசிட்கா
நேர்வளர்புவியின் மீது நிகழ்ந்திடத் தமிழினாலே
கார்வளர்வினாயகன்றன் கடிமலர்க்காப்புதானே.

கோசாரப்பலனறியும்படி

சூரியன் பலாபலன்

சூரியன் ஜென்மத்திலாதல் 4, 5, 7, 8 லாதல் நிற்பானாகில் ஸ்தான மாறுதல், மானவிழப்பு, விசாரம் பிரயாணம், உடல்நலக் குறைவு, கலகம், பொருள் விரயம் கண்ணோய், தலைவலி, இவைகளுண்டாம், மேற்கூறிய விடங்கள் தவிர மற்றவிடங்களில் இருந்தால் நன்மை.

சந்திரன் பலாபலன்

சந்திரன் இரண்டிலாதல் 4, 5, 8ல் இவ்விடங்களில் நிற்கும் காலம் திரவிய நாசம், வயிற்றுநோய், காரியக்கேடு எதிர்பாராத தொல்லைகள் உண்டாகும். மற்ற இடங்கள் நன்மை உண்டாகும்.

செவ்வாயின் பலாபலன்

செவ்வாய் ஜென்மமாதல் 2, 4, 8, 10 இவைகளில் நிற்கில் சத்துருபயம் தனநாசம் துக்கம் தேகாபிமானம் பலவித வியாதி உண்டாம். மற்ற இடங்களில் நிற்க நன்மையுண்டாம்.

புதன் பலாபலன்

புதன் 4, 6, 7, 8ல் நின்று அவனுடன் பாபக்கிரகங்கள் கூடியிருக்கில் பந்தனம், அபிமானம், ரோகம், விரயம் இவைகளுண்டாம். மற்ற இடங்களில் இருக்கில் நன்மையைத் தருவார்.

குருவின் பலாபலன்

குரு ஜென்மத்திலாதல் 3, 4, 6, 8, 10, 12 இவ்விடங்களில் நிற்கில் பயம், ரோகம், விரயம், இடமாறுதல் பீடை இவைகளுண்டாம். மற்ற இடங்களில் நிற்கில் நன்மையாம்.

சுக்கிரன் பலாபலன்

சுக்கிரன் 6, 8, 10, 12 இவ்விடங்களில் நிற்கில், சத்துரு பயம், ரோகம், மனவருத்தம், அழுகை, அவமானம் இவைகளுண்டாம் மற்ற இடங்களில் நிற்கில் நன்மையைத் தருவார்.

சனியின் பலாபலன்

சனி ஜென்மத்திலாதல் 1, 2, 4, 7, 8, 10, 12 இவ்விடங்களில் நிற்கில், பயம், தனநஷ்டம், மனதிற்பீடை, விரையம், துக்கம், வியாதி, பில்லி, சூன்னிய முதலிய வைகளால் பிணி உண்டாம். மற்றயிடங்களில் நன்மையைத் தருவார்.

இராகுகேதுகளின் பலாபலன்

கேதுராகுகள் 1,2,4,5,7,8,10,12 இவ்விடங்களில் நிற்கில் பொருள் நஷ்டம் கிருமிகள் சம்பந்தமான நோய்கள்

எதிரிகளால் தொல்லை, மதி தடுமாற்றம், குடும்பக் கஷ்டங்கள், ஸர்ப்ப பயம் போன்றவை உண்டாகும். மற்ற இடங்களில் நன்மை.

ஊர்வசி வைத்திய சிட்கா, கோசார பலன்,
முற்றிற்று

=====

உ

முதலாவது

மாத்திரைவகை சிட்கா

பூபதி மாத்திரை

இரசம்	-	விராகனிடை ஒன்று
சுக்கு	-	விராகனிடை ஒன்று
கெந்தகம்	-	விராகனிடை ஒன்று
வெங்காரம்	-	விராகனிடை ஒன்று
நேர்வாளம்	-	விராகனிடை நான்கு

இவைகளை சுத்தி செய்து கல்வத்திலிட்டு குளிர்ந்த நீர் விட்டு அரைத்து கடலைப் பிரமாணம் உருண்டை செய்து வைத்துக்கொண்டு ஒரு உருண்டையை தண்ணீரில் இழைத்துக் கொடுக்க ஊதுமாந்தம், பொருமல், வாதம், இவைகள் தீரும். பத்தியமில்லை.

பேதி மாத்திரை

சுக்கு	லிங்கம்
திப்பிலி	பூரம்
மிளகு	வாளம்

வாளம் இரண்டரை பலம் மற்ற ஐந்து தினுசு களையும் சமமாகக் கலந்து ஒண்ணேகால் பலம் நிறுத்து ஆறு வகையும் ஒன்றுபட கல்வத்திலிட்டு நூற்றைம்பது எலுமிச்சம் பழரசம் விட்டு அரைக்கவும். ரசம் கொள்ளாவிட்டால் அப்போதிக்கப்போது உலர்த்தி பிறகு சாறு விட்டு அரைத்து இப்படியே மேற்படி ரசம் பூர்த்தியான பிறகு மிளகு பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி புட்டியில் வைத்துக் கொள்ளவும். வென்னீரில் இரண்டு மாத்திரை சாப்பிட பேதியாகும் (பத்தியம்) கத்திரி, முருங்கை, அவரை, இறைச்சி, சூப்பு ஆகும். அந்தியில் மிளகு சுக்கு கியாழம், கொடுக்கவும். பேதியதிகமானால், மோர்சாதம் சாப்பிடவும்.

பேதிக்கு சண்பகப்பூ மாத்திரை

சண்பகம்	ஏலம்
இலவங்கம்	கோஷ்டம்
கடுகுரோகணி	நேர்வாளம்

இந்த ஆறு தினுசுகளில் நேர்வாளம், மாத்திரம் ஐந்து விராகனிடையாகவும் மற்ற ஐந்து தினுசுகளையும் விராகனிடை ஒன்றாகக் கொள்ளவும். இவைகளை சுத்தி செய்து கல்வத்திலிட்டு வென்னீர் விட்டு அரைத்து கால் கழஞ்சு நிறையாக உருண்டை செய்து புட்டியில் வைத்துக் கொள்ளவும். தேனிலாவது சுக்குக் கியாழத்திலாவது கொடுக்கப் பேதியாகும். ஆள் பலமறிந்து மாத்திரை கொடுக்கவும். (பத்தியம்) இறைச்சிசூப்பு அல்லது மிளகு நீர் துவரைத் தொகையல் ஆகும். அதிகம் பேதியானால் வென்னீர் சாதம் கொடுக்க்வும். பேதி நிற்கும்.

பேதிக்கு அமிர்தசஞ்சீவி மாத்திரை

ஜாதிலிங்கம்	விராகனிடை ஒன்று
வெங்காரம்	விராகனிடை ஒன்று

ஆமணக்கன் பருப்பு	விராகனிடை இரண்டு
நேர்வாளம்	விராகனிடை நான்கு

இந்நான்கையும் சுத்திசெய்து கல்வத்திலிட்டுகுளிர்ந்த நீர்விட்டு அரைத்து குன்றிமணிப் பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு குளிர்ந்த தண்ணீரில் ஒரு மாத்திரை கொடுக்க பேதியாகும் (பத்தியம்) மிளகுநீர் சாதமும் துவரைத் தொகையலுமாகும். அதிக பேதியானால் வென்னீர் கொடுக்க பேதிநிற்கும்.

காய்ச்சல் முதலானதிற்கு ஏலாதி மாத்திரை

ஏலம்	விராகனிடை ஒன்று
கிராம்பு	விராகனிடை ஒன்று
உலர்ந்தயிஞ்சி	விராகனிடை ஒன்று
திப்பிலி	விராகனிடை ஒன்று
முந்திரிப்பழம்	விராகனிடை ஒன்று
பேரீச்சம்பழம்	விராகனிடை ஒன்று
தாளிசபத்திரி	விராகனிடை ஒன்று
அதிமதுரம்	விராகனிடை ஒன்று
கோஷ்டம்	விராகனிடை ஒன்று
விலாமிச்சம்வேர்	விராகனிடை ஒன்று
பலாக்காய்	விராகனிடை ஒன்று
சந்தனம்	விராகனிடை ஒன்று
லவங்கப்பத்திரி	விராகனிடை ஒன்று
ஜாதிக்காய்	விராகனிடை ஒன்று
ஜாதிபத்திரி	விராகனிடை ஒன்று
கோரோசனை	விராகனிடை ஒன்று
இலுப்பப்பூ	விராகனிடை ஒன்று
சண்பகப்பூ	விராகனிடை ஒன்று
ஓரிலைத் தாமரைவேர்	விராகனிடை ஒன்று

இந்தப் பத்தொன்பது வகைக்கும் சமமாக கடுகு ரோகணி சேர்த்து செவ்விளநீரால் இரண்டு ஜாமமரைத்துப் பருத்திவிதைப் பிரமாணம் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி சீசாவிலிட்டு வைத்துக் கொள்ளவும்.

உள்ளுக்கு சாப்பிடும் விதம் : உட்காய்ச்சல் அதிசாரக் காய்ச்சல் ஆமைக்காய்ச்சல் வெப்புக்காய்ச்சல் இவைகட்கு முலைப்பாலில் கொடுக்கத் தீரும். காசம் மூர்ச்சிக்காசம் ரத்தகாசம் இவைகளுக்குத் தேனில் இழைத்துக் கொடுக்க தீரும். (இச்சா பத்தியம்) மாத்திரை ஒன்று அல்லது இரண்டு. ஆள் பலமறிந்து கொடுக்கவும்.

உஷ்ண காய்ச்சலுக்கு சீரக மாத்திரை

நற்ச்சீரகம், பேரீச்சம், ஏலம், முந்திரிப்பழம், செங்கழுனீர்க்கிழங்கு, திரிகடுகு, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம் கருஞ்சீரகம், கஸ்தூரி, மல்லி கல்வத்திலிட்டு இளநீர் விட்டு அரைத்து தூதுளங்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். முலைப்பாலில் உரைத்து ஆறு வேளை கொடுக்க உஷ்ணக் காய்ச்சல் தீரும். (இச்சாபத்தியம்)

காய்ச்சலுக்கு சஞ்சீவி மாத்திரை

வெள்ளைகாக்கணாம் விரை	அரைப் பலம்
திரிபலை	அரைப் பலம்
மிளகு	அரைப் பலம்
திப்பிலி	அரைப் பலம்
இரசம்	அரைப் பலம்
கெந்தகம்	அரைப் பலம்
வாய்விளங்கம்	அரைப் பலம்

இந்தயேழு தினுசும் கல்வத்திலிட்டு கரிசாலைச் சாற்றில் ஒரு நாளரைத்து கழற்சிக்காய் பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். ஒரு மாத்திரை இஞ்சி சாற்றிலிட காய்ச்சல் நீங்கும். (இச்சா பத்தியம்)

சகல சுரத்திற்கு இரத்தபேதி மாத்திரை

உலர்ந்த இஞ்சி	கால் பலம்
மிளகு	கால் பலம்
திப்பிலி	கால் பலம்
கடுக்காய்	கால் பலம்
இந்துப்பு	கால் பலம்
கடுகுரோகணி	கால் பலம்
இரசபஸ்பம்	கால் பலம்
நேர்வாளம்	ஒண்ணேமுக்கால் பலம்

இந்த எட்டு தினுசும் சுத்தி செய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை அனுபானத்திலிட விரோசனமாகி குளிர்காய்ச்சல் தீரும் (பத்தியம்) முருங்கை, கத்திரி, அவரை இவைகள் ஆகும். அதிக பேதியானால் பாலுஞ்சாதங் கொடுக்க பேதி நிற்கும்.

சன்னி பதிமூன்றுக்கும் காலானந்த வயிரவன்

இரச பற்பம்	கால் விராகனிடை
சொர்னபற்பம்	முக்கால் விராகனிடை
சங்கு	கால் விராகனிடை
கெந்தகம்	கால் விராகனிடை
முத்து	அரை விராகனிடை
வெங்காரம்	அரைக்கால் விராகனிடை

இந்த ஆறு சரக்கும் சுத்திசெய்து கல்வத்திலிட்டு கொடிவேலி வேர் கியாழத்தில் இரண்டுநாள் விடாமல் அரைத்து உருண்டைசெய்து நிழலில் உலர்த்தி பிறகு ஒரு பாண்டத்தில் குறுணி உப்பிட்டு அதன் மத்தியில் உலர்த்தின உருண்டையை வைத்து மேலும் குறுணி உப்பிட்டு மூடி நாலு ஜாமம் எரித்து நன்றாய் ஆறினபிறகு எடுத்துப் பார்க்க பஸ்பமாகும். சீசாவில் வைத்துக்கொள்ளவும். உள்ளுக்குச் சாப்பிடும் அளவு: நாலுகுன்றிமணியிடை பற்பமும் பத்துமிளகும் பத்துதிப்பிலியும் வெதுப்பிப் பொடித்தத் தூளும் அரைக்கால்படி இஞ்சிச் சாறில் மூன்றுநாள் கொடுக்க சன்னி பதிமூன்றும் தீரும். (இச்சாபத்தியம்).

சன்னி பதின்மூன்றுக்கு ராமபாண மாத்திரை

காந்தம்	பத்து	பலம்
சூதம்	பத்து	பலம்
கெந்தி	பத்து	பலம்
மனோசிலை	பத்து	பலம்
செம்புபற்பம்	பத்து	பலம்
லிங்கம்	பத்து	பலம்
பெருங்காயம்	பத்து	பலம்
வெள்ளைப்பூண்டு	ஒரு	பலம்

இந்த எட்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு குமரிச் சாற்றால் மூன்று நாள் அரைத்து குப்பியிலடைத்து வாயை அரக்கால்மூடி சீலைமண் செய்து மணல் மேல் வைத்து முத்தீயும் மூன்றுநாள் எரித்து ஆறிய பிறகு எடுக்க செந்தூரமாகும். அதில் திப்பிலிமூலம் சாதிபத்திரி கடுகுரோகணி வகைக்கு கால் பலம் வீதம் கூட்டி

வெண்கருவால் அரைத்து குன்றுமணி பிரமாணம் மாத்திரை செய்து வைத்துக்கொள்ளவும். வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் மூன்றுநாள் முள்ளிச் சாற்றில் உரைத்துக்கொடுக்க சன்னி பதின்மூன்றுந்தீரும். (இச்சாபத்தியம்)

சீதசன்னிக்கு அரிவானந்தவயிரவ மாத்திரை

வெங்காயம்	அரைப் பலம்
அயபற்பம்	அரைப் பலம்
அரிதாரம்	அரைப் பலம்
கருவங்கபற்பம்	அரைப் பலம்
வெள்வங்க பற்பம்	அரைப் பலம்
இரசம்	அரைப் பலம்
சாதிலிங்கம்	அரைப் பலம்
தாமிரபற்பம்	அரைப் பலம்

இந்த எட்டு சரக்கும் கல்வத்திலிட்டு திரிபலை கியாழத்தால் நான்கு ஜாமமரைத்து உலர்த்திக் குப்பியிற் போட்டு தீபம் போல மூன்று சாமம் எரித்து கல்வத்தில் கொட்டி ஒரு சாமம் எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து குன்றுமணி பிரமாணம் மாத்திரை கொடுக்க சீதசன்னி தீரும். (பத்தியம்) தினைக்கஞ்சி கொடுக்கவும்.

தித்திப்பு சுகபேதிக்குழம்பு

ரஸ்தாளி வாழைப்பழம்	பத்து பலம்
திராட்சைபழம்	ஐந்து பலம்
ஓமம்	ஒரு விராகனிடை
சுக்கு	ஒரு விராகனிடை
மிளகு	ஒரு விராகனிடை
கடுகுரோகணி	மூன்று பலம்
சுத்திசெய்தவாளம்	ஐந்து பலம்

இந்த ஏழு சரக்கும் கல்வத்திலிட்டு நாலுசாமம் அரைத்து வழித்து எடுத்து கல்ஜாடியில் வைத்து காற்றுப் போகாமல் மேல் மூடி வைத்துக்கொள்ளவும். குழந்தைகளுக்கு அரைக்காசளவும் பத்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒருகாசு அளவும் பெரியவர்களுக்கு ஒரு ரூபாய் எடையும், கொடுக்க சுகபேதியாகும். பேதியதிகமானால் வசம்பை சுட்டு இளம் வென்னீரில் உரைத்துக்கொடுக்க பேதிநிற்கும் (இச்சாபத்தியம்).

சுகபேதி பேரிச்சன் குழம்பு

பேரிச்சம்பழம்	அரைப் பலம்
கொடிமுந்திரி பழம்	அரைப் பலம்
சீனாக்கற்கண்டு	அரைப் பலம்
பொரிச்ச வெங்காரம்	அரைப் பலம்
இந்துப்பு	அரைப் பலம்
சுத்திசெய்தவாளம்	அரைப் பலம்
பூரம்	கால் விராகனிடை
லிங்கம்	கால் விராகனிடை

இந்த எட்டு மருந்துச் சரக்குகளையும் கல்வத்திலிட்டு தேன்விட்டு அரைத்து மாட்டுக் கொம்பு சிமிளில் வைத்துக் கொள்ளவும். சிசுக்களுக்கு அரைகுன்றுமணி பிரமாணமும் பெரியவர்களுக்கு ஒருகுன்றுமணி பிராமணமும் கொடுக்க சுகமாக பேதியாகும் (இச்சாபத்தியம்)

குழந்தைகளுக்கு மாந்தமாத்திரை

சுக்கு	ஒரு விராகனிடை
திப்பிலி	ஒரு விராகனிடை
மிளகு	ஒரு விராகனிடை

ஆமையோடு	ஒரு விராகனிடை
ஓமம்	ஒரு விராகனிடை
கடுகுரோகணி	ஒரு விராகனிடை
வாய்விளங்கம்	ஒரு விராகனிடை
பெருங்காயம்	ஒரு விராகனிடை
இந்துப்பு	ஒரு விராகனிடை
நேர்வாளம்	ஒரு விராகனிடை

இந்த பத்து சரக்குகளையும் சேர்த்து கல்வத்திலிட்டு உத்தாமணிச் சாறுவிட்டு அரைத்து குண்டுமணி பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். (இதற்கு அனுபானம்) அகத்திக்கீரையை வதக்கிச் சாறு பிழிந்து அதில் ஒரு மாத்திரை அல்லது ஒன்றரை மாத்திரையாகக் கொடுக்கலாம். கலியாண முருக்கையிலையை வதக்கி அதன் ரசத்திலும் கொடுக்கலாம்.

இதனால் தீரும் வியாதிகள்

அள்ளுமாந்தம் முக்குமாந்தம் சுரம் இதுகள் தீரும். இரண்டொருமுறை மலசுத்தியாகும் பத்தியம் புளி நீக்கவும்.

மருந்து கூட்டும்போது ஆமையோட்டை மாத்திரம் உத்தாமணிச் சாற்றில் ஒரு ராத்திரி பகல் ஊற வைத்து எடுத்துக் கொள்ளவும்.

சுரகோடாலி மாத்திரை

வெள்ளைப் பாஷாணம்	ஒரு விராகனிடை
கௌரி பாஷாணம்	ஒரு விராகனிடை
சூதம்	ஒரு விராகனிடை

இந்த மூன்று சரக்கும் கிழிகட்டிக் கியாழத்தில் இரண்டு ஜாமம் எரித்து அதை எடுத்து ஊமத்தன் சாற்றிலும்

கொம்பு பாகற் சாற்றிலும் வகைக்கு இரண்டு ஜாமமரைத்து உளுந்திடைக்கு மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி புட்டியிலிட்டு வைத்துக்கொள்ளவும். சுரமுள்ளவர்கள் ஒரு மாத்திரை எடுத்து இளநீரிலாவது வென்னீரிலாவது காடியிலாவது ஆறு நாளைக்கு ஆறு மாத்திரை கொடுக்க சகல சுரமும் தீரும். (பத்தியம்) புளி தள்ளவும். உப்பு வறுத்து சேர்க்கவும். எட்டாம் நாள் ஓமம்தேய்த்து தலைக்கு தண்ணீர் விடவும். அதன் பிறகு புளி சேர்த்துக் கொள்ளவும்.

சன்னி முதலானதிற்கும் ஆனந்தவயிரவன் மாத்திரை

நாவிக்கிழங்கு	ஒரு பலம்
சூதம்	ஒரு பலம்
மனோசிலை	ஒரு பலம்
சாதிலிங்கம்	ஒரு பலம்
வெங்காரம்	ஒரு பலம்

இந்த ஆறு சரக்கும் சுத்தி செய்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்து சிறுபயரளவு மாத்திரை செய்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். சன்னிக்கு முலைப்பாலிலும் குளிர் சுரத்திற்குச் சாற்றிலும் கொடுக்கத் தீரும். (இச்சா பத்தியம்)

சன்னி தலைவலிக்கு மாத்திரை

நற்சீரகம்	அரைப்பலம்
கருஞ்சீரகம்	அரைப்பலம்
அசமதாகம் (ஓமம்)	அரைப்பலம்
திப்பிலி	அரைப்பலம்
கிராம்பு	அரைப்பலம்
வசுவாசி	அரைப்பலம்
அதிவிடையம்	அரைப்பலம்

மனோசிலை	*அரைப்பலம்*
பெருங்காயம்	*அரைப்பலம்*
அதிமதுரம்	*அரைப்பலம்*
வாய்விளங்கம்வேர்	*அரைப்பலம்*

இந்தப் பதினொரு சரக்கும் கல்வத்திலிட்டு கழற்ச் சிலை சாற்றில் மைபோல் அரைத்து குன்றுமணி பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி புட்டியிலிட்டு வைத்துக் கொண்டு கழற்ச்சிலை சாற்றில் ஒரு மாத்திரை கொடுக்க சன்னி தீரும். நொச்சி சாற்றில் கொடுக்க தலைவலி தீரும். (இச்சாபத்தியம்)

வாந்திபேதி நிவாரண மாத்திரை

மிளகு பெருங்காயம் அபின் இவை வகை யொன்றுக்கு காலே வீசம் எடுத்து செவ்வையாய்க் கல்வத்தில் அரைத்து பனிரெண்டு மாத்திரை செய்து அரை மணிக்கு வொருதரம் கொடுக்க பேதி நிற்கும், ஏழு முதல் பதினான்கு வயதுள்ளவர்க்கு அரை மாத்திரை கொடுக்கவும்.

மாத்திரை வகை சிட்கா முற்றிற்று

உ

கடவுள் துணை

இரண்டாவது

கட்டுவகை சிட்கா

லிங்கக்கட்டு

பத்து விராகனிடை லிங்கம் வாங்கி முலைப்பாலில் ஒரு சாமம் எலுமிச்சம் பழச் சாற்றில் ஒரு சாமம் மாவிலிங்கம் பழச்சாற்றில் ஒருஜாமம் ஐவிரலிச் சாற்றில் ஒரு ஜாமம் தேனில் ஒருஜாமம் சுருக்குக் கொடுத்து பிறகு ஐந்து விராகனிடை சூடனும் ஐந்து விராகனிடை சாம்பிராணியும் மெழுகு போலரைத்து அதைப் பத்துப் பங்கு செய்து ஒவ்வொரு பங்காய் சீலையிற்தடவி லிங்கத்தின் பேரில் சுத்தி தீயிற்கொளுத்தி ஆறினபிறகு கரியெல்லாஞ் சுரண்டிப்போட்டு வைத்துக் கொள்ளவும். தேனில் இழைந்துக் கொடுக்க வாய்வு தீரும். திரிகடுகு கியாழத்தில் கொடுக்க சன்னிதோஷம் தீரும். இஞ்சி சாற்றில் கொடுக்க நெஞ்சடைப்பு, வாயு, மூர்ச்சை பேதி, வயிற்றுப் பொருமல் இவைகள் தீரும், கொடிவேலி கியாழத்தில் கொடுக்க விஷபாகம் வயிற்றுவலி குன்மம், சோகை சூலை பித்தபாண்டு இவைகள் தீரும். பத்தியம் அரைப் புளிப்பு (இச்சாபத்தியம்)

வேறுவகை லிங்கக்கட்டு

ஒருபலம் ஜாதிலிங்கக்கட்டியின் மேல் குன்றுமணிப் பருப்பின் பசையினால் ஒரு விராகனிடை தங்கரேக்கை

ஒட்டி அதின்மேல் ரோமத்தை அரைவிரல்கனம் சுத்தி பிரியாமல் கட்டவும். ஒரு சட்டியில் கெந்தகம் அரிதாரம் வகைக்கு அரைப் பலம் வீதம் எடுத்துப் பொடித்து அந்தத் தூளை லிங்கத்தின் கீழும்மேலும் சட்டியில் போட்டு மேற்சட்டி மூடி சீலைமண் செய்து காயவைத்து கொள்ளவும். சற்று பெரிதான வேறொரு சட்டியில் நாலு விரற்கடை மணலைக் கொட்டி அதன்மேல் சட்டியை வைத்து அதுதெரியாமல் ஆறு விரற்கடை மணலைக் கொட்டி கமலாக்கினியாய் எரித்து மணல் மேல் நெல்லைப் போட்டால் பொரியவேண்டும். அப்படிப்பட்ட பதத்தில் இறக்கி ஆற்றி மேற்சட்டியை நீக்கி சுத்தமாய்க் கழுவிப்போட்டு பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும். ஆவின் பாலில் பணவிடை உரைத்துச் சாப்பிட வீரியவிர்த்தியுண்டாகும். முலைப் பாலில் கொடுக்க மூலவாய்வு மூர்ச்சைவாய்வு அக்கினி மந்தம் இவைகள் தீரும் (இச்சாபத்தியம்.)

வேறுவகை லிங்கக்கட்டு

ஒருபலம் லிங்கத்தை ஒருபடி ஈசுரமூலி சாற்றில் சுருக்குக் கொடுத்து அதற்கு பொரித்த வெங்காரத்தை மேற்படி சாற்றால் அரைத்து கவசஞ் செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மூடி ஏழு சீலைமண செய்து குக்குடப் புடம் போடக் கட்டும்.

லிங்கரச கற்பூரக்கட்டு

பனிரெண்டு விராகனிடை கெந்தகத்தை உருக்கி அதே எடை லிங்கம் இரசகற்பூரம் பொடித்துப் போட்டுக் கிண்டி ஈர்க்குழலால்விட்டு ஆற்றி மாத்திரை செய்து சன்னிகாதோஷ முதலானவைகளுக்கு தக்க அனுபானத் துடன் கொடுக்க நலமாகும்.

ரசகற்பூரக்கட்டு

ஒரு பலம் ரசகற்பூரத்தை முலைப்பாலில் பத்து நாள் ஊறவைத்து உலர்த்தி அப்பால் வெள்ளிதயிலத்தை மூன்று சாமம் சுருக்குக் கொடுத்து ஓட்டில் இரண்டுபலம் வெடிஉப்பை பொடித்து அதற்குக் கீழ்மேலும் போட்டு ஐந்து கோழிமுட்டையை உடைத்துவிட்டு மூடி அடுப்பேற்றி சிறுதீயாக எரிக்க பொங்கும். அதின்பின் உருகும். ஆறினபன் எடுக்கக் கட்டி இருக்கும். அதை தக்க அனுபானத்தில் இழைத்துக் கொடுக்க சன்னிசுரம் நாவரட்சி மலக்கட்டு இவைகள் தீரும். லிங்கக்கட்டுடன் சேர்த்துக் கொடுக்க வாதனோய்தீரும் (இச்சாபத்தியம்)

வேறுவகை ரசகற்பூரக்கட்டு

நாலுவிராகனிடை ரசக்கற்பூரத்திற்கு முலைப் பாலில் இரண்டுஜாமம் சுருக்குக்கொடுத்து நண்டை இடித்துச் சாறு பிழிந்து அதில் இரண்டுஜாமம் சுருக்குக் கொடுத்து முசுக்கைச் சாற்றில் இரண்டு ஜாமம் சுருக்குக் கொடுத்தெடுக்கக் கட்டும். கூறிய வியாதிகளுக்கும் கொடுக்கலாம்.

தாளகக்கட்டு

வெடியுப்பு	இருபது விராகனிடை
சீனம்	இருபது விராகனிடை
நவாசாரம்	பத்து விராகனிடை
வெங்காரம்	பத்து விராகனிடை

இந்த நான்கு சரக்கையும் பொடித்துக கரண்டியில் போட்டு தீயில்வைத்து உருகும்போது அதில் ஐந்து விராகனிடை தாளகக்கட்டியைப் போட்டுப் புரட்டிக் கொடுத்து எடுத்த பிறகு அதில்மீந்ததையும் அரைத்து தாளக்கடடியின்மேல் கவசம்போல் பூசிக் காயவைத்து

அதின்மேற் சுண்ணாம்பு நீரும் பூநீரும் அரைத்துத் துணியிற்பூசி ஏழு சீலைசெய்து காடைப் புடமிட்டெரித்து எடுக்கக்கட்டும். தக்க அனுபானத்துடன் கொடுக்க ஈளை காசம் எலிகடி விப்புருதி உளமாந்தை குளிர்சுரம் இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

வேறுவகை தாளகக்கட்டு

பத்துவிராகனிடை தாளகக்கட்டிக்கு சிவகரந்தைச் சாறு கரிப்பான்சாறு வகைக்கு ஒரு படி எடுத்து முதலில் சிவகரந்தைச் சாற்றில் சுருக்குக்கொடுத்து இரண்டாவது கரிசாலைச் சாற்றில் சுருக்குக் கொடுத்து உலர்த்தி ஐம்பது எருவில் வெடிஉப்பை அடக்கவறுத்து எலுமிச் சம்பழச்சாற்றில் அரைத்து பிறகு மூன்றுபுடம் போட்ட கரி உப்பு விராகனிடை பதினான்கு எடுத்து சிறுநீர் விட்டு அரைத்து தாளகத்திற்கு கவசஞ்செய்து காயவைத்து சீலைமண் செய்து பதினைந்து எருவில் புடம்போடக் கட்டும் முன்போல் உபயோகிக்கலாம்.

வீரக்கட்டு

ஒரு விராகனிடை வீரத்திற்கு அமுரி இலைசாற்றைப் பிழிந்து அதில் அரைப்படி சாறு எடுத்து வீரத்தை அதில்போட்டு சுருக்குக் கொடுத்து கட்டியை ஒரு கரண்டியிலிட்டுக் காய்ச்சி கட்டியை எடுத்துக்கொண்டு அந்த நெய்யில் பரங்கிப்பட்டைச் சூரணத்தைப் பிசைந்து சுண்டைக்காய்ப் பிரமாணம் உண்டை செய்து வெல்லக் கட்டியில் வைத்து மூன்றுநாள் ஆறுவேளை கொடுக்க மேகக் கிரந்தி முதலான மேகரணங்கள் தீரும் (பத்தியம்) புளிநீக்கிச் சாப்பிடவும்.

கட்டுவகை சிட்கா முற்றிற்று

உ

கடவுள் துணை

மூன்றாவது

பற்பவகை சிட்கா

ரசபற்பம்

காட்டுவெங்காயமும் கெந்தகமும் ஓர் நிரையாய் நிறுத்து வில்லை தட்டிக் கலசத்தில் வைத்து தயிலமிறக்கி வாலைரசத்தில் விட்டு வெய்யலில் வைத்து உலர்ந்த பிறகு மறுபடியும் அந்த தயிலத்தால் அரைத்து வில்லை செய்துகொள்ளவும். நன்றாய் வெந்த செங்கல்லை பாக்குபோல் உடைத்து ஒரு குண்டுசட்டியில் அரைவாசி போட்டு அதின்மேல் ஒரு படி உப்புக்கொட்டி பாத்திரத்தில் மேற்படி வில்லைவைத்து மூடி ஏழுசீலைமண் செய்து அடுப்பேற்றிக் காடாக்கினியாய் மூன்று ஜாமம் எரித்து ஆறினபின் எடுக்க பற்பமாகும். சீசாவில் போட்டு வைத்துக் கொள்ளவும். பணவிடை எடுத்து வெல்லமுதலான அனுபானங்களில் ஏழுநாள் சாப்பிட வேண்டும்.

குஷ்டம் குலை நோய் பவுத்திரம் கழலை காமாலை விப்புருதி வீக்கம் வெள்ளை படருதல் சூலை அரையாப்பு யோனிப் புற்று மூலமுளை கண்டமாலை கிரந்தித்தடிப்பு வெள்ளை கருங்கரப்பன் வண்டுகடி மேகம் வாயு குன்மம் இவைகள் தீரும். பத்தியம்; கடும்பத்தியமாக இருக்கவேண்டும்.

வீரபற்பம்

ஒருபடி பூநீரை நான்கு படி அமுரியிற்கரைத்துதெளி விறுத்து ஒரு பாண்டத்தில்விட்டு அதின் வாயிற் சீலையால் வேடுகட்டி அதின்மேல் ஐந்துவிராகனிடை வீரக்கட்டியை வைத்து மேல்வாயைமூடி நீர்வற்றும் வரைக்கும் தீ எரித்துப் பார்க்கப் பற்பமாகும். அதை கிரந்தி நாயகக் சாற்றால் பனிரெண்டுமணி ஜாமம் கல்வத்தில் அரைத்துவில்லைசெய்து காயவைத்து மேற்படி இலையை அரைத்துக் குகைசெய்து அதற்குள் மேற்ப இலையை அரைத்துக் குகைசெய்து அதற்குள் மேற்படி வில்லையை வைத்துமூடி ஒரு சட்டியில் நாலுவிரற்க்கடை மணல்போட்டு அதின்மேல் குகைசெய்ததை வைத்து நாலுநாழிகை எரிக்க சிவந்த நிறமான பற்பமாக இருக்கும். அதையெடுத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். அதில் பணவிடை திரிகடுகுச் சூரணத்தில் வைத்து தேன்விட்டு மத்தித்து கொடுக்க சன்னி, தோஷம், கபக் கட்டு, வாயு, வாதம முதலான நோய்கள் தீரும். மருந்து மூன்றுவேளை கொடுக்க வேண்டும். இச்சாபத்தியம்.

தாளகபற்பம்

சுத்திசெய்த தாளகத்தை ஒரு பலம் எடுத்து வாழைக்கிழங்குக்குள் வைத்து மூடி ஏழு சீலைமண் செய்து காயவைத்து ஐம்பது எருவில் புடம்போட நீறும். ஆறினபின் எடுத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். அதில் பணவிடை எடுத்து தக்க அனுபானத்துடன் கொடுக்க சிலேத்துமனோய் தொண்ணூற்றாறும் தீரும். சுரம் அரையாப்பு கிரந்தி சூலை குஷ்டம் தீரும். இச்சாபத்தியம்.

வேறுவகை தாளகபற்பம்

ஒருபலம் தாளகத்தை எடுத்து சுத்திசெய்து பிறகு கோடாசுழி, நிலதுத்தி, குட்டிவிளாம் இந்த மூன்றையும் கொண்டு வந்து அதின்விழுதுகளை சரியிடையாக எடுத்து தேங்காய்ப் பிரமாணம் அரைத்து உண்டை செய்து அதினுள் தாளகத்தை வைத்து சீலைசெய்து கொடுக்குப் புடமிடக் கட்டிப் போகும். அந்தக் கட்டுக்கு மிளகறணை பட்டையைச் சிறுநீரால் அரைத்து கவசம் செய்து அதின்மேல் ஒரு பலம் சீனம் ஒரு பலம் கல்லுப்பு ஒரு பலம் வெடியுப்பு இம்மூன்றும் உமிழ்நீரால் அரைத்துக் கவசஞ்செய்து ஈணாக்கிடாரிச் சாணியை புளியம்பரணைச் சாம்பலில் கலந்து பெருங்குகைப் பிடித்து குகைக்குள் புளியம்பரணைச் சாம்பலைப் போட்டு அதில் கவசம் செய்த தாளகத்தை வைத்து மேல் சில்லு போட்டுச் சீலை மண் செய்து பத்து எருவில் புடமிட பஸ்பமாகும். இதை அனுபான கிருதங்கள் லேகியங்கள் தேனில் அரிசியிடை கொள்ள மேகம், சூலை, சுரம், குஷ்டம், சிலேத்தும நோய் தொண்ணூற்றாறும் தீரும். இச்சா பத்தியம்.

தாம்பிரபற்பம்

சுத்திசெய்த தாம்பிரம்	பணிரெண்டு விராகனிடை
சூதம்	எட்டு விராகனிடை
கெந்தி	எட்டு விராகனிடை
தாளகம்	எட்டு விராகனிடை

இந்த நாலு சரக்கையும் கல்வத்திலிட்டு வெள்ளெருக்கன் பால்விட்டு அரைத்து வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து கெஜபுடம் போட்டு அப்பால் சத்திச்சாரணைச் சாற்றால் ஒரு

நாளரைத்து முன் போறற் புடம்போட பற்பமாகும். ஆறினபின் எடுத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். அதில் பணவிடை எடுத்து தேனிற்கொள்ள குன்மவாய்வு, சூலை, மூலந் தீரும்.

வெள்ளிபற்பம்

கால்பலம் சரிகை வெள்ளியை உருக்கி ஆறவிட்டு பாலரசம் ஐந்து விராகனிடை விட்டுக் கலக்கியபின் எடுத்துத் துருசு இரண்டு விராகனிடைக்கு சிறுநீர்விட்டு அரைத்து மேற்படி களங்குக்குக் கலசமிட்டுக் காய்ந்த பிறகு மகிழம்பூவை முலைப்பாலால் அரைத்து கவசஞ்செய்து அதின்மேல் வெள்ளெறுகு அரைத்து கவசஞ் செய்து காயவைத்து மூன்று சீலைமண் செய்து பதினைந்து எறுவில் புடமிடப் பஸ்பமாகும். அதில் பணவிடை எடுத்து நெய்யில் லேகியத்தில் கொடுக்க மேகம், வெட்டைகள் நீங்கும். தாது புஷ்டியாகி தேகம் அழகுமிகும், இச்சாபத்தியம்.

வேறு வகை வெள்ளிபற்பம் செந்தூரம்

சரிகை வெள்ளியை லேசாகத் தட்டிப் பழுக்கக் காய்ச்சி பழுபாகற் கிழங்குச் சாற்றில் ஏழுமுறை தோய்த்துக் குகையில் வைத்து உருக்கி கண்விட்டாடும்போது மகிழம்பூச்சாற்றைச் சிறுகவிட்டு ஊதப் பொடியாய்ப் போகும். அதைமேற்படி சாற்றால் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து முக்காவேளை வேரை மகிழம்பூச் சாற்றால் அரைத்து குகை செய்து வைத்து மூடி ஏழு சீலை மண்செய்து நூறு எருவில் புடம் போட நீறும். அதில் பணவிடை திப்பிலி லேகியந்திற்கொள்ள சிலேத்துமம் தொண்ணூற்றாறும் சூலையும் தீரும். இச்சா பத்தியம்.

தங்க பற்பம்

நெல்லிக்காய் கெந்தகம் பதினாறு விராகனிடை செங்கட்டு பூனாகம் எட்டு விராகனிடை பொரிச்ச வெங்காரம் எட்டு விராகனிடை இம்மூன்றுக்கும் உமிழ் நீருடன் கோவை இலைச்சாறும் விட்டு பதினாறு ஜாமம் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை திரட்டி நிழலில் உலர்த்திக்கொண்டு தங்கரேக்கு ஒரு விராகனிடை மூசையில் போட்டு குமிட்டியில் வைத்து உருக்கும் போது மேற்படி மாத்திரைகளை கிராசங் கொடுத்துக் கொண்டே அப்போதைக்கப்போது மூசைகளை மாற்றிக்கொண்டு மாத்திரை முழுமையுமானபிறகு சிறு செறுப்படைச்சாறு அல்லது குப்பிலாங்கொடிச்சாறு தெளிவுவிட்டு இரண்டுஜாமம் அரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்து ஓடுமூடி சீலைமண் செய்து பதினைந்து எருவில் புடம்போடவும். இப்படி ஆறுபுடம்போட பஸ்ப செநதூர மத்தியான களங்கு நீளத்துடன் தங்க சம்பூர மாகும் இதில் ஒரு குண்டுமணி எடை லேகிய அனுபானத்துடன் கொடுக்க மேகம் சோகை காமாலை பித்தபாண்டு தேகவரக்ஷி காந்தல் முதலியவை நீங்கும். தாதுவிருத்தியால் மிகுந்த அழகு உண்டாகும். இச்சா பத்தியம்.

பவளபற்பம்

பவளம் ஒருபலம் எலுமிச்சம் பழச்சாற்றில் போட்டு ஒருநாள் ரவியில் வைத்து மறுநாள் தண்ணீரில் கழுவி வைத்துக்கொள்ளவும். இலந்தமிலையாவது தைவேளை இலையாவது அரைத்துக் குகைசெய்து பவளத்தை அதற்குள் வைத்து மூடி ஏழுசீலை செய்து காயவைத்து ஐம்பது எருவில் புடம்போட்டெடுக்கப் பஸ்பமாகும். அதைஎடுத்து ஒரு பீங்கானிலிட்டு பசுவின்பால்விட்டு ரவியில் காயவைத்து எடுத்து புட்டியிலிட்டுவைத்துக்கொள்ளவும். ஒரு குன்று

மணி எடை, வேளை ஒன்றுக்கு. தேன், பசு நெய், அல்லது பசும்வெண்ணையுடன் கொள்ள மேகக்சூடு காங்கை சயம் ஈளை இருமல் நீர்க்கடுப்பு இவைகள் நீங்கும். இச்சாபத்தியம்.

நாகபற்பம்

நாகத்தை உருக்கி உருக்கி இருபது முறை இலுப்ப நெய்யில் சாய்க்கச் சுத்தியாகும். அதில் அரைப்பலம் எடுத்து குகையில் வைத்து உருக்கும்போது கண்விட்டு ஆடும்போது சித்தாமணக்கிலையைக் கசக்கி அஞ்சாறு சொட்டுப்பிழிய சத்தமடங்கும். துருத்தியை வேகமாய் ஊதி மறுபடியும் அஞ்சாறு சொட்டுப் பிழிந்து மேற்படி வேறால் கிண்டிவர மல்லிகைபூப்போல் நீறும். அதை தக்க அனுபானத்துடன் கொடுக்க வெள்ளைவெட்டை சிலேத்துமம் குன்மம் மூலம் இவைகள் நீங்கும். தாதுவிர்த்தி உண்டாகும்.

வேறுவகைபற்பம்

சுத்திசெய்த நாகம், ஒரு பலம் இரசம் ஒரு பலம் இவை இரண்டையும்சேர்த்து உருக்கி வேலிப்பருத்திச் சாற்றால் அரைத்துவில்லைதட்டிக் காயவைத்து அதற்குமேல் துத்தி இலையை அரைத்துக் கவசஞ்செய்து ஏழுசீலை மண் செய்து முழுப்புடம்போட நீறும. இப்படி மூன்று புடம் போடவும். பிறகு எடுத்து சீசாவில் வைத்துக்கொள்ளவும். வெண்ணையில் பத்திரமாகச் கொள்ள மேற்கூறிய வியாதிகள் திரும்.

வெள்வங்க பற்பம்

சுத்திசெய்த வெள்வங்கம் ஒருபலம் பாதரசம் ஒரு பலம் இவை இரண்டும்சேர்த்து உருக்கி கஞ்சாயிலை சாறு விட்டு அரைத்து வில்லை செய்து காயவைத்துக் கொள்ளவும்.

கஞ்சா இலையை அரைத்து அதன்மேல் கவசஞ்செய்து ஓட்டிவிட்டு மூடி சீலைசெய்து முப்பது எருவில் புடம்போடவும். மறுபடியும் கஞ்சா இலைச்சாற்றால் அரைத்து கவசம் செய்து புடம் போடவும். இப்படிமூன்று புடம் போட நீறும். அதை எடுத்துப் புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

மாதளம்பூவை நிழலில் உலர்த்தி அத்துடன் சரிஎடை சீரகம் சேர்த்து சூரணித்து திரிகடுகுப் பிரமாணம்சூரணத்தில் பணவிடைப் பிரமாணம் பஸ்பம் கலந்து கொடுக்க நவமூல ரோகங்களும் போகும். மேகநோய், எலும்புருக்கி நோய்களும் தீரும். நாடி வலுத்துத் தாது உண்டாகும். பத்தியம் மீன் கருவாடு கொள்ளுபருப்பு பூசினிக்காய் நீக்கவும். நெய் சேர்த்துக் கொள்ளலாம். நாளொன்றுக்கு இருவேளை மண்டலங் கொள்ளவும்.

கருவங்க பற்பம்

கருவங்கக் குண்டுகளை உருக்கி புளிச்ச தண்ணீரில் பத்து தரம் சாய்தது தகடுதட்டிப் பழைய காலணா நாணயத்தின் அளவு துண்டுகள் செய்து தில்லைப்பாலில் மூன்று நாள் ஊறப்போட்டு வெய்யலில் வைத்துப் பிரட்டிக் கொடுத்து நன்றாய்க் காயுவைத்துக் கொள்ளவும். கருங்கழுதை லத்தி ஒருவீசை இடித்துக்கொஞ்சம் சிறுநீர்விட்டு பிசைந்து கொண்டு மூன்றில் ஒருபாகம் எடுத்து அடைதட்டி அதன்மேல் கருவங்க தகடுகளை ஒன்றோடொன்று சேராமல் வைக்கவும். இம்மாதிரியாக தனித்தனியாக லத்திக்குள் கருவங்க தகடுகளை வைத்து மேலே லத்தியால் மூடி அடுக்காய் வைத்து இரண்டு சீலைமண் செய்து வெட்டின குழிக்குள் காட்டெருவை நிறைத்து கெஜபுடம்போடவும். மேலே பத்துப்படி உமியைக் கொட்டவும். புடம் ஆறிய பின் எடுத்துப் பார்க்க

பற்பமாக இருக்கும். பற்பத்தைப் புட்டியிலிட்டு வைத்துக் கொள்ளவும். அரிசியிடை நெய்யிலாவது வெண்ணை யிலாவது கொள்ளவேண்டும். தாது புஷ்டிக்கான லேகியங் களில் காலரிசியிடை வைத்து பத்து நாள் கொடுக்க தாதுபுஷ்டி யதிகமாகும். மேகரோகங்கள் சகலமுந்தீரும். இச்சாபத்தியம். போகம் பரிச்சேதங் கூடாது.

கற்பூரசிலாசத்து பற்பம்

கற்பூரசிலாசத்தை பசுவின் பாலிற் போட்டுக் காய்ச்சி சுத்தி செய்து சிருசெறுப்படை சாற்றால் நாலு ஜாமம் அரைத்து லேசாய் வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிவிட்டுச் சீலை செய்து ஐம்பது எருவில் புடம் போடவும். இப்படி சிறுசெறுப்படை சாற்றாலாட்டி மூன்று புடம் போட்டு எடுக்க பற்பமாகும். இரண்டு குன்றியிடை பசுவின் வெண்ணெயில் கொள்ள மேலெரிவு பித்த வெட்டை நீர்கடுப்பு இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

மான்கொம்பு பற்பம்

ஒரு வீசை மான்கொம்பு வாங்கி நாலாய்ப்பிளந்துசிறு துண்டுகளாய் நறுக்கி ஒருநாள் குப்பைமேனிச் சாற்றில் ஊறவைத்து, மேற்படி இலையை அரைத்துக் கவசஞ்செய்து காயவைத்து ஓட்டில் பரப்பி மேலோடுமூடி சீலை மண் செய்து ஐம்பது எருவால் புடம்போட்டு எடுத்துக் கொள்ளவும்.

மறுபடியும் ஆவின்பால்விட்டு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து முன்போற் புடம்போடப் பற்பமாகும்

அனுபானங்களில் மேற்படி பற்பத்துடன் பவள பற்பம் சேர்த்துக்கொடுக்க நீரடைப்பு கல்லடைப்பு

சதையடைப்பு நீரெரிவு சயம் ஈளை இருமல் உஷ்ணம் மேக காங்கை இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

கல்நார் பற்பம்

சீமைக்கல்நார் ஐந்து பலம் கொண்டு வந்து துண்டு துண்டாக வெட்டி ஓட்டில் வைத்து அதற்குக் கீழும் மேலும் எருக்கன் வேரை இடித்து தூளைப்போட்டு மூடி கெஜபுடம் போட்டு எடுத்து எருக்கன் பாலில் அரைத்து மூன்று புடம் போட்டு எடுக்கத் தவளம்போல் நீறும். அதில் இரண்டு குன்றி எடை பிரமாணம் நாளொன்றுக்கு தேனிலாவது தூதுவேளை லேகியத்திலாவது கொள்ள சிலேத்துமம் தொண்ணூற்றாறும் மேக காங்கை இவைகள் தீரும். மேற்படி பற்பத்தை பல்விளக்க தந்தம் இறுகும். இச்சாபத்தியம்.

பஞ்சலவண பற்பம்

பஞ்சலவணம் வகைக்குக் கால்பலம் கல்வத்திலிட்டுப் பிரண்டை முருங்கப்பட்டை குப்பைமேனி நொச்சி, குமரி இவைகளின் சாற்றில் வகைக்கு ஒரு சாமம் அரைத்துக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து பத்து எருவில் புடம் போடப் பற்பமாகும். இந்த பற்பத்திற்கு நாலில் ஒன்று பெருங்காயஞ் சேர்த்து தேன்விட்டு மைபோல் அரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு கழஞ்சிவீதம் சாப்பிடவும். வாதம், வாய்வுக்குத்தல், குடைச்சல், வலி, குன்மம், அண்டவாயு கிராணி பெளத்திரம் ருத்திரவாயு குடல் புரட்டல் வயிற்றுப்பொருமல் செரியாமை மந்தம் மகோதரம் இவைகள் தீரும். இச்சா பத்தியம். வியாதி பலமறிந்து கால்மண்டலம் அரை மண்டலம் கொடுக்கவும்.

பற்பவகை சிட்கா முற்றிற்று.

உ

கடவுள் துணை

நாலாவது

செந்தூர வகை சிட்கா

அயச்செந்தூரம்

அரபப்பொடியை எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாள் ஊறவைத்துப் பிசைந்து கழுவிப்போட்டு அப்பால் காடியில் மூன்றுநாள் ஊறவைத்துக் கழுவி சுத்தம் செய்து கொள்ளவும். பிறகு காட்டாமணக்கன் பாலில் மூன்று நாள் ஊறவைத்து ரவியுலர்த்திக் கல்வத்திலிட்டு காட்டாமாணக்கின் பாலால் நான்கு ஜாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து கெஜபுடம் போடவும்.

இப்படி காடடாமணக்கின் பாலில் அரைத்துப் பதினொரு புடம்போட்டு அப்பால் மருதம்பட்டை நாவற்பட்டை காற்றாழை சமூலம் இவைகளை ஓர் நிறையாக இடித்துச் சாறுபிழிந்து அதில் இருபத்தைந்து நாள் ஊறவைத்து அரைத்து அறுபத்து நாலு புடம் போட்டுப் பிறகு பொற்றலைக் கரிப்பானிலையும் சீந்தில் தண்டும் ஓர் நிறையாய் நிறுத்து இடித்துப் பிழிந்த ரசத்தில் இருபத்தைந்து புடம் போட்டுயெடுக்கச் செந்தூரமாகும்.

இந்த செந்தூரத்தை வாததேகிக்கு தேனிலும் பித்த தேகிக்கு வாழைப்பழத்திலும் நெய்யிலுங் கொடுக்க வேண்டும். சோகை விஷபாக வீக்கம் குடல்வாதம் தேக

வெளுப்பு நயனரோகம் தொண்ணூற்று ஆறும் தீரும். தேகம்பொன்போலாகும். ஒளியுண்டாகும் அதிக பலமுண்டாகும். உதிர்ந்த ரோமங்கள் முளைக்கும். நரைமாறும். இச்சாபத்தியம்.

அயக்காந்த செந்தூரம்

சுத்தி செய்த அயப்பொடி, காந்தப்பொடி வகைக்கு ஒரு பலம் ஜாதிலிங்கம் கெந்தகம் வகைக்கு இரண்டு பலம் வெங்காரம் இரசம் வகைக்கு கால் பலம் முப்பு இரண்டு கழஞ்சு எலுமிச்சம் பழச்சாற்றால், நாலு ஜாமம், மஞ்சள் கரிசலாங்கண்ணிச் சாற்றில் நாலு ஜாமமரைத்து வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து முப்பது எருவில் புடமிட்டு எடுக்கச் செந்தூரமாகும். இதைத் தக்க அனுபானத்திற் கொள்ள பாண்டு வகை ஆறும், கிராணி, ஆறும், பித்தம் நாற்பதும், வாயு வாதம் அக்கினி மந்தம், இவைகள் தீரும், தாது புஷ்டியாகி திரேக வெளுப்பு நீங்கும் தேனிற் கொள்ள பாண்டு சூலை கெற்பநோய் வாந்தி பொருமல் உஷ்ணவாயு, தலை மயக்கம், வாயூரல், பித்தம் தீரும். இச்சாபத்தியம்.

மண்டூர செந்தூரம்

நாள் சென்ற மண்டூரம் நாள்குபலம் இடித்து வெள்ளாட்டு நீர் குறுணிவிட்டு ஊறவைத்துக் காய்ச்சி அப்பால் பசு மூத்திரத்தில் பத்துமுறை காய்ச்சிச் சாய்த்துக் கழுவிப் போட்டு கற்றாழஞ்சாற்றில் ஒருநாள் அரைத்து வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து கெஜபுடம் போடவும். இப்படி கற்றாழஞ்சாற்றில் அரைத்துப் பத்துப்புடம் போடவும். பிறகு நீர்முள்ளி, கரிசாலை, வீழி, வேலிப்பருத்தி, மாதுளம்பழம் இவைகளின்

சாற்றில் அரைத்து வகைக்கு பத்துபுடம்போட்டு எடுக்கச் செந்தூரமாகும். அதில் பணவிடை கரிசாலை சாற்றில் சாப்பிட, மகோதரம், விஷநீர்க்கோவை கெண்டை, பாண்டு, விஷபாகம், சோகை, சூலை, பெருவயறு, குன்மம், தேகவீக்கம் நீர்க்கடுப்பு, வாதம் குடல்வாதம் இவைகள் தீரும். பத்தியமாகச் சாப்பிடவும்.

பஞ்சலோக செந்தூரம்

தங்கம் வெள்ளி செம்பு காந்தம் இரும்பு இவைகளை சம எடை எடுத்துச் சுத்திசெய்து அதற்கு இரண்டு பங்கு கெந்தகமும் சூதம் அரைபங்கு வீரம் கால்பங்கு முப்பு சுண்ணம் ஒரு கழஞ்சு கூட்டி எலுமிச்சம்பழச் சாற்றிலும் கரிசாலைச் சாற்றிலும் வகைக்கு நாலுஜாமம் அரைத்து முழப்புடத்திற் போட்டு ஆறினபின் எடுக்க செந்தூரமாகும். அதிற் பணவிடை திரிகடுகு சூரணத்தில் வைத்து தேன்விட்டு மத்தித்து நாற்பது நாள் சாப்பிட வாய்வு, எண்பது வகை பித்தம், மூலம் சிலேத்துமம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

அபிரேக்கு செந்தூரம்

ஐந்து பலம் அபிரேக்கு நவநீதத்தை எருக்கன்பாலில் ஏழுநாள் ஊறவைத்து நாலுஜாமம் அரைத்து வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டு சீலைசெய்து கெஜபுடம் போட்டு பின்புமுள்ளங்கிக்கிழங்கு, செங்குமரி, நாயுருவி கொழிஞ்சி, இஞ்சி மருட்கிழங்கு, கரணைக்கிழங்கு, கருவாழை, பொன்னாங்கண்ணி சாரணை மணத்தக்காளி கனிப்பிரண்டை நீர்முள்ளி கொட்டைக்கரந்தை திருநீற்றுப்பச்சை செந்திராய் பொற்றலைக்கரிப்பான் இவைகளின் சாற்றிலும் ஆலம்விழுதுக் கஷாயத்திலும் அரைத்து வகைக்கு மூன்று புடம்போட்டு எடுக்க செந்தூர

மாகும். அதில் பணவிடை அனுபானங்களில் சாப்பிட தாதுகட்டும். நரம்புகள் முறுக்கேறும். திரேகம் பலக்கும். பத்தியமில்லை.

கருவங்க செந்தூரம்

அரைப்பலம் சுத்திசெய்த கருவங்கம் அயச்சட்டியிலிட்டு உருக்கையில் அரைப்பலம் ரசம் கெந்தகம் மனோசிலை அரிதாரம் வகைக்குக்கால்பலம் இவைகளை ஒன்றாய் பொடித்து வைத்திருந்து உருகிய வங்கத்தில் சிறுகத்தூவிப் பிறகு கற்றாழைச்சோற்றில் கடுக்காய்ப்பொடி தூவிப் பிசைந்து வைத்திருக்க ஜலம் ஊரும். அதைவிட்டு அயக்காம்பால் கிண்டிவர செந்தூரமாகும். அதில் பணவிடை எடுத்து நெய்யில் சாப்பிட நீரிழிவு நீங்கும். சுக்குக்கியாழத்தில் சாப்பிட சுரம் நீங்கும். கரிசாலைச் சாற்றில் கொள்ள காமாலை பாண்டு நீங்கும. இச்சாபத்தியம்.

தாம்பிர செந்தூரம்

சுத்திசெய்த தாம்பிரம் பத்து விராகனிடை கெந்தகம் ஐந்து விராகனிடை இரசம் ஐந்து விராகனிடை இவைகளை கல்வத்திலிட்டு நொச்சி இலைச்சாற்றால் மூன்று நாள் அரைத்து அரசிலையைப்போல் லேசாகத்தட்டி காய வைத்துப் பிறகு ஒரு சட்டியில் பாதிவரைக்கும் உப்பு கொட்டி அதன்மேல் வில்லைகளைப் பரப்பி மேலும் உப்பு கொட்டி அடுப்பிலேற்றி தீபம் போல் எட்டு சாமம் எரித்து ஆற்றியெடுக்க செந்தூரமாகும். அதில் பணவிடைஎடுத்து திரிகடுகு சூரணத்தில் சாப்பிட குன்மவாயு, பீலிகை, பவுத்திரம், பெருவயறு, நீர்கோவை, நீராமை இவைகள் தீரும். பத்தியம் பசுவின் நெய் பால் சேர்த்துக் கொள்ளலாம்.

நாகச்செந்தூரம்

ஒருபலம் நாகத்தை உருக்கி இலுப்பை நெய்யில்பத்து முறை சாய்த்துச் சுத்தி செய்து குகையிலிட்டு உலையில் வைத்து உருக்கி அதில் ஒருபலம் மனோசிலையைப் பொடித்துத் தூவி ரெணகொழிஞ்சி வேரால் கிண்டிவர நீறும். அதைக் கல்வத்திலிட்டு சூதம் வீரம் வகைக்கு ஒருபலம் கூட்டி முலைப்பாலால் நாலு ஜாமம் அரைத்துப் பின்பு கெந்தகம் அதற்கு ரெட்டிப்பாய்ச் சேர்த்து மஞ்சள் கரிசலாங் கண்ணிச் சாற்றாலரைத்து ஆறுமுறை கோழிப்புடம் போடச் செந்தூரமாகும். அதில் குன்றிஎடை அனுபானங் களில் சாப்பிட காசம், குன்மம், எரிகுன்மம், கவுசி, பணங்குலை, கிராணி, உள்மூலம், மேகம், வாதம், பீலிகை, காமாலை, காய்ச்சல், குளிர், மாந்தாரகாசம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

லிங்க செந்தூரம்

ஒரு பலம் லிங்கத்தை அயச்சட்டியிலிட்டு அதற்குக் கீழும் மேலும் ஒருபலம் கெந்தியை பொடித்துப் போட்டு காற்படி கழுதைப்பாலைச் சிறுகச் சிறுக மெழுகு போலுருகும்படி விட்டுக்கொண்டு நாலுஜாமம் எரித்து எடுத்துக் கழுவிப் பொடித்துப் பணவிடை இஞ்சிச் சாற்றிலும் திரிகடுகு சூரணத்திலும் கொடிவேலி கியாழத்திலுங்கொடுக்க சன்னி காசம் வாதம் எண்பதும் தீரும். இச்சாபத்தியம்.

கரியுப்புச் செந்தூரம்

ஒண்ணேகால் பலம் கரியுப்பை எடுத்து எருக்கன்பால் திருகுகள்ளிப்பால் தும்பை அவுரி மருதம்பட்டை குமரி எலுமிச்சம்பழம் பொடுதலை இவைகளின் சாற்றில் அரைத்து

வகைக்கு இரண்டு புடம்போடச் செந்தூரமாகும். அதில் மூன்று பணவிடை எடுத்து தேனிற்குழைத்துக் கொடுக்க குன்மம் உதரரோகம் க்ஷயம் சூலைவீக்கம் வாயு கிராணி முதலானவை தீரும். இச்சாபத்தியம்.

கந்தர்காளகண்ட மேக நாரயனசெந்தூரம்

எட்டாங்காச்சல் வெடியுப்பு பதினைந்து பலம் வெங்காரம் ஒருபலம் படிகாரம் பத்துபலம் வெண்மையாய் வறுத்த துருசு அரைப்பலம் நவச்சாரம் ஒருபலம் இந்துப்பு அரைப்பலம் சிவக்க வறுத்த அன்னபேதி அரைப்பலம் இவற்றை கல்வத்திலிட்டுப் பொடித்து மூன்றுபங்குசெய்து ஒரு பங்கை பாலில் திராவகமிறக்கி, மற்றொரு பங்கில் விட்டுப் பிசறிக் காயவைத்துக்கொண்டு திராவகமிறக்கிச் சீசாவில் வைத்துக் கொண்டு, சுத்தி செய்து வாலைரசம் முப்பது விராகனிடை சுத்தி செய்த நெல்லிக்காய் கெந்தகம் பதினைந்து விராகனிடை, சுத்திசெய்த சாதிலிங்கம் பதினைந்து விராகனிடை சுத்தி செய்த அரிதாரம் பத்து விராகனிடை, தங்கரேக்கு இரண்டு விராகனிடை, இவைகளை மேற்படி திராவகத்தால் ஒரு ஜாமம் ஆட்டிக் குப்பிக்கு முந்தி ஏழுசீலைமண் செய்து அதில் போட்டு மேல்மாவுக்கல் மூடி போட்டு ஒரு பெரிய சட்டியில் அரிமணலாகிய கருமணல் நாலுவிரக்கடை போட்டுப் பரப்பி குப்பியை வைத்துத் தொப்பையளவு மறுபடியும் மணலால் மூடி மேற்சட்டி மூடி வாய்க்குச் சீலைமண் செய்து காயவைத்து கணபதியை துதித்து அடுப்பிலேற்றி ஆவாரன் விறகால் தீபகமலம் காடாக்கினியாய் இரண்டு ஜாமம் எரித்து மேற்சட்டியைத் திறந்து பிரடையை நீக்கி சலாகைப் போட்டு கிண்டிக் கொடுத்து நிறமில்லாவிட்டால் பின்னும் இரண்டுஜாமம் எரித்து ஆறவிட்டெடுக்க செந்தூரமாயி ருக்கும்.

அந்த செந்தூரத்தை குப்பியிலடைத்து சண்முகக் கடவுளைத் துதித்து வைத்துக் கொள்ளவும். தேகபல மறிந்து அதில் அரைப் பணவிடை எடுத்து தகுந்த லேகியம் கிரதம் ரசாயனம் சூரணம் கியாழம் முதலிய அனுபானங்களில் கலந்து ஒரு மண்டலம் சாப்பிட சுரரோகத்தொகை 312ம் கபத்தால் கிளத்தரோகம் 252 ம் முத்லிய அதோங்கத்தைப் பற்றிப் பிறக்கின்ற ரோகங்கள் 3123 ம் தீரும். சரீரத்துக்குள்ள அழகு தாதுபுஷ்டி மிகுதியுண்டாம். நோய்களுக்குத் தகுந்த பத்தியமிருக்கவும்.

செந்தூர வகை சிட்கா முற்றிற்று

உ

கடவுள் துணை

ஐந்தாவது
மெழுகு வகை சிட்கா

லிங்கமெழுகு

குமரிச்சாற்றில் கடுக்காய் தூளைப் போட்டுப் பிசைந்து வைத்து அதில் வருகிற நீரைப் பத்து விராகனிடை லிங்கத்திற்கு ஒரு ஜாமம் சுருக்குக் கொடுக்கவும். சீனாக்காரம் துருசு வெங்காரம் பூநீரு வகைக்கு ஐந்து விராகனிடை கல்வத்திலிட்டு எறுக்கன் பால்விட்டு மெழுகுபோல அரைத்து மூன்று பங்கிட்டு ஒரு பங்கை லிங்கக் கட்டிக்குப் பூசி நன்றாய்க் காய வைக்கவும். அதேபோல மற்ற இரண்டு பங்கையும் லிங்கக் கட்டியின் மேற்பூசிக் காயவைக்கவும். மண்ணையரைத்து துணியில் பூசி ஐந்து சீலை செய்து குக்குடப்புடம் போட்டு எடுத்துக் கரண்டியில் வைத்து கொடிக்கள்ளிச் சாற்றால் ஒரு ஜாமம் சுருக்குக் கொடுத்துக் கட்டியில் ஊசியினாற் குத்திப் பார்க்க ஊசி இறங்கும். அந்தப் பதத்தில் கல்வத்திலிட்டு அரைக்க மெழுகாகும். அதில் பணவிடை தக்க அனுபானத்துடன் கொடுக்க கிரந்தி, குஷ்டம், கரப்பான், காசம், சுரம் சூலை, நீரோடுதல், புண், பேதி, வாதம், ரணம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

வீரமெழுகு

பரங்கிப்பட்டை, கொடிவேலி வேர், சிவன்வேம்பு சமூலம் சேங்கொட்டை இவைகளை ஓர் நிறையாக எடுத்துக் கருக்கிப் பாண்டத்திலிட்டுக் குழித்தைலமிறக்கி சுத்திசெய்த

சவ்வீரம் லிங்கம் ரசகற்பூரம் இவைகள் வகைக்கு மூன்று விராகனிடை, ரசம், அரிதாரம், துருசு பற்பம், இந்துப்பு வகைக்கு ஒரு விராகனிடை இவைகளை மயினமாகப் பொடித்துக் கரண்டியிற் போட்டுக் காற்படித்தயிலம்விட்டு ஓயாமல் கிண்டிக் கொடுக்கவும். வற்றின பின்பு தேன் அரைக்கால்படி விட்டுக் கிண்டிக் கொடுக்கவும். மெழுகு பதத்தில் கல்வத்திலிட்டு சாதிக்காய், கார்போகரிசி, திரிகடுகு, கோஷ்டம் அரத்தை தேசாவரம், அக்கிராகாரம், சன்னி நாயகம் திப்பிலிமூலம், ஓமம், திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை வகைக்கு ஒரு விராகனிடை பொடித்து வடிகட்டிச் சேர்த்து தேன்விட்டு இரண்டு ஜாமம் மெழுகு போல் அரைத்து தந்தச்சிமிளில் அடைத்து வைத்துக் கொள்ளவும். சுண்டக்காய்ப் பிரமாணம் நல்லவெல்லத்தின் உள்வைத்து ஏழு வேளைச் சாப்பிட நெஞ்சடைப்பு மார்புக்குத்து விப்புருதி, வலிப்புகள், வயற்றுவலி முகவாதசன்னி, சூலை 18, கரப்பான் உதிரத்திரக்ஷி தேகக்கடுப்பு சூதவாய்வு மந்தாரக்காசம் சன்னி தோஷம் கை கால் விழுதல் கருப்பு வெள்ளைச்சொரி, சிரங்கு படர்தாமரை குஷ்டம் மேகரணம் கிரந்தி அரையாப்பு மேகப்புற்று துர்மாங்கிச அடைப்பு இவைகள் தீரும்; பத்தியம் புளி புகை தள்ளவும். கொஞ்சம் இருமல் வரும், பல் கட்டும்.

ரசமெழுகு

ஒருபலம் கெந்தகத்தில் பசுவின் வெண்ணையைப் போட்டு உருக்கி மூன்றுமுறை மிளகுதக்காளிச் சாற்றிலும். இரண்டு முறை வேலிப்பருத்திச் சாற்றிலும், சாய்த்தெடுத்து அதையும் நாலு சேங்கொட்டையும் வெட்டி அரைக்கால்படி விளக்கெண்ணையில் போட்டுக் காய்ச்சி ஒரு சொட்டுக் கீழே விட்டுப்பார்க்க கெந்தகம் நிறமில்லா திருந்தால் அந்த

பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு ஒரு விராகனிடை சுத்திசெய்த ரசத்தில் விட்டு மத்தித்து வேளைக்குக் கால்பலம் வீதம் சரக்கரையில் சாப்பிட மேகம் 21, சூலை கிரந்தி, அரிசிரங்கு வெட்டை இவைகள் தீரும்.

வேறுவித ரசமெழுகு

கெந்தகம் பதினைந்து விராகனிடை, எடுத்து பசுவின் வெண்ணை இரண்டு பலம், சேர்த்துத் தீயிற் கொளுத்திச் சுடர்தயிலமிறக்கி கல்வத்திலிட்டு ரசம் நான்கு விராகனிடை சேர்த்து மெழுகுபோல் அரைத்து வைத்துக் கொண்டு ஒரு பணவிடை வீதம் மூன்றுநாள் ஆறுபொழுது நல்ல வெல்லத்தில் சாப்பிட வாதசூலை தீரும். சங்கன் குப்பிச்சாற்றில் சாப்பிட கிரந்தி, அரையாப்பு, பவுத்திரம் தீரும். சிறு செருப்படைச் சாற்றில் கொடுக்க சிரங்கு சொரி இவைகள் தீரும்.

லிங்க ரசகற்பூர மெழுகு

இரசகற்பூரம் ஒரு விராகனிடை, லிங்கம் ஒரு விராகனிடை, இவைகளை முலைப்பாலில் எலுமிச்சம் பழச்சாறு தேன் இவைகளில் வகைக்கு ஒருசாமம் அரைத்து கரண்டியில் வழித்துப் போட்டு மேற்படி சாறு கொஞ்சம் விட்டு தீபம்போல் எரிக்க உருகி மெழுகு போலாகும் அதில் பணவிடை வீதம் கருப்பட்டியில் கொடுக்க வயிற்றுவலி சூதகத்திரக்ஷி நீங்கும். திரிகடுகுப் பொடியில் சாப்பிட வாய்வு தீரும். பத்தியமாகக் கொள்ளவும்.

வாந்திபேதிக்கு கைகண்ட மெழுகு

ஒரு பலம் மிளகாய் வறுத்து விரையும் காம்பும் நீக்கி தோலைக் கல்வத்திலிட்டு குங்குமப்பூ ஒரு விராகனிடை

கோரோசனை அரை விராகனிடை இரசச் செந்தூரம் ஒரு விராகனிடை, சாதிலிங்கம் ஒரு விராகனிடை பச்சை கற்பூரம் கால் விராகனிடை (இதில் குங்குமப் பூவை கரண்டியில் வதக்கிக் கொண்டும் ரசச் செந்தூரத்தை வெற்றிலைச் சாற்றில் சுத்தி செய்தும்) ஒவ்வொன்றாகக் கல்வத்திலிட்டுத் தேன்விட்டு இரண்டு சாமம் அரைத்து மெழுகாகும் சமயத்தில் பலகை கற்பூரம் மூன்று விராகனிடை கொளுத்தினதும் அமர்த்திக் கூடச்சேர்த்து மற்றும் ஒருசாமம் அரைத்தெடுத்துக் குப்பியிலடைத்து வைத்துக்கொள்ளவும். ஊழிகண்ட பேர்களுக்கு பச்சைக் கடலைபிரமாணம் கொடுக்கவும். தாகம் அதிகம் கண்டால் ஆற்றுமணலும் நாவுரிஞ்சி சமூலமும் போட்டுக் கருக்கினதில் இரண்டுபடி ஜலம் விட்டு ஒருபடி தண்ணீராய்ச் சுண்டக்காய்ச்சி கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுத்துவரவும் தாகம் நீங்கும்.

மெழுகுவகை சிட்கா முற்றிற்று.

உ

கடவுள் துணை

ஆறாவது

லேகியவகை சிட்கா

அமிர்தசஞ்சீவி லேகியம்

வல்லாரை	ஆறுபலம்
சிருபுள்ளடி	ஆறுபலம்
கொடுப்பை	ஆறுபலம்
சிற்றாமுட்டி	ஆறுபலம்
தாழைவிழுது	ஆறுபலம்

இந்த ஐந்து சரக்கையும் இடித்து இரண்டுபடி தண்ணீரில் போட்டு வற்றக்காய்ச்சிக் கியாழமிருத்துக் கொண்டு பசுவின் பால் இளநீர் வகைக்குபடி ஒன்று கலந்து அதின்மேல் மேற்பரணை நீக்கின பத்துபலம் இஞ்சியை மைபோலரைத்து கியாழத்துடன் சேர்த்து அடுப்பேற்றி வேகவைத்து வெந்ததின் பேரில் சீனிகற்கண்டு பனிரெண்டுபலம், போட்டு பாகு செய்து பிறகு, கோஷ்டம், வால்மிளகு, ஏலம், கருஞ்சீரகம், நற்சீரகம், ஜாதிக்காய், கிராம்பு, அக்கராகாரம், சிவதை, ஓமம், கருக்குமூலம் திரிகடுகு, அரைத்த ஜாதிபத்திரி, தாளிசப் பத்திரி அதிவிடையும் திரிபலை இவைகள் வகைக்கு அரைபலம் வீதம் வெதுப்பிப் பொடித்த சூரணத்தையும் வில்வப்பூவின் பாலில் அவித்துச் சுத்திசெய்து பரங்கிப் பட்டை இரண்டுபலம் அன்னபேதி, காயம், முந்திரிப் பழம்,

பேரீச்சம்பழம் கூகைநீர் வகைக்கு அரைப்பலம் குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், அபின் வகைக்கு ஆறு கழஞ்சு பொடித்தச் சூரணத்தையும் அரைப்பலம் தேற்றான் விரையை ஆவின் பாலில் ஊறவைத்து அரைத்ததையும் நாலுபலம் சீந்தில் சர்க்கரையும் சிறுகச்சிறுகப் போட்டு மருந்துக்குத் தகுந்த நெய்யை சிறுகச்சிறுகவிட்டுக் கிண்டி மெழுகுபதத்திலிறக்கி ஆற்றி ஒருபடி தேன்விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவர மேகத்திலெடுத்த சகலரோகமும் அஸ்திசுரம் காங்கை, சீதம், இரத்தம் விழுதல் வாயு பாண்டு சோகை காமாலை முதலான சகல ரோகமும் தீரும் இச்சாபத்தியம்.

வில்வாதி லேகியம்

வில்வவேர் ஐந்து பலம் வில்வப்பழம் இருபது இடித்துப் பதக்கு நீரில்போட்டு மூன்றுபடியாய் வற்ற வைத்து கஷாயத்தில் வெல்லம் பத்துபலம் கரைத்துக் காய்ச்சிப் பாகுசெய்து திப்பிலி மூலம், செவியம் சித்திர மூலம், மிளகு, சீரகம், ஏலம், லவங்கம், சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி : அதிமதுரம் கூகைநீர், வாலுளுவையரிசி, சடாமாஞ்சி, அதிவிடையம், இந்துப்பு வகைக்கு இரண்டுபலம் குங்குமப்பூ, கிராம்பு, பத்திரி: சாதிக்காய், கோரோசனை வகைக்கு இரண்டு விராகனிடை வெதுப்பி பொடித்துத்தூவி நெய்விட்டு லேகியஞ்செய்து வேளையொன்றுக்குக் கொட்டைப்பாக்குப் பிரமாணஞ் சாப்பிட்டுவர குன்மசத்தி விக்கல், நெஞ்சுவலி, அரோசிகம் மூக்கு நீர்ப்பாச்சல், குலை எரிவு, காமாலை, கிராணி ஈளை இருமல், வயற்றுவலி கிரிமி மூலந்தீரும். இச்சாபத்தியம்.

ஆவாரம் பூ லேகியம்

ஆவாரம் பூச்சாறு	ஒரு படி
பசுவின்பால்	ஒரு படி
செவ்விளநீர்	ஒரு படி

ஆக இம்மூன்றும் ஒருபாத்திரத்தில் விட்டு,

முதிர்ந்த ரஸ்த்தாளிப்பழம்	பனிரெண்டு
அத்திப்புட்டை இடித்துப்பிழிந்தசாறு	அரைப்படி
கொடிமாதுளம்பழம் பிழிந்த காறு	முக்கால்படி
புளிப்புமாதுளம்பழம்	இரண்டரை
எலுமிச்சம்பழம்	ஏழரை
சோட்டாக்கிச்சிலிப்பழம்	இரண்டரை
மணியிலாக்கிச்சிலிப்பழம்	இரண்டரை
சீமை அத்திப்பழம்	இரண்டரை

இந்தப் பழங்களை ரசம் பிழிந்து வடிகட்டி மூன் சாறுடன் சேர்க்கவும் பிறகு

திராட்சைப்பழம்	*இரண்டரை பலம்*
பேரீச்சம்பழம்	*ஒன்றேகால் பலம்*
வாதுமைப்பருப்பு	*இரண்டரை பலம்*
சாரைப்பருப்பு	*இரண்டரை பலம்*
கசகசா	*இரண்டரை பலம்*

இவைகளைப் பசும்பாலில் நெகிழ மைபோலரைத்து மேற்படி சாற்றில் கரைத்து அடுப்பிலேற்றி சாறு ஒன்றுக்கு பாதியாய்ச் சுண்டி வரும்போது.

கற்கண்டு	*ஐந்து பலம்*
சர்க்கரை	*ஏழரை பலம்*

சேர்த்துக் கரைத்து முக்கால்பாகு பதம் வருங் காலத்தில் சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய்தோல் நெல்லிக்காய் தோல் தானிக்காய்தோல் சோம்பு சீரகம் தனியா ஏலக்காய் லவங்கம் ஜாதிக்காய் ஜாதிபத்திரி வால்மிளகு, கூகைநீர், லவங்கப்பட்டை, லவங்க பத்திரி சிறுநாகப்பூ அதிமதுரம் கர்கடகசிங்கி வாய்விளங்கம் நிலப்பனைக் கிழங்கு பூமிசக்கரைக் கிழங்கு அமுக்கிறாக் கிழங்கு நன்னாரிவேர் பரங்கிச்சக்கை வாலுளுவை வித்து முருங்கைவித்து ஆவாரைவித்து உருவித்து சப்ஜாவிரை பூனைக்காலிவிரை துளசிவிரை முள்ளங்கிவிரை வெள்ளரிவிரை வெட்டிவேர் தேற்றான்விதை சீந்தில் சர்க்கரை ஆலன் விழுதின்கொழுந்து சந்தனம் ஆக தினுசுக்கு கால் பலம் ஆகவும் தாளிசபத்திரி மாசிக்காய் தினுசுக்குப் பலம் வீசமாகவும் இந்தச் சரக்குகளைச் சுத்தப்படுத்தி வெய்யிலில் உலர்த்தித் தனித்தனியே இடித்து வஸ்திரகாயஞ் செய்து வகைக்குப் பலம்படி நிறுத்தெடுத்துக் கொண்டு பசும்பாலில் பிட்ட வித்து சுத்திசெய்து எடுத்துக்கொண்டு இந்த ஈரம் உலர்ந்தபின் கல்வத்திலிட்டு சூரணமாகப் பொடித்துக் கொண்டு கல்வத்தில் குலாப்பு பலம் அரையே அரிக்கால் புகதனா அம்பர் வீசம் ருபாயிடை பம்பாய் குங்குமப்பூ பச்சை கற்பூரம் கோரோஜனம் ஜுன்திரியாபர்க் தினுசுக்கு கால் விராகனிடை ஆக சரக்குகளைப் பொடி செய்து சூரண கல்வத்தில் கலந்து வைத்துக் கொண்டு மேற்படி பாலில் சிறுகச்சிறுகத் தூவித்துழாவி கிளறிப் பாகும் சூரணமும் ஒன்றுபடும் சமயத்தில் பசுநெய் வீசை காலேவீசம் விட்டு கையோயாமல் கலக்கும் படிக்குத் துழாவி லேகிய பதத்தில் இறக்கி,

தங்கரேக்கு இரண்டரை அல்லது தங்கபஸ்பம் கால் விராகனிடை வெள்ளிரேக்கு இரண்டரை அல்லது வெள்ளி பஸ்பம் கால் விராகனிடை சேர்த்துக் கொடுத்து இரண்டரை பலம் பன்னீர் தெளித்து ஆறி வருங்காலத்தில் தேன்

இரண்டரை பலம் விட்டுப் பிசைந்து இளஞ்சுடுகையுடன் சாடியில் வழித்து வைத்து வாய்மூடி வஸ்திரபந்தனம் செய்து விதிப்படி கால் மண்டலம் தானியப்புடம் வைத்து எடுத்து அந்த லேகியத்தில் கொட்டைப்பாக்கு அளவு எடுத்து காலை மாலை இரண்டு வேளையும் ஒரு மண்டல காலம் அமிர்தம்போல்எண்ணிச் சாப்பிட மேகம் மந்தாக்கினி பாண்டு வாய்வு நீரிழிவு முதலிய மூத்திரரோகம் குன்மம் க்ஷயம் அதிதூலம் அதிசுஷ்கம் உடல் விருத்தி உதிரரோகம் முதலிய ரோகங்கள் நீங்கி ஞாபகசக்தி சுக்கில பரிசுத்தம் புஷ்டியுமாகி சரீரதாதுகள் இறுகிப் பலத்தைக் கொடுக்கும். இவைகளன்றியும் மேகம் இருபத்தொன்றுக்கும் இரசித பஸ்பத்திலும் இரசசெந்தூரத்திலும், நீரிழிவுக்கு அபிரேக்கு செந்தூரத்திலும், தேகபுஷ்டிக்கு தங்கசம்பூரம் இரசிதபஸ்பம் லோகசெந்தூரத்திலும், வாய்வுக்கு அயச்செந்தூரம் முதலாகிய செந்தூரங்களிலும், கொடுக்கச் சீக்கிரத்தில் குணமாகும். இச்சாபத்தியம்.

நெல்லிக்காய் லேகியம்

அறுபதுபலம் நெல்லிவற்றலை முப்பத்திரண்டுபடி தண்ணீரில் போட்டு நான்கு படியாய் வற்ற வைத்து வடித்த கியாழத்தில் இருபத்தைந்து பலம் சக்கரையைப் பாகுசெய்து அதில் அதிமதுரம் கூகைநீர் முந்திரிப்பழம் வகைக்குப் பலம் இரண்டு பேரிச்சம்பழம் திப்பிலி வகைக்குப் பலம் மூன்று இவைகளை அரைத்து நெய் விட்டுக் கிண்டி மெழுகுபதத்தில் தேன்விட்டுப் பிசைந்து வேளை யொன்றுக்குப் புன்னைக்காய்ப் பிரமாணம் சாப்பிட வாந்தி பித்தம், காமாலை பித்த பாண்டு, வரட்சி, திமிர்வாய்வு, சோகை, நீர்சுருக்கு, குன்மம், உடம்பெரிவு, இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

சுக்கு லேகியம்

நூறு பலம் சுக்கைச் சிதைத்து பதக்குநீரிற்போட்டு எட்டொன்றாய் வற்ற வைத்து கஷாயத்தை வடித்து அதில் பத்து பலம் பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகு செய்து ஓமசூரணம் கருவேப்பிலைச் சூரணம் வகைக்குப் படி அரை வீதந்தூவி அரைப்படி நெய்விட்டுச் கிண்டி வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்குக் கொட்டைப் பாக்குப் பிரமாணம் சாப்பிட்டு வர கிராணி, மூலம், திசைவாய்வு, அதிசாரம், கடுப்பு இரத்தம் பாரிசவாய்வு, வீக்கம், சூலை, பொருமல், மந்தம், செரியாமை புளித்த ஏப்பம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

மிளகு லேகியம்

நூறு பலம் மிளகைச் சிதைத்து பதக்குநீரில் போட்டு எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி வடித்துக்கொண்டு அதில் பத்துபலம் கற்கண்டைக் கரைத்துப்பாகு செய்து அக்கிராகாரம் சீரகம் கிராம்பு யேலம், கோஷ்டம் மதுரம், வாய் விளங்கம், பத்திரி நருக்குமூலம் வகைக்கு ஒருபலம் இடித்து தூவி, நெய்நாழி விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்கு கொட்டைபாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவர தொண்ணூற்றாறு கபம், நீர்தோஷம் சில்விஷம், வாதம் வாய்வு இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

திப்பிலி லேகியம்

நூறுபலம் திப்பிலியை நொறுக்கி தூணிநீரில் போட்டு எட்டொன்றாய் வற்றக்காய்ச்சி கியாழத்தை வடித்துக் கொண்டு அதில் பத்துபலம் கற்கண்டை கரைத்துப் பாகு செய்து சுக்கு அரத்தை அக்கிராகாரம் கடுக்காய், ஓமம்,

சீரகம், கொத்தமல்லி, வெட்பாலை அரிசி, சண்பகப்பூ, கோஷ்டம் வகைக்கு ஒருபலம் பொடித்து வடிகட்டித் தூவி அரைப்படி நெய் விட்டுக் கிண்டி தேன் அரைக்கால் படி விட்டுப் பிசைந்து வேளைஒன்றுக்கு புன்னைக் காயளவு கொள்ள சிலேத்துமம் தொண்ணூற்றாறு வாதம் அதிசாரம் வாய்வு குன்மம், உப்பிசம் இவைக்ள் தீரும். இச்சாபத்தியம்.

இஞ்சி லேகியம்

ஒருபடி ஆவின் நெய்யில் முப்பது பலம் சீனியைக் கலந்து காய்ச்சிக்கரைத்த பின்பு இறக்கி அதின்மேல் தோல் நீக்கின பத்து பலம் இஞ்சியை எலுமிச்சம் பழம் சாற்றால் நயமாக அரைத்து உலர்த்தின சூரணத்தையும் உப்புக் கலந்த மோரில் அரிந்து ஊறப்போட்ட பிரண்டை உலர்ந்த கரிப் பூவரசன்பட்டை இவைகளின் சூரணம் வகைக்கு ஒருபலம் வாலுளுவையரிசி, தாளிசப்பத்திரி, கடுகு, மல்லி, சித்திரமூலம், கர்க்கடக சிங்கி, குராசாணி ஓமம், மிளகு, சீரகம், ஏலம், திப்பிலி, அதிமதுரம், கோஷ்டம், திப்பிலிமூலம் வகைக்கு அரைப்பலம் இவைகளை இடித்து வடிகட்டின சூரணத்தையுந் தூவிக் கிண்டி வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவர பித்தவாய்வு உஷ்ணம், சத்திகுன்மம் அரோசியம் விக்கல், அஸ்திசுரம் சன்னி அஜீரணவாய்வு உப்பிசம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

அஷ்டகுன்ம லேகியம்

தைவேளை, பிரண்டை, குப்பைமேனி இவைகளின் சாறு வகைக்கு ஒருபடி ஒன்றாய்க் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சிக் குழம்பு பதத்தில் கல்வத்திலிட்டு, பதினைந்து பலம் இலுப்பை அரப்புச்சுட்ட கரியும், திரிகடுகு, ஓமம் வகைக்கு

ஒருபலம் கடுகுரோகினி அன்னபேதி குராசானி காயம் வகைக்கு மூன்று கழஞ்சு இவைகளையும் கூடப்போட்டு மெழுகுபோல் அரைத்துப் பின்பு, ஐந்து பலம் பனைவெல்லத்தைச் சேர்த்துப் பிசைந்து தான்றிக்காய்ப் போல் குளிகை செய்து வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதஞ் சாப்பிட்டுவர அண்டவாத குன்மம், கெண்டை, உப்பிசம், சமியாகம், பெருவயறு, வாய்வு திரக்ஷி, மலக்கட்டு வாயால் நீர் ரத்தம் வடிதல், சகல வாய்வுந் தீரும். பத்தியம் உப்பு புளிப்பு இவைகளை தள்ளவும்.

நஷ்ட இந்திரியத்துக்கு லேகியம்

முருங்கைப்பூ பத்துபலம் பசும்பால் அரைபடி இரண்டுங் கலந்து அடுப்பிலேற்றி எரித்து முருங்கைப்பூ குழைய வெந்தபிறகு பிசைந்து பிழிந்த சக்கையை நீக்கி ஜாதிக்காய் ஜாதிபத்திரி லவங்கம் லவங்கப்பட்டை குரோசாணி ஓமம் தினுசுக்கு பலம் ஒன்றாக இவைகளைச் சூரணித்து வடிகட்டி சீனாகற்கண்டு பதினைந்து பலம் மேற்படி பாலில் சேர்த்துப் பாகுபதத்தில் சூரணத்தைக் கொட்டிப் பசும்நெய் ஐந்துபலம் விட்டு லேகிய பதமாய்க்கிளறி ஆறவிட்டு தேன் ஒன்றேகால் பலம் விட்டுப் பிசைந்து அந்தி சந்தி இரண்டு வேளையும் கொட்டைப் பாக்களவு சாப்பிடவும். இச்சாபத்தியம்.

பஞ்ச தீபாக்கினி லேகியம்

திரிகடுகு, ஏலம், சீரகம் வகைக்கு ஒருபலம் வெதுப்பி பொடித்து கற்கண்டு பாகு செய்து அதில் சூரணத்தை தூவி நெய் அரைக்கால்படி விட்டுக்கிண்டி மெழுகு பதத்தில் ஆற்றி தேன் மாகாணிவிட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டை பாக்கு பிரமாணம்

சாப்பிட்டுவர, வாய்வு, வாதம், உஷ்ணம், பித்தவாய்வு, சரீரத்தில் உளைவு, குத்தல், வலி கடுப்பு, எரிச்சல் பேதி பொருமல் வாயுகிராணி இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

லேகியவகை சிட்கா முற்றிற்று

=====

உ

கடவுள் துணை

ஏழாவது
எண்ணெய் வகை சிட்கா

பித்தம் நாற்பதுக்கும் அயத்தெண்ணை

எலுமிச்சம்பழம் பதினைந்து அறுத்து உப்பு வைப்பதுபோல் ஒரு பலம் அரப்பொடியை உள்ளே வைக்கவும். ஒரு வீசை சாம்பிராணிப் பூண்டென்ற பிரமிவழுக்கையைச் சுத்தம் செய்து பேர்பாதியாக்கி ஒரு பெரிய பாண்டத்தில் போட்டு காலரைப்படி தண்ணீர் விட்டு மேற்படி பழத்தை வைத்து வெள்ளை வெங்காயம் இரண்டுபலம் பொடித்து மேல்தூவி பின் பேர்பாதி இலையை மூடி அசையாமல் அடுப்பிலேற்றி தின மொன்றுக்கு இரண்டு நாழிகை ஒன்பது நாள் எரிக்கவும். சிதரச் சுண்டினபிறகு நன்றாகப் பிசைந்து கிட்டியால் பிழிந்து சரி எடை சித்தாமணக்கெண்ணை சேர்த்து மெழுகு பதமாய் காய்ச்சவும். அரையணாயிடைப் பிரமாணம் சாப்பிட்டு இரண்டு நாழிகைப் பொறுத்து தயிர் சாதம் சாப்பிடவும்.

பித்தம் நாற்பதும் தலைகறுக்கு, தலைப்புற்று, தலை நடுக்கம் தேகநடுக்கல் காமாலை தலைமயிர் உதிர்தல் கால் கை அசதி பித்தப்பாண்டு முதலியவைகள் நீங்கும். விந்துகட்டி பலம் அதிகமாகும் இச்சாபத்தியம்.

முடக்கத்தான் எண்ணெய்

முடக்கத்தான்சாறு, கள்ளியை வாட்டிபிழிந்த சாறு வகைக்குப்படி முக்கால் சிற்றாமணக்கெண்ணை படி ஒண்ணரையில் சிவதைவேர் கொடிவேலிவேர் வெள்ளைக் காக்கணம்வேர் சிற்றரத்தை சதகுப்பை தேவதாரம் இந்துப்பு திப்பிலி பெருங்காயம் கடுகுரோகணி கழற்சி பருப்பு வகைக்கு ஒருபலம், சுத்திசெய்த நேர்வாள முத்து இருபது வெள்ளுள்ளி நான்குபலம் இவைகளை அரைத்து போட்டுக் காய்ச்சி வடித்து வைத்துக்கொள்ளவும். கடும் பத்தியமாய் கரண்டிவீதம் சாப்பிட தீரும் வியாதிகள் அண்டவாதம் குடல்வாதம் வாய்வு இவைகள் நீங்கும்.

கொடிவேலி எண்ணெய்

நல்லெண்ணெய் கால்படி கொடிவேர்ப்பட்டை அரைப்பலம் கருப்புகட்டி கால்பலம் அரைத்துப்போட்டு மெழுகு பதத்தில் காய்ச்சிக் கடுகுடன் வேளை ஒன்றுக்கு உச்சிகரண்டி வீதம் மூன்றுநாள் ஆறுவேளை சாப்பிட அரையாப்பு தீரும். கடும்பத்தியமாக இருக்கவேண்டும். நாலாம் நாள் தலைக்கு தண்ணீர் விடவும் அன்றைக்கு வறுத்த உப்பு சேர்க்கவும்.

நீரடைப்புக்கு எண்ணெய்

விளக்கெண்ணெய் படி காலில் ஈருள்ளி பலம் 1 சிதைத்துப் போட்டு பொன்னிறமாய்க் காய்ச்சிவடித்து பொரித்த வெங்காரம் கடுக்காய்த்தூள் வகைக்கு கழஞ்சு 1

போட்டுக் கலக்கிக் கொடுக்க தீரும் வியாதிகள் துன்மாங்கிசம் நீரடைப்பு கல்லடைப்பு இவைகள் தீரும். இச்சா பத்தியம்.

குழந்தைகளுக்கு மாந்த எண்ணெய் குமாரதேவர்முறை

சன்னியாக்கிழங்கு என்றுசொல்லுகிற செம்பிரண்டை நெடுங்கொடியாய்ப் படராத குருங்கொடியின் கிழங்கு முள்ளங்கிக் கிழங்கு போல் இருக்குமதை பில்லை பில்லையாய் நறுக்கியது இருபத்தைந்து பலம் (வெங்காயம்) பலம் பத்து, உரித்த வெள்ளைப்பூண்டு இரண்டரை பலம் சித்தாமணக்கெண்ணெய் ஐம்பது பலம் இம்மூன்றையும் சேர்த்து அடுப்பிலிட்டுத் துடுப்பினால் துழாவச் சிலங்கை பதத்தில் எடுத்து வடித்துக்கொண்டு கரிமஞ்சள் அரைப்பலம் கார்போகவரிசி அரைப்பலம், வெட்பாலை அரிசி ஒரு பலம் கருஞ்சீரகம் அரைப்பலம், வெந்தயம் அரைப்பலம், இவைளை இளம் வறுப்பாய் வறுத்து வடிகட்டி மேற்படி எண்ணெயில் கலக்கி குழந்தைகளுக்கு வாரத்துக்கு ஒருமுறை ஒரு கரண்டி கொடுத்தால் மாந்தம் அணுகாது. இச்சாபத்தியம்.

உள்ளுக்கும் மேற்பூச்சுக்கும் கரப்பான் எண்ணெய்

சீரகம் கார்போகவரிசி வெட்பாலையரிசி கருஞ்சீரகம் ஏலம் தினுசுக்கு அரைப்பலம் கம்பிளிப்பிசின் கால்பலம், கடுகு ரோகணி அரையரைக்கால்பலம் இவைகளையும் பொடித்துச் சிறு துத்திவேர்பட்டை ஐந்துபலம், நையத் தட்டி விளக்கெண்ணெய் அரைப்படி விட்டு மேற்படி சரக்குகளையுஞ் சேர்ந்த கல்வத்தில் ஒரு ஜாமம் நன்றாய் அரைத்து மூன்றுநாள் சூரிய புடம்வைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூச தீரும் வியாதிகள் மண்டைக் கரப்பான் கைகால் ரணம் உப்புப்போல் உலர்த்துபோகும். இச்சாபத்தி.

சந்தன எண்ணெய்

சந்தனத்தூள் 8 பலம் நல்லெண்ணெய் பத்து பலம் இவைகளை பதக்குநீரில் கலந்து நீர்வற்றக் காய்ச்சி வடித்து சீசாவிலடைத்துக் கொண்டு பஞ்சில் தோய்த்துக் கையில் வைத்திருக்கத் தேகத்தில் வாடையேறிச் சுகத்தை தரும். சொரி சிரங்கு கரப்பான் புண்ணில் தடவ ஆறும்.

மேக ராஜாங்கத்தெண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய்	4படி
ஈருள்ளிசார்	2படி
கழுதைலத்திச் சாறு	2படி
கொமட்டிச் சாறு	2படி
கையாந்தகரை சாறு	2படி
புளியாரை சாறு	2படி
சங்கு சாறு	2படி
வல்லாரை சாறு	2படி
பொடுதலை சாறு	2படி
செருப்படை சாறு	2படி
கருநொச்சிச் சாறு	2படி
பொன்னாங்கண்ணிச் சாறு	2படி
நுணாயிலைச் சாறு	2படி
ஆடாதோடைச்சாறு	2படி
வெள்ளெருகுச் சாறு	2படி
சிவன்வேம்புச் சாறு	2படி

இந்தப் பதினாறு தினுசுகளின் சாறு வகைக்குப்படி இரண்டு எடுத்து ஒன்றாகக் கலந்து வைத்துக்கொண்டு பிறகு கொடிவேலி பூவரசம் நிலாவரைவேர் கிளிமுக்குக் கிழங்கென்ற கற்றாழைக்கிழங்கு அப்பைக் கிழங்கு

சங்கங்குப்பிவேர் இலைகளை வகைக்கு ஒருபலம் நிறுத்து இடித்து குறுணிநீரிற் போட்டு எட்டொன்றாய் வற்றக் காய்ச்சி கஷாயத்தை வத்து மேற்படி சாறில் சேர்க்கவும்.

ஜாதிக்காய்	-	கசகசா
கிராம்பு	-	கஞ்சா
ஏலம்	-	வலம்புரிக்காய்
சன்னலவங்கப்பட்டை	-	பரங்கிப்பட்டை
வால்மிளகு	-	அழிஞ்சிப்பட்டை
அதிமதுரம்	-	வாலுழுளுவையரிசி
கோஷ்டம்	-	சிறுநாகப்பூ
திப்பிலிமூலம்	-	ரககோசம்
வெங்காரம்	-	வசம்பு
குறோசாணி ஓமம்	-	சுக்கு
தான்றிக்காய்	-	அபிவசன்வாசி
கருஞ்சீரகம்	-	சீரகம்
கார்போகவரிசி	-	ஆனைதிப்பிலி
கஸ்தூரி மஞ்சள்	-	குங்குமப்பூ
அரைத்த சுக்கு	-	சாத்திரபேதி
அதிவிடையம்	-	வாளம்
அக்கிராகாரம்	-	சேங்கொட்டை
சடமாஞ்சில்	-	நவாச்சாரம்
கடுகுரோகணி	-	சத்திச்சாரம்
தாளிசபத்திரி	-	

இந்த நாற்பது தினுசும் வகைக்கு நாற்பது விராகனிடை எடுத்துப் பொடித்துப்பொட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து வைத்துக்கொள்ளவும். வேளை ஒன்றுக்கு உச்சிக்கரண்டி வீதம் மூன்று நாள் ஆறு வேளை உட்கொள்ள தீரும் வியாதிகள் கிரந்தி அரை யாப்பு சூலை விப்புருதி கண்டமாலை மேகம் உஷ்ணம் சோகை

பாண்டு சுழல்வாதம் அண்டவாதம் கல்வாதம் பக்கவாதம் பௌத்திரம் மூலப்புற்று மண்டைச்சூலை வாயுரணம் சூலை இவைகள் தீரும். கடும் பத்தியமாக இருக்கவேண்டும். துவரைப்பருப்பும் வறுத்த உப்பும் கூட்டிக்கொள்ளலாம்.

மதனகாமேசுரப்பு எண்ணெய்

இரண்டுசேர் மதனகாமேசுரப்பூவை மலருமுன் கொண்டுவந்து பதக்கு நீரில் போட்டு வைத்திருந்து மலர்ந்தபின்பு நாலு பலம் நல்லெண்ணை விட்டு வேகவைத்து இறக்கி எண்ணெயைத் தனியாகப் பிரித்து இருத்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். உடம்பிற்பூசிக் கொள்ள சுகம் நல்கும். வசியமாகும்.

ஜாதிக்காய் எண்ணெய்

நல்லெண்ணை ஐந்துபடி, முலைப்பால் அரைக்கால் படி, ஆவின்பால் கால்படி ஒன்றாய்க் கலந்து ஜாதிக்காய் இரண்டு பலம் ஜாதிபத்திரி வெந்தயம் வகைக்கு ஒரு பலம் குமரிச் சாற்றால் அரைத்து மேற்படி எண்ணெயில் போட்டுக்காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும். அதில் ஒரு துளியாவது அல்லது இரண்டு துளியாவது நாசியில் விட தீரும் வியாதிகள் கணம் தோஷம் இரத்தவாந்தி இரத்தக்காசம் வாந்தி இருமல் கக்குவாய் சீதபேதி இவைகள் தீரும் இச்சா பத்தியம்.

எண்ணெய்வகை சிட்கா முற்றிற்று

உ

கடவுள் துணை

எட்டாவது

தைல வகை சிட்கா

சகலரோக நிவாரண சந்தனாதித்தயிலம்

சந்தனத்தூள் பத்து பலம் நன்னாரி நத்தைச்சூரி, தண்ணீர்விட்டான் காரடை இருவேலி அயக்காரசீந்தி இவைகளின் சமூலம் முத்தக்காசு அதிமதுரம் செஞ்சந்தனம் அகில் வில்லவேர் தேவதாரம் மதுரம் கோஷ்டம் லவங்கம் லவங்கப்பத்திரி கருவாய்ப்பட்டை தக்கோலம் வகைக்கு ஒரு பலம் இவைகளை இடித்து தூணிநீரில் போட்டு பதினாறில் ஒன்றாய் வற்றக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

நல்லெண்ணெய் நாலுபடி முசுமுசுக்கைச்சாறு மூன்று படி பொற்றலைக்கையான் சாறு அரைப்படி ஒன்றாய்க் கலந்து பின்பு வால்மிளகு, சுக்கு, கோஷ்டம், பச்சைப் பூலாங்கிழங்கு, அரைத்த ஜடாமஞ்சள், ஓமம், வெளிச்சப் பிசின், வேம்பாடம் பட்டை, ஏலம், மல்லி, அபின், சாதிக்காய், கருஞ்சீரகம், கார்போகவரிசி, சாதிபத்திரி, மாசிக்காய், சண்பகப்பூ, சிறுநாகப்பூ, கிராம்பு, கிளியூரப்பட்டை நாகணம் புனுகு, இவைகள் வகைக்கு இரண்டு விராகனிடை ஆவின் பாலால் அரைத்து முன் கஷாயத்துடன் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி பதத்தில் வடித்து வைத்து கொள்ளவும்.

இந்த எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஒரு நாழிகை நேரத்திற்குப் பிறகு இளஞ்சூடான வெந்நீரில் அரப்புத் தேய்த்துக் குளிக்கவும், இதனால் வாயுக்கட்டு, முத்திய

நீர்ப்பாச்சல், மண்டைநோய், கபாலவலி, கண்ணோய், செவிநோய் வியர்வை, தாகம், பீனிசம், வரக்ஷியீளை, சோகை, விஷபாகம், குஷ்டம், குன்மம், தடிப்பு, க்ஷயம், மேகம், பிரமேகம், கிருகிருப்பு, அரோசியம், இவைகள் தீரும், பத்தியம் ஆட்டிறைச்சி, கத்திரிப்பிஞ்சு முருங்கை துவரை மிளகுநீர் இதுகளாகும். ஸ்நானஞ் செய்ததினம் பகலில் நித்திரை, புகை, பொடி, புத்தகங்கள் வாசிப்பு, அதிகநடை போகம் இவைகள் கூடாது. நீக்கவும்.

வில்வாதித் தைலம்

வில்வவேர் விலாமிச்சம்வேர் கோரைக்கிழங்கு வாழைக் கிழங்கு சீந்தில் இவைகள் வகைக்கு நான்கு பலம் எடுத்து இடித்து எட்டுப்படி தண்ணீரில் போட்டு ஒரு படியாக வற்றக்காய்ச்சிக் கியாழஞ் செய்து கொண்டு கொம்பரக்கு ஒரு சேர் அரை தூணிநீரில் போட்டு நாலுக்கு ஒன்றாய்க் கியாழஞ் செய்து கொண்டு நல்லெண்ணெய் ஒருபடி திரிகடுகு திரிபலாதி கஸ்தூரி மதுரம் கோஷ்டம் கருஞ்சீரகம் மஞ்சள் சந்தனம் கிளியூரபட்டை பூஞ்சாத்துப் பட்டை பச்சைப் பூலாங் கிழங்கு ஏலம் வகைக்கு அரைப்பலம் எடுத்து பசுவின் பாலில் அரைத்து கியாழத்தில் கரைத்து மெழுகுபதமாய்க் காய்ச்சிவடித்து ஸ்நானஞ் செய்துவர தீரும் வியாதிகள் மேகநீர் இருபதும் பித்தம் நாற்பதும் குன்மம் எட்டும் சிரசு நோய்களும் தீரும். பத்தியம் முன்போல்

வெட்டிவேர் தைலம்

வெட்டிவேர் தூள் பத்து பலம் பதக்கு நீரில் போட்டு எட்டொன்றாய் வற்றக்காய்ச்சி நல்லெண்ணெய் நான்கு படி அதிமதுரம் கருஞ்சீரகம் தேவதாரம் கடுக்காய் வகைக்கு அரைப்பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி ஸ்நானம் செய்துவர பீனிசம் மண்டைச்சூலை குஷ்டம் பிரநீர்க்கோவை

கண் புகைச்சல் காதுமந்தம் தேகயெரிவு காந்தல் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

பொன்னாங்கண்ணித் தயிலம்

பொன்னாங்கண்ணிச் சாறு நல்லெண்ணெய் வகைக்கு படி ஒன்று எடுத்து ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம் கருஞ்சீரகம் செங்கழணீர்கிழங்கு கோஷ்டம் வகைக்கு ஒரு பலம் பசுவின் பாலில் அரைத்து மேற்படி சாற்றில் கலந்து அடுப்பேற்றி எரித்து காய்ச்சி வடித்துக் கொண்டு ஸ்நானஞ்செய்துவர உட்சுரம் உஷ்ணம் கைகால் உடம்பெரிவு, கண்ணெரிவு சூடு இவைகள் தீரும். இச்சா பத்தியம்.

கீழ்காய்நெல்லித் தைலம்

கீழ்க்காய்நெல்லி சமூலம் நான்கு துலாம். இடித்து தூணிநீரில் போட்டு எட்டொன்றாய்க் கியாழஞ்செய்து பின்பு எள்ளெண்ணெய் பசுவின் பால் வகைக்கு இரண்டு படி சீரகம் அரைப்பலம் போட்டுக் காய்ச்சி மெழுகு பதமாய் வடித்துக் கொண்டு ஸ்நானஞ் செய்துவர பித்த வெட்டை மஞ்சட்காமாலை வாந்தி தலைமயக்கம் வாயூரல் உட்சுரம் நடுக்கம் இவைகள் தீரும். இச்சா பத்தியம்.

அருகன்வேர் தைலம்.

அருகன்வேர் நூறுபலம் இடித்து தூணிநீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றக்காய்ச்சி வடித்து கஷாயத்தில் நல்லெண்ணெய் ஒருபடி விட்டு கோரைக்கிழங்கு பூமி சக்கரைக் கிழங்கு அமுக்கராங்கிழங்கு வகைக்கு ஒருபலம் பசுவின் பாலாலரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொண்டு ஸ்நானஞ் செய்துவர மூலச்சூடு மேககாங்கை பித்தம் வாதம் அரிகிரந்தி சூலை வயிறெரிவு நெஞ்சுநோய் தேகவரட்சி நீர்கடுப்பு இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

துளசித் தைலம்

துளசிச்சாறு	*ஒருபடி*
திருநீற்றுப்பச்சிலைச்சாறு	*ஒருபடி*
நல்லெண்ணெய்	*ஒருபடி*
பசுநெய்	*ஒருபடி*
பசும்பால்	*நான்கு படி*
சிற்றாமணக்கெண்ணெய்	*இரண்டு படி*

இவைகளை ஒன்றாய்க்கலந்து பிறகு மஞ்சள், மர மஞ்சள், சுக்கு முத்தக்காசு வெட்டிவேர் விலாமிச்சம்வேர் சீரகம் அதிமதுரம் கர்க்கடகசிங்கி சன்னலவங்கப்பட்டை வலம்புரிக்காய் சாதிக்காய் தக்கோலம் சடாமஞ்சி ஓமம் பரங்கிப்பட்டை சண்பகப்பூ கசகசா அதிவிடையம் கடுகுரோகணி பீதரோகணி தேவதாரம் சந்தனக்கட்டை அபின் சிறுநாகப்பூ வகைக்கு மூன்று விராகனிடை எடுத்துச் சுத்தம் செய்துவிட்டு அரைத்து மேற்படி சாற்றில் போட்டு அடுப்பேற்றிக் காய்ச்சிவடித்து வைத்து கொண்டு ஸ்நானம் செய்துவர க்ஷயம் காசம் பீனிசம் குன்மம் கிராணி பாண்டு மண்டையிடி சூலை காதுமந்தம் கண்புகைச்சல் தேகவலி நீங்கும். இச்சாபத்தியம்.

ஸ்நானத்திற்கு மிரிஞ்சித் தயிலம்

நல்லெண்ணெய் இரண்டுபடி பசும்பால் இரண்டுபடி இவையிரண்டும் ஒரு பாண்டத்தில் விட்டு மிளகு ஒருபடி நன்றாகப் பாலிலரைத்து மேற்படி பாலில் கலக்கி மஞ்சள் ஒரு பலம் அதிமதுரம் பலம் செஞ்சந்தனம் பலம் கோஷ்டம் தேவதாரம் சீரகம் கருஞ்சீரகம் வகைக்கு அரைப்பலம் கிராம்பு அரிசிதிப்பிலி வகைக்கு கால்பலம் இலுப்பபட்டை அரைபலம் இவைகளை பசும்பாலால்

நெகிழவரைத்து மேற்படி எண்ணெயில் கலக்கி அடுப்பேற்றி சிறு தீயாகக் காய்ச்சி பக்குவ மணம் உண்டாகும் போது வடித்து அதில் புனுகு சட்டம் ஒரு பலம் தைலமிறக்கி அதையும் சேர்த்து வைத்துக்கொண்டு ஸ்நானஞ் செய்ய கண்டத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளும் தீரும். தலைநோய் கண்சிவப்பு முதலியவைகள் குணமாகும். இச்சாபத்தியம்.

சங்கன்வேர் தைலம்

சங்கன்வேர்ப் பட்டை மூன்று பலம் இடித்து நாலுபடி நீரிற்போட்டு ஒருபடியாய் வற்றக்காய்ச்சிய கியாழத்தில் ஆவின்பால் இளநீர் நல்லெண்ணெய் வகைக்கு அரைபடி கூடவிட்டு மிளகு ஐந்து விராகனிடை பூலாங்கிழங்கு சீரகம் கஸ்தூரி மஞ்சள் வகைக்கு இரண்டரை விராகனிடை இவைகளை அரைத்து கஷாயத்தில் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி வடித்துக்கொண்டு ஸ்நானஞ் செய்ய மேகக்காங்கை சொரி மற்ற தேகத்திலெடுத்த வியாதிகளான வாய்வு முதலான ரோகங்கள் நீங்கும். இச்சாபத்தியம்.

சிறு சந்தனாதி தைலம்

நல்லெண்ணெய் பசும்பால் வகைக்கு ஒருபலம் ஒன்றாய்க்கலந்து அதில் சந்தனத்தூள் இரண்டுபலம் திருமஞ்சனத்திரவியம் கால் பலம் பசும்பாலால் அரைத்துப் போட்டுக் காய்ச்சி பூசிவர பித்தரோகம் உடம்பெரிவு வெட்டை கண் கைகால் காந்தல் தீரும். இச்சாபத்தியம்.

சகல சுரநாசத் தைலம்

அரத்தை அமுக்குராக்கிழங்கு சதகுப்பை கோஷ்டம் மரமஞ்சள் கொம்பரக்கு திரிகடுகு மதுரம் திரிசாதம் கடுகு

ரோகணி முத்தக்காசு வகைக்குக் கழஞ்சு இரண்டுஇடித்து ஒருபடி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்து ஸ்நானஞ் செய்துவர தீரும் வியாதிகள் சுரம் கந்தல் வெப்பு பழஞ்சுரம் சுரத்தினாலுண்டாகும் பல பிணிகளும் தீரும். இச்சாபத்தியம்.

கரிப்பான் தைலம்

கரிப்பான் சாறு நல்லெண்ணெய் வகைக்கு ஒருபடி கற்றாழைச்சாறு நெல்லிக்காய்ச்சாறு வகைக்கு கால்படி கஸ்தூரிமஞ்சள் சாதிக்காய் வகைக்கு ஒருபலம் பசும்பாலினால் அரைத்து மேற்படி சாற்றில் சேர்த்து அடுப்பேற்றி சிறுக தீப்போட்டுக் காய்ச்சி வடித்துக் கொண்டு ஸ்நானஞ் செய்துவர தீரும் வியாதிகள் கண்ணோய் தலைநோய் செவிநோய் பித்தம் உஷ்ணம் பீனிசம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

நச்சுவலிக்கு சம்பீரத்தைலம்

எலுமிச்சம்பழச்சாறு ஒண்ணரைபடி நல்லெண்ணெய் ஒருபடி இவை இரண்டும் ஒன்றாகச் சேர்த்து கர்ப்பூரசிலாசத்து கல்நார் அதிமதுரம் அக்கிராகாரம் லவங்கப்பத்திரி சாத்திரவேதி கோஷ்டம் வாய்விளங்கம் சாதிக்காய் லவங்கப்பட்டை கருஞ்சீரகம் கோரோசனை பூலாங்கிழங்கு மரமஞ்சள் வகைக்கு கால்பலம் அரைத்து மேற்படி எண்ணெயிற்போட்டு அடுப்பேற்றி சிறுதீயாக எரித்துக் காய்ச்சி பதத்தில் இறக்கி வடித்துக்கொண்டு ஸ்நானஞ்செய்து உள்ளுக்குச் சாப்பிட்டுவர மேகபித்தம் நச்சுவலித்தீரும். இச்சாபத்தியம்.

தைலவகை சிட்கா முற்றிற்று.

உ

கடவுள் துணை

ஒன்பதாவது
குளிகை வகை சிட்கா

மதனகாமேசுரக் குளிகை

வாலைரசம் கழஞ்சுமூன்று லிங்கம் கழஞ்சு ஒன்று முருங்கைவித்து சாதிக்காய் முத்தகாசு கிராம்பு அபின் கஞ்சா பூனைக்காலிவித்து பூமிச்சக்கரைக்கிழங்கு நிலைப்பனை கிழங்கு சமுத்திரசோகிவிரை சாதிபத்திரி சாரைப் பருப்பு வெங்காரம் வகைக்கு அரைபலம் இவைகளை பொடித்து முற்றின தேங்காய்க்குள் அடைத்து மூடி சாணியிற் போட்டு பூசிக் காயவைத்து சிரட்டை கருகும் படி புடம்போட்டு ஆறவிட்டு எடுத்து சிரட்டை நீக்கி மெழுகுபோல அரைத்து தேற்றான்விதைப் பிரமாணம் உருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சர்க்கரையில் வைத்துச் சாப்பிட்டு பிறகு பசும்பாலும் அன்னமுஞ் சாப்பிடவும். தாது விர்த்தியாகும். புணருங் காலத்தில் விந்து கலிதமாகாவிட்டால் எலுமிச்சம் பழம்வாயிலிட்டு சப்பி சாறு விழுங்க கலிதமாகும்.

வேறுவகை வீரியவிர்த்திக் குளிகை

அபின் மவனப்பூ கிராம்பு சாதிக்காய் மறாட்டி மொக்கு தங்கபறப்பம் சாம்பிராணிப்பூ முருங்கைவித்து ஆலன்வித்து அரசுவித்து அத்திவித்து அதிமதுரம் இவைகளை ஓர் நிறையாய் முருங்கைப்பூச்சாற்றில் அரைத்துச் சுண்டைக்காய் பிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும். ஆவின்பாலில் முருங்கைப் பூவைப்

போட்டுக் காய்ச்சி வடித்து வேளைக்கு ஒரு உருண்டை மேற்படி கஷாயத்தில் ஒரு மண்டலம் சாப்பிட தேகம் பலத்து வீரிய விர்த்தியாகும் பத்தியம் புளி உப்பு நீக்கவும். பசும்பாலாகும்.

இந்திரிய புஷ்டிக்கு

அமுக்கராக்கிழங்கு நீர்முள்ளிவித்து குருந்தொட்டி வேர் இவைகளை பொடித்து வடிகட்டி திரிகடுகுப் பிரமாணம் ஆவின் வெண்ணெயில் மத்தித்துச் சாப்பிட்டு வர இந்திரிய புஷ்டியாகும்.

இந்திரியம் கட்ட

மூன்று கோழிமுட்டை மஞ்சள் கருவும் அபினும் அக்கிராகாரம் நிலைப்பனங்கிழங்கு சர்க்கரை இவைகளை ஓர்நிறையாய் தேன்விட்டு அரைத்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை செய்து சாப்பிட்டு பிறகு ஆவின் பால் குடிக்கவும் இந்திரியங்கட்டும்.

இந்திரிய பந்தனம்

சிரிகடுகு சிறுநாகப்பூ கிராம்பு பத்திரி வால்மிளகு சீரகம் தக்கோலம் வகைக்குக் கழஞ்சி பதினாறு கோரக்கர் மூலி அபின் வகைக்கு கழஞ்சு ஒண்ணேகால் இவைகளை பசும்பாலில் விட்டு அரைத்து மூன்று வீசும்படி நெய்யில் வேகவைத்து நெய்யை வடித்து வைத்துக்கொள்ளவும். அதில் ஒரு சிறு கரண்டி எடுத்து சாப்பிட்டு பிறகு பாலும் அன்னமும் புசித்துப் புணர கலிதமாகாது. புளி தள்ளவும்.

வீரிய விர்த்திக்கு

சாதிக்காய் அதிமதுரம், கஸ்தூரிமஞ்சள், குங்குமப்பூ லவங்கப்பட்டை, முருங்கைவித்து, பூனைக்காலிவித்து அமுக்கிராக்கிழங்கு, கோஷ்டம், அக்கிராகாரம், கசகசா, ஓமம், குராசானி, சமுத்திராசோகிவிதை இவைகளை ஓர் நிறையாய் சூரணித்து அந்த எடைக்கு கெஞ்சா சூரணஞ் சேர்த்து தேன்விட்டு மூன்றுநாள் அரைத்து தூதுளங்காயளவு சாப்பிட்டு வர வீரிய விருத்தியாகும்.

வீரியவிர்த்திக்கு மதனசஞ்சீவி லேகியம்

ஒருபடி ஆவின்பாலில் நான்குபலம் கோதுமைமாவையும் இருபது பலம் சீனிசர்க்கரையும் போட்டுக் கிண்டி காய்ச்சிப் பாகுபதத்தில் நீர்முள்ளிவிரை நிலைப்பனங்கிழங்கு லவங்கப்பட்டை பனம்வேர் வகைக்கு நாலுபலம் கருவேலம் பிசின் கஞ்சா வகைக்கு இரண்டு பலம், சந்தனம் சாதிக்காய் கிராம்பு பெருஞ்சீரகம் வகைக்கு இரண்டு விராகனிடை, திப்பிலி அரைப்பலம் விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கி ஆற்றி நாலு பேரிச்சம் பழம், தேன் மூன்று பலம் சேர்த்துப் பிசைந்து வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் சாப்பிட்டுவர விந்தூரும். போகமிகும் இச்சாபத்தியம். பசும்பால் சேர்த்துக் கொள்ளவும்.

குளிகைவகை சிட்கா முற்றிற்று

உ

கடவுள் துணை

பத்தாவது

கண்டா அவிழ்த சிட்கா

வினோத கண் தைலம்

செந்தாழம்பூ	ஒரு பலம்
ரெட்டை நந்தியாவட்டை	நான்குபலம்
புளிப்பு மாதளம்பூ	நான்குபலம்
செந்தாமரைப்பூ	ஒன்பதுபலம்

இந்த நாலு தினுசும் இடித்து ரசம் பிழிந்துகொண்டு அந்த ரசத்தினுடன் கூரெல்யெண்ணை இரண்டரைபலம் விட்டு இளம்பதமாய்க் காய்ச்சி வடித்த தைலத்தில் பூத்தேன் ஓண்ணே கால்பலம் லவங்கம் பூ நீக்கியது ஒரு விராகனிடை இவைகளை மேற்படி தைலத்தால் மைபோல் அரைத்துச் சேர்த்து ஒருகுப்பியிலடக்கஞ்செய்து வைத்துக் கொள்ளவும். கண்ணில் காலை மாலை தீட்ட கண் ரோகங்கள் தொண்ணூற்றாறும் தீரும். ஸ்நானத்தினன்று நீக்கவும்.

கண்பூவுக்கு

தேள் கொடுக்கிலை நந்தியாவட்டை புட்பம் ஓர் நிறையாய்க் காய்ச்சி நேத்திரத்தில் காலை மாலை இரு வேளை விட்டுவர கண்பூவு மாறும்.

கண்ரோகங்களுக்கு மை

பீதரோகணி மனோசிலை வகைக்கு ஒரு கழஞ்சி வீதம் வெண்ணையிலும் பாலிலும் அரைத்து புதுசட்டியின் உள்புறத்தில் பூசி பிறகு விளக்கில் நெய்விட்டு தீபமேற்றி சட்டியில் மை பரவ வைத்து அதற்கு நிகர் துணிகட்டி கரிசேர்த்து வெண்ணையில் மத்தித்து நேத்திரத்தில் தீட்ட சகல கண்ரோகங்களும் தீரும்.

கண்ரோகமுடையவர்களுக்கு காலில் தேய்க்க தைலம்

சின்னிச்சாறு நல்லெண்ணெய் வகைக்கு ஒருபடி ஒன்றாய்க் கலந்து அதில் நாபிக்கிழங்கு ஒரு விராகனிடை சிதைத்துப் போட்டுக் காலில் தேய்த்துவர நன்மையாம்.

காதில் சீழ்மாரலுக்கு

சத்திச்சாரணைக்கிழங்கு கிளாவேர் நெல்லிவேர் கையாந்தகரை செப்புநெரிஞ்சில் இவைகளை யோர் நிரையாய் தட்டி ஐந்துபலம் வேப்பெண்ணையில் இட்டு அடுப்பேற்றி காய்ச்சி இறக்கிய தைலத்தை ஆற்றி காதில்விட்டு சீலையால் காதை அடைக்கவும், சீழ்நிற்கும். இப்படி மூன்று நாள் ஆறுவேளை விடவும்.

வேறு காது சீழ்மாரலுக்கு

மனோசிலை தாளகம் சேங்கொட்டை வகைக்கு ஒரு விராகனிடை எடுத்து தூளாக்கி மூன்று பலம் நல்லெண்ணெயிற்போட்டு வெள்ளாட்டு நீர் ஒரு நாழி கூடவிட்டு பதமாய்க் காய்ச்சி வைத்துக் கொண்டு காதுக்கு மூன்று வேளைவிட தீரும்.

காதிரைச்சலுக்கு

தைவேளைச் சாறும் நல்லெண்ணெயும் வகைக்கு இரண்டு பலம் எடுத்து ஒன்றாய்க்கலந்துக் காய்ச்சிக் காதில் மூன்றுநாள்விடக் காதிரைச்சல் தீரும்.

காது மந்தத்திற்கு

முசுமுசுக்கை இலையும் வெள்ளுள்ளியும் சிதைத்து கசக்கி காதில் மூன்றுநாள் விடதீரும்.

காது வலிக்கு

கள்ளியை வாட்டிப் பிழிந்தச் சாறு ஒருபடி, நல்லெண்ணெய் ஒருபடி, வெள்ளுள்ளிச் சாறு ஒருபடி, பசும் பால் ஒருபடி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் முருங்கைவேர், வசம்பு வகைக்கு நாலு கழஞ்சு அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்து வைத்துக் கொண்டு பத்து நாள் காதில் விட்டு சீலையால் அடைத்து வைக்கத் தீரும்.

க்ஷயத்திற்கு சுரசம்

உத்தாமணியிலை, குப்பைமேனி, சங்கிலை, தூதுவளை, ஆற்றுமுள்ளி இலை, செம்முள்ளி இலை, துளசி இவைகளை வகைக்கு ஒருபிடி இடித்து பிட்டவித்துப் பிழிந்துக் கொண்டு காசிடை தேன்விட்டு முத்துப்பவழ பற்பம் சேர்த்துக் கொடுக்கவும், இச்சாபத்தியம்.

தொந்தசுரக்கியாழம்

சிறுதேக்கு, பற்பாடகம், முத்தக்காசு, சீந்திற்கொடி, நன்னாரி, சிறுகாஞ்சொரி, தேவதாரம், கோஷ்டம், பேய்ப்புடல், சுக்கு இவைகள் சம எடையாய் இடித்து

தண்ணீரில் எட்டொன்றாய்க் காய்ச்சி இரண்டு மூன்று வேளை தினம் கட்டு மாத்திரையில் சாப்பிட வாதம், பித்தம், அஸ்திசுரம் இவைகள் தீரும். பத்தியம் புளிப்பு தவிர்க்கவும்.

சகல மேகக் கடுப்புக்கு மாத்திரை

ஆவாரம் விரை ஒரு படி, காசுக்கட்டி, கற்பூரம் நான்கு பலம் இவைகளை பொடித்து தேன்விட்டு ஒரு சாமம் அரைத்து கடலை அளவு உருட்டி உலர்த்தி வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் எண்ணெயில் ஊறவைத்து தேனில் மத்தித்து பதினைந்து நாள்சாப்பிட சகல மேகக் கடுப்பும் தீரும். இச்சாபத்தியம்.

நீர் சுருக்கு ரத்த பிரமியத்திற்கு

அமுக்குரா இலையும் தண்டும் இடித்த சாறு ஒரு நாழி, ஆவின்பால் ஒரு நாழி ஆவின் நெய் இரண்டு நாழி ஒன்றாய்க் கலந்து அதில் அருகன்வேர், தேற்றான் விரை, செங்கழநீர்க்கிழங்கு வகைக்கு நான்கு பலம் அதிமதுரம், பூமிசக்கரைக்கிழங்கு ஒரு விராகனிடை இவைகளைப் பொடித்து ஆவின் பாலால் அரைத்துச் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி இறுத்து அதில் தேன் நாழி, சர்க்கரை அரைவாசிக் கலந்து நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர. மேற்கூறிய வியாதி தீரும், இச்சாபத்தியம்.

நீர்கடுப்பு எரிச்சலுக்கு

ஈருள்ளிச்சாறு அரைக்கால் நாழியில் ஒரு விராகனிடை வெங்காரம் பொரித்துப்போட்டு மூன்றுநாள் ஆறுவேளை சாப்பிடத் தீரும். இச்சாபத்தியம்.

இதுவுமது

இளநீரைக் கண் திறந்து அதில் சீரகம், சீனி, பாசிப்பயர் வகைக்கு ஒரு விராகனிடை போட்டு ஓரிரவு வைத்து காலையில் மருந்தை எடுத்து அரைத்து இளநீரில் கரைத்துச் சாப்பிடவும். இந்தப்படி மூன்றுநாள் ஆறு வேளை சாப்பிட மேற்கூறிய வியாதிகள் தீரும்.

கல்லடைப்புக்கு

சங்கிலை, ஈருள்ளி, பச்சை நெல்லுமி இவைகளை ஓர் நிறையாய் இடித்துச் சாறுபிழிந்து நாளொன்றுக்கு கால்படியாக இருவேளையும் சாப்பிட கல்நீங்கி நீர் இறங்கும்.

சதையடைப்புக்கு

ஆவின் நெய் ஒரு நாழி, மூக்குவெட்டிச் சுத்திசெய்த சேங்கொட்டை பதினைந்து நறுக்கிப் போட்டுக் காய்ச்சி கருப்பாக வரும் பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு நாளொன்றுக்கு ஒரு காசு எடைவீதம் ஐந்து நாள் சாப்பிட சதையடைப்புத் தீரும்.

இதுவுமது

பசலி நிலைக்கத்திரியிலை வகைக்கு பத்துபலம் இடித்துக் கியாழஞ் செய்து கால்படி வீதங்கொள்ள தீரும்.

மூத்திரகிரிச்சின நீர்கட்டுக்கு

பரங்கிப்பட்டை, கெந்தகம், சாதிக்காய், கிராம்பு சிறுநாகப்பூ, சாதிப்பத்திரி, பச்சைகற்பூரம், அசுவகெந்தி கொடிவேலி, சடாமாஞ்சில் இவைகளை ஓர் நிறையாய்

சூரணித்து இதற்குச் சரி எடை சீனி கலந்து திருகடி கைப்பிரமாணம் ஆவின்நெய்யில் கலந்து சாப்பிடத் தீரும்.

நீரிழிவிற்கு

வெள்ளை குங்கிலியம், கற்கண்டு வகைக்கு ஏழுபலம் பொடித்துக கொண்டு வேளைஒன்றுக்கு ஒருபலம் வீதம் அரைப்பலம் நல்லெண்ணையில் மத்தித்து நாளொன்றுக்கு இருநேரமாக ஏழுநாள் சாப்பிட்டு வர நீரிழிவு வெட்டை தீரும். இச்சாபத்தியம்.

அரையாப்புக்கட்டிக்கு மாத்திரை

சவுக்காரம், சித்தண்ட வெள்ளை இவைகளை நீர் விட்டு அரைத்துப் பூசக் கரையும். கரையாவிட்டால் அதன்மேல் புளியும் சேராங்கொட்டையும் சேர்த்து அடைதட்டி மூன்றுநாள் கட்டவும், இது போல் புளியும், கால்பலம் வெள்ளை பாசாணமும் சேர்த்துக் கட்டலாம். கரையும்.

அரையாப்புக்கு உள்ளுக்குச் சாப்பிடும் எண்ணை

பச்சைக் கொடிவேலி வேர்பட்டை எட்டுப்பலம் தோல் நீக்கிய வெள்ளைப்பூண்டு எட்டுப்பலம் அரைத்து ஒருபடி நல்லெண்ணெயில் போட்டு ஒருபடி பொடுதலைச் சாறு கூட விட்டுக் காய்ச்சி வெள்ளைப் பூண்டு பொன்னிறமாய் வரும் சமயத்தில் இறக்கி வைத்துக் கொண்டு நாளென்றுக்கு ஒரு கரண்டி கடுகுடன் சாப்பிடத் தீரும். உப்பு புளி தள்ளி பத்தியமாய் இருக்கவும்.

அரையாப்புமுதலான ரணங்களுக்குக் களிம்பு

லிங்கம், மிருதார்சிங்கி, ரசகற்பூரம், வெள்ளை குங்கிலியம், கடுக்காய், மாசிக்காய், காசிக்கட்டி,

தான்றிக்காய் இவைகளை ஓர் நிறையாய் பொடித்து பசும் வெண்ணையால் அரைத்து தண்ணீரில் ஒருநாள் மிதக்கப் போட்டு ரணங்களில் போட ஆறும்.

ஈளை இருமலுக்கு

கற்கடகசிங்கி, திரிகடுகு, திரிபலை, அரத்தை, கண்டங்கத்திரிவேர் இவைகளை யோர் நிறையாய் பொடித்து திரிகடிகையளவு வென்னீரிலாவது தேனிலாவது சாப்பிட ஈளையிருமல் தீரும். இச்சாபத்தியம்.

இதுவுமது

ஆடாதோடையிலையை இடித்து பிட்டு வைத்து அரைக்கால்படி சாறு பிழிந்து அதில் திரிகடுகு, திப்பிலி பொடித்து வஸ்திரகாயஞ் செய்து தூவி சாப்பிட மேற்கண்ட வியாதிகள் தீரும்.

வாதத்திற்கு

மிளகு பொடுதலைக் கொழுந்து இவை இரண்டும் ஓர் நிறையாய் நிறுத்து இடித்து வேளைக்கு ஒரு கொட்டைப் பாக்களவு சாப்பிட வாதநோய் தீரும்.

காசரோகத்திற்கு

சத்திச்சாரணைக் கிழங்கு, சாதாவேரிக் கிழங்கு, சீந்திற் கொடி, ஆடாதோடை, தூதுவேளை, பிரமி, அமுக்குறா வகைக்கு ஒரு பலம் இடித்து ஆறுபடி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணெய் ஒருபடி கூடவிட்டு மிளகு, இந்துப்பு சுக்கு திப்பிலி கடுக்காய், நற்சீரகம், கற்கடகச் சிங்கி, ஏலம், கிராம்பு வெள்ளுள்ளி, கடுகுரோகணி வகைக்கு மூன்று கழஞ்சி அரைத்துப்

போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்குச் சாப்பிட்டு வர ஸ்நானம் செய்து வர காசரோகம் தீரும். இச்சாபத்தியம்.

சுவாசகாசத்திற்கு

தாளகம், லிங்கம், மனோசிலை, வெங்காரம், திரிகடுகு, நாவிக் கிழங்கு வகைக்கு இரண்டு விராகனிடை இவைகளை சுத்தி செய்து இஞ்சிச் சாற்றால் மூன்று ஜாமம் அரைத்து வைத்துக் கொண்டு சிற்றரத்தை கியாழத்தில் அருந்த சுவாசகாசம் க்ஷயம் கபம் சுரந்தீரும்.

சேத்தும வெள்ளைக்கு

வெங்காரம், கழஞ்சியிடை, நிறுத்து எடுத்து அதை நெருப்பிலிட்டுப் பொரித்து வைத்துக்கொண்டு ஏழு நாளைக்கு அதை பகிர்ந்துச் சாப்பிட்டுவர சேத்தும வெள்ளை தீரும். இச்சாபத்தியம்.

விக்கலுக்கு

திப்பிலி	ஒருபலம்
சீரகம்	இரண்டு பலம்

இவை இரண்டு தினுசும் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொண்டு விக்கல் கண்டபோது ஒரு சிட்டிகை எடுத்து தேனில் குழைத்துண்ண விக்கல் தீரும்.

வயற்றுக்கடுப்புக்கு

ஆலன்விழுது துளிர்	ஒருபலம்
எருமைத்தயிர்	ஆறு பலம்
எலுமிச்சம்பழச்சாறு	ஒருபலம்

இவை மூன்றும் சேர்த்து கலந்து கொடுக்க வயற்றுக் கடுப்பு தீரும். இச்சாபத்தியம்.

சொரிக்கு

பூவரசன்பட்டை	ஒருபலம்
நீராகாரம்	ஒரு ஆழாக்கு

இவை இரண்டு தினுசும் அரைத்து மூன்றுநாள் உட்கொண்டிடில் உடம்பிலுள்ள சொரி நீங்கும். பத்திய மில்லை.

இருமலுக்குக் கியாழம்

ஈயத்தண்டு இலை, தூதுவளை இலை, நற்சங்கு, திப்பிலி, சுக்கு இவை ஐந்தும் நீரில்போட்டுக் காய்ச்சி சாப்பிட இருமல் தீரும்.

இரவில் காணும் சுரத்திற்கு கியாழம்

பேராமுட்டி, விஷ்ணுக்கரந்தை, பாலைபேய்ப் பாகல், சொற்றி, நாகமல்லிகை, சிற்றாமுட்டி இவைகளின் வேரும், கடுகுரோகணி, சுக்கு இவைகள் வகைக்கு கால்பலம் வீதம் எடுத்துச் சிதைத்து இரண்டுபடி ஜலத்தில் போட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்து ஒன்பது வேளை கொடுக்கத் தீரும். பத்தியமில்லை.

இதுவுமது வேர்க் கியாழம்

திப்பிலி, மருட்கிழங்கு, சுக்கு, நிலவேம்பு, கடுகுரோகணி நெல்லி, பேய்ப்புடலன், பாவட்டைவேர் இவைகளை ஓர் நிறையாக எடுத்து மேற்கூறியபடி கியாழஞ் செய்து ஒன்பது வேளை சாப்பிடத் தீரும்.

குளிர் காய்ச்சல் நடுக்கல் காய்ச்சலுக்கும் கியாழம்

மிளகை கியாழம் செய்து சாப்பிட்டாலும் சாப்பிடலாம். அல்லது தேவதாரம், பர்ப்பாடகம், கடுக்காய், சுக்கு, கண்டங்கத்திரி, கோஷ்டம், குமிழ்வேர், சிறுதேக்கு இவைகள் வகைக்கு ஒருபலம் வீதம் எடுத்துப் பொடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

தாபசுரம் நாவரட்சிக்குக் கியாழம்

வில்வவேர், விலாமிச்சம் வேர், நெரிஞ்சல் வேர், நன்னாரி, அதிமதுரம், சோம்பு, விலாவரிசி, முத்தக்காசு, நெற்பொரி, முந்திரிப்பழம், நெல்லி, முள்ளி, இலுப்பைப் பூ இவைகளைச் சமமாகச் சேர்த்து சுக்கு மூன்று விராகனிடை கூடச் சேர்த்து இடித்து கியாழம் செய்து கொடுக்கத்தீரும்.

சலிக்காய்ச்சல் மந்தத்திற்குக் கியாழம்

நெற்பொரி, வருத்தப் பாசிப்பயர், பர்ப்படாகம், பெரும் பூசணி வேர் வில்வவேர் வகைக்குச் சுழஞ்சு பத்து எடுத்து இடித்து இரண்டுபடி தண்ணீரில் போட்டுகியாழம் செய்து கொடுக்கத் தீரும். தாகம் அதிகமாக இருந்தால் கால்பலம் அதிமதுரத்தைக் கூட்டிக் காய்ச்சிக் கொடுக்க நீங்கும்.

சுளுக்குக் காய்ச்சலுக்கு

கொத்தமல்லி, திரிகடுகு, பேறாமுட்டி, வகைக்கு மூன்று கழஞ்சு எடுத்து இடித்து நாழிநீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்து மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

அதிசாரக் காய்ச்சலுக்குக் கியாழம்

பங்கம்பாளை, உலர்ந்த இஞ்சி, முத்தக்காசு, சிறுகாஞ் சொரிவேர் இவைகளை ஓர் நிறையாக எடுத்து இடித்து ஒருபடி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய் வற்றக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும். பத்தியமில்லை.

மாம்பட்டை, அதிவிடையம், முதியார் கூந்தல் உலர்ந்த இஞ்சி, முத்தக்காசு இவைகளை வேளைஒன்றுக்கு கால்பலம் வீதம் சிதைத்து ஒருநாழி நீரில் போட்டு அரைக்கால் நாழியாய் வற்றவைத்து இலவன் பிசின் கால் விராகனிடை தூள் செய்து போட்டுக் கொடுக்கத் தீரும்.

குளிர்க்காய்ச்சலுக்குக் கியாழம்

கோஷ்டம், திப்பிலி, கண்டங்கத்திரி, சிறுதேக்கு நிலக்குமிழ், உலர்ந்த இஞ்சி, நிலவேம்பு, முத்தக்காசு, சிறு காஞ்சொரி, சீந்தில், பர்ப்பாடகம் இவைகள் வகைக்குகால் பலம் எடுத்து இடித்து இரண்டு நாழி தண்ணீரில் போட்டு அரைக்கால்படியாய் வற்றக்காய்ச்சி ஆறுவேளை கொடுக்கத் தீரும்.

விடாக்குளிர் சுரத்திற்குக் கியாழம்

கரிப்பான் பிடி ஒன்று, வேப்பீர்க்குப்பிடி ஒன்று எடுத்து மூன்றாய் நறுக்கி காய்ந்த சட்டியில் போட்டு பொன்னிறமாக வெதுப்பி அதில் ஒருபிடி மிளகைப் போட்டு வறுத்து வெள்ளுள்ளி ஒரு பூண்டைகிள்ளிப்போட்டு கரிப்பானிலை நொச்சியிலை வகைக்கொரு கொட்டைப் பாக்கு அளவு அரைத்துப்போட்டு ஒருபடி நீர்விட்டுக் காய்ச்சி கால்படியாய் வற்றக்காய்ச்சிக் கொடுக்கவும். இப்படி மூன்றுநாள் ஆறு வேளை கொடுக்கத் தீரும்.

மந்தாக்கினி வாய்விற்கு சூரணம்

மேற்றோல் நீக்கின எட்டுப்பலம் இஞ்சியை சிறுவில்லையாக நறுக்கி அதில் பதினைந்து எலுமிச்சம்பழம் பிழிந்து சூரியனில் வைத்து உலர்த்தி சரியிடை நெய்விட்டு வறுத்து கூகைநீர் ஒருபலம், சீரகம் இரண்டுபலம், சதுர்ச்சாதம் திரிசாதம் திரிகடுகு தாளிசபத்திரி குரோசானி ஓமம் வாய் விளங்கம் வகைக்கு மூன்று கழஞ்சு இடித்து சூரணஞ் செய்து சீனி மூன்று பலம் கூட்டிக் கலந்து வேளை ஒன்றுக்கு திரிக்கடிகைப் பிரமாணங் கொள்ளத் தீரும். இச்சாபத்தியம்.

அக்கினிமந்த வாய்வு பொருமலுக்குக் சூரணம்

கண்டங்கத்திரி முள்ளி சத்திச்சாரணை ஓமம் கொடிவேலி திரிகடுகு நவாச்சாரம் திரிபலை பஞ்சலவணம் சத்திச்சாரம் சீரகம் கருஞ்சீரகம் இவைகளை வகைக்கு கால்பலம் வீதம் பொடித்து இதற்குச் சரியிடை அசுவகந்திச் சூரணங் கூட்டி தேனிலாவது இஞ்சி ரசத்திலாவது கொடுக்கத் தீரும்.

பித்தவாய்வு உஷ்ணவாய்வு மந்தத்திற்கு கியாழம்

தோல் நீக்கின இஞ்சி நாற்பத்தொன்பது பலம் எடுத்துச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி அரைப்படி நெய்தெளித்து பொன்னிறமாய் வறுத்துச் சூரணித்துக் கொண்டு கடுகுரோகணி தேசாவரம் சுக்கு சீரகம் வகைக்கு முக்கால்பலம் லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, நெல்லிமுள்ளி வகைக்கு அரைப்பலம், ஜாதிக்காய் அதிமதுரம் சிறுநாகப்பூ லவங்கம் தாளிசபத்திரி கூகை நீர் வகைக்கு கால்பலம் இடித்து சூரணஞ் செய்துகொண்டு இருவகைச் சூரணத்தையும் ஒன்றாய்க் கலந்து சர்க்கரை பத்துப்பலம் கூட்டி வேளை ஒன்றுக்குத் திரிகடிகைப் பிரமாணம்

சாப்பிடத் தீரும் இச்சாபத்தியம்.

சகலவாய்விற்குப் பொதுப்பிரயோகக் கியாழம்

வேப்பீர்க்கு, மூர்க்கரை சாரணைவேர், கருவேப்பீர்க்கு முருங்கையீர்க்கு வகைக்கு ஒருபிடி சுக்கு மஞ்சள் வகைக்கு மூன்று விராகனிடை இவைகளை சிதைத்து இரண்டுபடி சலத்தில் போட்டு அரைக்கால்படியாய் வற்ற வைத்து சாதம் சாப்பிட்டான பிறகு இந்தக் கியாழத்தை சாப்பிட்டுவர சகல வாய்வுந் தீரும்.

வாதகுன்மத்திற்கு லேகியம்

வில்வக்காய் இருபதுபலம், வில்வவேர் பதினைந்து பலம் இவைகளை இடித்து நாலுமரக்கால் தண்ணீரில் போட்டு எட்டொன்றாய் வற்ற வைத்து அதில் பதினைந்து பலம் வெல்லங் கரைத்து வடிகட்டி பாகுசெய்து இஞ்சி மூன்று பலம், மிளகு நான்குபலம் திப்பிலி உள்ளிவகைக்கு இரண்டு பலம், மஞ்சள் அசமதாகம் வகைக்கு ஐந்து பலம் வெவ்வேறாக இடித்து வடிகட்டி பாகில் தூவி பசுவின் நெய் கால்படி விட்டு லேகியஞ் செய்து நாளுக்கொரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் சாப்பிடத் தீரும் இச்சா பத்தியம்.

பித்தகுன்மத்திற்கு கியாழம்

வில்வவேர்	கால்பலம்
முல்லைவேர்	கால்பலம்
சுக்கு	கால்பலம்
ஏலம்	கால்பலம்
பாசிப்பயறு	கால்பலம்
நெல்லிப்பருப்பு	கால்பலம்

இந்த ஆறு தினுசும் எடுத்து இடித்து ஒருபடி தண்ணீரில் போட்டு அரைப்படியாய் வற்றக் காய்ச்சி மூன்றுநாள் ஆறு வேளை கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

பித்தகுன்மத்திற்கு சூரணம்

சத்திச்சாரணை வேரை ஆவின் பாலால் அவித்து உலர்த்தி சூரணஞ்செய்து சீனி கலந்து வைத்துக்கொண்டு திரிகடிகைப் பிரமாணம் நெய்யிலாவது தேனிலாவது குழைத்துச் சாப்பிடத் தீரும். பத்தியமில்லை.

சிலேத்தும குன்மத்திற்கு சூரணம்

திரிகடுகு	ஆறுவிராகனிடை
திரிபலை	ஆறுவிராகனிடை
கல்லுப்பு	ஆறுவிராகனிடை
செவியம்	ஆறுவிராகனிடை
அரத்தை	ஆறுவிராகனிடை
ஏலம்	ஆறுவிராகனிடை
லவங்கப்பட்டை	ஆறுவிராகனிடை
கெந்தகம்	ஆறுவிராகனிடை
கண்டந்திப்பிலி	ஆறுவிராகனிடை
கருஞ்சீரகம்	ஆறுவிராகனிடை
சீனிக்காரம்	ஆறுவிராகனிடை
அக்கிராக்காரம்	ஆறுவிராகனிடை
கிராம்பு	ஆறுவிராகனிடை
இந்துப்பு	ஆறுவிராகனிடை
ஜாதிபத்திரி	ஆறுவிராகனிடை
அமுக்குராவேர்	ஆறுவிராகனிடை
கடுகுரோகணி	மூன்று விராகனிடை
ஜாதிக்காய்	மூன்று விராகனிடை

வெங்காரம்	மூன்று விராகனிடை
நவாச்சாரம்	அரை விராகனிடை
கல்மதம்	அரை விராகனிடை

இவைகளை வெதுப்பி பொடித்து அதில் கொம்புப் பிரண்டையை அவித்து உலர்த்தி இடித்த சூரணம் ஆறு விராகனிடை கூட்டி அதற்கு நிகர் வல்லிச் சூரணம் ஐந்து பலமும் சேர்த்து திரிகடிகைப் பிரமாணம் தேனில் குழைத்துச் சாப்பிட தீரும். இச்சாபத்தியம்.

வலிகுன்மத்திற்கு நெய்

அரைப்படி தேங்காய்ப்பாலில் இந்துப்பு ஒருபலம் பூண்டு ஒரு பலம் சாரம் இரண்டு கழஞ்சு பொடித்துப் போட்டுக் கள்ளிப்பால் இரண்டு கழஞ்சு கூடவிட்டுகாய்ச்சி நெய்வடித்துக்கொண்டு அதில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வரத் தீரும். இச்சாபத்தியம்.

அக்கிக்கு மேல்பூசும் மருந்து

ஊமத்தன் இலையை அரைத்து எருமை வெண்ணையில் குழைத்து அக்கிமேல் பூசிவர மாறும்.

தீச்சுட்டபுண்ணுக்கு பூசும் மருந்து

சுண்ணாம்பும் எருக்கன்பூவும் ஓர் நிறையாக எடுத்து அரைத்துப்பூச தீச்சுட்டக் காந்தல் நீங்கும். நீருலாத்தி இலையை அரைத்து பொடித்துப் புண்ணில்போட ஆறும். ஒருசட்டியில் நீர்புளித்தத் தண்ணீர் விட்டு வேடுகட்டி திருவாத்தி இலையை இடித்து அதன்மேல் வைத்துப்பிட்ட வித்துப் புண்ணில் வைத்துக்கட்ட ஆறும்.

பித்த வெடிப்புக்கு மருந்து

உப்பு, செம்மறிச்சாணி, அரசன்பட்டை, வகைக்கு ஒருபலம், எருக்கன்பூ மூன்றுபலம் இவைகளை இடித்து வடித்து துணியில் முடிந்து ஒத்தடம் செய்து, சீரகம் ஒரு விராகனிடை சுண்ணாம்பு மூன்று விராகனிடை, துருசு ஐந்து விராகனிடை இவைகளை எருமை வெண்ணையில் களிம்புபோல் அரைத்து வெடிப்பில் போட்டு வரத்தீரும்.

கிராணிகடுப்பிற்கு அமிர்தாதி உருண்டை

கோரோசனை, சண்பகப்பூ, கோஷ்டம், வெட்டிவேர் ஏலம், அதிமதுரம், சாஸ்திரபேதி, பாசிப்பச்சை, தான்றிக் காய் வகைக்கு இரண்டுவிராகனிடை எடுத்து வெட்டிவேர் கியாழத்திலும் முலைப்பாலிலும் அரைத்து உருண்டை செய்து மேற்படி பாலில்கொடுக்க மேற்படி கடுப்புமாந்தம் சன்னி, கழிச்சல், பிரளி, குடல்பிட்டல், வாதபித்தசுரம், உஷ்ணம் நீங்கிவிடும். இச்சாபத்தியம்.

சீழ்மூலத்திற்குக் கியாழம்

சென்னாயுருவியிலை ஒருபிடி, நல்லெண்ணெய் கால் படி, கற்றாழஞ் சோறு சர்க்கரை இவையெல்லாம் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி கொடுக்கத் தீரும். பத்தியமில்லை.

ஊதுகாமாலைக்கு

சிட்டம் அரப்பொடி, வெள்ளைப்பூண்டு, முருங்கை இலை, கரிப்பான், முற்றின தேங்காய்ப் பருப்பு, இவைகளை சமமாக எடுத்து இளநீர்விட்டு அரைத்து அரை கழஞ்சுவீதம் இரண்டு நேரம் அரையாழாக்கு நீர்முள்ளிக் கியாழத்தில் கலந்து கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

மஞ்சள் காமாலைக்கு மாத்திரை

அதிமதுரம் சங்கம்வேர்ப்பட்டை இலை இரண்டும்ஓர் நிறையாய் எடுத்து எலுமிச்சம்பழச் சாறுவிட்டு அரைத்து தேற்றான்விரைப்பிரமாணம் உருண்டை செய்துவைத்துக் கொள்ளவும். முலைப்பாலிலாவது ஆவின் பாலிலாவது மூன்று நாள் கொடுக்கத்தீரும்.

நடுக்கல் வாந்தி அசீரணத்திற்கு கியாழம்

அசமதாகம், காடிச்சோறு, வசம்பு, நுணாயிலை மிளகு பலம் வீதம் பொடித்துத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி சங்கு அளவு கொடுக்கத்தீரும்.

வாந்திக்கு மருந்து

கலைமான் கொம்பு, திப்பிலி, அதிவிடையம் இவைகளை சமனாக எடுத்துப் பொடித்து கடிகைப் பிரமாணம் தேனில் குழைத்துக் கொடுக்கத் தீரும்.

வாந்திவோக்காளத்திற்கு கியாழம்

வசம்பு, மிளகு பஸ்பம் செய்து காடிச்சோறு கூட்டிக் கியாழஞ் செய்து சங்கு அளவு கொடுக்கத்தீரும். மீறினால் நன்னாரி வேர்ப்பட்டையைக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் மேற்படி கியாழத்தில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

பல்லில் ரத்தம் விழுதலுக்கு

பச்சை நன்னாரிவேரை வென்னீர்விட்டுக் கொட்டப் பாக்களவு அரைத்து வென்னீரில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

பீனிசத்திற்கு தைலமும் திரியும்

கையாந்தகரை ஆதண்டை குரட்டைப்பழம் வெற்றிலை, நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், முசுமுசுக்கை முடக்கத்தான் இலைகளின் சாறு வகைக்குக் கால்படி நல்லெண்ணெய் ஒருபடி ஒன்றாய்க் கலந்து அதில் மிளகு கால் பலம் அதிமதுரம், கோஷ்டம், சண்பகப்பூ, நற்சீரகம், வாய் விளங்கம், கொத்தமல்லி, வால்மிளகு, கஸ்தூரி மஞ்சள், ஏலம், லவங்கம், தாளிசபத்திரி, லவங்கப்பட்டை வகைக்கு ஐந்து விராகனிடை, கோரோசனம் ஒரு விராகனிடை இவைகளைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சிப் பதமாகயிருத்து மூன்று நாளைக்கொருமுறை முழுகியும் மிளகை கொட்டைப்பாக்கு பிரமாணம் வெற்றிலைச் சாற்றில் அரைத்து வெள்ளை துணியில் தடவி அப்பால் குரட்டைப் பழச்சாற்றால் இந்த துணியை எட்டுமுறை நனைத்து நிழலில் உலர்த்தித் திரித்துக் கொளுத்தி அதில் வரும் புகையை நாசியில் பிடிக்கவும் தீரும்.

கபாலவலி பீனிசத்திற்குத் தைலம்

ஆதண்டை, செங்கொன்றை சடைக்கஞ்சா, தைவேளை வெற்றிலை, குரட்டைப்பழம், பச்சைமஞ்சள், இஞ்சி, முசுமுசுக்கை, காஞ்சாங்கோரை இவைகளின் சாறு வகைக்கு ஒருபடி நல்லெண்ணெய் இரண்டுபடி இவைகளொன்றாய் கலந்து அதில் எட்டிக்கொழுந்து சதகுப்பை சுக்கு வசம்பு, உள்ளி, தேவதாரம், அரத்தை, கடுக்காய், வகைக்குக் கழஞ்சி இரண்டு வீதம் நொச்சிச்சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி பதத்தில் இறக்கி வடித்து முழுகிவரத் தீரும்.

மேகச்சூட்டுத் தைலம்

சவுரிபழச்சாறு, நல்லெண்ணெய், பொடுதலைச் சாறு, ஆவின்பால் இவைகள் வகைக்குப் ஒருபடி ஒன்றாய்க் கலந்து அதில் ஒருபலம் மிளகை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்துவரத் தீரும்.

சிரசில் நீரேற்றம் மண்டையிடிக்குத்தைலம்

நல்லெண்ணெய் ஒருபடி பசுமஞ்சட்சாறு ஆதண்டச் சாறு ஆவின்தயிர் தண்ணீர் வகைக்கு கால்படி ஒன்றாய்க் கலந்து அதில் குருந்தொட்டி முள்ளி, சுண்டை, வேளை, கீழ்காய் நெல்லி இவைகளின் வேர், கோஷ்டம், தேவதாரம், மிளகு சுக்கு வகைக்கு இரண்டு கழஞ்சு குக்கில் ஒரு கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து மூழ்கி வரத்தீரும். அன்று பகல் நித்திரை நீக்கவும்.

முற்றும்

உ

சிவமயம்

மகாமகத்துவம் பொருந்திய தெய்வலோக வாசியான

ஊர்வசி ரசவாத சிட்கா

காப்பு

தாது நால்மறை வேதம் விளங்கிய
நாதவிந்து மாராஜ யோக வாழ்க்கையால்
ஓதும் பைந்தமிழ் ஆயிரத் தைந்நூறு
மாது ஊர்வசி வாரியைப் போற்றுவாம்.
ஏக மாகி இருந்த பராபரம்
தேக ஜீவ சைதன்னிய கிந்தனை
யோக மாக நினைந்திடும் ஊர்வசி
தோகை யாள்சொல்லும் வாத சுருக்கமே

பஞ்சபூத சரக்குகள் விபரம்

பிருதிவி:

உலோகத்தில்	-	பொன்
கருவில்	-	மலம்
பாஷாணத்தில்	-	தாளகம்
லவணங்களில்	-	கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு
பாஷாணபிரிவில்	-	தொட்டி
உபரசத்தில்	-	சிலாசத்து, அயக்காந்தம், பூநாகம், இராசவர்த்தம்,
பூத நிறம்	-	மஞ்சள்

அப்பு :

உலோசத்தில்	- காரீயம்
கருவில்	- சிறுநீர்
பாஷாணத்தில்	- வீரம்
லவணங்களில்	- மூன்றுவித சாரம்
பாஷாணப் பிரிவில்	- சிங்கி, கார்முகில், பவழப் புற்று,
	- தீமுருகல், கௌரி சங்கு பாஷாணம்
	- குதிரைப்பல், கோழித் தலை
உபரசத்தில்	- சங்கு, கோழி யண்டம்,
	- கிளிஞ்சல், நண்டு
பூதநிறம்	- பளிங்கு

தேயு (தீ) :

உலோகத்தில்	- தாம்பரம்
கருவில்	- உதிரம்
பாஷாணத்தில்	- லிங்கம்
லவணங்களில்	- சவுட்டுப்பு, வெடியுப்பு,
பாஷாணப் பிரிவில்	- மனோசிலை, வீரம், தாரம் கெந்தி

வாயு :

உபரசத்தில்	- எலும்பு, இந்திரகோபம்,
உலோகத்தில்	- மயிலிறகு, நிமிளை, வெண் காரம்
பூத நிறம்	- சிகப்பு
உலோகத்தில்	- அயம்
கருவில்	- கெந்தகம்
லவணங்களில்	- பூரம், வழலை
பாஷாணப் பிரிவில்	- சூதம்
உபரசத்தில்	- துத்தம், வைகிரந்தம், சுக்கான்,
	- மிருதிபாஷாணம்
பூதநிறம்	- புகை

மொத்தச் சரக்குகளின் விபரம்

பிருதிவி	-	கார வகை	-	13
அப்பு	-	சார வகை	-	12
தேயு	-	வைப்பு வகை	-	92
வாயு	-	விளைவு வகை	-	32
ஆகாயம்	-	உபரச வகை	-	110
		மொத்தச் சரக்குகள்	-	209

இவ்விதமாகக் காணப்படும் பஞ்சபூத சரக்குகளைத் தெரிந்து கொண்டு அதற்கு இனமான, பகையான சரக்கு வகைகளையும் அறிந்து கொண்டு ஒன்றினால் ஒன்றை கட்டி நீற்றினம் செய்யலாம்.

அஷ்டலோக மாரணம்

சூதம், கெந்தி, காரம், சாரம், வீரம், பூரம், வெள்ளை, வெடியுப்பு ஆகிய சரக்குகளை, சமனிடையாகக் கூட்டி பழரசத்தினால் அரைத்து உலோகக் கட்டுகளின் மீது சமனாகப் பூசி, கெஜபுடமிட்டு பின்பு பஸ்பம் அல்லது செந்தூரம் செய்து நோயாளிகளுக்குக் கொடுக்க சகல வியாதிகளும் குணமாகும்.

அல்லது சாரம், சீனம், பாஷாணம், பூரம், வீரம், வெடிகாரம், சூதம், பூநீர், கெந்தி, புனுகு ஆகிய சரக்குகளை சமனிடையாகக் கூட்டி பழரசத்தினால் அரைத்து முன்போல உலோகக் கட்டுகளின் மீது சமனாகப் பூசி கெஜபுடமிட்டு, பஸ்பம் செந்தூரம் செய்து நோயாளி களுக்குக் கொடுக்கலாம். பழரசம் என்பது எலுமிச்சம் பழரசத்தை.

வெள்ளீயம் தாளகத்தில் மாரணமாகும்
காரீயம் மனோ சிலையில் மாரணமாகும்.
உருக்கு லிங்கத்தில் மாரணமாகும்
தாம்பரம் கெந்தியில் மாரணமாகும்
வெள்ளி அயக்காந்தத்திலும், பொன் நிமிளையிலும் மாரணமாகும்.

மருந்து செய்யும் காலம்

பங்குனி சித்திரை மாதங்களில் முப்பு செய்யவும்,
வைகாசி ஆனி மாதங்களில் சாரணை செய்யவும்,
ஆடி ஆவணி மாதங்களில் திராவகம் செய்யவும்,
ஐப்பசி கார்த்திகை மாதங்களில் உருக்கினம் செய்யவும்,
புரட்டாசி மார்கழி மாதங்களில் செந்தூரம் செய்யவும்,
தை, மாசி மாதங்களில் ஜெயநீர் செய்யவும்.
ஏற்ற காலங்கள் ஆகும்.

வங்கச்சுண்ணம் சவுக்காரம் இவற்றால் துரிசு சுண்ணமாகும். சூதத்தாலும் கெந்தகத்தாலும் செந்தூரமாகும். வெடியுப்பாலும், சீனத்தாலும் திராவகமாகும். அமுரியினால் ஜெயநீர் ஆகும்.

உருக்கினங்கள் யாவும் காரம், குடோரி, வீரத்தால் நீற்றினம் ஆகும். புடத்தால் சாரணை உண்டாகும். இவற்றைச் செய்யும் போது சேர்க்க வேண்டிய இனத்திற்கு பதிலாக வேறு இனத்தைத் சேர்த்தால் நிறம் தப்பி விடும். அதனால் பயன் ஏற்படாது. தங்கத் தாள்களை நீறாக்கும் போது சூதம் சேர்க்காவிடில் பயன் இருக்காது.

எந்த சரக்குடனும் சுண்ணம் சேராவிட்டால் ஜெயநீர் உண்டாகாது. சாரம் சேராவிட்டால் கட்டு உண்டாகாது. ஒரு பொருள் சரியாக கட்டு அல்லது

களங்காகி இருக்கின்றதா என்பதனைப் பரிசோதிக்க கீழ்க் கண்ட முறைகள் கூறப்பட்டுள்ளது.

கல்லுப்பைக் கரியில் வைத்து ஊத உருகவேண்டும். வெடியுப்பு தந்தம் போல் இருக்கவேண்டும். வெண்காரம் பொங்கி உருகி கண்விட்டாட வேண்டும். சீனம் உருகி மணி போலாக வேண்டும். சூடன் எரியாமல் இருக்க வேண்டும். இந்துப்பு வெடியாதிருத்தல் வேண்டும். சாரம் மயிர்போல் புகைய வேண்டும். கட்டின துருசு இளகாமல் இருக்கவேண்டும். நீறின துருசு மஞ்சள் பட்டால் சிவக்க வேண்டும்.

பஞ்சபூதச் சரக்குகளை ஒன்றே முக்கால் ஒன்றரை, ஒன்று, முக்கால், அரை என்ற விகிதங்களில் சேர்க்க வேண்டும். அவ்வாறு சேர்க்காமல் ஏதாவது ஒரு சரக்கு அதிகமாகி விட்டால் பிருதிவி அதிகமானால் கடித்துக் கொள்ளும். அப்பு அதிகமானால் தளுக்காக ஊறல் உண்டாகும். தேயு அதிகமானால் புடத்திற்கு நிற்காமல் ஓடி விடும். வாயு அதிகமானால் புற்றுப்போல் எழுந்து நின்று எடை குறையும். ஆகாயச் சரக்கு அதிகமானால் நிறம் உண்டாகாது.

சித்தர்கள் உப்புக்களில் எது பிரிதிவிச் சரக்கு எது மற்ற வகையைச் சேர்ந்தது என்பதனைப் பலவாறாகக் கூறி உள்ளனர். அதனை கீழே கூறுவோம்.

போகர்

பிரிதிவி	-	கல்லுப்பு
அப்பு	-	சத்திச்சாரம்
தேயு	-	வெடியுப்புச் செயநீர்

வாயு	-	சீனம்
ஆகாயம்	-	பூ நீர்

குருமுனிவர்

பிரிதிவி	-	கம்பியுப்பு
அப்பு	-	பாறையுப்பு
தேயு	-	கல்லுப்பு
வாயு	-	இந்துப்பு
ஆகாயம்	-	வளையலுப்பு

சுகரிஷி

பிரிதிவி	-	பூமியுப்பு
அப்பு	-	சீனம் அல்லது வெள்ளை
தேயு	-	ரவி, நாகம், பூரம்
வாயு	-	வீரம், கௌரி
ஆகாயம்	-	காரம் சாரம்

பிரம்மமுனி

பிரிதிவி	-	நாகம்
அப்பு	-	விந்து
தேயு	-	பாறை, கல்லுப்பு
வாயு	-	அண்டம்
ஆகாயம்	-	பிண்டம்

கருக்களில் : வாய்நீர் பிரிதிவிச் சரக்காகவும், முலைப்பால் அப்புவாகவும், அமுரி தேயுச்சரக்காகவும், விந்து வாயுவாகவும், சுரோணிதம் ஆகாயமாகவும் கூறப்படுகின்றது.

அறுசரக்கு : கல்லுப்பு, சாரம், வெடி, படிகாரம், துரிசு, வெண்காரம்.

அறுவகை நீர் : வெடி, சீனம், வெங்காரம், சாரம், பூரம், துரிசு.

நாதச்சரக்கு	-	விந்துச்சரக்கு
கெந்தி	-	சூதம்
பூநீர்	-	சூடன்
நிமிளை	-	வெள்ளை
பூநாகம்	-	வீரம்
திரிகுணசல்	-	கடல்நுரை
லிங்கம்	-	கல்லுப்பு
இருழ்ம்பு	-	எவச்சாரம்
நாகம்	-	வங்கம், பூரம்
செம்பு	-	சிலாசத்து
காந்தம்	-	கல்மதம்

உப்புச்சரக்கு	-	புளிச்சரக்கு
சிறுநீர்	-	மலம்
வெடி	-	படிகி
கல்லுப்பு	-	பழம்புளி
சூடன்	-	துளசி
கடல்நுரை	-	கற்சுண்ணம்
சூதம்	-	கெந்தி
காந்தம்	-	காடி
இரும்பு	-	எலியா மணக்கெண்ணெய்
தொட்டி	-	புளியாரணை
அப்ரேகம்	-	காயச்சரக்கு
கௌரி	-	புளி மாங்காய்
வெள்ளை	-	கள்ளு

வைகிராந்தம்	-	*நிமிளை*
தங்கம்	-	*சிலை*
நாகம்	-	*வீரம்*
விந்து	-	*நாதம்*
சாரம்	-	*வெண்காரம்*
வெண்கரு	-	*மஞ்சள்கரு*
கிளிஞ்சிஓடு	-	*சதை*
பச்சைக் கற்பூரம்	-	*இந்துப்பு*

இவை ஒன்றில் ஒன்று அடக்கமான சரக்குகள் ஆகும்.

சரக்கு	சத்துரு	மித்திரு
தங்கம்	நாகம், நிமிளை, வெடிகெளரி, வெள்ளை, சவுட்டுப்பு, தாளகம் சிங்கி, அபிரேகம், சிலை, அண்ட ஓடு, குதிரைப்பல், சூதம், கெந்தி, கோமுகம், காந்தம், வீரம், பொன்னம்பர்	மற்ற சரக்குகள்
கரு வங்கம்	அயம், காந்தம் நிமிளை கிளிஞ்சி, அண்டம், நண்டு கெளரி, கெந்தி அபிரேகம், வெடி கல்லுப்பு, கல்நார், சாஸ்திரபேதி	பூநாகம் மயூரச் செம்பு, நாகம், செம்பு, வெள்ளி, வெள்வங்கம் சூதம்,
அயம்	வெண்கலம், காரம் அண்டம் அபிரேகம், நிமிளை, வங்கம் திறா, கெந்தி சிலை, சாரம், வீரம், சிங்கி, வெள்ளை, பூநீர்	வெள்ளி, செம்பு, காந்தம், நாகம், பூரம், தங்கம் கெந்தி, மயூரச் செம்பு, சூடன்

சரக்கு	சத்துரு	மித்திரு
நாகம்	கிளிஞ்சி, அண்டம், கல்லுப்பு, வெடி, தங்கம், திறா, வெள்ளி, வீரம், நண்டோடு வெங்கலம், சிங்கி, அபினி, மிளகு, வெள்ளை, வளைய லுப்பு, அன்னபேதி	கௌரி, செம்பு, சூதம், நாகம், கெந்தி, அபிரேகம் இரும்பு, காந்தம் சாரம், காரீயம், மயூரச் செம்பு, சிலாசத்து
துரிசி	சவுக்காரம், வங்கம் நாகம், இந்துப்பு, காந்தம், சிங்கி, கற்சுவடு, கல்லுப்பு வெள்ளைப் பாஷாணம், சூடன், அப்பிரேகம், வெடி யுப்பு, தொட்டி, அஞ்சன பாஷாணம்	லிங்கம், கௌரி, நிமிளை, மனோசிலை, பூரம், சூதம், கெந்தி, வெங்காரம், வீரம், சாரம் அரிதாரம்
சாரம்	கடல்நுரை, அப்பிரேகம், சவுடு, காரீயம், கல்சுன்னம், ஏரண்டத்தோல், வளைய லுப்பு, காந்தம், வங்கம், இந்துப்பு, படிகாரம், கல்லுப்பு	செம்பு ராசவர்த்தம் நிமிளை கௌரி, நாகம், லிங்கம், கல்நார், வெடியுப்பு வீரம், கெந்தி, சிலை,தாரம்,காரம்
வெடி யுப்பு	சூடன், சவுடு, காரீயம், வெள்ளீயம், துரிசி, காந்தம் வெள்ளி, செம்பு, இரும்பு, சிலை, தொட்டி, தீமுருகல், அண்டம், கெந்தி, சிங்கி	தந்தம், காரம், துத்தம், நாகம், லிங்கம், வீரம், காரம், பழகி, கல்லுப்பு, இந்துப்பு கடல்நுரை, நிமிளை,வெள்ளை

சரக்கு	சத்துரு	மித்திரு
கல்லுப்பு	வீரம், சவிடு, சிங்கி, சிலை, பளம்புளி, பவழப் புத்து, சவுட்டுப்பு, ராசவார்த்தம்	செம்பு, லிங்கம், வங்கம், காரம் கௌரி, பூரம் அபிரேகம், வெள்ளை நாகம் தாரம், இரும்பு
சீனம்	சிலாசத்து, துத்தம்	உபரச பாஷாண உலோகங்கள்
காந்தம்	புளி, சாம்பிராணி, அண்டோடு, சிலாசத்து, பூரம், காரம்	உபரசங்கள் பாஷாணங்கள்
சூதம்,	பூநீறு, கற்பூரம், நிமிளை, வெடியுப்பு, இரும்பு, காந்தம், குதிரைப்பல், சத்திச்சாரம், கௌரி, வெள்ளை, சிங்கி	தீமுருகல், பவழப்புத்து, சாரம் வெங்காரம், துத்தம், வெள்ளி, செம்பு, துரிசு, தொட்டி, தாளகம், கெந்தி வங்கம், காரீயம், நாகம், அப்பிரேகம்

ஒரு சரக்குடன் சத்துரு சரக்கைச் சேர்த்தால் அது கட்டும். பிறகு மித்துரு சரக்கினைச் சேர்த்து அதனை எழுப்பவேண்டும். அப்போது அது குருவாகும்.

இரசவாதம் என்றால் என்ன ?

இரசவாதம் என்ற சொல்லுக்கு ரசத்தினால் வேதை உண்டாக்குவது என்பது நேரடியான பொருள், வேதை

யாக்குவது அல்லது வேதிப்பது என்றால் பொன்னாக்குவது என்று அர்த்தம். எனவே ரசத்தைக் கொண்டு மற்ற உலோகங்களைத் தங்கமாக்கும் முறையே இரசவாதம் என்று கொள்ளலாம்.

ரசத்தை மணியாக்க வேண்டும். அதை நெருப்பில் இட்டால் புகையால் ஆவியாகி மறைந்து விடாமல் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அதனைச் சுண்ணமாகவோ செந்தூரமாகவோ செய்ய இயலும்.

தனியாக இரசத்தை எடுத்துக் கொண்டு அதனை சுண்ணம் அல்லது செந்தூரம் செய்வது கஷ்டம். அதனால் இரசம் சேர்ந்துள்ள பாஷாணங்களைக் கொண்டு சுண்ணம் அல்லது செந்தூரமாக்குவது சுலபம்.

மூலிகைகளின் சத்தினால் சரக்குகளுக்குக் கவசம் செய்தும் சுருக்குக் கொடுத்தும் நெருப்பிற்கு ஓடாதபடி, சுண்ணம் அல்லது செந்தூரம் செய்து உலோகத்துடன் கலந்து தங்கமாக்கும் முறைக்கு மூலிகைகளினால் வாதம் செய்முறை என்று பெயர்.

காரசாரம் போன்ற உப்புகளினால் ஜெயநீர் அல்லது திராவகம் இறக்கி அவற்றால் சரக்குகளைக் கட்டி வேதை செய்வது இன்னொரு முறை.

இவற்றில் காரசாரத்தினால் வேதை செய்வதுதான் சுலபமானது. காரசாரத் தொழில் செய்பவன் சுலபமாகப் பணம் சம்பாதித்து சுகமாக இருக்கிறான். மூலிகைத் தொழில் செய்பவன் சோற்றுக்கு இல்லாமல் கஷ்டப்படுகிறான் என்று ஒரு பழமொழியே உண்டு. இதற்கு காரணம் மூலிகைகளுக்கு எல்லாமே சாபம் உள்ளது என்றும், அவற்றுக்கு சாப நிவர்த்தி செய்து புத்துயிர் கொடுத்தாலே

அவை முறையாகப் பயன்படும் என்பதும் பெரியோர் வாக்காகும்.

திருவள்ளுவர் தமது ஞானவெட்டியான் என்றும் நூலில் மூலிகைத் தொட்டு தொழில் புரிவதால் பயனில்லை என்றே கூறுகிறார்.

மூலிகையைத்தொட்டு முக்கால் சுருக்கிடவும்
கேலியது வெய்துணுங் கேள்வி காண் - மூலிகையால்
பட்டுப் புகைந்து விடும் பராசரக் கத்தனையுந்
தொட்டாலும் கெட்டுவிடும் சொல்.

வாதிகளுங்கடி மயங்கித் தழைகளினீர்
வேதை இருக்கு தென்று வீண்பாடு வாதிகளும்
மலைகள் குகைதிரிந்து வைத்திருந்த பொக்கிஷத்தை
அலைந்து சுட்டு கரியாக்கினார்.

என்கிறது ஞானவெட்டியான். அதனையடுத்து திருப் புகழிலும், "வேலி வேலித்தழை காய்கிழங்கு கனி (பத்து) நாலி நாலியென யாகும்யாகுமென இதுமோசம்" என்றும் சித்தர்கள் பாடி உள்ளனர்.

மூலிகையை வைத்துத் தொழில் செய்வது முற்றும் பயனற்றது என்று நினைத்து விடக் கூடாது. கார சாரத் தொழில் மிகவும் எளிதானது என்பதனை எடுத்துக் காட்டுதற்காகவே கூறப்பட்டது.

காரசாரம் இன்ன தென்பது

காராம்பூநீர் கல்லேஜீவரத்தினம்
கைப்பில்லாக்கனி மண்ணிலுதித்திடல்
சீரதாகுமாசிப் பிறைநாளினில்
சிவந்தெழுந்த கதிரவன் சாயலால்

பேரானந்தம்புளி யுப்புவருந்தான்
    பேசுவார்பேதமெழு வகைத்தோற்றத்திலும்
சாரமார்ந்துவர் தைதன்யஉப்பதாந்
    தசைதான் திட்சை பூமினாத மிதாகுமே.

இதுவே பிரம்ம கற்பமெனல்

பூமிநாதம் புவியிலுதித்திடும்
    பூவதும்பிரம்ம கற்பமதாகிவிடும்
நாமெனுவூர் வசியருள் பூவினை
    நாட்டில்தோருமிப் பூவினைக்கண்டுவாழ்
ஆமிவைபங்குனி யில்செங்காயதாம்
    அன்னாள்பின் சித்திரைக் கனியதாம்
மாமிவைய தஞ்சுமாசிதனில்
    மைத்தபங்குனி வயதெட்டரையுமே.

காரம் என்பது பூநீர் எனல் (வள்ளுவர் 16)

காரான வீரமென்றும் பச்சையென்றுங்
    கதிரென்றுங்கன்னியுட நாதமென்றும்
பேரானபிணமென்றும் குருவண்டென்றும்
    பேர்பெரியகும்பககல் வழலையென்றும்
வாரானபுளியென்றும் சவ்வாதென்றும்
    வகையாக ஐங்கோல வன்னியென்றும்
கூரானகோசமென்றுங் குமரியென்றும்
    குணமானநீர்மேல்தெநருப் பென்றுந்தானே.

தானானசிலையென்றுந் தாரையென்றும்
    தற்பரையாம்சத்திசிவ தாயேயென்றும்
கோனாயானையென்றுங் குதிரையென்றும்
    கூறுவார்நாமங்கள் பேதாபேதம்

வீராகஇதனாலே மாந்தரெல்லாம்
வெவ்வேறாய்செய்தழிந்து விருதாவானார்
மானானகாரமென்றால் மண்தானப்பா
மண்ணிலேமகத்தான மண்தான்பாரே.

பாரேநீதைமாசி மீனம்மூன்றில்
பனிக்குமேசந்திரனில் விந்துவாலே
சீரேகேள் மண்தனிலே ஜலமேபாய்ந்து
சிக்கியதில்ரேசித்து ஜெனிக்குங்காலம்
வாமேதான்ரவிபடர்ந்து பூர்க்கும்பாரு
வானவர்கள்மெச்சுகின்ற வழலைமைந்தா
மீறாமல்மெறியலிட்டு மூன்றுநாளும்
விடிந்ததொருநாலாநாள் ரவிக்குமுன்னே.

ரவிதானும்படுகாமுன் னதனை வாங்கி
நாதாந்தமூர்த்தியரைப் பணிந்தெடுத்து
கவியாதேஇதற்குநிகர் வேறுமில்லை
சந்திரனை தரித்தசிவ மைந்தனார்க்கு
புவிமீதில் சொல்லிவிட்டேன் காரந்தன்னை
புத்தியினால்செய்பாகம் அறிந்துகொள்ளே.

சாரம் என்பது அமுரிஎனல், (சூத்திரம் 30)

கேளேநீசாரமென்றால் நவாசாரமல்ல
கொடியான வெண்காரம் வெடியுப்பல்ல
தாளேநீகேசாதி பாதமட்டும்
தனியாக வளர்ந்துதடா தண்ணீருக்குள்
கேளேநீயுன்சடத்தி லுண்டுவுண்டு
கேட்டால் தான்கொடுப்பார்கள் கேள்விவேண்டும்.
சாளான சிதம்பரத்தில் வளர்ந்தசாரம்
சடலமதிலிந்துப்பென் றிதற்குப்பேரோ.

ஆமென்றுசொல்லுகிறே னதுயேதென்றால்
அடவானஉன்னுடைய உடலுக்குள்ளாம்
ஆமென்றவாசமதாய்ப் பழுத்திருக்க
வளர்ந்துதடா ஒழியாத அருவியாகி
தாமென்ற உன்னுடைய தாளின்கீழாம்
தாரைகொண்டுயேகுதுபார் அமுரிதானும்

முப்புவென்பது இன்னதெனல்

மெவிலாத வாயுவங்கி யப்புமூன்றுமுப்பதாம்
வெளியில் ரெண்டுகுழியில்ஒன்று மீனமேஷமல்லவோ
செலவிலாதநாதநீரில் மேவியாடுந்தீட்சையாம்
தேவதேவநீயலாது செம்பனென்றஅம்பரம்
மலைவிலாதயோகமெய்ஞ் ஞானமுங்கைமேல்வரும்
மாசிலாதசூதராஜன் வானிலோடியேவரும்
அலையின்மீதிலண்டபிண்ட நாதமேகநீரடா
அங்கையென்றவழலையுப்பு அதியானகுருவிதே.

அகஸ்தியர் சூத்திரம்

அப்புவேமுப்பு அல்லது வேறொன்றாகுமோ
யாவதர்க்கியல்போ
துப்புகெட்டவனே உப்பினைப்பிடித்தால்
சூதமும் புரைகழன்றாடும்
தப்பில்லைவேத பாச்சலாம்யோக
சாதனைசெய்திடற்கெனவே
பற்பமுமொன் றெளிதிலுரைத்தேன்
பொதிகைபருவதத்தினி லிருப்பவனே
என்னவேவானத் திடியினிலொன்று
கன்னியமான கடல்தனிலொன்று
பொன்னெனப் பூத்த பூமியிலொன்று
முன்னவர்சொன்ன முப்பூவிம்மூன்றே.

ஞானவெட்டியான் (1500)

பூருவத்திலுதிகடல் கல்லுப்பாகும்
பூனீரினுப்பதுவு மமுரியுப்பும்
வாறறிந்துமுப்பொருளு மூன்றுப்பாகும்
வகைவகைக்குப்பலமதுவாய் வகுத்துப்பின்பு
சருகாமல்பறங்கிவைப்பு பலந்தான்கூடன்
தனையெடுத்துக்குளிக்கல்லில் சமையத்தானும்
கருதாமல்வெண்கருவா லிரண்டுசாமம்
கணக்காகமையதுபோல் கருதிடீரே.

வேறு

கருதியும்வழித் தேயெடுபில்லைகாண்
கதிரவன்தனில் காய்ந்தெடுவட்டினில்
கருதிமேல்மூடி யொன்றுபுடமதில்
துரிதமாய்க்கன லாறியெடுத்திடும்
குறுமுனியருள திருவள்ளுவனுரை
கூறிடும்பெரி யோர்கள் மகத்துகள்
தொழுதுவாலைப் பதம்பணிந்தர்ச்சனை
தொழுதால்பணித் தாண்டேயுணருவார்.

சிலநூல்களில் அண்டக்கரு பிண்டக்கருவெடுத்து தொழில் செய்யும்படி சொன்னது பரிபாஷையெனல்

அண்டமாவது கோழியினண்டமோ
பிண்டமாவது தன்தலைப்பிண்டமோ
இந்தவண்டல்ரெண்டையும் கண்டறியாதவர்
கண்டபோதல்லோ காண்பதுசொர்னமே.

தாமிரம் சுத்தம் செய்யும் முறைகள்

வெள்ளைக்கல்லும் நவாச்சாரமும் சமனிடைகளாக எடுத்து எலுமிச்சம்பழரசம் விட்டரைத்து தாமிரத் தகட்டிற்கு கனக்க கவசம் செய்து நன்றாய் உலரவைத்து அதற்குமேல் அரைத்த சீக்காயை அப்பி ஐந்து மண்சீலை செய்து இருபது வரட்டியில் புடம்போடவும். சுத்தியாகும்.

அல்லது வெள்ளைக் கல்லும் சாரமும் சேர்த்து அரைத்த கலப்பை செம்புக்காசுக்கு இருபக்கமும் தடவிகரி நெருப்பில் போட்டு சிவக்கவூதி ஜலத்தில் தோய்க்கவும் இருபக்கத்திலும் உள்ள மருந்து களிம்புடன் பேர்ந்து விழும் இப்படி பத்துமுறை செய்யவும் சுத்தியாகும்.

வேறு முறை

தாமிரத்தை மெல்லிய தகடாக அடித்து மனோசிலையை ஆகாசத்தாமரை ரசம்விட்டரைத்து தகட்டிற்கு இருபுறமும் பூசி ஓட்டிலிட்டு பத்தெருவில் புடம்போடவும். இருபுறமும் பச்சையாக களிம்புமேல் வந்திருக்கும். மறுபடியும் முன்போலவே புடம்போடவும். தாமிரம் வெட்டையாகி நொருங்கிப்போகும். அதை ஒரு சட்டியில் போட்டு எலுமிச்சம்பழச்சாறும் புளியிலைச் சாறும்விட்டுக் கொதிக்க வைத்து அதில் ஜலம்விட்டுப் பிசைந்து தெளிய வைத்து இறுத்து விடவும். இப்படி ஐந்தாறு முறை செய்யவும். சட்டியின் அடியில் சுத்தமான தாமிரப் பொடிகளிருக்கும். அதை மூசையிலிட்டு வெங்காரம் போட்டு உருக்க பொடிகள் உருகி சுத்தமான தாமிரமாகும்.

வேறுமுறை

வெங்காரக்கட்டும் நவாச்சாரக்கட்டும் அண்டச் சுண்ணமும் ஓரிடையாய் எடுத்துப் பொடித்து தூள் செய்து

தாமிரத்தை உருக்கிக் கண்விட்டாடும் போது தூளைக் கிராசம் கொடுக்கவும். சுத்தியாகும்.

வேறுமுறை

ஆனை நெருஞ்சிலையை அரைத்துக் கவசம் செய்து மண்சீலை மூன்று மேலே செய்து ஐந்து வரட்டியில் புடம் போடவும். இப்படி நாலைந்து புடம் போட சுத்தியாகும்.

வேறுமுறை

குட்டித் தக்காளி இலை, அவுரி இலை இரண்டையும் ரசம் பிழிந்து வைத்துக் கொண்டு வெங்காரம், வீரம், துருசு மூன்றையும் சமனிடைகளாக எடுத்து மேற்படி ரசம் விட்டு அரைத்து தாமிரத் தகட்டிற்குப் பூசி ஒட்டிற்குள் வைத்துக் கோழிப்புடம் போடவும். இந்த தாமிரம் பத்துப்பங்கும் வெள்ளி ஒரு பங்குஞ் சேர்த்துருக்கித் தகடடித்து மூன்று சரக்குகளையும் நாயுருவி நெருஞ்சி இலைரசம் விட்டு அரைத்து முன்போலப் பூசி புடம்போட நன்றாய் சுத்தியாகும்.

வேறுமுறை

கொருக்காய் புளிஇலை இரண்டுபிடி எடுத்து அரைத்து அதை தேங்காய்ப்பாலில் கரைத்து சூரியபுடத்தில் இரண்டு நாள் வைத்து அதில் தாமிரத்தை உருக்கி பத்துமுறை சாய்க்கவும். வெள்ளையாக ஆகும், களிம்பு போகும்.

வேறுமுறை

தாமிரத்தகட்டை புளி இலைச்சாறு எலுமிச்சம் பழச்சாறு இரண்டையும் ஒன்றாய்க்கலந்ததில் பத்துநாள் ஊறப்போட்டு பிறகெடுத்து நன்றாய்த் தேய்த்துக்

கழுவிவிட்டு புளி அரணைக்கிழங்கும் மணிப்புங்கன் பட்டையும் சேர்த்து இடித்து அதற்குள் தகடுகளைப் பொதிந்து சீலை மண் செய்து கெஜபுடம் போடவும்.

அகத்திபழுப்புச் சாறு, முருக்கிலைச்சாறு, நாய்ப் பாகல் சாறு, கொள்ளி இலைச்சாறு கழுதை மூத்திரம் இதுகளை ஓர் அளவாக எடுத்துக்கொண்டு அதிலே ஒருபலம் பூநீரும் கருங்குண்டு மணி அரைத்தது விளாங்காய் பிரமாணமும் போட்டு ஒன்றாய்க் கலக்கிவைத்துக்கொண்டு அதை பத்து பாகமாகப் பிரித்து ஒவ்வொருபாகத்தில் ஒவ்வொரு முறையாகப் பத்துமுறை புடம்போட்ட தாமிரத்தை உருக்கிச் சாய்க்கவும். தங்கம்போல் சுத்தியாகும்.

தாமிரத்தை சீக்கிரமாக உருகச் செய்யும் முறைகள்

தனித் தாமிரமானது சீக்கிரத்திலுருகாது. அதை தனியாக உருக்குவதும் மெத்தக்கடினம்.

நரி,ஆடு, ஆமை, முதலியவைகளின் எலும்புகளையும் மிளகும், சிலாசத்தும் தூள்செய்து வைத்துக்கொண்டு தாமிரத்தை உருக்கும்போது சிட்டிகை அளவு வீதம் கிராசங்கொடுத்து வந்தால் அதிக சீக்கிரத்தில் உருகிக் கண்விட்டாடும். மேற்படி சூரணத்தைக் காந்தத்திற்குக் கிராசங் கொடுத்தாலும் காந்தமும் உருகும். மேற்படி எலும்புகள் எல்லாம் ஏககாலத்தில் கிடைக்காவிட்டாலும் ஏதாகிலும் ஒன்றை மாத்திரம் எடுத்துக் கொண்டும் செய்யலாம்.

வேறு

தாம்பிரத்தை சிவக்கக் காய்ச்சி பொற்சீந்தில் சாற்றில் தோய்த்து ஆறவிட்டுப் பிறகு மூசையில் வைத்து உருக்க ஈயம் போல் சீக்கிரத்தில் உருகிவிடும்.

வேறு

சோயிக்கீரையை இடித்து ரசம்பிழிந்து வைத்துக் கொள்ளவும். லிங்கத்தை தூள்செய்து ஓர் ஓட்டில்போட்டு சிறு தீயாக எரித்துக்கொண்டு மேற்படி சாற்றால் சுருக்கிட்டு கிளறிக்கொண்டே வந்தால் லிங்கமானது மெழுகாய் விடும். கையில் வைத்து உருட்டினால் கயிறைப்போல் நீளும். இது பதம். இந்த பதத்தில் எடுத்து வைத்துக் கொண்டு மேற்படி மெழுகில் கொஞ்சம் எடுத்து வாய்நீர் விட்டுக் குழைத்து தாம்பரத் தகட்டிற்கு இறபுறமும் பூசி குகையில் வைத்து ஊதினால் அதி சீக்கிரத்தில் உருகும்.

ஜெயநீர் முறைகள்

பிரம்மமுனி சூத்திரம்

தானென் றவிதினாலே வெடியுப்பாச்சு
சத்தியுடாநாதமென்ற கெந்திசேரில்
ஆமென்றஅண்டரண்ட முருகிப்போச்சு
அரசர்கெடில்கல்கோட்டை யிடியலாச்சு
போமென் றகாரமென்ற வெடியுப்பாச்சு
புகழான சாரமென்ற நவாச்சாரமாச்சு
ஆமென்றசாரகார மிரண்டுஞ்சேரில்
அறுபத்துநால்சரக்குங் கட்டிப்போச்சோ
போச்சென்ற காரம்விட்டால் சாரமில்லை
புகழானசாரம் விட்டால் காரமில்லை
ஓச்சென்றசாரத்தின் மகிமையென்ன
ஒன்பது நீர்சாரமொடு நவாச்சாரமாச்சு
தேச்சென் றசாரத்தின் மகிமைசொல்ல
சித்தர் முதல் ரிஷிகளால் முடியாதப்பா

301

ஆச்சென் றராமதேவர் சாரந்தொட்டு
ஆடினாரேழுயுகம் வாதம்பார்த்தார்

பார்த்திட்டகாரமென்ன உப்புஉப்பு
பாங்கான உவருப்பு மண்ணுவாரி
வேத்திட்டமும்முறைதான் காய்ச்சுவார்கள்
வெடியுப்பாங்கடையில்விற்கும் கடுங்காரமில்லை
ஆத்திட்டுவாதமுறை செய்யவென்றால்
அந்தவுப்பைவாங்கியதை கரைசெலத்தால்
வார்த்திட்டு அடுப்பேற்றி காய்ச்சியுப்பு
வளருமந்தப்பமறிந்து மறுபாண்டம்வாரே.

வார்க்கவேகம் பிபோல் வளருமுப்பு
மருந்துமந்தஉப்பிலே சுத்தஜலம்விட்டு
பார்த்துமேயடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி
பதமறிந்துமறுபாண்டத் தெடுத்துவாறு
பூர்த்துமேகருவென்ன பழச்சாறுமோரு
புரைகுற்றுமாப்போல கொஞ்சம்வாறு
ஆர்த்துமேபொங்கியது வளர்ந்துஓங்கி
அதிமதுரம்வெடியுப்புக் கடுங்காரமாச்சே

காரமாமிந்தவுப்பு வேதைக்காகும்
கரைதனில்மூணாங்காய்ச்சல் கருமருந்துக்காகும்
காரமாம்வெடியுப்பை செயநீர்செய்யில்
கருதியேசரக்கெல்லாங் கட்டிக் கொள்ளும்
பாரமாம்வாதத்துக் காதியுப்பு
பார்த்திட்டார்சித்தரெல்லாம் வேதைகோடி
ஆரமாம்வெடியுப்புச் செயநீர்கேளு
அறைகிறேன் ஆறுநீர் விரைந்தானே.

வெடியுப்புச் செயநீர்

காணவேபுளியும்நாலு கம்பிவெடி யுப்புநாலு
ஊணவேகல்லுப்பதொன்று உற்றதோர் வழலைதான்
தோணவேயிந் துப்பதொன்று சூடானதுகாலிடை
வேணும்நவா சாரமொன்று வெந்தெடுக்கசுன்னமே.

(இ ள்) புளி நாலு, வெடியுப்பு காரமேற்றியது நாலு, கல்லுப்பு ஒன்று, வழலை அதாவது முப்பு ஒன்று, இந்துப்பு ஒன்று, கற்பூரம் கால், நவாச்சாரம் ஒன்றுஇவைகளைஷெ எடைகளாக நிறுத்து எடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து ஒரு மண்பாண்டத்தில் போட்டு அடுப்பில் வைத்துத் தீயிட்டு எரிக்கவும். பாண்டத்தின் வாயை மூடக்கூடாது இப்படி எரிக்கும்போது மருந்தானது குப்பென்று பற்றிக்கொண்டு எரிந்து அடங்கிவிடும்.

பிறகு அதை ஆறவைத்து பாண்டத்தை உடைத்து மருந்தைக் கல்வத்திலிட்டு அரைத்து ஓர் பீங்கான் பாண்டத்தில் பரவலாகப் போட்டு தண்ணீர் பானைக்கடியில் குளிர்ந்த இடத்தில் புதைத்து மண்டலஞ் சென்று எடுக்கவும், ஜெயநீர் இறங்கிவிடும். பனிக்காலமாக இருந்தால் பீங்கான் தட்டில் போட்டு பனியில்வைக்க இறங்கிவிடும். அதிக காரம் இருக்கும். இதை சுருக்கிட அறுபத்துநாலு சரக்கும் கட்டும். (இது நல்லமுறை)

வேறு

கம்பி உப்பு பத்துபலம், புளி எட்டுபலம், சீனம், பூநாகம், துருசு, கற்பூரம், முப்புச்சுன்னம் வகைக்கு ஒரு கழஞ்சி வீதங்கூட்டி அரைத்துத் தீக்கொளுத்தச் சுன்னமாகும். அதற்கு பதினாறில் ஒரு பங்கு நவாச்சாரம் தூள் செய்து சேர்த்து முன்போல் செய்ய ஜெயநீராகும். இதுவும் சரக்குகளைக் கட்டும்.

அண்டச் செயநீர்

சுண்ணாம்பும் உழமண்ணும் ஒன்று சேர்த்து ஜலம் விட்டுக் கரைத்து அந்தத் தெளிவை இறுத்துக் கொண்டு அதிலே ஆற்றிலே இருக்கும் ஊமச்சிகளைப் போட்டு எரித்தால் சுத்தியாகும். (ஊமச்சி என்பது நத்தை அல்லது கிளிஞ்சல்)

சுத்தி செய்த ஊமச்சிக் கிளிஞ்சல் ஐந்து பலம், வீரம் ஒருபலம், சூடன் ஒருபலம் சாரம் ஒருபலம், கல்லுப்பு ஒரு பலம் இவைகளை வெண்கருவும் எருக்கம்பாலும் கூட்டி யரைத்து உலர்த்தி சாணக்கையில் வைத்து சீலைமண் செய்து நூறு வரட்டியில் புடமிடவும். மறுபடியும் வெண்கரு மாத்திரம் விட்டு அரைத்து முன்போல் புடம்போட தவளம்போல் நீறும். இச்சுன்னம் கீழ்க்கண்ட கிளிஞ்சல் செயநீர் முறைக்கும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

அண்டச்சுன்னம் : ஒருபடி எலுமிச்சம் பழரசத்தில் ஐந்து கோழிமுட்டைகளைப்போட்டுப் படிகாரம் இரண்டு பலம், தூள் செய்துபோட்டு நான்கைந்து நாள் கழித்துப் பார்த்தால் மேலோடு கரைந்திருக்கும். கருவை ஜவ்வுமூடி கொண்டிருக்கும். ஜவ்வை மாத்திரம் நீக்கிவிட்டுக் கருவை எடுத்து வெய்யிலில் உலர்த்தி எருக்கம்பால்விட்டு அரைத்து பில்லை செய்து உலர்த்தி சீலைமண் செய்து ஐம்பது வரட்டியில் புடமிடவும். பிறகு எடுத்து பத்துக்கு ஒன்று வீரங்கூட்டி வெண்கருவால் அரைத்து எண்பது எருவில் புடம் போடக் கடுஞ்சுன்னமாகும். முன் தயார் செய்த சிப்பிச் சுன்னத்தோடு இதையும் சேர்த்து இதற்கு சரிபாகம் நவாச்சாரம் தூள் செய்து கூட்டி தண்ணீர்ப்பானையின் அடியில் வைக்க ஜெயநீராகும். சரக்கு எல்லாம் கட்டும். வெடியுப்பும் கட்டும்.

கிளிஞ்சல் செயநீர்

மேலெழுதியபடி தயார் செய்த சிப்பிச்சுன்னம் ஒரு பலம் காரமேற்றிய பொட்டிலுப்பு நாலுபலம், வெங்காரம். படிகாரம் வகைக்கு ஒருபலம்வீதம் கூட்டி எருக்கம்பால் விட்டு அரைத்து வில்லைதட்டிக் காயவைத்துசாணக்கையில் வைத்து மண்சீலை செய்து கோழிப்புடம் போடச் சுன்னமாகும். மேல்படி சுன்னத்தை அரைப்படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சித் தெளிவிருத்து புட்டியில் நிரப்பிக் கொள்ளவும். இந்த ஜெயநீரை மயில் துத்தத்திற்கு, விட்டு அரைத்து ரவியில் காயவைத்து ஒட்டிலிட்டு சீலைமண் செய்து மூன்று எருவில்புடம்போட துருசு கட்டும். நவாச்சாரமுங்கட்டும்.

நாக செயநீர்

தாமடாநாகஜெய நீரைச்சொல்வேன்
தம்பியடாசிறுகண்ணாம் நாகம்வாங்கி
கேளடா அஞ்சுபலம் நிறுத்தெடுத்துக்
கெடியாக உருக்கியதைத் தகடாய்வார்த்து
போமடாசிறுசாகக் கத்தரித்துப்
பொருமையுடன் தூளாகச் செய்துபோடே
போட்டவுடன் இன்னும் ஒன்று புகலக்கேளாய்
பொருமையாய்சவ்வீரம் பலம்தான் இரண்டு
தாக்குடாவெடியுப்புப் பலமும்ஒன்று
தருவாகயிரண்டையுமே நேக அரைத்து
போமடாமூன்றும் ஒன்றாய்க் கூட்டியேதான்
பொருமையுடன் பீங்கானில் போட்டுமூடே
மூடியேநாள்மூன்று சென்றபின்பு
முன்வைத்த பீங்கானை எடுத்துப்பாரு

நாமடாஜெயநீரை என்னசொல்வேன்
நன்றாகநாகத்தின் ஜெயநீராச்சு
தாமடாயிந்நீரில் வீரம்பூரம்
தருவான லிங்கமது கட்டுமாமே.

இரண்டு அங்குல அகலமும் பனிரெண்டு அங்குல நீளமுமாக துணித்துண்டுகள் எடுத்து ஒரு துண்டை நாகஜெய நீரில் தோய்த்து வீரம் பூரம் லிங்கம் முதலியவைகளின் மேல் சுற்றிக் கொளுத்திவிடவும். இவ்விதம் ஏழெட்டு சீலைகள் சுற்றிக்கொளுத்த வீரம் பூரம் லிங்கம் முதலியதுகள் கட்டும் இது அவுஷதங்களுக்கும் வாத முறைகளுக்குமாகும்.

வகாரம்

வெள்வங்கம் ஒருபலம், தாளகம், வெள்ளைப் பாஷாணம், சவுக்காரம், சாரம் பூநீரு, கிளிஞ்சல் சுன்னம் வகைக்கு ஒரு பலம், எடுத்து எல்லாவற்றையும் கல்வத்தி லிட்டு நன்றாய் இரண்டு ஜாமம் அரைத்து தூள்செய்து கலசத்தில் பாதிபோட்டு மேலே வங்கம் வைத்து அதன்மீது மற்ற பாதி தூளையும் போட்டு வாயைமூடி சீலைமண் செய்து கோழிப்புடம் போட வங்கம் வெட்டையாகும்.

வெட்டையான வங்கம் வெள்ளி ஒன்று, சூதம் இரண்டு, சாரம் கால், வெடியுப்பு ஜெயநீரால் அரைத்து பில்லைதட்டி உலர்த்திக் காயவைத்து அகலில்மூடி சீலைமண் செய்து கோழிப்புடம் போட பஸ்பமாகும். செம்பையுருக்கி அதில் பத்துக்கு ஒருபங்கு பஸ்பத்தைப் போட வெளுத்துவிடும். அதோடு நல்ல வெள்ளி அரைப்பங்கு சேர்த்து நான்கைந்து முறை உருக்க எல்லாம் சேர்ந்து இரசவாத வெள்ளியாகும்.

வேறு

வெள்ளை பாஷாணத்திற்கு, சிப்பிச் சுன்னம் கவசம் செய்து மணலில் வைத்து சீலைசெய்து எரிக்கச் சுத்தியாகும். அதை எடுத்து மேலே வெள்ளிரேக்கு சுத்தி அதை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து சாரைப்பாம்பின் கொழுப்போடு சம பாகம் வீரஞ்சேர்த்து நெய்யாக உருக்கி அதைச் சுருக்கிட மெழுகாகும். நான்கு பங்கு செம்பு உருக்கி ஒரு பங்கு பாஷாண மெழுகைக்கொடுத்தால் வெளுத்துவிடும். நான்குக்கு ஒரு பங்கு நல்ல வெள்ளி சேர்த்து உருக்கினால் எல்லாம் சேர்ந்து இரசவாத வெள்ளியாகும்.

வேறு

செம்மண்பூமியில் பள்ளம்வெட்டி அதில் வரகு வைக்கோல் போட்டு வெல்லத்தண்ணீர் தெளித்து மண்மூடி விட்டு ஐந்தாறு நாள் கழித்துத் தோண்டினால் பூநாகம் கிடைக்கும். அந்தப் புழுக்களை எல்லாம் வாரி மோரில் போட்டால் வயிற்றிலுள்ள மண்ணெல்லாம் சுக்கிவிட்டு சுத்தியாகிவிடும். அதற்குச் சரியாய் கந்தகம் சேர்த்து ஆறுவகை ஜெயநீரால் அரைத்து பில்லை தட்டி புடம் போட கருப்புத் தூளாகும். அதற்கு நான்கில் ஒரு பங்கு வெங்காரம் சேர்த்து வஜ்ஜிரமூசையில் வைத்து சீலை செய்து உலையில் வைத்தூத பூநாகம் செம்பாகும்.

மேற்படி பூநாகச் செம்பினால டப்பி செய்து திருகு வைத்து அதற்குள் சூதம் விட்டு டப்பிமூடி சாதம்வேகும் போது மத்தியில் வைத்து சாதம் வெந்தவுடன் எடுத்துக் கொண்டு ஆறவிட்டுத் திறந்துப் பார்க்க சூதம் மெழுகாயிருக்கும். அந்த மெழுகை கருவூமத்தன் காய்க்குள் வைத்து காரமும் சுண்ணாம்புஞ் சேர்த்து சீலைமண் செய்து

நான்கு வரட்டியில் புடமிட ரசங்கட்டும். இப்படி பத்து முறை புடம் போட மணியாகும். இது எல்லாவித ரசமணி பரிசோதனைகளிலும் வெற்றி பெறும். வெள்ளீயம் உருகும்போது போட்டால் நீரை இழுத்து வெள்ளி யாக்கும். இந்த மணி இந்திரிய ஸ்தம்பனமும் செய்யும்.

வேறு

வெள்ளைப் பாஷாணம் சுத்திசெய்து கபால ஓட்டிற்கு அடியில் மண்பூசி அந்த ஓட்டில் பாஷாணத்தை வைத்து ஒருபடி புங்கம்பாலால் நான்கு ஜாமம் சுருக்கிடவும். பிறகு புங்கம்காயும் வெள்ளாட்டு மூளையும் சேர்த்து அரைத்து வெள்ளைப் பாஷாணத்திற்குக் கவசங்கட்டி மண்மறைவில் ஐந்து வரட்டியில் புடமிடவும். இப்படி ஐந்தாறு புடங்கள் போட பாஷாணமானது கட்டுப்படும். செம்பையுருக்கி அந்தப் பாஷாணக் கட்டியில் கொஞ்சம் தூள்செய்து போட்டால் வெளுத்துவிடும். அதற்கு சரியிடை சுயமான வெள்ளிசேர்த்து உருக்கிக் கொண்டால் எல்லாம் சேர்ந்து இரசவாத வெள்ளி யாகும்.

வேறு

பூநீறு ஜெயநீர்

சுண்ணாம்புக்கல் கால்படி, உழமண் கால்படி கல்லுப்பு கால்படி, சிறுபிள்ளைகளின் மூத்திரம் இரண்டு படியில் சேர்த்து ஒன்றாய்க் கலக்கிச் சிறுதீயாக எரித்து எடுத்து ஒரு புதுப்பானையிலிட்டு அடுப்பைப்போல கல்லை அடுக்கி பானைக்கு அடியில் ஒரு பீங்கானை வைக்கவும். பானையின் அடியிலிருந்து நீர் கசிந்துக் கொண்டிருக்கும். வடியும் நீரை எல்லாம் சேகரித்து ஒரு சீசாவில் பத்திரப்படுத்தவும் அல்லது

வடிதாளால் வடிகட்டிக் கொள்ளலாம். இதுவே பூநீற்று ஜெயநீராம்.

மண்டை ஓட்டுப் பொடி ஒருபலம், பொட்டிலுப்பு ஒரு பலம் இவை இரண்டையும் ஒரு பாண்டத்தில் போட்டு அதில் சுத்தி செய்த சங்கு பாஷாணம் ஒருபலம் ஒரே கட்டியாய்ப் போட்டு முன் தயார் செய்த ஜெயநீர் எட்டுபலம் விட்டு சிறு தீயாக எரித்து வரும்போது நீரெல்லாம் சுண்டி மெழுகுபதம் வரும் சமயத்தில் இறக்கி பாஷாணக் கட்டியை வேறாக எடுத்துக் கொண்டு பாண்டத்திலுள்ளதைச் சுரண்டி எடுத்துக் கல்வத்திலிட்டு அரைத்து பாஷாணத்திற்குக் கவசம் செய்து ஏழுசீலை மண் செய்து நன்றாக உலர்த்திக் கோழிப் புடம்போட சுன்னமாகும்.

இந்த சுன்னம் கால்பலம் சவுட்டுப்பு கால்பலம் வாய்நீரால் அரைத்து இரண்டுபலம் வெள்ளீயத்திற்குப் பூசி மேலே சீலைமண் செய்து அரைகெஜம் புடம்போட ஈயத்திலுள்ள நீரெல்லாம் நீங்கி வெள்ளியாகும்.

வேறு

பாஷாணம் ஒருபலம், ரசம் ஒருபலம், பூரம் ஒரு பலம் வெடியுப்புச் செயநீரால் அரைத்து ரவியில் காயவைத்து, இதை சட்டியில் போட்டு மேல் சட்டி மூடி சீலைமண் செய்து நான்கு ஜாமம் எரிக்க பதங்கமேறும்

பதங்கத்தைச் சுரண்டி பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு சுத்தி செய்த செம்புக்கு பத்துக்கொன்று கொடுக்க வெளுத்துவிடும். இதோடு இரண்டுக்கு ஒன்று வெள்ளி சேர்த்து உருக்க எல்லாம் சேர்ந்து இரசவாத வெள்ளியாகும்.

பாஷாணக்கட்டின் பரிக்ஷைகள்

கவராகமுன்கட்டும் பாஷாணத்தைக்
கருச்சொல்வேன் நன்றாகக்கேளுகேளு
மவராகமயிரளவு புகைஞ்சுதானால்
சமத்தானமுழுக்கட்டு தன்னைக்காணு
முவராகஊசிபோல் புகைஞ்சுதானால்
உத்தமனேமுக்காலே கட்டுமாகும்
நவராகக்கதிரதுபோல் புகைஞ்சுதானால்
நலமான அரைக்கட்டு நாடிப்பாரே
பாரப்பாஎழுத்தாணி போலாந்தூபம்
பரிவாகக்காற்கட்டுப் பரிந்துப்பாரு
நேரப்பா இத்தனையு முறுக்கையிலேகாணும்
நிறையாகப் பாஷாணங் காய்ச்சயிலேகாணும்
சாரப்பாயிதுவெல்லாம் தொழிலுக்காகும்
சாகாமற்செத்துநின்ற மார்க்கமப்பா
வேரப்பாலோகமதி லூட்டும்போது
ஓடுகிறபுகையடங்கி வேதையாமே.

கடுங்காரச் செயநீர்

பூநீர், கல்சுன்னம் இவைகள் இரண்டையும் அமுரிவிட்டுக் கலக்கி, மூன்றுநாள் கழித்து தெளிவிருத்து அதில் அஞ்சு சுன்னம் காசிடை, வங்கச்சுன்னம், வெடியுப்புச் சுன்னம் சீனம், சூடன், சாரம், வீரம், நாபி, வெங்காரம், குருவண்டு, சூதம், புழுகு, புறாயெச்சம், கோழிமலம் இவைகள் வகைக்குக் காசிடை போட்டு அதில் முப்பது கோழிமுட்டை வெள்ளைக்கரு ஒருசேர் எருக்கம்பால் விட்டால் தெளிவு ஜெயநீர் காணும். முப்புவுக்குக் காரமேற்ற உதவும். சகல சரக்குகளையும் தோய்த்துப் போட்டால் கடுங்காரமேறும்.

பொன்னின் லெகஷணம்

பொன்ன துவின்சோதனையிம் பதினொன்றாகும்
பொடியாகப் போகிறதோர் வெட்டைநீங்கி
நன்னயமாய்க்கம்பிக்கு நயந்துதானே
நலமுடனே காய்ச்சவுந்தான் வருணம்மாறா
உன்னியதோர்பளபளப்பு நீங்கலாகா
உத்தமனேபடிகாரம் பிடித்தலோடு
உன்னதமாம் திராவகத்தில் கரையலாகா
துயர்பொன்னின்லக்ஷணமாம் அடியில்கண்ணே.

பொன்னானது வெட்டையாக இருக்கக்கூடாது, கம்பிக்கு வரவேணும், காய்ச்சினால் நிறம் மாறலாகாது. படிகாரம் பிடிக்கவேண்டும். வெடியுப்பு திராவகத்தில் (நைட்ரிக் ஆசிட்) கரையாமல் நிற்கவேண்டும் உருக்கினால் அடியில் வலைகளைப் போன்ற கண்களுடன் பசுமை நிறமும் பொருந்தி இருக்கவேண்டும். இப்படி எல்லாலக்ஷணங்களும் பொருந்தியது செயற்கைப் பொன்னாயினும் நல்லபொன்னாகும்.

வகாரம்

துருசுக்கு உத்தாமணிப்பால் தளும்ப ஊற்றி வெயிலில் நன்றாகக் காயவைத்து உலர்த்திப் பின்பு உத்தாமணி இலைச்சாறு விட்டு அரைத்து பில்லைதட்டி நன்றாகக் காய வைத்து அதே இலையை அரைத்து கவசம் கட்டி அகலில் வைத்து சீலைமண் செய்து குக்குட புடம் போட செந்தூரிக்கும். கொக்கு மந்தாரைச் சாற்றில் ஏழுமுறை காய்ச்சித் தோய்த்துச் சுத்திசெய்த தாமிரம் பத்துப்பங்கை உருக்கி கொடுத்துக் கோலாட்டவும். இரசவாதப் பொன்னாகும்.

தாளகக்கட்டு

துருசுக்கு, தும்பை, குமரி, பழச்சாறு மூன்றும்விட்டு ஆட்டி தாளகத்திற்குக் கவசம் செய்து மண்சீலை செய்து கோழிப்புடம் போடவும். இப்படி பத்துபுடம் போட கட்டி விடும். மேற்படி தாளகக்கடட்டு ஒரு பலம் கெந்தகம் ஒரு பலம் வெடியுப்பு ஜெயநீர் விட்டு அரைத்து பில்லை தட்டி கோழிப் புடம் போடவும். செந்தூரமாகும். ஏழு வெள்ளி மூன்று செம்பு சேர்த்து உருக்கி மேற்படி செந்தூரம் ஒன்று கொடுக்க நல்ல மட்டமாகும். மேற்படி மட்டம் நாலுக்கு ஒன்று தங்கம் சேர்த்துருக்கிக் கொள்ள எல்லாம் சேர்ந்து இரசவாதப் பொன்னாகும்.

வேறு

செம்புத்தொட்டி	-	ஒரு பலம்
மணலிரும்பு	-	ஒரு பலம்
வெங்காரம்	-	ஒரு பலம்

மூன்றையும் தேன்விட்டு அரைத்து குகையில் வைத்து சீலைமண் வலுவாகச் செய்து உலைக்களத்தில் வைத்து ஊதவும் இப்படி இரண்டு முறை செய்து ஷி பாஷாணத்தில் இருக்கப்பட்ட செம்பும் இரும்பும் சேர்ந்து களங்காகும். அதை பங்கு நான்குக்கு வெள்ளி ஒன்று சேர்த்து உருக்க நல்ல மட்டமாகும். அதோடு சமயோசிதம் போல் தாய் சேர்த்து உருக்கிக் கொள்ளவும். எல்லாம் சேர்த்து இரசவாதப் பொன்னாகும்.

நீலவர்ணத்தைலம்

துருசு, வெங்காரம், கெந்தி, தாளகம், லிங்கம், வீரம் பூரம், கௌரி, வெள்ளை, சூதம், சாரம் இதுகள் வகைக்குப்

பலம் எடுத்துத் தூள் செய்து ஒரு பன்றிக் குட்டியின் வயிற்றைக் கீறி அதற்குள் மேற்படி தூள்களைப் போட்டுத் தைத்துவிட்டு அதை ஒரு பாண்டத்திலிட்டு மேல்மூடி சீலைமண் செய்து குழிவெட்டிப் புதைத்து மண்டலஞ் சென்று எடுத்துப் பார்க்க நிறையப் புழு புழுத்திருக்கும் . அதை எடுத்து புட்டியிலிட்டு சீலை செய்து கொதிக்கிற தண்ணீரில் பிடித்தால் தைலமாகும். வெள்ளி செம்புகளை உருக்கிவிட்டால் பழுக்கும், மட்டத்திற்குப்பூசி புடம்போட மாற்றுயரும்.

வகாரம் (வேறு)

பித்தளை அரப்பொடி பூவரசங்காய், கல்யாண முருங்கைப்பூ மூன்றையும் கல்யாண முருங்கிலைச் சாறு விட்டு அரைத்து மாத்திரைகள் செய்து செங்கண் சாவலுக்கு மேற்படி உருண்டைகளைக் கொடுத்து அதன் மலமெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து மூசையில் வைத்து ஊதவும் நல்லமட்டமாகும். அதோடு சமயோசிதம்போல் தங்கம் சேர்த்து உருக்கிக் கொள்ள எல்லாம் சேர்ந்து இரசவாதப் பொன்னாகும்.

பூரக்கட்டு

பூரம் ஒருபலம் வெள்ளாட்டு பாலால் எட்டு ஜாமம் சட்டியிலிட்டுச் சுருக்கிட்டு பிறகு பசும்பாலால் நான்கு சாமம் சுருக்கிட்டு, பிறகு வெடியுப்பு சீனம் துருசு, சிங்கி வகைக்குப் பலம் கல்வத்திலிட்டு எருக்கன் பாலால் அரைத்து மேற்படி பூரத்திற்குக் கவசம் செய்து ரவியில் காய வைத்து ஏழு மண்சீலை செய்து சட்டியில் பூமணலிட்டு அதன் மத்தியில் மேற்படி சீலை செய்ததை வைத்து மேலோடு மூடிசீலைசெய்து கமலாக்கினியாய் நான்கு ஜாமம் எரித்து

பிறகு சீலையை அவிழ்த்து பூரத்தை எடுத்துக் கொண்டு அதனிடை ஈயச்செந்தூரத்தை வெண்கரு விட்டு அரைத்து மேற்படி பூரத்திற்குக் கவசம் செய்து மணல்மூடி மறைபுடமாக கோழிப்புடம் பத்து போடவும்.

ஒவ்வொரு புடத்திற்கும் புதிய செந்தூரமாக உபயோகிக்கவும். பிறகு துருசு, வெடியுப்பு, காரம் சாரம் சீனம், கரியுப்பு, ஆலம்பாலலாட்டி மேற்படி பூரத்திற்குக் கவசங்கட்டி சுண்ணாம்பு சீலைசெய்து மண்மறைவில் கோழிப்புடம் போட்டு அதற்குமேல் வராக நெய்யால் நான்கு சாமம் சுருக்கிட பூரம் புகை அடங்கி உருக்கட்டும். வெள்ளி நூறுக்கு ஒன்று கொடுத்துப் பார்க்கவும். சர்வவியாதி களுக்கும் அனுபானமறிந்து கொடுக்கத் தீரும்.

வீரக்கட்டு

வீரம் சுத்திசெய்து வில்வப்பழத்திற்குள் வைத்து சீலை செய்து மணல் மூடி மறைபுடமாக பத்துமுறை கோழிப் புடம் போடவும். ஈயச்செந்தூரம் பழச்சாறு விட்டு அரைத்து கவசம் செய்து மண்மறைவில் கோழிப் புடம் போடவும். பிறகு மிருதார்சிங்கியை வெண்கருவால் அரைத்து கவசம் செய்து மண்மறைவில் பத்து கோழிப்புடம் போடவும் மறுபடியும் எட்டிக் கொட்டையை பழச்சாறு விட்டு அரைத்து கவசம்செய்து மண்மறைவில் கோழிப்புடம் போடவும். வீரம் மணியாம்.

“ஆனைமேலேறுவேன், வீரமணி கட்டுவேன், அகப்பட்ட பயல்களை மண்டையுடைப்பேன்,” ஆனை என்னும் வாசியின் மீதேறி தன்னிடமிருக்கும் வீரத்தை மணியாகக் கட்டினால் அகப்பட்ட லோகங்களை எல்லாம் பழுக்க வைக்க முடியுமென்றார். வீரமணி நவலோகத்தையும் வேதிக்கும்.

லிங்கக்கட்டு

முலைப்பால், சங்கன்பழ ரசம், எலுமிச்சம் பழரசம் இவைகளில் வகைக்கு நான்கு ஜாமம், அழிஞ்சி தைலத்தால் இரண்டு ஜாமம், மேதிப்பால் கற்றாழை ரசம் கூட்டி நான்கு ஜாமம், எருக்கம்பால் நான்கு ஜாமமாகச் சுருக்கிட்டு பிறகு தாமிரப்பொடி, சூதம், சிங்கி, தாரம், அரப்பொடி, பழச்சாற்றால் அரைத்து கவசம்செய்து சுண்ணாம்புச் சீலைசெய்து உமிப்புடத்தில் கோழிப் புடமாக பத்து புடம் போடவும். லிங்கம் கட்டிப் போகும். இந்த லிங்கக் கட்டுடன் ஏழுபங்கு வெள்ளி மூன்றுபங்கு செம்பு சேர்த்துருக்க வேதிக்கும்.

நாகக்கட்டு

சுத்திசெய்த நாகம் ஒருபலம் உருக்கி நவாச்சாரத் தூள் இரண்டு பலம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுத்து எடுத்துக் கொண்டு தாளகம், மிருதார்சிங்கி நாகத்திடை எடுத்து பழச்சாற்றாலாட்டிக் கவசம்செய்து கோழிப் புடம் போடவும். வீரம், பூநீறு இரண்டுஞ் சேர்த்து முன்போல் புடம் போடவும் பொன்னிமிளை இரண்டு களஞ்சி உருக்கிச் சேர்க்கவும். நாகம் முழுக்கட்டாகும், சுத்திசெய்த செம்பு நான்குக்கு ஒன்று நாகம் கொடுக்க நல்லமட்டமாகும் அதோடு சமயோசிதம் போல் தங்கம் சேர்க்க பொன்னாகும்.

துருசுக்கட்டு

துருசை கிளிஞ்சல் ஜெயநீர் விட்டுஅரைத்து வில்லை தட்டிவெய்யலில் நன்றாய்க்காயவைத்து ஓட்டில் 'வைத்து சீலைமண்செய்து இருபதுவரட்டியில்புடம் போட துருசு உருகிக்கட்டும் அதைமேற்படி ஜெயநீரைவிட்டு அரைத்து வீரத்திற்குக் கவசங்கட்டி உலர்த்தி சீலைமண் செய்து நான்கு

வரட்டியில் புடம்போட வீரம் உருகிக்கட்டும். மேற்படி இருவகைக் கட்டுகளையும் சமனிடையாக எடுத்து மேற்படி ஜெயநீர் விட்டு அரைத்து தங்கத் தகட்டிற்கு இலேசாகத் தடவி ஒட்டில் வைத்து எட்டு வரட்டியில் புடமிடவும். இப்படி மூன்று புடம்போட தங்கம் குருவாகும். நான்கு பங்கு சுத்த வெள்ளியை உருக்கி ஒரு பங்கு குரு கொடுத்தால் இரசவாதப் பொன்னாகும்.

தாளக மெழுகு

சுத்திசெய்த தாளகத்தை வெங்காயச் சாற்றில் ஏழு நாள் ஊறவைத்துக் கல்வத்தில் இட்டு அதேரசம் விட்டு அரைத்து வில்லை தட்டி நன்றாய் உலர்த்தி மேலே துணி சீலை நன்றாய் சுத்தி தந்திக் கம்பியால் நன்றாய்க் கட்டி ஒரு பானையில் தொலாந்திரமாக தொங்கவிட்டு பனிரெண்டு பலம் பன்றி நெய்யும், பனிரெண்டு பலம் வெங்காயச் சாறும் விட்டு சிறு தீயாக நான்கு சாமம் எரித்து சீலையை அவிழ்த்துப் பார்க்க மெழுகாயிருக்கும். சுத்திசெய்த செம்பு பத்துபங்கு, வெள்ளி ஒருபங்கு மேற்படி மெழுகு ஒருபங்கு சேர்த்து உருக்க இரசவாதப் பொன்னாகும்.

போகர் வகாரம்

ஏழூசி பிடிக்குங் காந்தம் எடுத்துக்கொண்டு அதற்கு சரியிடையாக சன்பத்தல் செம்பு ரேக்கை நிறுத்து எடுத்து இரண்டையும் கல்வத்திலிட்டு அரைத்தால் தூளாய்ப் போகும். மேற்படி தூளுக்கு சரியிடையாக வெள்ளி சேர்த்து எல்லாம் மூசையிலிட்டு நன்றாய் ஊதவேண்டும். காந்தம் சீக்கிரத்தில் உருகாதாகையால் வஜ்ஜிரமூசையில் வைத்து உலையில் வைத்தூதவேண்டும். மேல்படி காந்தம் செம்புகளின் சத்து வெள்ளிக்கேறி இரசவாதப் பொன்னாகும்.

லிங்கமெழுகு

சோற்றுக்கற்றாழையை மேல்தோல் போக்கிவிட்டு ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் கடுக்காய்த் தூளைப் போட்டுப் பிசைந்தால் ஜலம் வரும்.

ஒரு பலம் சுத்திசெய்த துரிசை அப்பிரகத் தகட்டில் பொதிந்து மேற்படி நீரினால் ஒரு ஜாமம் சுருக்கிட்டு எடுத்துக்கொண்டு சீனம், துருசு, துத்தம், வெங்காரம் பூநீர் வகைக்கு அரைப்பலம் எடுத்து வெள்ளை எருக்கன் பாலால் அரைத்து மூன்றுபங்கு செய்து ஒருபங்கை மேற்படி லிங்கத்திற்குக் கவசம்செய்துநன்றாகக் காய்ந்த பிறகு மற்றொரு பங்கை கவசம்செய்து அதுவும் நன்றாக காய்ந்தபிறகு மூன்றாவது பங்கையும் கவசம்செய்து உலர்த்தி ஐந்துமண்சீலை செய்து கோழிப்புடம் போடவும். லிங்கம் கட்டுப்படும்.

மேற்படி லிங்கத்தின் மேல் ஒரு விராகனிடை தங்கரேக்கை சுத்தி அபிரேகத் தகட்டின்மீது வைத்து உருக்கும் போது கொடிக்கள்ளிச் செடியை அடியில் பொத்தல் செய்து அதற்குள் ஒரு சீலையில் கொஞ்சம் துருசு சுன்னம் வைத்து சொருகி விட்டால் மேற்படி மரத்திலுள்ள பாலெல்லாம் முறிந்து ஜலமாக வடியும். மேற்படி ஜலத்தால் சுருக்கிட்டுக் கொண்டே ஊசியினால் குத்திப் பார்த்தால் இறங்குமாகில் மெழுகாகி விட்டதென்று நிதானித்தெடுத்து கல்வத்தில் அரைத்து வைத்துக்கொள்ளவும். ஒரு தோலா வெள்ளியை உருக்கி அதற்கு மேற்படி மெழுகு ஒரு குண்டுமணி எடை கொடுத்தால் உயர்ந்த இரசவாதப் பொன்னாகும்.

குறைந்த மாற்றுள்ள பொன்னை மாற்றேற்றும் அப்ஜா முறைகள்

1. அப்ஜா முறை

வீரம் சுத்தி செய்து வில்வப் பழத்துக்குள் வைத்து சீலை செய்து மண்மறைவில் கோழிப்புடம் போடவும். இப்படி நாற்பது புடம்போட வீரம் கட்டும், அதை உமிழ்நீரால் அரைத்து மட்டப்பொன்னுக்குப்பூசி பூங்காவிக்குள் வைத்துப் புடம்போட மாற்று ஏறும்.

2. அப்ஜா முறை (வேறு)

சோற்று உப்பைப் புளியாரைச் சாறுவிட்டு அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி அகலில் வைத்து சீலைசெய்து கோழிப்புடம் போடவும். இப்படி பதினைந்து புடம் போட செந்தூரமாகும். சரக்கொன்றைப் பூவும், கெந்தகமும் சேர்த்து அரைத்து வில்லைத்தட்டிக் குழித்தைலம் வாங்கி மேற்படி தைலத்தால் மேற்படி செந்தூரத்தைக் குழைத்து மட்டப் பொன்னுக்குத் தடவிப் புடம்போட மாற்றேறும்.

3. அப்ஜா முறை (வேறு)

கோழி முட்டைகளை வேகவைத்து மேலோடுபோக்கி மஞ்சள் கருவை மாத்திரம் எடுத்து எண்ணை பழகிய சட்டியிலிட்டு எரித்து வரவும். முட்டை கருகிவரும்போது சுத்தி செய்த பூநீற்றை கொஞ்சம் போட்டுக் கிளறி வந்தால் தைலம் கசிந்து இறங்கும். கெந்தகத்தைத் தூள் செய்து ஒரு சீலையில் வைத்து உருட்டித் திரிசெய்து அந்தத் தைலத்தில் நனைத்து சுடர்த்தைலம் இறக்கினால் கறுப்பு நிறமாக கெந்தகத் தைலம் இறங்கும். அதை மட்டப் பொன்னுக்குப்பூசி உருக்க மாற்றேறும்.

4. அப்ஜா முறை (வேறு)

துருசுக்கு சுண்ணாம்பு சீலைசெய்து மூன்றுநாள் உலர வைத்துப் புடம்போடச் சுன்னமாகும். மேற்படி புடம் போட்ட துருசு, சூதம், லிங்கம், வெங்காரம் வகைக்கு சமஎடைகளாக எடுத்து காட்டாமணக்குத் தழையின் ரசம் விட்டு அரைத்துப் பில்லைத் தட்டி உலர்த்தி அகலில் வைத்துச் சீலைமண் செய்து கோழிப்புடம் போடவும். மேற்படி மருந்தை எடுத்துப் பத்திரப்படுத்தவும். அதில் கொஞ்சம் எடுத்து உமிழ்நீர் குழைத்து மட்டப் பொன்னுக்குப்பூசி காவித்தூளிற்குள் வைத்து ஒரு வரட்டியில் புடம்போடவும். மாற்றேறும்.

வெட்டைப்பொன்னை நைப்பாக்குமுறை

வாதமுறைக்கு உபயோகிக்கும் மருந்துகளை உலோகத்தின் மீது கொடுத்தால் பொன்னாகும். அல்லது வெள்ளியாகும். ஆனால் சில சமயங்களில் அப்படியாவதானது வெட்டையாகி விடுவதும் உண்டு. வெட்டையென்றால் சுத்தியினால் அடித்தால் தூளாக நொறுங்கிப் போவது. அல்லது கம்பி, தகடு முதலியவைகளுக்கு வராமல் உடைந்துப் போவதாகும். இதன் காரணம் அதில் வறட்சி மிகுதியாவதே. இவ்விதமே இரசவாதத்திற்காக உபயோகப்படுத்தும் மட்டங்களும் வெட்டையாகி வேலைக்கு உதவாமல் போகும் அவ்விதம் வெட்டையானதை நைப்பாக்கு முறைகளைஎழுதுவதற்கு முன் உலோகம் வெட்டையாகப் போவதற்கான காரணங்களைத் தெரிந்து கொண்டால் அதை நீக்கிக்கொள்ள முடியும் என்பதே. அவையாவன.

ஒரு உலோகத்தை உருக்கி அது உருகிக் கண்விட்டாடும்போது அதன் முகத்தில் கொடுக்கவேண்டிய மருந்தைக் கொடுக்கவேண்டும். அப்படியிருக்கச் சில சமயங்களில் அது நன்றாகக் கண்விட்டாடி உருகு முன்னமே மருந்தைக் கொடுத்தால் கொடுத்தமருந்தானது உள்ளும் புறமும் ஊடுருவிப் பாயாமல் உபயோகமற்றதாகி விடுவதோடு வெட்டையாகவும் ஏதுவாகும். ஆதலால் இந்த விஷயத்தைக் கவனத்தில் வைத்து உலோகமாவது நன்றாக உருகிக் கண்விட்டாடியபின் மருந்தைக் கொடுத்து கோலாட்ட வேண்டும்.

சில சமயங்களில் உலோகத்தில் கொடுக்கவேண்டிய மருந்தின் அளவு அதிகமாகி விடுவதினாலும் அல்லது குறைந்த அளவு மருந்தை உபயோகித்து சரியான வர்ணம் ஏறாதிருந்த நிமித்தம் அதிக அளவான மருந்தை உபயோகிப்பதினாலும் வெட்டையாகிவிடும். சில மருந்துகளின் சுபாவகுணமே அதனை உபயோகித்த உலோகத்தினை வெட்டையாக்கி விடுவதுமுண்டு. ஆதலால் இந்த விஷயங்களைக் கவனித்துக் கீழ்க்காணும் முறைப்படி நைப்பாக்கி கொள்ள வேண்டும்.

சில சமயங்களில் பாஷாணம், தாளகம், கெந்தகம் முதலியவைகளில் ஒன்றின் சிலபாகம் உபயோகிக்கும் மருந்தில் பச்சையாக இருந்துவிடுவது, அல்லது கும்மட்டியிலுள்ள கரியில் கலந்து கிடப்பது, அல்லது உருக்கு மூசையில் அவற்றின் வாடையிருந்து அதில் உருக்க நேரிடுவது, இந்தக் காரணங்களினால் உலோகமானது வெட்டையாகி விடும். ஆதலால் இவ்வித விஷயங்கள் நேரிடாதபடி ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும். சில சமயம் நாகம், காரீயம், மிருதார்சிங்கி இவைகளின் வாடை படுவதினாலும் உலோகமானது வெட்டையாகி விடும். ஆதலால் இவ்வித

சரக்குகளின் சம்பந்தம் வாடை முதலியவைகள் இல்லாதபடி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

சில சமயங்களில் ஊதுகுழாய் முதலியவைகளில் கெந்தகம், அரிதாரம் முதலியவைகளின் வாடை தங்கி நிற்பதுமுண்டு. அதனாலூதி உருக்கின லோகமானது வெட்டையாகிவிடும். ஆதலால் இது விஷயத்தையும் கவனிக்கவேண்டும்.

சில மரங்களின் கரிநெருப்புகளும் உலோகங்களை வெட்டையாக்கி விடும். ஏனெனில் சில மருந்தின் கரிக்கு இவ்வித சுபாவ குணமிருப்பதால் அது விஷயத்தையும் கவனிக்கவேண்டும்.

வெட்டையை நைப்பாக்கு முறை

நாம் முன் சொன்னபடி உருக்கின் உலோகமானது வெட்டையானக் காரணத்தைக் கண்டறிந்து அந்தக் காரணத்தை நீக்குவதே பிரதானமாகும். சில சமயம் வெட்டையான உலோகத்தை மடக்கி மடக்கி உருக்குவதினாலும் அவ்வெட்டைத்தனம் நீங்கிவிடும். சில சமயங்களில் அடியில் எழுதிய தைலங்களால் அந்த வெட்டையை நீக்கவேண்டியதாயிருக்கும். ஆதலால் மேற்படி முறைகளையும் இதில் எழுதலாயினோம். இம்முறைகளின் மூலமாக அது எவ்விதமான கடினமான வெட்டையாக இருப்பினும் அந்த வெட்டைத் தன்மை நீங்கி நைப்பாகிவிடும். இன்னும் அதில் அதிகமாக உருக்கித் துவைத்தால் ஈயத்தைப் போன்ற நைப்புண்டாகி விடும்.

இம்முறைகள் எல்லாம் அனுபவப்பட்டதாகையால் வெகு இரகசியமாக வைக்கப்பட்டு வந்தன. ஆயினும் நமது

நண்பர்களின் பொருட்டாகவும், நமது கிரந்த அபிமானி களுக்காகவும், வெளிப்படுத்தலாயினோம். ஆதலால் அவசியமானவர்கள் இந்நூலின் முறைகளைச் சற்று கவனமாகவும் ஜாக்கிரதையாகவும் செய்தால் கடவுளினது கிருபையால் நிச்சயமாகச் சித்தியாகும். அப்படிச் செய்யாமல் நாமொரு வழியாகவும், முறை ஒரு வழியாகவும் மிருந்தால் நாமெடுத்த காரியம் முற்றுங் கைகூடாமல் தப்பிப்போ மென்பதற்கு என்ன ஆக்ஷேபனையுண்டு. ஆகையால் விடாமுயற்சியுடன் எந்தக் காரியத்தையும் சில தடவைகள் மடக்கி மடக்கிச் செய்யின் அந்தப் பாகத்திலுள்ள மர்மங்களெல்லாம் அனுபவத்தால் தெரிந்து முடிவில் நமது கருத்தை நிறைவேற்றிக்கொள்ள ஏதுவாகும்.

நைப்பெண்ணை

குதிரை, ஆடு, மாடு முதலிய மிருகங்களின் குளம்புகள் கொம்புகள் முதலியவைகளைச் சமனிடைகளாக எடுத்துக் குழித்தைலம் இறக்கிச் சீசாவில் பத்திரப்படுத்திக் கொள்ளவும். வெட்டையாயிருக்கிற உலோகத்தை உருக்கி, உருக்கு முகத்தில் மேற்படி தைலத்தில் இரண்டொரு துளிவிட பட்டுப்போல நைப்பாகிவிடும். பொன் வெள்ளி முதலியவைகள் நகை முதலியவைகள் செய்யவராமல் வெட்டையாகயிருந்தாலும், கடினமாக விருந்தாலும் மேற்கண்ட விதப்படி செய்து கொண்டால் அதிக மிருதுவாகி எல்லாவகை நகைகளும் செய்ய ஏற்றதாகிவிடும்.

தங்கம் வெட்டையாயிருந்தால் ரூமிமஸ்தகி, வெங்காரம் என்னும் இவ்விரண்டையும் சமனெடையாக எடுத்து அரைத்துத் தங்கத்தையுருக்கிக் கிராசம் கொடுக்கவும். அல்லது குங்குமப்பூவைக் கிராசம் கொடுக்கவும். வெட்டைத்தனம் நீங்கிவிடும்.

உருக்கினக் குடோரி

தாளகம், சவுக்காரம், குங்கிலியம், அண்டோடு வெங்காரம் வகைக்கு சமஎடைகளாக நிறுத்து எடுத்து வெடி உப்புச் செயநீரால் ஆட்டிப் பில்லை செய்து உலர்த்தி அகலிலிட்டு சீலைமண் செய்து கோழிப்புடம் போட்டு எடுத்து கல்வத்திலிட்டு எருக்கம்பாலும் காட்டாமணக்குப் பாலும் சீலைமண் செய்து கோழிப்புடம் போட்டு எடுத்துக்கொண்டு சிற்றாமணக்கெண்ணயும், தவளை நெய்யும் விட்டுக் குழைத்து குழம்பு பதமாக வைத்துக் கொள்ளவும். உலோகங்களை உருக்கி மேற்படி குழம்பு ஒரு சொட்டுவிட்டு எருமைக்கொம்பால் நன்றாகக் கலக்கவும். எவ்வளவு கடினமான வெட்டையாயிருந்த போதிலும் நீங்கிவிடும். கல்மிஷங்களெல்லாம் நீங்கி அதிக பளபளப்புடன் பிரகாசிக்கும். இது அதிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

விறகுதிட்டம் புடதிட்டம்

இரண்டுவிரல் கனமும் ஜாண்நீளமும் உள்ள விறகு ஒரு விறகு தீபாக்கினிக்கும், இரண்டுவிறகு கமலாக் கினிக்கும், நான்குவிறகு காடாக்கினிக்கும் உபயோகிக்க வேண்டும். காட்டெருவு ஒன்று கொண்டது காடைப் புடமாகும். மூன்று கொண்டது கவுதாரிப் புடமாகும். பத்து கொண்டது குக்குடம் அல்லது கோழிப்புடமாகும். ஐம்பதெரு கொண்டது ஏனமாகும். நூறு கொண்டது கெஜப்புடமாகும்.

குகை திட்டம்

குழிதைலத்தில் இரண்டு பலம், உமிக்கருகல் இரண்டு பலம், கந்தைத்துணி எரித்த சாம்பல் இரண்டு பலம், களிமண்

பனிரெண்டு பலம் இவற்றைக் கடுக்காய்க் கியாழம் விட்டு நன்றாக அரைத்து மைபோலான பின்பு மூசைகளும் மேல் மூடும் பில்லைகளும் செய்துகொள்ள வேண்டும். உருக்கினங்களுக்கு வேறுவகையாகச் செய்த மூசை பலப்படாது.

அஞ்சு சுன்னக்குகை

சுன்னங்கள் செய்ய வேண்டுமானால் அதிக காரம் உண்டாவதற்கு அடியிற் குறித்தபடி குகைசெய்து அதில் வைத்துப் புடம்போட அதிக காரமுள்ள சுன்னமாகும். நண்டோடு, நத்தையோடு, சங்கு, கிளிஞ்சல், கோழி முட்டையோடு இவைகள் சமனிடையாகக் கல்வத்திலிட்டு எருக்கம்பாலில் அரைத்துப் பில்லைதட்டி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து அரைகெஜம் புடம் போடவும். சுன்னமாகும். மேற்படி சுன்னத்தை எருக்கம்பால், கோழிமுட்டை வெள்ளைக்கரு, சுண்ணாம்பு தண்ணீர் மூன்றும் விட்டுப் பிசைந்து குகை செய்து கொள்ளவும். மேல் மூடியும் இதிலேயே செய்து வைத்துக்கொண்டு சுன்னம் செய்வதற்காக செய்திருக்கும் சரக்குகளை மேற்படி குகைக்குள் வைத்துப் புடம்போட அதிக கடுங்காரச் சுன்னமாகும்.

இரசவாதிகள் அறியவேண்டிய முக்கிய விஷயம்

தாம்பிரமும் வெள்ளியும் சேர்த்துருக்கி மருந்துகொடுக்க மட்டமானது கருப்பாக இருந்தால் அதை காடியில் போட்டு காய்ச்ச வேண்டும். அந்தக் காடியானது கருப்புவர்ணமாகி விட்டால் அதை நீக்கிவிட்டு புதிய காடிவிட வேண்டும். இப்படி காடியானது விட்டபடி சுத்தமாயிருக்கும் வரையில் செய்யவேண்டும். குறைந்த வர்ணமுள்ளதாகவும் கெட்ட வர்ணமுள்ளதாகவும் இருப்

பதற்குக் காரணம் தாமிரத்தின் கெடுதியேயாகும். தாம்பிரமானது சுத்திசெய்யப் பட்டதாய் இருந்தால் மேற்கண்ட குற்றங்கள் உண்டாகாது.

எடையில் அதிகப்பட்டிருக்கும் காரணமாவது தாம் பிரமானது பூரணமாய்ச் சாகாமல் பச்சையாக இருந்ததுவே காரணமாகும். வெள்ளியில் எடைகுறைந்து போவதற்குக் காரணமாவது கொடுக்கும் மருந்தானது சரியாய் முடியாமல் பச்சையாக இருப்பதால் வெள்ளியும். தாம்பிரமும் மடிந்து போவதேயாகும்.

நல்லபொன்னானது உருக்கினால் ஒருபோதும் உப்பாது, கொப்பளிக்காது. ஆகையால் சரியான பக்குவம் வரும்வரையில் மடக்கி மடக்கி உருக்கவேண்டும். பொன்னை யுருக்கினால் மேற்பக்கம் உருண்டைவடிவ மாயிருக்கும். வெள்ளியை உருக்கினால் தட்டையாகவுஞ் சமமாகவுமிருக்கும். இரசவாதத்திற்காக தயார் செய்யப் படும் மட்டமானது மேற்பக்கம் உருண்டை வடிவமாகவும் அடியில் வலையைப்போல் கண்களுண்டாகும் வரையிலும் தாயைச் சேர்க்கக்கூடாது. அப்போது மட்டத்தை மடக்கி மடக்கி யுருக்கி எடுக்கவேண்டும். இப்படி சிலதடவைகள் செய்தால் மேற்படி குணமுண்டாகிவிடும். வீணாக அவசரப்பட்டுச் சேர்த்தால் நஷ்டத்திற்கு ஏதுவாகும், இவ்வித விஷயங்களை எல்லாம் கவனியாமல் அனேகர் இரசவாதத்தில் அனேக மாயிரம் ரூபாயை வீணாய்ச் சிலவுசெய்து ஒரு பிரயோசனமும் அடையாமல் இரவாதம் பொய் என்றே சாதிக்கின்றனர். புத்தி நுட்பத்தினால் தாங்களேயாவது அல்லது அனுபவசாலிகளான ஆசான்கள் மூலமாகவாவது கிரமப்படி செய்வார்களாயின் எவ்விதத்திலும நஷ்டமடைவதற்கு ஏதுவராதென்பது உண்மையாகும்.

ஊர்வசிவாக்கு

தேறவே ரசவாதம் சிவன்சொத்தப்பா
செய்யாதேபொருள் தனையே இச்சிக்காதே
ஆரவேசெய்தாலும் பரத்துக்கீந்து
அறிவுகுருபோதத்தி லடங்கிநில்லு
பாரில்நீபரபரப்பாய் திரிந்தாயானால்
பலியாது அவன் தனக்கு வாதமேது
கூடாது வாதமொடு ஞானம்ரெண்டும்
குருபதத்தைப் போற்றிசெய்யி லறிவிற்கூடும்
வீராகஎன்னூலில் வெளியாய்ச்சொன்னேன்
விபரமுடன் ஊர்வசியும் விளங்கத்தானே

குருசகாயம்

ஊர்வசி இரசவாத சிட்கா

முற்றிற்று

இந்நூலில் உபயோகப்படுத்தியுள்ள அளவைகள் விபரம்

ஒரு தோலா	-	ஒரு ரூபாய் எடை அதாவது 12 கிராம்
ஒரு பலம்	-	மூன்று தோலா அதாவது 35 கிராம்
ஒரு சேர்	-	எட்டு பலம் அதாவது 280 கிராம்
ஒரு விராகனிடை	-	நான்கு கிராம்
அல்லது வராகன்	-	ஒன்பது பணவிடை
பத்து வராகன்	-	ஒரு பலம்
ஒரு குன்றி எடை	-	130 மில்லி கிராம்
இரண்டு குன்றி எடை	-	ஒரு உழுந்துஎடை அல்லது 260 மில்லி கிராம்
ஒரு பணவெடை	-	மூன்றே முக்கால் குன்றி, மணி எடை அல்லது 490 மில்லி கிராம்
ஒரு குறுணி	-	எட்டு நாழி
இரண்டு குறுணி	-	ஒரு பதக்கு
இரண்டு பதக்கு	-	ஒரு தூணி
மூன்று தூணி	-	ஒரு கலம்
ஒரு கழஞ்சு	-	பனிரெண்டு பணவெடை அல்லது 55 கிராம்
வெருகடி அளவு	-	பூனைகாலால் பிடிக்கும் அளவு
திரிகடி அளவு	-	மூன்று விரல்களால்எடுக்க கூடிய அளவு